உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கைலாசபரம்பரை

சாரங்கதேவதேசிகர் திருமடமெனவழங்கும்

திருக்குடந்தைப் பெரியமடம்

# வீரசிங்காதனபுராணம்.

திருமத்தூர்மடம்

வேலப்ப சுவாமிகளாலும்

கோட்டூர்

உமாபாகதேவராலும்

அருளிச்செய்யப்பட்டது.

---

இஃது,

திருக்கைலாசபரம்பரைப் பொம்மபுரம்

ஸ்ரீசிவஞானபாலயதேசிகராதீனத்துச்

சிதம்பரம் ஈசானியமடம்

## இராமலிங்கசுவாமிகளால்

பலபிரதிகளைக்கொண்டுபரிசோதித்து

புராணத்திற்கியைய இயற்றியவசனத்தோடு,

ஷை சாரங்கதேவதேசிகராதீனசீடர்

திருநெல்வேலி ம-ள-ள-ஸ்ரீ

சு - வயி - சுந்தரலிங்கபண்டாரமவர்கள்

உதவியால்

சென்னை :

கலாரத்நாகரயந்திரசாலையில்

அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

---

விசுவாவசு௵ சிங்கரவி.

உ

சிவமயம்.

# அறிவிப்பு.

நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம் ஸ்ரீசிவப்பிரகாசசுவா கள் அருளிச்செய்தவற்றில் சிவப்பிரகாசவிகாசம் சதமணிமாலை தருக்கபரிபாஷை திருவெங்கையலங்காரம் பழமலைக்கொச்சகக்கலிப்பா யேசுமதநிராகரணம் சிவக்ஷேத்திரவெண்பா என்னுமிவ்வேழும், வேலையசுவாமிகள் அருளிச்செய்தவற்றில் குகைநமச்சிவாயலீலை கிருஷ்ணசரித்திரபாரிசாதலீலை இஷ்டலிங்கக்கைத்தலமாலை மயிலத்திரட்டைமணிமாலை ம லத்துஉலா என்னுமிவ்வைந்தும், மகாகவியாகிய ஒட்டக்கூத் அருளிச்செய்தவற்றில் தக்கயாகப்பரணியும் ஆகியவிவற்று ஏதேனுங் கிடைக்கப்பெற்றுள்ளவர் தயைகூர்ந்தனுப்பில் ஒப நோக்கி அச்சிற்பதிப்பித்து வெளியிடுதற்கு உதவியாம்: அ ஞர் கவனிப்பாராக.

---

| | | |
|---|---|---|
| வீரசிங்காதனபுராணம் காலிகோபைண்டு | ... | 0—10—6 |
| ஷை மார்பில் ஆப்பைண்டு | ... | 0— 9—0 |

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

வீரசிங்காதனமென்பது வீ - வித்தை ; ர - அதைவிரும்பிக்கூடுதல் ; சிங்க ஆதனம் - சிங்கந்தாங்குவதுபோலமைத்த பீடம் ; ஆகவே, சிவஞானநிலவும் சிங்காதனமெனப் பொருள்படும். அது சிவஞானோபதேசதேசிகர் பீடமனைத்திற்கும் பொதுப்பெயராயினும் பழைமையாதிய காரணம்பற்றிச் சிறப்புப்பெயராய் ஈண்டுக் குடந்தையிலுள்ள வீரசிங்காதனத்தைக் குறித்துநின்றது. பூர்வம் சிவபெருமானே தமது ஐந்து திருமுகங்களுள் ஈசானமுகத்திலே அருட்குரவராய்த் தோன்றியெழுந்தருளி வீரபத்திரக்கடவுளுக்குத் தீர்த்தப்பிரசாதம் அளித்தமர்ந்து சிவஞானஸ்தாபனஞ்செய்யப்பட்ட பீடமாயிருத்தலின் வீரசிங்காதனமெனப்பெயர்சூட்டி முன்னர் அவ்வீரபத்திரக்கடவுளாலும், பின்னர் இரேணுகதேசிகர் மழையமலேசதேசிகர் சோமசேகரதேசிகர்முதலிய பலதெய்வீக ஞானாசாரியர்களாலும் அது விளக்கப்பட்டது. ஆயினும், மேற்படி சோமசேகர தேசிகருடைய சந்ததிக்குரவருள் ஒருவராகிய சாரங்கதேவதேசிகரால் அவ்வாதீனத்திருமடம் முன்னையினும் பெரிது விளக்கப்பட்டமையின் அந்நாட்டொடங்கி அது சாரங்கதேவதேசிகர் திருமடமெனப் பெயர்பெற்றதாயிற்று.

இவ்வாதீனம், மிக்கதலைமையும் பழைமையுமுடையதென் ...தை மூர்க்கநாயனார் வழிபட்டமையானும் மகாகவியாகிய ...ட்டக்கூத்தர் தக்கயாகப்பரணி பாடியதுமுதலியவற்றானும் தெளியலாம். அத்தகைய இவ்வாதீனத்திற்குத் தலைவராகிய

மிக்கப்படுபவர் கன்னடதேயத்தவரேயாகலின் அவர்க்கு இத்தேயவியல்பு ஒவ்வாமையாலும் அத்தேயத்தவர்போல வீரசைவக்கொள்கையைக் கிரமமாகவநுஷ்டிப்போர் இத்தேயத்தில் மிக அரியராயிருத்தலாலும் வருங்குரவர் ஈங்கு விரும்பிநிலைபெற்றிருத்தலும் அபிவிர்த்திசெய்தலும் இல்லையாயினமையின் இக்காலத்தில் இவ்வாதீனம் மற்றையாதீனங்களினும் நாளுக்குநாள் குறைவடைந்ததாயிற்று. இத்தமிழ்நாட்டிலிருக்கும் வீரசைவர்களுள் மிகுதியாயுள்ளவர் இவ்வாதீனசீடரேயாகலின் அவர் இனியேனும் இப்புராணவாராய்ச்சியால் இதன்மேன்மைதெளிந்து இதனபிவிர்த்தியில் சிறிதுமுயல்வரேல் பெரிதுந்தழைத்தோங்கும். முயலுமாறு பூர்வம் இதனைவிளக்கிய வீரபத்திரக்கடவுள் அநுக்கிரகிப்பாராக.

இவ்வாதீனமேன்மைகூறும்புராணம் ஆதியில் வீரநரசிங்கனென்னும் வேந்தன்விஞவச் சோமசேகரதேசிகரால் போதித்தருளியபடி கன்னடபாஷையிலிருந்தமையின் அதனைத் தமிழில்வழங்குவிக்கும்படி திருக்குடந்தை மகத்துதேசிகர் கட்டளையிட; அதில் மழையமல்லேசுரச்சருக்கமுதல் முச்சருக்கம் வேலையசுவாமிகளால் மொழிபெயர்த்துப் பாடப்பட்டன. இவ்வாசிரியர் காஞ்சீபுரத்திலே தொண்டைமண்டல வேளாளர்களுக்குத் தீக்ஷாகுருவாயிருந்த குமாரசுவாமிதேசிகரின் மத்தியகுமாரரும் நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகளின் சகோதரருமாகலின் இற்றைக்கு (உஅ0) வருடங்களுக்கு முன்பிருந்தவர். இவர் விருத்தாசலத்திற்கு மேற்றிசையிலுள்ள நல்லூர்த் தலபுராணமாதிய நூல்களை அருளிச்செய்து பெருமத்தூர்மடத்தில் எழுபத்திரண்டாம்வயதில் சிவலிங்க ஐக்கியமாயினவர். பிற்காலத்திலே, சிதம்பரமடத்திலிருந்த வசவலிங்கையர்வேண்டியவாறு மற்றை ஐந்துசருக்கங்களையும் பாடினவர் மெய்கண்டசந்தானம் திருத்துறையூரா

தீனத்தவராய்க் கோட்டூரிலிருந்த உமாபாகதேவரென்பவர். இவர் இற்றைக்கு (௧௮௮) வருடங்கட்கு முன்பிருந்தவர்.

இவ்விருவருமியற்றிய இப்புராணம் திருக்கைலையிற் சிவபெருமான் றிருவோலக்கச்சிறப்பு பாவபேதங்களின் கூறு அவை நீங்குமாறு பற்பலசிவஸ்தலமான்மியம் திருக்குடந்தைநகரவளம் அந்நகர மூர்த்திதலந்தீர்த்தங்களின்விசேடம் ஆங்குப்பேறுபெற்றோர் பலர்சரிதம் மகாமகதீர்த்தமகிமை சிவசொரூப நிலைமையைவிளக்கும் நித்தியம் நிர்மலமாதிய (௮௩) வாக்கியங்களின் அரும்பொருள்கள் குடந்தைவீரசிங்காதனஸ்தாபிதம் குருலிங்கசங்கமமொழிப்பொருள்கள் சிவபெருமான் யுகத்திற்கு நந்நான்குருவராயெழுந்தருளி வீரசைவத்தைவிளக்கினமை வீரசைவசித்தாந்தத்திறம் வைரவசமயிகளாதியரியல்பு வீரபத்திரக்கடவுளாதியர்விம்பிதசரிதம் முதலியவற்றோடு இவற்றிற்கு இன்றியமையாத்திறங்களையும் விரித்தியம்பாநிற்கும்.

இவ்வருமைநோக்கி இதைவெளிப்படுத்த எத்தனித்தவழி, பொம்மபுரம் ஸ்ரீசிவஞானபாலையதேசிகராதீனப்பிரதி (௧) (இது ஷை ஆதீனசீடர் - சிதம்பரம் சோ - குமாரவீரையரவர்களாற்கிடைத்தது.) திருப்போரூர் ஸ்ரீசிதம்பரதேசிகராதீனப்பிரதி (௧) (இது சென்னை வித்துவான், காயாறு - ஞானசுந்தரஐயரவர்களாற்கிடைத்தது.) திருக்கோவலூர் ஸ்ரீஆறுமுகதேசிகராதீனப்பிரதி (௧) (இது ஷை ஆதீனகர்த்தராய்த் திருப்பாதிரிப்புலியூரிலிருக்கும் ஸ்ரீமத் சிவசண்முகஞானதேசிகசுவாமிகளாற் கிடைத்தது.) குவாகம் ஸ்ரீ மன்றுளாடியதேசிகராதீனப்பிரதி (௧) (இது தற்காலம் ஷை ஆதீனத்தலைவராயிருக்கும் ஸ்ரீமத் வசவலிங்கதேசிகரவர்களாலும் ஷையார் சகோதரர் சோமலிங்கஐயரவர்களாலும் கிடைத்தது. இந்நான்குபிரதிகளையுங்கொண்டு பரிசோதித்துப், புராணத்திற் சுருங்கியசரிதமாதியவற்றைப் பல தலபுராணமாதியகொண்

டும், வீரசைவசித்தாந்தங்களை வீரசைவ தத்துவப்பிரகாச
லிய ஞானநூல்கள்கொண்டும் வேண்டும்வரை வசனத்தில் -
த்தும் புராணத்தில் குறிப்புக்களாக ஆங்காங்குவரைந்
மழையமல்லேசுரச்சருக்கத்தின் (உ0 - உக - உசு - ௩அ) 
க்கச்செய்யுள்களில் உருத்திரமண்ணியமுனிவரெனவே பாட
காணப்படினும் அவர் தந்தையாரால் தாயுதரத்தினின்றும்
இரகோபத்தால் கவரப்பட்டமைகாரணமாக அவர்க்கு அப்
யர் போந்ததாயிருத்தலின் உருத்திரமன்னியு முனிவரெ
கோடலேசிறப்பென்று தக்கார்வழங்கலின் வசனத்தின்மா
ரம் உருத்திரமன்னியுமுனிவரெனத் திருத்தியும் பதிப்பிக்
பட்டது.

இதனைப் பதிப்பித்தற்குவேண்டும் திரவியோபகாரம்புரிந்
ஓய்வின்றிப்பலமுறைதூண்டி அச்சிற்பதிப்பித்து வெளிப்ப
திய திருநெல்வேலி ஜவளி ம-ா-ா-ஸ்ரீ வைரவபண்டாரமவ
ளின்குமாரர் சுந்தரலிங்கபண்டாரமவர்கள் அன்புமிகுதி
பாராட்டற்பாலது. இங்ஙனம் தக்கார்முயன்று ஒவ்வொரு
யநூல்பதிப்பிக்கினும் எப்பாஷையினுமினிய நமது செந்தமி
பாஷை சாலத்தழைத்தோங்குமே ! இங்ஙனமேனும் தன
தோங்குமாறு இத்தமிழை ஆதியில்வளர்வித்த முதற்குர
கிய சிவபெருமான் திருவருள்பாலிப்பாராக. சுபம்.

## சீகாளத்திபுராணம்.

மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி -
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்
மறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றுரி யத்தே
நிறழ்தரு தமிழ்த்தெய் வத்தையுண் ணினைந் தேத்தல்செய்வா

சிவமயம்.

# பரிசோதனபத்திரம்.

| க்கம் | பாட்டு | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௯ | ௮ | ௩ | ருடன்வா | டுடன்வா |
| ௧௧ | ௧௯ | ௩ | கருபம் | கருப்பம் |
| ௧௫ | ௧௩ | ௪ | மேலஙா | மேலதா |
| ௧௬ | ௧௭ | ௧ | பாதரிரு | பாதனிரு |
| ௧௭ | ௦ | ௨௫ | திருமால் | திருமால். |
| ௨௦ | ௩௬ | ௨ | களி | கெளி |
| ஷை | ௩௮ | ௨ | செழுமர் | செழுமலர் |
| ௨௫ | ௬௨ | ௩ | கூடத் | கூடித் |
| ஷை | ௬௪ | ௪ | களிறு | கெளிறு |
| ௨௬ | ௬௯ | ௪ | பொழிபொழியென் | பொலிபொலிகென் |
| ஷை | ௭௦ | ௧ | நெல்லு | நெல்லுக் |
| ௨௭ | ௭௧ | ௩ | வேவ்வே | வெவ்வே |
| ௩௦ | ௦ | ௨௬ | (௮௫) | (௮௪) |
| ௩௬ | ௧௧௨ | ௨ | சடாங்க | சடங்க |
| ௩௮ | ௮ | ௧ | ரிந்தை | ணிந்தை |
| ௪௮ | ௫௫ | ௩ | வீரணமென் | வீரணனென் |
| ௬௦ | ௧௨௫ | ௧ | களிறு | கெளிறு |
| ௭௧ | ௯ | ௩ | தக்கண. | தக்கிண |
| ஷை | ஷை | ௫ | தக்கண | தக்கிண |
| ௭௨ | ௧௦ | ௩ | கணற்கருள | கணர்க்கருள |
| ௭௫ | ௧௯ | ௨ | தேவரீரணை | தேவரீயணை |
| ௮௮ | ௦ | ௨௮ | துத்த | துதித்த |
| ௮௪ | ௪௯ | ௨ | தீப்த்தங் | தீப்தங் |
| ௯௧ | ௯௧ | ௨ | பொசிப் | புசிப் |
| ௯௮ | ௧௩௩ | ௧ | படிந்து | பணிந்து |
| ௧௦௦ | ௧௪௨ | ௩ | பொசிப்பு | புசிப்பு |
| ௧௦௮ | ௧௩ | ௩ | வாதலாற் | தாதலாற் |

| பக்கம் | பாட்டு | வரி. | பிழை | திருத்தம். |
|---|---|---|---|---|
| க0கூ | உங | உ | கிடனுங் | கிடனுங், |
| ககரு | ருச | க | சூதினிவ் | சூதினில் |
| ககஅ | ச | க | தாரதல | தராதல |
| கஉக | 0 | உரு | வல்லா | வல்வா |
| கஉஅ | 0 | உஅ | (ருரு) | (ருசு) |
| கரு0 | 0 | உரு | ஆவணம் | ஆவணம். |
| கருசு | எஎ | ங | பிதாம்பர | பீதாம்பர |
| ச | வசனம். | உஎ | தமது | தனது |
| சு | | ங | மெனவுங் | மெனவும் |
| அ | | கஅ | மாவும் | மாகவும் |
| கூ | | உங | நல்லுரென் | நல்லூரென் |
| ௸ | | ௸ | நம்மை | நம்மைக்குறித்து |
| கசு | | ககூ | பாதனுடை | பாதாசிருதனுடை |
| கஅ | | ரு | மென்ஞெரு | மென்னுமொரு |
| ககூ | | உ0 | கரபுரி | கூஷரபுரி |
| உகூ | | உஅ | படிக்நு | படிக்து |
| ஙசு | | ச | இரதமா | இரதமாக |
| ௸ | | உஅ | புரிந்ததது | புரிந்தது |
| ஙஅ | | உ0 | திக்கும்" | திக்கும்,, |
| ௸ | | ௸ | மேலும்" | மேலும், |
| ருஉ | | க0 | அவவரம் | அவ்வரம் |
| சுங | | உ0 | டவனுடன் | டவருடன் |
| சுசு | | ககூ | புரியங்கால் | புரியுங்கால் |
| எச | | கரு | அதுபற்றி | இதுபற்றி |

அமைத்துக்கொள்ளல்.

திருக்குடந்தைச்சருக்கத்தில் (கஅ)வதுசெய்யுளை (உஎ)வது செய்யுளெனவும், வீரபத்திரச்சருக்கத்தில் (கருஅ)வதுசெய்யுளில் தருமகரமரணமறல் என்பதும்பாடமெனவும், சடாக்கனெனவருமிடங்களில் சடக்கனெனவும் கொள்க.

கணபதிதுணை

திருச்சிற்றம்பலம்.

# வீரசிங்காதனபுராணம்

## காப்பு.

உலகு ளோர்துதி குடந்தையம் பதியில்வாழ்ந் தோங்கி
யிலகு வீரசிங் காதன புராணம தியம்பத்
திலக வாணுதற் றிரிபுரை யீன்றருள் சீர்த்தி
யலகின் மாமடத் தியானைகாத் தவனடி பணிவாம்.

## பாயிரம்.

### சபாநாயகர். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்பெறுசிற் பரமாகிச் சிற்பரத்திற் றற்பரமாய்த் தேவ ராகிப், பார்பெறுபல் லுயிராகிப் பல்லுயிருக் குணர்வாகிப் பரா விச் செம்பொன், வார்பெறுவெற் புறுகொங்கைச் சிவகாம வல்லிவளர் வாமத் தாகி, யேர்பெறுபொற் புலியூர்ச்சிற் சபை யினட மிடுதிருத்தா ளிறைஞ்சி வாழ்வாம். (க)

### தும்பேசப்பெருமான்.

பிறந்துபிறந் தொழியாமோ கத்திரயத் தாலான்மாப் பிரியா வாக்கை, யிறந்திறந்து விடுந்தோறும் புட்குடம்பை நீங்குதல்போ லிகந்தே ஞான, மறந்துமறந் துறுபவந்தீர்த்

துரியகதி பெறவருளை வழங்கும் வாழ்வு, சிறந்துசிறந் துயர்கு டந்தைக் கும்பேசர் திருவடியைச் சென்னி சேர்ப்பாம். (உ

### மங்களநாயகியம்மை.

தன்னிகரி லாதகுட மூக்கிறைவ னார்தமைமுற் றழுவி யி ப, மன்னிநிலை பெற்றிடுபல் லுயிரையெலா மீன்றிரங் வளர்த்து மிக்கோ, ருன்னுதிருக் குடந்தையில்வாழ் கிழவிதனை நான்மறைக ளோதும் வால, கன்னியென்றம் மலைமங்கை பதம்பணிந்து நம்பிறவிக் கடலைத் தீர்ப்பாம். (ங

### விநாயகக்கடவுள்.

பொருந்தொருகோ டிருபதமும் மதநால்வா யைங்கரப்பே தகமாய்ப் புந்தி, வருந்துசடா னனக்கடவு டயர்தவிர்த்து மான் மகளை மருவச் செய்து, கருந்தடங்கட் கவுரிக்குங் கோபாலர் தமக்குமிரு கண்ணாய் வாழுந், திருந்துகுடந் தையிலீழந் திறை கொண்ட பிள்ளைபதஞ் சிரத்திற் சேர்ப்பாம். (ச)

### சுப்பிரமணியக்கடவுள்.

பருதியைக்கண் டிமலருங்கும் பதுமமலர் முகமலரும் பானேர் வெண்மைக், குருமதியைக் கண்டுகரு வரியிரியுங் கடல்பெரு குங் கொள்கைத் தாகக், கருமைமயிற் சேவுகைத்துக் காத் யிலாற் கிரிதுளைக்குங் கடவு ளார்தந், திருவடியைத் துதித்தரு ஞா னந்தீர்ந்து மெய்ஞ்ஞானஞ் சிறந்து வாழ்வாம். (ரு

### விசுவநாதர்.

படவரவ முடித்தலத்திற் றிருக்குடந்தைத் தலமதிசம் ப தீர்த் தத்திற், றடமிகுமா மகதீர்த்த மதிகமெழில் வீரசைவர்

---

(ச) கோபாலர் - அக்கினிக்கண்ணை நெற்றியிலுடையவர்; கோ - கண். பாலம் - நெற்றி.

(ரு) கொள்கைத்தாகத் தீர்த்து சிறந்து வாழ்வாம் என இயையும். கருவரி - இருள்.

சார் மடத்தின், மடமகற்றி யறிவருளும் பெரியமட மதிகமரி வாஞ்ஞே ராதிக், கடவுளர்க டமிலிசுவ நாதரதி கம்மவர்தாள் கருத்திற் சேர்ப்பாம். (௬)

### வீரபத்திரக்கடவுளாதியோர்.

சந்ததமும் வீரபத்தி ரக்கடவு ளிணையடிக்குச் சரணஞ் சீர்த்தி, சந்ததமும் பொலிநந்தி நாதனிணைப் பதங்களுக்குச் சரண நட்டஞ், சந்ததமும் புரிபிருங்கி நாதனிணைக் கழல்களுக்குச் சரண ஞானஞ், சந்ததமு முறத்திகழுஞ் சின்மயக ணாதிபர்க்குச் சரண மாதோ. (௭)

### வீரசைவசமயகுரவர்கள்.

ஆதிசதா சிவனீசன் மகேசனுருத் திரன்கமல வடிகள் போற்றி, யாதியே காக்கன்றுவி தாக்கன்பஞ்* சாக்கன்சடாக்கன்றுள் போற்றி, யாதியிரே ணுகன்றுரு கன்கோகன் னன்சங்கு கனன்றுள் போற்றி, யாதியிரே வணன்மருள னேகோரா மன்பண்டி தன்றுள் போற்றி. (௮)

### அல்லமதேவராதியோர்.

சிவனருளி னுருவமெனு மல்லமையன் வசவேசன் றிருத்தாளத்திச், சிவனருளிற் பிரசாதத் துதித்தசென்ன வசவன்சே வடிகள் வாழ்த்திச், சிவனருளிற் றிருக்கயிலைக் கேகிந்தம் வருஞ்சித்த ராமற் போற்றிச், சிவனருளும் வீரேசர்படிவமடி வாலன்றுட் டினஞ்சேவிப்பாம். (௯)

* (௮) சதாசிவராதிய பதினறுவரும் யுகத்திற்குநால்வராகக் கிரேதயுகமுதலிய நான்குயுகங்களினும் அன்பர்களுக்கு அநுக்கிரகித்தற்பொருட்டெழுந்தருளிய ஆசாரியமூர்த்திகள். இவ்வியல்பு இந்நூலில் மழையமல்லேசுரச் சருக்கத்துணர்க.

### சைவசமயதாரவராதியோர்.

திருஞான சம்பந்தன் பதம்பரவி விடைகுலந் திருந்தச் சாத்துந், திருநாவுக் கரையனிரு பதம்பரவி மணந்தவிர்க்கத் தெளிந்தாட் பட்ட, திருநாவ லூராளி பதம்பரவிச் சிவஞான போதந் தேக்குந், திருவாத வூரனிரு பதம்பரவி யடியர்பதஞ் சென்னி சேர்ப்பாம். (க0)

### மழையமல்லையதேசிகர். கலித்துறை.

ஆர ணம்முத லாகமத் தளவைபூ வளந்த
கார ணன்சுரர் நான்முகன் காணொணு தபரி
பூர ணம்பொலி மழையமல் லயனெனப் புவியிற்
பார ணம்பெற நடித்தவன் பதம்பர வுதுமால். (கக)

### மகத்துதேசிகர். எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மிகுத்ததோர் கயிலை யகன்றுபொற் குடந்தை வீரசிங் காதன மடத்தி, னகந்தடி யவரு ளனையுமோர் பொருளா வாண்டினி தளித்திட வமர்ந்தே, யிகத்தினிற் சீர்த்தி மறுமையின் முத்தி யிரண்டையு மீந்தரு ளிணையின், மகத்துதே சிகன்றன் பாதமெந் நாளும் வணங்கியே வழுத்தலுற் றனனால். (கஉ)

### வாழ்த்து. கலிவிருத்தம்.

வேத மோங்குக வேதிய ரோங்குக
மாத வத்தினர் மாதவ மோங்குக
பூத லத்துயி ரோங்குக பொற்பொடு
காதன் மங்கையர் கற்படர்ந் தோங்கவே. (கங)

அகமு மோங்குக வானின மோங்குக
மகமு மோங்குக மன்னவ ரோங்குக
சகமு மோங்குக தண்புனற் காவிரி
மிகவு மோங்க விளைபயி ரோங்கவே. (கச)

---

(கக) பாரணம் - திருத்திசெய்தல்.

வான மோங்குக மாமக மோங்குக
தான மோங்குக சத்திய மோங்குக
ஞான மோங்குக நன்னெறி யோங்குக
வான வீச னருடழைத் தோங்கவே. (கரு)

நேரி லாத்திரு நீறுமிக் கோங்குக
வாரு ருத்திர வக்கமு மோங்குக
சாரு' மஞ்செழுத் தோங்குக சந்ததம்
வீர சைவம் விளங்கிநின் றோங்கவே. (கசு)

## திருக்குடந்தை நகர்வளம்.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சொரிவ தேமழை சூழுங்கா வேரியே சுரர்க ளாடித் துதிப் பர்கா வேரியே, புரவ லர்க்கணி வார்பொன் முடிகளே புலத்தி னிற்பொதி வார்நென் முடிகளே, யருவி பாயுங் கடக்குஞ்ச ரங்களே யங்க சன்கை தொடுக்குஞ் சரங்களே, பரவு மன்பர் பழிச்சொலி யாழியே பாவை மார்நகி லஞ்சிறை யாழியே. ()

முருந்து முல்லையின் ஞர்நகை முத்தமே முருகி ளந்தென் றற் சாளர முத்தமே, பொருந்து வார்கொங்கை யிற்சந்த னத்தை யே போக்கு வாரன்பர் பாற்சந்த னத்தையே, விருந்த ருந்திடு மாமட வன்னமே மேவும் வாவி தொறும்மட வன்னமே, திருந் து மாமகஞ் சேர்தென்கு டந்தையே சேர்வர் வாழ்வர் திருநன் கு டந்தையே. (கஅ)

---

(கஎ) காவேரி - காவிற்பெருகுந்தேன் ; காவேரிநதி. பொதிதல் - பதித்தல். நகில் ஆழியே - தனங்கள் சக்கரவாகப்பறவை போல்வனவே. (கஅ) சாளரத்தால் உள்ளேவிடப்படுவது தென்றலென்பது. முத்தம் - விடுகை சந்தனம் - கலவைச்சாந்து ; சந்தாகச்செல்லும் அன்னம் ; சந்து - தூது. உடந்தை - உரியது. எனவே, குடந்தை சேர்வோர் திருவை உரித்தாகக் கொண்டு நன்கு வாழ்வர் என்றபடி.

அலகின் மாமணி யார்கட கங்களே யஞ்சொ லார்கரத் தார்கட கங்களே, மலைநி கர்க்கு மனைதொ றுங் கூழ்களே மாறி லாவளத் தோங்கும்பைங் கூழ்களே, பொலனி ழைழி பொருந்து மிரதமே புசிப்ப ரஞ்செவிப் பாவி னிரதமே, குலவு பஞ்சகதிவருங் கோணமே கொடிகண் மங்கு ளுறுடுங்கும்ப கோணமே. (கக)

## அவையடக்கம்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கடித்ததனைக் கண்டகர றறிடினு மின்சுவைத்தாங் கரும்பு போல, விடித்துரையைக் கூறிடினு மின்பமே தருவரென விதயத் தெண்ணி, நடித்தபிரான் றிருக்கயிலை மலையாதிச் சருக்கமதை நாயே னின்சொல், வடித்ததமிழ்ப் புலவோர்கண் மலர்ச்சரணை முடிக்கணியா வணைந்து சொல்வேன். (உ0)

விருப்பதனுற் கன்றருந்து பாலதனை மிச்சிலென வெகுளார் சட்காற், சுருப்பதனுன் மிச்சிலெனத் தேனையிக ழார்கொளு மத்தொன்மை போற்பொற், பொருப்பதனு லோங்குபுயக் கங்கைவீ ரேசர்பெயர் பொருந்தி யென்சொல், விருப்பதனு னுன்குகவிப் புலவோர்க ளிகழாம லேத்து வாரால். (உக)

## சிறப்புப்பாயிரம். மொழிபெயர்ப்புவகை.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வீரசைவ குருசோம சேகரதே சிகன்பாத மிலைச்சிப் பூவாள், வீரநர சிங்கமன்னன் வினவமறை யாகமங்கள் விளம்

---

(கக) மணிக்கடகம் அலகு இல் - இருபுறத்தும் மணிக ளிடப்பட்டயானை அளவில்லை. கூழ்கள் - உணவுகள். பைங்கூழ் - பயிர். பஞ்சகதி-மல்லகதி, மயூரகதி, வானரகதி, சசகதி, சரகதி யென்னும் ஐவகை நடைவிகற்பம். கோணம் - குதிரை.

(உ0) இடித்து - இடிபோல்வது.

பநாதி, வீரசைவ மிகுக்கவரன் மெய்ஞ்ஞான பீடமிதின் மேவ
லாலே, வீரசிங்கா தனமெனப்பேர் விளங்கிடுமென் றதன்பெ
ருமை விளம்பு நூலே. (௨௨)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மகத்துதே சிகன்முன் கருநடந் தமிழால் வழுத்துமென் றி
யம்பவே லையர், தொகுத்தருண் மழைய மல்லையர் சரிதந்
தொன்மையா மூர்க்கர்தஞ் சரிதம், பகுத்தக ளங்கச் சோழர்
தஞ் சரிதம் பகர்ந்தனர் சிதம்பர மடத்துண், மிகுத்துவாழ்
வசவ லிங்கையர் பிறவும் விளம்பிட வேண்டுமென் றிசைக்க.()

கலியது நாலா யிரத்தெண்ணூற் றிருபான் கதிசகாத் தம்
மொரா யிரத்தின், மலியறு நூற்று நாற்பத்தொன் றுக வழங்
கிய விளம்பிதை மாதஞ், செலுமதிற் பதிளுன் காந்தின மத
ளிற் றிங்களிற் கயிலையே குடந்தை, சொலும்வீர பத்திர
ரிரேணுகர் சோம சேகரர் சரிதமுந் தொகுத்தே. (௨௪)

தக்கமெய் கண்ட சந்ததி யதனிற் றழைகயி லாயர்பொற்
பதத்தைப், பக்கமாய்ப் பணிகோட் டேர்வரு மடந்தை பாகரு
முரைத்தனர் குடந்தைக், கொக்குறான் முன்னூற் சார்புநூற்
பழையோ ருயர்ந்தவாக் கியமதை யுணர்ந்தே, மிக்கிலக் கணத்
தின் விதியுளி வழாது விளங்கிடும் விருத்தயாப் பதனுல். ()

பாயிர முற்றிற்று.

---

ஆகச்செய்யுள் - ௨௬.

---

## திருக்கைலாயச்சருக்கம்.

### கலித்துறை.

மதிநி றைந்தவா யிரக்கரப் பாற்கரன் வானிற்
பதிகொ ணல்லுடுக் கணங்களும் பத்தியாய் நாளும்
விதிமு றைப்படி வலஞ்செயு மேருமுன் வரைகள்
கதியெ னப்பணிந் தேத்திய கயிலையங் கிரியில். (க)

மரக தப்பெருந் தூணிரை வகுத்துவச் சிரத்தின்
விரவு போதிகை சேர்த்துநற் பவளமேற் பாவா
விரவி போலொளிர் பதுமரா கக்கைவைத் திலங்கும்
புருட ராகமாம் பலகைதைத் தமைத்திடும் பொதுவில். (உ)

முத்தி ரத்தின மாலிகை தூங்கமுன் முறையா
வைத்து மாமணி யாடியை வயின்வயி னமைத்துப்
பத்தி யாகச்செம் பட்டினூல் விதானமின் பரப்பச்
சுத்த மாகவெங் கணுமலர் மாலிகை தூக்கி. (ங)

கதித்த பைம்பொனி னவமணி கதிரொளி கஞற்றப்
பதித்த கோளரி யாசனத் திடைபரம் பொருளா
ருதித்த வெண்பிறை பகீரதி கடுக்கையொள் ளரவ
மதித்த தும்பைவெள் ளெருக்கணி மணிமுடி யொளிர. (ச)

சோம சூரிய பாவக நயனங்க ளிலங்கக்
காமர் வெண்குழைத் தும்புரு நாரதர் கஞல
வாம மார்சதுர் மறைமொழி பவளவாய் மலர
நாம வல்விட கந்தர நள்ளிருள் பொதிய. (ரு)

---

(ரு) சிவபெருமான் சீர்த்தியைக் கம்பளர் அசுவதரரென்னும் இருகந்தருவர்கள் காதணிவடிவாயமர்ந்து பாடிக்கொண்டிருப்பதுபோலவே தும்புருநாரதர்களும் அச்சங்கக்குழைவடிவாயமர்ந்து பாடுகின்றனரென்பதும் சரித்திரப்பேறாகும்.

மன்னு மான்மழுத் திருக்கரத் தேந்திமேல் வயங்கப்
பொன்னின் முப்புரி நூலும்வெண் ணீறுமெய் பொலிய
மின்னு பொன்னரை ஞாணும்வெண் பட்டுமீ தொளிரப்
பன்னு வீரகண் டாமணி தாளொளி பரப்ப. (கூ)

உலக மியாவையும் பல்லுயிர்த் தொகுதியு முதரத்
திலக வீன்றருள் செய்திரு நாழிநெற் படியா
லலகி லாவறம் வளர்த்தரு ளானந்த வடிவாந்
திலக மாதொடுஞ் செழிக்கவீற் றிருக்குநா ளொருநாள். (எ)

திருவி ளங்கவீற் றிருந்துவா ழாகமெய்த் திருமான்
மருவி ளங்குவெண் டாமரை வாணிநா யகன்வெண்
குருவி ளங்கயி ராவதக் குரிசிலோ ருடன்வா
ழுருவி ளங்கிய வமரர்க ளுரியமா முனிவர். (அ)

எண்டி சாமுகத் திறைவர்க ளியக்கர்கந் தருவர்
புண்ட ரீகமான் முதலிய பூவையர் மணிபொன்
றெண்டி ரைக்கரத் தேந்துகங் காநதி திருந்து
மண்ட லத்துவிண் டலத்துள தீர்த்தமு மருவி. (கூ)

கற்ப கப்பொதும் பொற்றுணர் நறுமலர் கைக்கொண்
டற்பு மிக்குவந் தருச்சனை புரிந்தடி பணிந்து
தற்ப ராபர மாதுமை நாயக சரண
கிற்பு குந்தன நீகடைக் கண்ணரு ளெனவே. (க0)

துதித்தி றைஞ்சனு முடியொடு முடிபொரு தொடர்பாற்
கதித்த மாமணிப் பொடியுதிர் வரையெனக் காட்ட
மதித்த நந்திபொற் பிரம்புசொண் டவைக்கணே மாற
வுதித்த கட்கடைத் திருவருள் பொழிந்துறு மெல்லை. (கக)

ஆண்ட நாயகன் சென்னியி னமர்ந்துவாழ் வுகந்து
பூண்ட கற்புள வாநதி புவியின்முற் பொருந்தி

யீண்டு லோகர்தம் பவங்களைந் திட்டமா சதனுற்
றூண்டு வெண்டிரைக் கரத்தினு டானுவந் தணுகி. (கஉ)

ஐய மால்விடை நாயக வவிர்மதி கடுக்கைப்
பைய ராவணி பராபர பார்ப்பதி கொழுந
மெய்ய ணிந்தவெண் ணீற்றவெவ் விடந்திரண் டிருண்ட
மைய கந்தர மான்மழுத் தரித்தகை வரத. (கங)

நடன நாயக நான்மறை நாயக நவின்மூச்
சுடரி ஞயக சுந்தர நாயக தொழுவோர்க்
கடர்பி றப்புவே ரரிந்திடு நாயக புரத்தைப்
படந கைத்திடு நாயக வாதியெம் பரம. (கச)

கண்கண் மூன்றுடை யாய்புக லிருவர்கள் கவிதைப்
பண்கள் பூண்டுடை யாய்பலி யேற்றமா தவத்தோ
ரெண்க ளாண்டுடை யாய்தனஞ் சயன்கைவில் விட்ட
புண்கள் வேண்டுடை யாய்பரப் பிரமமாம் புனித. (கரு)

சம்பு சங்கர சச்சிதா னந்தபல் லுயிர்க
ணம்பி டுஞ்சர ணும்புய நான்முக னரியை
வெம்பு செய்தசூ லப்படை யாயுத விம[illegible]
கொம்பு வெள்ளையென் பாமையோ டணிந்திடு குழக. (கசு)

அமல நிர்க்குண நிராமய வசஞ்சல வபய
விமல சிற்பர சின்மய திகம்பர விகிர்த
சமநி ரஞ்சன தயாபர தாபத சகள
கமல நாரண வுருத்திர காரண முதலே. (கஎ)

என்று போற்றிநின் றிறைஞ்சியா னியம்பும்விண் ணப்ப
மொன்று கேட்டருள் புரிகநீ யுயர்ந்தமே தினியி

(கஉ) மாசுஅதனுல் - மாசை நீக்கிக்கொள்ளும் அக்கார ணத்தால். (கரு) எண்கள் - சிந்தனைகள்.

னின்ற மானுடர் முதலியோர் பற்பலர் நெருங்கிச்
சென்று மூழ்கியென் னிடையவர் தீமையை விடுத்தார். (கஅ)

என்ன பாவமென் றியம்புகேன் பசுமறை யவர்சொற்
கன்னி மார்சிசு வெளியவர் கையடைந் தவர்கண்
மன்னு சேட்டர்பின் னனுசர்மா வயப்பரி கருபம்
பின்ன மாவதை புரிந்திடப் பெருகுபா தகங்கள். (ககூ)

குருவை நிந்தனை தந்தைதாய் நிந்தனை குலத்திற்
பெருமை யாளரை நிந்தனை கற்புடைப் பெண்ணு
மரிவை நிந்தனை ஞானியர் நிந்தனை யரிதாம்
பொருளை நிந்தனை மறைமொழி நிந்தனைப் புன்மை. (உ0)

செய்த நன்றியை மறந்தவர் செம்பொனைத் திருட
ரைய மிட்டபின் னுண்டில ரகாம தழித்தார்
பொய்யு ரைத்தவர் மதுவினை நுகர்ந்தவர் புலையைக்
கைக லந்தவர் கடும்பிழை செய்திடுங் கருமம். (உக)

அடைக்க லப்பொருள் கவர்ந்துகை யடைந்தவர் தம்மை
விடுத்த சத்தியக் கரியுரைத் தவைக்கணே மேவிக்
கொடுத்த கூலிகொண் டழிவழக் குரைத்துநீர்க் கோட்ட
முடைத்து மன்பதைக் கிடுக்கணே யுறுத்திடு ரூறு. (உஉ)

பிறர்ம னைக்கொடி புணர்ந்தவர் பிறந்திடு முருவிற்
குறையி னார்தமை யிகழ்ந்தவர் குரவனு சனத்தி
னெறிபி ழைத்திருந் தவருண்ணே சித்துவஞ் சித்தோர்
மறைவி னிற்புரிந் திட்டபா தகரிவர் மலினம். (உங)

துணைந டந்துதோ கையர்தமைச் சூதினில் விடுத்தார்
கணவ னைப்பழித் தயலவர்க் காதலித் துகந்தா

(கஅ) சிறப்புப்பற்றி மானுடர்முதலியோரென உயர்தி ணையாகக்கூறினும் ஏனை விலங்குபறவைமுதலிய அஃறிணையுங் கொள்ளப்படும். மானுடர்முதலிய பல்லுயிர் என்பதும் பாடம்.

ருணவ னந்தனி னஞ்சினை யிட்டவ ருயர்ந்த
பணைய ழித்தவர் குருமொழி மறந்தவர் பாவம். (உச)

சூதை யாடினர் தவநெறி பிழைத்தவர் சொல்லா
வாது சொன்னவ ருபாத்தியை வைதவர் மனையிற்
றீது செய்தன விட்டவர் செய்நிய மத்தை
யேத விர்த்தவ ரிரக்கமில் லாதவ ரிடறு. (உரு)

கொடுப்ப வர்க்கிடை தடுப்பவர் கொடுப்பனு னென்றே
யடுத்த டுத்துரைத் தில்லையென் றறைந்தவ ரறமா
மடத்து ரோகியர் சுற்றம திகழ்ந்தவர் மனையை
விடுத்து ளார்குடி மெலிவுசெய் வேந்தரால் விகடம். (உசு)

ஆண்ட வன்படச் சமர்க்களத் தொளித்தன ரன்னம்
வேண்டி யேற்பவர்க் கில்லையென் றுண்டவர் வெருவ
நீண்ட பாதையிற் பறித்தவர் நேயமாய்க் கொலைமை
தீண்டி யூன்றனைத் தின்றிடச் செய்தவர் தீமை. (உஎ)

நதித டாகத்தி னசுத்தங்கள் செய்தவர் நன்மைக்
கதிசெ யைந்தரு ளாவினை யடித்தவர் களவிற்
பதரை நெல்லினிற் கலந்தவர் பகுத்த வள்ளக்கா
லதுகு றைத்தவர் குறைக்குமா றறைந்தவ ரவலம். (உஅ)

ஆதி யாகுமா பாதக மணியபா தகம்பின்
னீதி யில்லுப பாதகந் தனைநிகழ்த் திடினுந்

(உகூ) திரள் - ஈண்டு அதிபாதக பேதங்கள். மூலபாதக மென்பார் ஏதுவாமதிபாதகமென்றார். அதிபாதகம் அதிபாதக பேதம் மாபாதகம் யாபாதககனிஷ்டம் உபபாதகம் பிறபாதகம் என்பனவே முறையாகவும், மாபாதகமாதியாகக் கூறியது அக்கங்கை தன்பக்கல் சேர்ந்துள்ள அப்பாதகமிகுதி விளக்குதற்கென்க. பாதகவியல்பை * " அதிபா தகமு மதிற்பிரிவு மவ' மகபா தகமைந்துங் - கதித மகபா தகந்தன்னிற் கனிட்ட

நீதெ னும்படி யுறும்பிற பாதகந் திரளோ
டேது வாமதி பாதகந் திரண்டதிங் கிசைக்கின். (உகூ)

அளவி லிப்பவ மென்னிடத் தகற்றின ரதனு
மொளியெ லாமிழந் துடலெலா மாசுண வுருகிக்
களியி லாதுநெஞ் சயர்ந்துமைக் கரிசடைந் தடியே
னுளமெ லாநடுக் குற்றது தீர்வகை யுரையாய். (௩0)

என்று சங்கைமா னடுத்தடுத் திரந்திட விறைவ
னன்று நன்றென நகைத்தருள் செய்துமே னவில்வ
தொன்று கேளுனக் குறுதியா முன்னமயே யுரைப்பேங்
கன்று தீவினை யொழித்திடுங் கதியிதென் றறியே. (௩க)

கயிலை நாயகர் தம்முடன் கங்கைமா தவடான்
பயிலு மிவ்வுரை தன்னையிங் கடியனேன் பகர்ந்தேன்
மயிலெ னத்தனை யினைபுவான் குக்குட நடித்த
செயல தென்றறிந் துங்குடந் தைத்திற முரைப்பேன். (௩உ)

திருக்கைலாயச்சருக்க முற்றிற்று.

---

ஆகச்செய்யுள் - ருஅ.

---

## திருக்குடந்தைச்சருக்கம்.

செம்பொன் மால்வரைத் தக்கிண நாவலந் தீவி
லும்பர் போற்றிடு முயர்பதி பலபல வுளவா
நம்பு வோர்க்குவல் வினையெலா நவையற வொழிக்கும்
வம்ப தன்றுபல் லூழிநாட் டொல்லையின் மருவும். (க)

---

மான பாதகமு - மதனிற் றணிய வதற்கணிய வுபபா தகமு மத
ற்கணிய - வதனிற் றணிய பலபாவ விதமுந் தொகைசெய்
தறைந்தாமே." என்பதனுனும் அறிக.
* சிவதருமோத்தரம் பாவவியல் (கஉ)

(௩உ) வான்குக்குடம்—வான்கோழி. (க) வம்பது-புதுமையது

திருவி ளங்குகே தாரமென் றொருதலஞ் சிறக்கும்
பொருவி றந்ததிற் பனிநமைப் பூசனை புரிந்தே
கருது மாமல மொழித்துநங் கழற்றுணைப் பதத்தை
மருவு முத்தியு மடைந்துள வாழ்பதி காணீ. (௨)

காசி யென்றொரு புண்ணியப் பதியது கழறி
னாசி லாமணி கர்ணிகை விளங்கிடு மதன்கண்
மாசி லாவயி ரவனவன் மரித்தவர் பவத்தை
வீசி யேதிரி சூலம்வைத் தளிப்பன்மெய்ம் முத்தி. (௩)

திருந்து கோகர ணப்பதி சேர்புலைச் சியையும்
டொருந்த வாண்டன மாதலாற் புண்ணியஞ் சிறிதாங்
கிருந்தி யற்றினு மலைநிகர் பவமலை யேனுங்
கருந்தி னைக்கள வாயழிந் திடுமது காணே. (௪)

மல்லி கார்ச்சுன பருப்பத மகிதலத் தோங்கி
வில்லி டப்பல மணிகொழி யருவியின் விளங்கித்
தொல்லை வல்வினை யிம்மைவல் வினையெலாந் தொலைத்துப்
பல்பி றப்பொழித் துயர்கதி யெளிதினிற் பயக்கும். (௫)

விளங்கி வாழ்திருக் காளத்தி யதன்கணோர் வேடன்
றளர்ந்தி டாதிடு மிச்சிற்குந் தாட்செருப் புதைக்கு
முளங்க னிந்தனம் விழியினோ யுற்றிட வவன்கண்
களைந்திட் டப்பலாற் கண்ணப்ப னெனப்பெயர் கழறும். (௬)

காஞ்சி யென்றொரு தலமதிற் கருந்தடங் கண்ணி
வாஞ்சை யாய்நமை மாவடிப் பூசனை வகுத்தே
யாய்ஞ்சு முப்பதிற் றிரண்டற மதன்கணே வளர்த்தான்
மாய்ஞ்சு போங்கொடு வினையெலா மனிதர்முன் னெவர்க்கும்.

கஞ்ச நான்முகன் பூசனை புரிந்திடக் களிப்பால்
வஞ்சி யாதவன் வேண்டிய வரமெலா மளித்துத்

---

(எ) ஆய்ஞ்சு மாய்ஞ்சு என்பன இடைப்போலி.

தஞ்ச மென்றொரு பாலகற் காய்முடி சாய்த்தே
யிஞ்சி சூழ்திரு விரிஞ்சியென் றதன்பெய ரிசைப்பார். (அ)

ஓத்தி யூரெனு மோர்தல முளததுசிறக்கத்
தித்தி யென்றசை வறநட மாடுதுந் திரையிற்
றத்தி நத்துமுத் துகுத்திடப் புணரிசார்ந் திலகு
மத்தி ருப்பதி யின்கணே யமரர்க டொழுவார். (௯)

வேத நான்குமே முன்னமைப் பூசனை விரும்பி
யேத மற்றிடு மியல்பின்வே தாசலங் கழுக்க
ளாத ரித்தவண் பூசனை வகுத்தவ தரிக்குங்
காத லாற்கழுக் குன்றமென் றொருதலங் கவினும். (௧௦)

பிரமன் மான்மக வான்பணிக் கிறைமதன் பெட்பாற்
கருதி யேநமைப் பூசனை புரிந்தவர் கருத்துண்
மருவு நல்வர மியாவையும் பெற்றனர் மகிழ்வால்
விரவ தற்குவில் வாரணி யப்பெயர் விளங்கும். (௧௧)

மாய னான்முக னிருவருந் தம்முளே மதர்த்து
நாய னாரடி முடியது நாடினர் பெரியோ
ராயு யர்ந்தவ ரென்றபோ தனற்கிரி வடிவா
யேய நின்றநம் பெயர்கினைப் போர்கதி யிசைவார். (௧௨)

ஆல காலமன் றருந்திய நமையுமை யறிவா
லேல வேபசு விழுதினூர் கோட்டைசெய் திடையே
சால வைந்தழ லைப்பனே தவம்புரிந் திடலான்
மேல வாந்திரு வெண்ணெய்நல் லூரென விளங்கும். (௧௩)

திரிபு ராதிபர் தீவினை புரிந்திடச் செறுத்தே
மருவு மேருவில் வாசுகி நாணரி வாளி

---

(அ) என்றவென்னும் பெயரெச்சத்தகரம் தொக்கது. திரு விரிஞ்சை யென்பதும் வழக்கம். (௯) ஒத்தியென்பது ஒற்றி யென்பதன் மரூஉ. (௧௦) அவதரித்தல் - தங்கல்.

யுரிய வாக்கொளா வாங்கவ ரகந்தைகண் டொறுத்தே
யெரிகொ ளுத்தின நகையினு லதிகையென் றிலங்கும். (கச)

தேவி பூசைசெய் பாதிரிப் புலிசைக்குத் திருப்பேர்
காவி னுக்கிறை கரியமால் கடவுளர் கமலப்
பூவி னுக்கிறை கன்னியா ரணியமாப் புகழ்வர்
மேவி யவ்விடைச் சிவக்கொழுந் தென்னவீற் றிருப்போம். ()

பழம லைப்பதி யதனிடைப் பல்லுயி ரிறந்தால்
விழவ லச்செவி மேலதா மென்மலைக் கிழத்தி
யெழுத னத்துகில் வீசிட நாமெழுந் தருளிப்
பழுதி லாவுப தேசமும் பண்ணுதும் பண்பால். (கசு)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பதஞ்சலிவி யாக்கிரநற் பாதரிரு வோர்க்குமன் றிற் பரிபூ
ரத்தா, ளிதந்தகர வித்தைநடஞ் செயக்கலைக ளாயிரத்தொன்
றெழுந்து நாமும், வதிந்திடுமிக் கயிலைமுதற் றலமேவி யத்த
யா மத்தி லாங்கே, நிதம்புகலாற் றரிசிக்க முத்திசிதம் பரமெ
னப்பேர் நிகழ்த்தும் வேதம். (கஎ)

மலைகளெலாந் துதிசைய மால்வரையிற் பிறந்துபுவி மருவி
யோங்கு, மலைபுனற்கா விரிநதியி னிருமருங்கு முயர்தலங்க
ளளவி லாத, நிலவணிநா முறைகருவூ ரவிநாசி சிவாயமலை
நியம மாகப், பலவமரர் துதிகொள்சிராப் பள்ளியுட னையா
றும் பரிவின் மேவும். (கஅ)

காழியெனு மோர்பதிக்கு முந்நான்கு பெயருளவாங் கவினு
மிவ்வூ, ரூழியுகாந் தப்புனலி லழுந்தாது தோணியென வொ
ளிரா நிற்கும், வாழியபுள் ளிருக்குவே ளூரெனுமோர் பதி
யதுதான் மாயா நோயைப், பூழிமருந் தாற்றீர்க்கு மாதலா
லதன்பெருமை புகலற் பாற்றே. (ககூ)

மறைக்குலத்தா னுகுமொரு மார்க்கண்ட னெனும்பெயர
ரான் வாணா ளுண்ணக், கறைக்குலவு மேனிநமன் வரவிடக்க
லெடுத்தந்தக் காலன் வீழ, வுதைத்து தைத்தென் றும்வயது
பதினாறா யிருக்கவர முதவி னோனா, நறைக்கமல வயல்புடை
சூழ் திருக்கடவூ ரெனவதனை நவில்வ ரன்றே. (உ0)

சவுரிதிருத் தங்கையெனுந் தையலாள் பல்லுயிரைத் தந்து
வித்தக், கவுரிமயூ ரத்துருவாய் நமைப்பூசை கண்டதுமா யூர
மாமுற், பவமொழிக்குஞ் சிறுத்தொண்டன் பிள்ளையறுத் தூ
ட்டவுண்ணப் படர்ந்தாத் திக்கீழ்த், தவவடிவுத் தராபதியா
யினந்திருச்செங் காடெனப்பேர் சாற்று மூதூர். (உக)

அரியதிரு மறைக்காடென் றொருபதியுண் டப்பதியி னகத்தி
யற்கு, மருவுதிரு மணவாளக் கோலமது காட்டியுள மகிழ்ந்தி
ருந்தோம், திருவுறையுத் தரகோச மங்கையெனு மோர்பதி
தான் சிறக்கும் வானோர், பரவுதிருக் கன்றாப்பூர் நடுதறிநா
யகனெனநாம் பரிந்து வாழ்வாம். (உஉ)

தென்னர்புரந் திடுமதுரைப் பதியினிலிந் திரன்பழியைத்
தீர்த்த லாதி, தன்னுமறு பானான்கி லீலைபுரிந் தேசோம சுந்த
ரப்பேர், மன்னியுகந் தேமிரா மேச்சரந்தென் வாரிதிக்க ணில
ங்கை மன்னன், சென்னியொரு பத்தறுத்த பழியிரா மன்றொ
லைத்த சேது வாமால். (உ௩)

சனகசனந் தனசனற் குமாரசனா தனர்நால்வர் தமக்கி
யோக, முனைமுறைத்த படிக்குருந்த நிழலிருந்தோ ரடியவற்கு
மொழிந்தே யன்னோன், றனதுபசி யறிந்தவற்கு முன்னாட்

---

(உக) சௌரி - திருமால் கண்டது - செய்தது.

(உ௩) சேதுவிலுள்ள இராமேச்சரத்தைச் சேதுவென்றது உபசாரம். சேது - இராமமூர்த்தி இராவணசங்காரத்தின் பொருட்டு இலங்கையை யடைதற்குக் கடலிலமைத்தகரை.

டிப் பின்னுண்பேந் தக்க நாமம், வினவுதிருப் பெருந்துறை காண் பரமாக சியமாக விளங்கு மன்றே. (உ௪)

சீருருந் திருநெடுமால் பூசைபுரிந் திந்திரற்குச் சிறந்து நல்க, வாருரு முலைச்சசிதன் மணவாள னருச்சித்து மகிழ்வால் வெற் றித், தேருரு முசுகுந்தன் றனக்கருள நாம்புவியிற் செழிக்க மேவு, மாருரிற் பிறந்தவர்பே ருதிசே டனும்வாழ்த்த வறியா னன்றே. (உ௫)

செங்கணெடு மானமக்குச் செம்முளரி யாயிரந்தான் றின முஞ் சாத்து, மங்கணொரு நாளிலொரு மலர்குறைய விழியை யிடந் தருச்சித் தேத்த, நங்கருணை கூர்ந்தனக்கு வேண்டுவ தியா தெனவாழி நல்கா யென்னப், பொங்கொளிச்சக் கரமளி த்தே மதுவீழி மிழலையெனப் புகல்வ தன்றே. (உ௬)

தாவடுபொற் குழையடர்ந்த விழியுமையாள் கோவுருவந் தபப்பூ சித்த, வாவடுதண் டுறையதனிற் றிருவரசு பல்லூழி யழியா திற்குந், தேவடுதென் னிடைமருதா ரதன்கணயி ராவ ணந்தான் செய்பூ சைக்காத், தாவிடைமேற் றோன்றியரு ளின மதுதைப் பூசதீர்த் தத்தி ஞேங்கும். (உ௭)

இத்தகைய புண்ணியகேத் திரங்கள்பல முனிவர்விண்ணோ ரிறைஞ்ச மேவுந், தத்துதிரைப் புனல்பெருகிச் சரவசரப் பல் லுயிர்க டழைத்தே யோங்க, மெத்துவிண்ணோர் கடலமுதம் பருகுதல்போற் புவிபருக விழைவா னல்கும், புத்தமுதக் கா வேரி வளநாட்டின் பெருமையெவர் புகலு வாரே. (உ௮)

ஆலையின்சா றடுபுகையு மந்தணரோ மப்புகையு மரிவை மார் பூஞ், சோலையள கத்தூட்டு மகிற்புகையு மெவருமுண்ணுந் தொகுதி யன்ன, சாலையிலட் டிற்புகையு மிகர்த்திடுவண்

(உ௭) தபுதல் - கெடுதல். (உ௮) உயிர்கள் ஒங்கப் புவிக் கண்பருக நல்குங்காவேரிஎன்க. மேவும் நாடென இயையும்.

மேகரிளை தவழ்ந்து வாரிப், பாலுளநீர் பருகிச்சூற் கொண்டுகரு மேகமெனப் பரவி மாதோ. (௨௯)

நங்கருணை பொழிவதெனப் புயல்பொழிய வெற்புமுடி நண்ணி மெய்யிற், பொங்கொளிநீற் றணியென்ன வுடன்முழுதும் படிகநன்னீர் புனைந்து முத்தம், பைங்கனக மணிவரன்றிப் பாரிழிந்து குமுறியொலி படைத்து வானத், திங்கணில வெறிப்பதெனப் புடவியின்கண் மிகப்பரந்து சென்றதன்றே. (௩௦)

பொன்னிநதி பெருக்கெடுத்துச் சந்தகிறந் தியின்கோடு பூவா ரேல, மன்னியகோட் டந்தரளம் பாறயிர்நெய் யளைசாடி வளைய வாரித், துன்னுசிலை யிதண்கவண்வே லம்பிவையெ லாஞ்சுருட்டித் துளைவேர் சாடி, நன்னரந்த மகிழ்கோங்கு நாகவனம் பூகவன நலியச் சாய்த்தே. (௩௧)

தேமருவும் வனசமுல்லை மல்லிகைபா திரிபறித்துத் தேனூர் நெய்தற், பூமுதற்கா ணிக்கைகொடு திரைக்கரத்தி னிடையேந்திப் புனரி யென்னு, காமமண வாளனிரு தாடொழுது மனக்காம நண்ணி வாழ்ந்து, மாமகியி னிடமார்பல் லுயிரையெலா நாடோறும் வளர்க்கு மாதோ. (௩௨)

வானவர்கள் கந்தருவ ரியக்கர்பணி யுலகர்சித்தர் மகவான் மற்று, மேனையிரு டியர்முனிவர் சிவயோகர் பூசுரர்மா னுடர்க ளீண்டி, நானநனி புரிந்துநமைப் பூசைசெய வேள்வியுமே நடாத்த மிக்க, தானதரு மங்களள விலவழங்க நாடோறுந் தழைக்கு மன்றே. (௩௩)

புதுப்புனல்சென் றிடக்குடையு மடவார்பல் கோடியர்கள் பொருந்தி யீண்ட, மதுப்பிலிற்று மலர்மாலை வனைகூந்த ரோய்ந்தநறை வளைசேர் கொங்கை, யதிற்புனைந்த குங்குமசந் த

(௩௦) புயல்-நீர். நன்னீர் - நல்லநீர்மை (சுத்தவெண்மை)

னகளப மழிந்தநறை யணியார் தோட்டுக், கதுப்பிலணி கான
நறை கலந்துகடற் புலாலுநறை கமழு மாதோ. (௩௪)

புனல்படிமா தர்கண்முகத்தைப் புண்டரிக மலர்ந்ததென்று
புகன்று வண்டு, மனமுவந்து படிந்திடுங்கா லவர்சூழ்கப் பெரி
தொலித்து வானத் தேகு, மினமதெனக் கருங்கயல்கள் செங்
கயல்க ளிணைவிழியி னிடையே சேரும், பனகவரி வையர்த
மது சுற்றமெனத் தழுவிமொழி பகர்வ ராமால். (௩௫)

புறவடியைக் கடமென்றுங் கணைக்காலை வராலென்றும்
புனைமுழந்தை, மறமிகுந்த வலவனென்றும் வளர்விரலைக் களி
றென்று மகிழ்ந்து நேர்ந்தே, யுறவுகொள வலையருகுற் றுவ
மைநாம் போதாமென் றொழிய வின்பத், திறமணையுந் தெரி
வையர்கள் பற்பலகோ டியர்நாளுஞ் செழிப்பர் மாதோ. ()

அமரமட வாரீண்டி விமானமிழிந் தரியபுன லாடி நங்க,
டமரிவரென் றுறவுகொளத் தம்முள்ளே தாம்வெருண்டு த
கைமை நோக்கிச், சமரவிழி யாட்டமும்வின் னுதல்வியர்ப்பு
மடிநிலத்திற் சார்வுந் தோற்றி, யுமரமட வாரன்றோ மென்றை
யு மவர்க்கொழிவா னுலாவு வாரால். (௩௭)

நீராடிக் கரையேறித் துகில்புனைந்து மணிப்பணிக ணிறை
யப் பூண்டு, சீராடிக் கோதாடிச் செழுமர்ப்பூங் காவனத்து
ச் சென்று நின்று, வாராடுந் தனங்குலுங்க மரைக்கரத்து
வளைபுலம்ப மலர்கள் கொய்து, காராடுங் குழற்கணிந்து
தருமலர்கா லிற்சொரியக் களிக்கின் றாரால். (௩௮)

வண்டாடக் குழலாட மணிபணியோ லைகளாட வளைக ளா
டச், சென்டாடத் தனமாடத் தரளமணி வடமாடச் செருச்

---

(௩௫) புகன்று-குறித்து. (௩௬) முழந்து-முழுந்தாள். போதாமென்பது தகுதியாகுமென்னும் தன்மைப்பன்மை வினைமுற்று. போதுதல்-தகுதியாதல். (௩௭) தோற்றி-தோற்றுவித்து. (௩௮) காவிற்சொரிய என்பதும் பாடம்.

செய்மாரன், றிண்டாடச் சிறுமருங்கு றுவண்டாட மேக
லைகள் சிறந்தே யாடப், பண்டாடம் மணியாடிப் பொன்னூ
சல் கழங்காடிப் பரிவா ரன்றே. (௩௯)

தம்புரியாழ் வீணைசுர மண்டலங்கைக் கொண்டுகண்டந் தன்
னோ டொக்க, வும்பருள கந்தருவ மங்கையர்க ளுளமருள
வோசை கூட்டி, யம்புவிழி யார்கண்முப்பத் திரண்டிரா கம்
பிறக்க வசலமேக, மிம்பரிரஞ் சிதமாக விரல்களைத்தந் திரி
களின்வைத் திசைப்பர் தாமே. (௪0)

அரம்பையுருப் பசியொடுமே னகைதிலோத் தமைமுதல
வரம்பை மார்க,ணிரம்பிவிமா னத்திடையா காயவழி நிறைந்தி
வர்க ணிருத்தம் பார்த்து, வரம்பலபெற் றேமிலையிந் நடநம
க்கு வாய்த்ததிலை மண்ணு டெய்தி, யிரந்திவர்பாற் கற்கவென்று
லொப்பார்க ளெனநடன மிடுவர் தாமே. (௪௧)

## மேற்படி வேறு.

வெள்ளியிற் பொன்னிற் செய்த வியன்மணி யிழைத்து வாய்
வள்ளம துற்ற தீந்தேன் மாந்திவாள் விழிகள் சேப்ப [த்த
வுள்ளமு மதர்த்துப் பாடி யொருவரோ டொருவ ரூடிக்
கள்ளவி ழளகஞ் சோரக் களித்துவீற் றிருப்பர் கங்காய். (௪௨)

ஆடிபார்த் தழகு செய்ய வாடியு ளளக வண்டுங்
கூடிய மலருஞ் சீதக் குளிர்முக மதியு நெய்தல்
வாடிய விழியு முல்லை முறுவலும் வள்ளைக் காது
நாடிமங் கையரென் றுன்னி வருமென நகுகிற் பாரால். (௪௩)

பொன்மணி வள்ளத் துள்ளே பொழிநற வருந்த வாங்கோர்
பன்மணிப் பாவை போலப் பத்திபாய் வடிவம் பார்த்தே [ன்
யென்மணிக் கணவன் றன்னை யிசையவே கொணர்ந்தா யாகி
வின்மணிப் பூணுந் தேனும் வீசுவ லெனவிள் வாரால். (௪௪)

---

(௪௨) கங்கையென்னும் பெயர் கங்காய் என விளியுருபேற்றது.

மேற்படி வேறு.

தேனிறைய மாந்தியந்தக் களிப்பினு ளுளமகிழ்ச்சி தெரியா ராகிக், கானிறையு மளகபந்திக் காட்சிமா லையைமருங்கிற் கா ணச் சுற்றிப், பானிறையுந் தரளவடங் கரத்தணிந்து மேகலா பரணந் தன்னை, வானிறையுங் குழற்கணிந்து தத்தமிலா டிப் பாடி மகிழ்வர் மன்னோ. (சரு)

மாரவேள் படைவீடாம் பொழிலினிடை நிலவுகுடை வயங்க வெற்றி, வீரகா களகோகி லந்தொனிப்ப வெக்காள விருதா வன்றிற், சேரவாய் முழக்கொலிப்பக் கடற்பேரி யார்ப்பரிக் கத்தென்றற் றேர்மே, லாரமத வேளிரதி யொடுமாதர் சேனை யென வணைவன் மாதோ. (சசு)

கரம்படிப்பா ரொருகோடி கான்மதிப்பா ரொருகோடி கரிய மேதிப், பரம்படிப்பா ரொருகோடி பழங்கிழிப்பா ரொ ருகோடி பைம்பொற் கூந்தற், சுரும்படிப்பா ரொருகோடி துலைபிடிப்பா ரொருகோடி தூய முல்லை, யரும்பெடுப்பா ரொ ருகோடி யளவில்பல வளங்கோடி யமரு மாங்கே. (சஎ)

வயலெல்லாஞ் செஞ்சாலி வரம்பெல்லாங் கரும்புசுற்றில் வளரும் பூக, மயலெல்லாம் பொன்னரம்பை யடுத்தபுடை குடப்பலா வணியா யோங்கக், கயலெல்லா மிளம்பாளைக் கமு கூடு தாவியுயர் ககனம் பாய்ந்து, புயலெல்லா மிரிந்தோடப் பொழிமழையூ டிழிந்துவரும் புவியின் மீதே. (சஅ)

மாதுளையின் றலைவளைந்து புவிபடிதல் பெரியோரை வணங் கன் மானச், சூதபல நறவரம்பைக் கனியின்மது முட்பலவின் சொரிந்த தேற, லேதமறப் பெருகிமத கடைந்துகால் வாய்வ ழியி னெய்திச் செந்நெற், போதவளர்ந் திடப்பாயும் பொற்பு மிகுந் தியாவருக்கும் புகழ்ச்சித் தாமால். (சகூ)

குரங்கினங்கள் குடப்பலவின் கனிபறிக்க மணிக்கவணிற் கூட்டி மள்ளர், கரங்கொடுசோ லையினெறியக் கவிதெங்கி னி

ளநீரைக் கையால் வாங்கி, யிரங்கிடவே மள்ளர்தமை யெறியு
வரம் பைத்தாற்றி னெற்ற வாய்ந்து, நெருங்குகனி யுடைந்
தொழுகு தேறல்செந்நெற் பழனமெலா நிறையப் பாயும். (௫0)

செந்நெலெலாங் கன்னலன்ன கன்னலெலாங் கமுகன்ன திக
ழ்வான் பச்சை, துன்னலமாங் கமுகெல்லாந் தெங்கன்ன தெங்
கெல்லாஞ் சுடர்வான் றோய்ந்து, மின்னலெலாம் பரந்தன்ன
பழனுகுப்ப விரைந்துபல வின்மேல் வீழப், பொன்னலமாய்ச்
சொரிந்தன்ன சுளைசிதறி நறவமழை பொழியு மன்றே. (௫௧)

தாரினிடை யளிபடியும் பொழிலினிடை முகில்படியுந்
தரளச் சாலிப், போரினிடை யனம்படியுங் கொம்பரிடைக்
குயில்படியும் பொன்னூர் வேயின், றூரினிடைக் கயல்படியு
முளரியிற்செய் யாள்படியுந் தரக்கு மேதி, யேரினிடை வளை
படியுந் துறையிடையிப் பிகள்படியு மெழில தாக. (௫௨)

குளநிறையுஞ் செழுங்கமலங் குழிநிறையுங் கருங்குவளை
கோதி லாது, களநிறையும் வரிச்செந்நெற் கானிறையும் வெண்
ணிலவு காலுஞ் சங்கம், வளநிறையும் வரம்பெல்லா மரநி
றையு மந்தியுயர் வாழைத் தாற்றின், பளநிறையுங் கிடங்கெல்
லாம் பயநிறையுங் கயமெல்லாம் பரவித் தாமே. (௫௩)

தாமரைவா வியினன்னஞ் சங்கீன்ற வெண்டரளக் தம்மைக்
கண்ணுற், றேமநிறச் சிறகர்தம்மாற் றானீன்ற முட்டையென
வின்பங் கூர்ந்து, காமமுற வணைத்திருந்து சேவலன்ன முடனு
றைத்துக் கங்குன் முற்ற, நாமவிழி துயின்றிரவி வருமளவும்
விரகமின்றி நயக்கு மம்மா. (௫௪)

கரும்புசொரி முத்தமும்பைங் கமுகுசொரி முத்தமுஞ்செங்
கமலப் போதி, னரும்புசொரி முத்தமுமா னரவுசொரி முத்த

---

(௫௩) பளம் ழ ள வொற்றுமை.

(௫௫) ஆன் ஈண்டு ஆனின்பல்லெனக்கொள்க.

முஞ்சங் கலறிமேய்ந்து, வரம்புசொரி முத்தமும்வான் மழை
சொரியு முத்தமும்பொன் வாழை முத்த, மிரும்புவிவெண்
ணிலவெறிப்பத் தாரகையின் றொகுதியென விலகு மாங்கே. ()

கரும்புகளை மிகமுறிப்பா ரதுகழிப்பார் நீர்பொருந்துங் கய
த்து வீழ்ப்பார், திரும்பியவை களைத்தறிப்பார் கோதுசெய்
தா லையினிடுவார் சேருஞ் சாற்றை, நிரம்பிடுசா டியினிறைப்
பார் நீளடுப்பிற் பாகுபத நேராப் பார்ப்பார், விரும்புகட்டி
யக்காரம் விளைமுறிகற் கண்டுசெய்து வியக்கிற் பாரால். ()

ஆலையினுர்ப் பரிப்பொலியு மாற்றலையார்ப் பரிப்பொலியு
மரிய கானச், சோலையினுர்ப் பரிப்பொலியுந் துந்துபியார்ப்
பரிப்பொலியுஞ் சுரும்பி னீட்ட, மாலையினுர்ப் பரிப்பொலியும்
வண்டமிழார்ப் பரிப்பொலியு மாறு கொண்டு, வேலையினுர்ப்
பரிப்பொலியை வென்றிடுமார்ப் பரிப்பொலியாய் விளங்கு
மாதோ. (ருஎ)

மடைவாயின் வலம்புரிகள் சூலுளைந்தீன் றிடுந்தரள மணி
யின் குப்பை, படைவாயிற் கோடிடறிக் கலகலென வொலிகா
ட்டும் பவளஞ் சுற்று, மடைவாய்ப்பைங் கமுகேறி மரகதப்
பூங் குலைவளைய வண்மு மண்மின், புடைவாய்ந்த நுதற்றில
கம் போன்றிருந்து விளங்குமுயர் பொன்னி நாடே. (ருஅ)

புதியபுன னிறைந்துவர வுயிர்வளர்க்கு முயிர்நிலத்திற்
போந்த தாமென், றதிசயமா மள்ளரிலா ருடைப்பவருங்
கால்வாயை யகழ்ந்து நீரை, மதகின்வழி விடுப்பவருந் துடிப
ம்பை யடிப்பவரும் வாய்த்த தென்று, கதுமெனச்செங் கட்க
ரிய பகட்டேரி னுழுபவருங் கணக்கி லாரால். (ருகூ)

மட்டறவே வரம்புகட்டி யணைப்பவருங் குரம்பொதுக்கி
வளைக்கின் றாரும், பட்டநிறை கட்டிகளை யுடைப்பவரும் பந்தி

---

(ருகூ) கோதுதல் - கொந்துதல்.

யதாப் பாத்தி செய்து, தட்டறவே விதையெடுத்துப் பொழி பொழியென் றிறைப்பவருந் தண்ணீர் தேக்கி, விட்டமுளை பார்ப்பவரு நன்முளையாய் வாய்த்ததென்று மெச்சு வாரும். ().

படைச்சாலே ரடிப்பவருங் காளையிரே யென்பவரும் பாம்பு கட்டி, நடப்பாகத் தூரப்பவரு நீர்தேக்கிச் சேறுசெய்து நாடு வாரு, மடைப்பாய்நீர் விடுப்பவரு நாறுபறித் திடுபவரும் வளை வாச் சுற்றி, முடிப்பாகச் செய்பவரு முடிமுடிமேற் சுமப்ப வரு மொய்ப்பர் மாதோ: (௬௧)

நாறுபகுத் தெடுப்பவரு முடியவிழ்த்து விடுப்பவரு நானீ யென்றே, சேறொதுக்கித் தடுப்பவரு முனைமுளையா யடுப்பவ ருந் திரண்டு கூடத், தாறிடுகோ லெடுப்பவருந் தளைகோலிக் கொடுப்பவருந் தனித்து வேலை, கூறுசெய நடப்பவரும் பழ னமெலா மள்ளர்குழாங் கோடி கோடி. (௬௨)

நடவுநடு முழத்தியர்கள் குரவைமுழக் கிடவருகே நண்ணு மள்ளர், கடவுபக ரோமற் கையிளைத்து மெய்யிளைக்கக் கடைக்க ணுக்கு, மடைவுகண்டார்ப் பரித்தாலித் தையமுற்றே மை யமற்றே மன்பு பெற்றேம், படைவிடுமா ரப்பயலைத் தூரந்த னமென் றோர்தூரந்து பாடு வாரால். (௬௩)

களைகளையு முழத்தியர்கண் டங்களுக்கொப் பன்றென்று கா ணைச் சங்கைக், களைகளைவர் கமடத்தைப் புறங்காற்கொப் பன்றென்று கருதி நெஞ்சிற், களைகளைவர் கதித்தவரால் கணைக் காற்கொப் பன்றென்று கறுத்துத் தாமே, சளைகளை வர் களிறு களை விரல்களுக்கொப் பன்றென்று களைகின் றூரால். (௬௪)

களைகளையுங் கடைச்சியர்கள் கண்ணினுக்கொப் பன்றென்று காவி நெய்தற், களைகளைவர் புண்டரிக முகத்துக்கொப் பன்றெ ன்று கமல வேரைக், களைகளைவ ராம்பறனை வாய்மலர்க்கொப் பன்றென்று கருதி நெஞ்சிற், களைகளைவர் தமைநோக்கி மள்ள ரொலாந் தமதுகளை களைவர் காணே. (௬௫)

களைகளையு மள்ளர்மின்னார் காதினுக்கொப் பன்றென்று கடு
த்து வள்ளைக், களைகளைவர் முறுவலுக்கொப் பன்றென்று கதிர்
முத்தைக் கையால் வாரிக், களைகளைவர் கார்க்குழற்கொப் பன்
றென்று சைவலத்தைக் களன்றெ டுத்தே, களைகளைவர் பயிர்க்
கெனவே தங்களுக்குங் களைகளைந்து களிக்கின் றாரால். (௬௬)

நஞ்சமயம் போற்றழைத்து நம்மன்பர் போற்கிளைத்து நன்
மைமிக்காய், நஞ்சமனை மேனியெனப் பசுங்கதிர்வாங் கித்தே
வர் நாளும் போற்றி, நஞ்சரணை வணங்குதல்போற் றலைவண
ங்கி மேன்மேலு ஞான நல்கு, நஞ்சரிதை போல்விளைந்து செந்
நெலெலாம் பொன்னலமாய் நலம்பெற் றன்றே. (௬௭)

வாரியோ வாரியெனக் கூவிடுவார் மள்ளர்திரள் வந்து வந்
து, கூரியகூ னிரும்பரிவாள் கொடுவரித்தா ளரிந்திடுவார் கு
றைத்துக் கூட்டிப், பாரியதாஞ் சுமைசெய்வார் சுமைசுமப்பா
ரெடுத்திடுவார் பந்தி யாகப், போரியற்று வார்வரைபோற் புரி
சுற்றி முத்திரையும் பொருந்தச் செய்வார். (௬௮)

கரியபக டிணைத்திடுவார் போர்சரிப்பார் படுத்திடுவார் களங்
கள் செய்வா, ரரியநெல்லைத் தூற்றிடுவார் பதர்கழிப்பார் பொ
லிவளர்ப்பா ரரிய வையா, லுரியபிள்ளை யாரைவைப்பார் பொ
ழிபொழியென் றேயளப்பா ரொருமை யாகும், பெரியசெ
ங்கோ லிறைக்காறி லொன்றளிப்பா ரைங்கூறும் பெறுவா
ரன்றே. (௬௯)

கூலிநெல்லு கொடுத்திடுவார் குறைதீர விரப்பவர்க்குக்
கொடுப்பா ரென்றும், வேலைசெய்பண் ணைக்களப்பார் களவடி
கட் டுக்கொடுப்பார் விதைப்போர் செய்வார், சாலிநெல்லைப்
பற்பலபண் டயினிறைப்பா ரூர்ந்திடுவார் தகுதி யாக, மூலிய
வாழ் மனைச்சேர்ப்பார் களஞ்சியத்திற் பெய்திடுவார் முயற்சி
யாலே. (௭௦)

காவல்செய்யுஞ் சாத்தனுக்குக் களியாட்டஞ் செய்திடுவார் கருத்தான் முன்ன, மேவியதென் புலத்தார்தெய் வம்விருந் தொக் கற்றனக்கும் வேவ்வே றுயங், காவதுசெய் ததிற்றமது கூறுகொண் டில் வாழ்க்கைநல மமைவ தாக, வோவறுதாய் தந் தைமனைக் கிழத்திமக்க ளொடும்வாழ்ந்துண் டுவப்பர் மாதோ.

சோதிபஞ்ச தாருநரந் தங்கோங்கு சுரபுன்னை துரோண மா த்தி, மாதவிசண் பகம்வில்வ மந்தார நந்தியா வர்த்தம் பன்னீ, ராதவகாந் தந்நாகம் வெட்சிமுல்லை மல்லிகைபூ வலரி பச்சை, பாதிரிவேர் கொழுந்துமருப் பலமலர்நந் தனவனங்கள் பரவு மெங்கும். (எஉ)

மஞ்சள்பெருங் கருணைகோ துமைசிறிய பயறுழுந்து வள்ளி யுள்ளி, யிஞ்சிசருக் கரைவள்ளி சிறுகிழங்கு காரவல்லி யினிய வங்கம், விஞ்சியகா ணந்துவரை யவரைதினை கடலைதிலம் வெ ந்த யஞ்செம், பஞ்சிதா துளைநாக வல்லிசொலு முரியவளப் பலிப்புண் டாமால். (எரு)

வீறரிய பசுங்கதிர்பூங் கதலியிடுங் குலைவளைந்து விளங்கு மன் னர், தாறரியு நெடுங்கொடுவாள் போன்றொளிருங் கதிர்முதி ரந் தயங்கு வண்மைக், கூறரிய கழனிகளுஞ் சோலைகளு நதிக ளுந்தண் குளனு மல்கி, மாறரிது வேறுரைக்க வளந்தழைத்து நிறைந்துபுவி வாழு மாதோ. (எச)

இத்தகைய பொன்னிமின்னு ளிலகுமணித் தரளமல ரிவைக ளேந்தித், தத்துதிரைக் கரங்கொடருச் சித்தேத்துந் திருக்கு டந்தைத் தலமொன் றோங்கு, மத்தலத்தின் பெருமைமுடி யாயிரத்தோன் பல்லூழி யறைந்து மாட்டான், சத்ததனின்

---

(எச) மாறு - ஒப்பு. (எரு) அறைந்துமாட்டான் என்புழி அறைந்தாலும் அறையமாட்டாதவனே ஆவனென ஆக்கம் வருவிக்க. சத்து - உள்ளது.

கரனென்னுஞ்சூரியன் தீர்த்தமுண்டாக்கி வழிபட்டமையால் அத்தலமும் பாஸ்கரபுரியெனப்பட்டது.

## திருமால் ஆராவமுதாயினமை.

முத்தியைவிழைந்து மேருவில் திருமாலைக்குறித்துத் தவமியற்றியிருந்த ஏமவிருடி அத்திருமாலுத்தரவின்படி குடந்தையில் காவிரியாதியதீர்த்தங்களின்மூழ்கிக் கும்பேசமாதியதானங்களிலமரும் நம்மைவழிபட்டிருந்தனன். ஒருநாள் திருமகள் அதனைக்குறிப்பிக்கத் திருமால் "பெண்ணே குடந்தையிலுள்ள அமுதவாவியை நீயடையின் சிவகிருபையால் ஒருபொற்றாமரையலரும்; அதிற் குழவியாய்வதிந்து அம்முனிவனால் வளர்க்கப்பட்டுத் தவம்புரிந்திருத்தி; யாமணைந்து நினைமணந்து அம்முனிவனுக்கு முத்திநல்குவோம்" என்றருளினன். அங்ஙனமே அழகின்மிகுதியின் உருக்கொண்டிருந்தமையால் கோமளவல்லியென்றுபெயர்சூட்டி வளர்த்தலும்; மங்கைப்பருவமெய்தித் தவம்புரிந்தொழுகச் சதுர்யுகம் இருபத்துநான்குகழிந்தன. அக்காலை, அசுரர் தேவலோகத்தையலைத்துக் கற்பகமாதியவளங்கவர்ந்தமையின் இந்திரனெய்தி முறையிட; திருமால் ஏமவிருடியாச்சிரமம்புகுந்து திருமகளைமணந்து முனிவனுக்குமுத்திநல்கி நாகேச்சுரத்தில் நம்மையிறைஞ்சி நமதுத்தரவின்படி முன்புசலந்தரனைவதைத்ததாய்க் காவிரியிற் றாபிக்கப்பட்டிருந்த சக்கரங்கொண்டு அவ்வவுணரைச்சாடி அவர்கவர்ந்தபொருளனைத்தும் அமரர்க்களித்துச் சக்கரபாணியெனப்பெயர்வாய்ந்து குடந்தைக்கீழ்க்கோட்டம்புகுந்து நாகேசரென்னும் நம்மையிறைஞ்சி ஆராவமுதமேயென்றுதுதித்து மீண்டு அச்சக்கரத்தைக் காவிரியிலிருத்திவிட்டுச் சோமேசமடைய; ஆங்கு யாம் மாலீசரென்னுநாமம் நமக்குண்டாகும்படி அத்திருமாற்கிடங்கொடுத்து "எம்மை ஆராவமுதமேயென்று துதித்தாயாகலின் அப்பெயர்பூண்டுறைக" என்றருளினோம். அத்தி

அக்கணத்தின் முன்னரெய்துங் குடமதன்மேற் பிநாகவில் லி னம்பு பூட்டித், தைக்கவிடுஉக் குடந்தமதிற் சார்ந்திடுபல் லுயிரமிர்தஞ் சரித்தே பூமி, தொக்கவைந்து குரோசநளைத் தேகுடமூக் கமிர்தலிங்கந் துலங்கச் செய்து, மிக்கநமை நாம ருச்சித் தன்பினதிற் புகுந்தொளியாய் விளங்கி ஞெமால். ()

ஆதலினக் குறிக்கமிர்த லிங்கமெனப் பெயரிலங்கு மதனிற் பூசை, வேதனியற் றிச்சிருட்டித் தொழில்பெற்றான் மான்மு தல்வி ண்ணவர்க ளெல்லா,' மேதமறப் பூசித்திட் டவரவர்தம் பதம்பெற்றா ரேனை யோருங், காதலித்திக் குறியினிருந் தருட் கடைக்க ணைக்குகெனக் கழறி னார்கள். (அ0)

அப்படியே யாவமென வருள்செய்தேஞ் சந்நிதிமுன் னமிர் தந் தேங்கி, யொப்பிலதா கியவமிர்த புட்கரணி யதனின்மனை தொருமை யாகித், தப்பினிய மத்தொடங்கீர் படிந்தெள்ளாற் றருப்பணமுந் தகவி னீந்து, செப்பிடுதா னமுமியன்ற தளித்து கமைத் தெரிசிக்கிற் சேர்வர் முத்தி. (அக)

இரவிகுல மணிவிளக்கா மாந்தாதா வெனுமரச னிகலார் சென்னி, மருவுமுடி யிடறுகழற் கால்வேந்தன் குடந்தைநகர் மன்னி நம்மைப், பரிவினொடு பூசைபுரிந் தாலயந்தேர் திருநாளும் பண்பி னாற்றிப், பெருகுமடி யவர்க்கடிசி லறுசுவைய விதவு ண்டி பெட்பா னல்கி. (அஉ)

சித்திரா பூரணையிற் றீர்த்தமுமுன் டாக்கவெள்ளைச் சேவின் மீதே, சத்தியுட னாந்தோன்றி யவன்வேண்டு மிகபரங்க டகவி னீந்தோந், தத்துதிரை மாளவசந் திரபுரியின் மதிக்குலத் திற் றழைக்க வந்தோ, னித்தியவாழ் வுகந்துளசத் தியகீர்த்தி வேள்வி செய்தா னியம மாக. (அ௩)

---

(எகூ) குடந்தம் - குடம். சரித்து - சரியச்செய்து. அமு தினைந்த வாலுகமனைத்தும் கும்பத்திட்டு ஒருங்குபிசைந்து சிவலிங்கமாக்கிப் பூசித்தனரென்பது திருக்குடந்தைப்புராணம்.

அந்நேரத் தாகாய்த் தபயமெனு மொழிகேட்டங் கபய மீந்து, சொன்னேய மிகுந்தபுரோ கிதவேத சன்மாவைத் தொழுது கேட்பத், தன்னேரி லாநம்மைத் தியானித்தவ் வுரைநாடிச் சாற்றுகின்றா, னின்னேகே ளரசவொரு மறையோனுக் கிருவர்பன்னி யிருவர் தம்முள். (அச)

ஒருத்திதன்மேன் மோகம்வரக் கணவனுக்குப் பாலின்மருந் தூட்டிச் சின்னா, ளருத்திடவெங் கயநோய்கொண் டவனிறக்கப் பின்னவளு மழலின் மாய்ந்தாண், மருத்திடும்பார்ப் பனிவேசி மார்க்கத்திற் றிரிந்துபின்னர் வயது மூத்துக், கருத்தழிவெம் பிணியினுலைந் திறந்துநமன் கைவசமாய்க் கடுகச் சென்றாள். (அரு)

அந்தணனார் கொலைகணவன் கொலையிரண்டுஞ் செய்பவத்தை யாய்ந்து காலன், வெந்தழலார் நரகினிடை வீழ்த்தயுத காலமிவள் விடக்க ரிந்து, தந்தருந்தச் செய்ககசை யினிற்றாக்கி யெனப்பணிக்கச் சாற்று மங்ங, னொந்தருந்தி யவனியிற்பல் சூகரநாய் கரமாகி நுவனின் னாட்டில். (அசு)

சீலமறை யோனொருவன் மகளாகி யப்பாவ சேடந் தன்னாற், காலனிக ரொருபிரம ராக்கதத்தாற் கோட்பட்டுக் கவல்வாட் காண்டு, சாலமுந்நூ றொழிந்தனமற் றினுமெழுநூ றாண்டுள வித் தவறு போக்கற், கேதுவதோ வீதுணரா தபயமளித் தாயதனை விசைப்ப துண்டால். (அஎ)

இத்துயரந் தவிர்க்கும்வகை காவிரித்தென் கரைக்குடந்தை யெய்தி யங்க, ணுத்தமகா சிபத்துறையின் மாகநா னந்திங்க ளொன்று செய்து, முத்தினநா னப்பயனை யளிக்கிலவள் பவந்

---

(அரு) தேவசன்மாவென்பதும்பாடம்.

(அஅ) பாவத்தினீங்கிய பார்ப்பனியும்அத்துறையின்மூழ்கிப் புனிதையாய்த் தேவபதவியிலிருந்த தன்கணவனை அடையப்பெற்றனளென்பது அத்தலபுராணம்.

தொலையு முயல்வா யென்னச், சத்தியகீர்த் தியுமந்தப் படிபுரிந்து நமதுபதஞ் சார்ந்தா னன்றே. (அஅ)

### கலிவிருத்தம்.

அமிர்தபுட் கரணியின் குணதிக் கார்தரு
மமிர்தரு ளிலிங்கமா யமர விண்ணுறை
யமிர்துகு சோமன்வந் தகத்து ளன்பினவ்
வமிர்தலிங் கந்தனை யருச்சித் தேத்தியே. (அகூ)

தண்மையு முற்றுட றழைவு மோடதி
வண்மையு முற்றுநல் வாவி யுஞ்செய
வெண்மதிப் பூசனை விரும்பி நாமமு
முண்மையிற் சோமநா யகனென் றோங்குவேம். (கூ0)

தனதனுந் தக்கிண தடத்தின் மூழ்கிநீள்
சினைமலர்ப் பாடல வனத்திற் சேர்ந்தம
ரனகநந் தமையருச் சனைசெய் தார்ந்திரு
கனநிதி தோழமைக் களிப்பி னோங்கினன். (கூக)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அங்கிரா வுதவுபிர கற்பதிவந் தரியதவ மாற்றி விண்ணோர், தங்கள்குரு வாந்தகவிற் றனதனிதி மழைபொழியத் தனம்பெற் றோங்கிப், பொங்கழல்வேள் விகளியற்றிப் புரந்தரன்

---

(அகூ) அமிர்தபுட் கரணியென்றது கும்பத்திற்பெருகிய வமிர்தத்தைச் சிவபெருமான் தேக்குவித்த வாவியிரண்டனுள் சந்நிதிக்குக்கிழக்கினுள்ளது; தென்கிழக்கினுள்ள மற்றொன்று தொண்ணூற்றொராவது செய்யுளிற் கூறப்படுவதாம். சந்திரன் பூசித்தது சிக்கலிங்கமெனத் தலபுராணஞ்சாற்றலால் அக்கும்ப வமிர்தம் பெருகி ஐங்குரோசவெல்லைதோய்ந்து ஓரிடத்திறங்கி இலிங்கமாகுங்கால் அக்கும்பத்தினமுவிய சிக்கமும் அவ்வமிர்தத்திற்கலந்து திரண்டிருக்கலாம் போலும். சிக்கம் - உறி.

வாழ் பொன்னுலகம் போந்தான் றெய்வத், துங்கவமிர் தம்பில
த்து வழியினிழிந் துரகபுரந் துற்ற தன்றே. (௬௨)

உரகவிறை பசுக்கொட்டிற் றறியதனி னமிர்தலிங்க முறுத
ேனாக்கி, யரகரசங் கரசம்பு வெனத்துதித்துக் கூருமமா மரி
சொ லாற்றன், கரமிசைக்கொண் டெழுந்துதிருக் குடந்தைந
ண்ணு மச்சுவத்தக் கரையிற் ருபித், தரியவிதிப் படியருச்சித்
தவன்வேண்டும் வரமனைத்து முற்ரு னன்றே. (௬௩)

நாகவிறை பூசனையா னுகநா யகரெனவே நாமம் பெற்றே,
மேகநிற மாலயனிந் திரன்முதற்புத் தேள்கணங்கண் மெலி
யச் சூரன், வாகைபெற வவர்வருத்தங் கண்டுமுரு கேசனை
நாம் வரத்தா னல்கிச், சோகமுறச் சூர்முதலைத் தடிந்தவர்க
டுயரமெலாந் தொலைத்திட் டேமால். (௬௪)

வானவர்க டுயர்தவிர்ந்தா னந்தநடங் காட்டுகென வாழ்த்த
வோமென், ருனநடங் காட்டுதலா லாடல்வல்லா ரென்றுது
தித் தறைந்தார் வெய்யோன், றேனமருங் குழன்மடந்தை
பாகரெனுந் திருநாமந் திகழ்ந்த நம்மைத், தாளொருதீர்த் தந்
தொட்டுப் பூசித்துத் தவிர்கிரணஞ் சார்ந்தா னன்றே. (௬௫)

பாற்கரன்றீர்த் தஞ்செய்து வழிபடலாற் பாற்கரகேத் திர
மா யிற்ரு, ஞற்கரச்செங் கட்டிருமா லருச்சிக்கச் சலந்தரனை
நாசஞ் செய்த, போர்க்குரிய சக்கரங்கா விரிக்கணுள ததுகொ
டுநீ பொருதென் ருேதி, யேற்கவளித் தேமதுபெற் றவுண
ரைச்செற் றேயேம விருடி யென்போன். (௬௬)

தவமியற்றுங் காலமிர்த புட்கரணித் தடப்பொற்ரு மரைப்
போ தார்ந்தே, யவன்சுல தயா யிலக்குமிகோ மளவல்லி யென
வுளர வடைந்தாங் கந்தக், குவவுமுலை யவளைமணந் தம்முனி

---

(௬௫) ஓமெனல் - உடன்பாட்டுக்குறிப்பு. தானமர்ந்து
தவம்புரிந்து தவிர்கிரணங்கொளுந்தலைமை என்பதும்பாடம்.

க்கு முத்திதந்து குளிர்சோ மேச, நவமுறவாழ் நமையடைய
மாலீச னென்றுபெயர் நமக்குண் டாக. (௯௭)

அத்திருமாற் கிடங்கொடுத்தா ராவமுத னெனுநாம மளித்தே
மன்னு, மொத்தவுளம் பொறிபுலனுற் கரணமொரு முக்குணமு
மொருமை யாகி, நித்தநம திணையடியைச் சேவைபுரிந் தன்பு
மிக நிறைந்தா னந்தப், பத்தியுடன் பரவசமா யானந்த நித்தி
ரையைப் பண்ணு நின்றான். (௯௮)

தில்லையில்வெம் புலிப்பதத்தான் பணிப்பதத்தா னிருவர்க
ளுந் தெரிசித் தேத்த, வெல்லையிலா னந்தநடம் புரியவுமத் தள
தாளத் திசைந்தே மெங்கட், கொல்லையிலா னந்தநடங் காட்டு
கென நந்திமுழ வொலிக்கத் தாளம், வல்லிகையிற் கொடுத்த
யன்மால் கண்களிக்க நடம்புரிந்து மகிழ்ந்தே மன்றே. (௯௯)

தனஞ்சயன்செய் தவங்கண்டு பாசுபதாத் திரமீந்தேந் தண்
டேன் பில்கிக், கனஞ்செய்பொழிற் கருவூரிர் புலையாதி தனைப்
பகவன் கலந்த தோடந், தினஞ்செய்தவந் திருவுளத்திற் கொ
ண்டுவகை பூத்தெளிது தீர்த்து முத்தி, மனஞ்செய்நினை வின்
படியே வாய்க்கவழங் கினந்துருவா சன்சா பத்தால். (௧௦௦)

தேனுவந்து பூசிக்கச் சிந்தைநயந் தேகாம தேனு வாகென்,
றுனவர மன்றளித்தே மக்கோட்டக் குணதென்பா லமிர்து
வெள்ளத், தூனமிலுத் தரத்துளதாம் விசுவலிங்கங் காரோண
மென்ன வோங்கு, மீனமருங் கட்கலைமான் மணவாள னருச்
சிக்க வியப்புற் றங்கண். (௧௦௧)

---

(௯௬-௯௭-௯௮) திருமாலருச்சிக்கச் சக்கரமளித்தேம்; அதுபெற்று அவுணரைசசெற்று இலச்குமியையணந்து ஏம விருடிக்கு முத்திதந்து நமையடைய; அத்திருமாற்கிடங் கொடுத்து ஆராவமுதனெனுநாம மளித்தேம்; அன்னான் அதனால் பரவசமாய் ஆனந்தநித்தரையைப்பண்ணுநின்றான் என்பது (௧௦௦) வழங்கினங்கடலில் வந்துதோன்றும் என்பதும்பாடம்.

வெள்ளைவிடை மேற்றேனார் மொழியிடமாத் தோன்றிம லர்வேதன் காய, முள்ளமைத்த படிகாயா ரோகணராய் மறை ணையயவற் குதவி னோம்பூங், கள்ளவிழு மலர்ச்சோலைக் காசிவி யா தன்றலமுட் சுருதி யேநா, மெள்ளரிய கருணையினாற் பிர மனா யுவுப்வேத வியல்பு மீந்தே. (க0உ)

நேயமிகு நீமுதலா நவதீர்த்தக் கன்னியர்க ணெருங்கி வஞ்ச, மாயைபுரி கலிதொலைப்பா ணிக்கயிலை யடைந்திரக்க மகிழ்வு கூர்ந்து, தூயபொன்னித் தென்குடந்தைக் காரோண ராகுந மைத் தொழுது பூசை, யேயவியற் றிடிற்றொலைக்கு மென்ற ருளித் தொலைத்ததையு மியம்ப வன்னான். (க0ங)

அம்மொழிகேட் டக்குடந்தைக் காரோணத் தெய்திநமை யருச்சித் தேத்தி, வெய்மைசெயுங் கலிவலியைத் தொலைத்தி ட்டான் மாலயன்வின் னவர்கள் போற்றச், செம்மையருளிக் கயிலை முதலாம்புண் ணியபதிகள் சிறந்திட் டாலு, நம்மிதைய கருணை திருக் குடந்தையிடத் தேமிகவு நண்ணி வாழ்வாம். ()

அண்ணியமற் றைப்பதியி னடைபவத்தைப் புண்ணியநற் பதிய கற்றும், புண்ணியநற் பதிப்டவத்தைப் போக்கியிடுங் காசிநறைப் பொழிலார் காசி, நண்ணியதாங் கொடும்பவத்தைக் குடந்தைதொலைத் திடுங்குடந்தை நகரி னானும், பண்ணிய பொல் லாப்பவத்தைக் குடந்தையது வேயொழிக்கும் பான் மைத் தாமே. (க0ரு)

மேற்படி வேறு.

அன்ன பதியிற் காரோணத் தமர்ந்து வாழ்வோ மக்கோயிற்
றென்ன தாகு மிடத்தினம தருளின் விளங்குந் திகழ்தீர்த்த

(க0உ-க0ங) ஈந்தே இயம்ப என இயையும். (க0ங) இக்கயி லைத் தவமியற்ற மகிழ்ந்து தோன்றி என்பதும்பாடம்.
(க0ச) வியாதமுனிவரருச்சித்தது பாணபுரேசமென்பது திருக்குடந்தைப்புராணம்.

முன்னு மீரே ழுலகினை நதிக டீர்த்த முளவெல்லா
மன்னி மூழ்கு பயனுதவு மதனின் பெருமை வகுப்பாரார். ()

அத்தன் மையவத் தீர்த்தக்கீழ்க் கரையி னமரும் வசிட்டர் பணி, முத்த வபிமு கேசமென மொழிவ ததற்குக் குடதென்பாற், பத்தி யுடன்கோ தமன்பூசை பயிலுங் கௌத மேசமு மூஞ், சித்த ரியக்கர் வானவருந் திரண்டு போற்றுந் தீர்த்தமுடன். (௧0௭)

பிரமன் றவஞ்செய் கொள்கையினூற் பிரம தீர்த்த மென்று பெயர், பரவும் பாவ மரித்தலினூற் பாபா பநோத மென்று பெயர், முருகு முத்தி யளித்திடலான் முத்தி தீர்த்த மென்று பெயர், கருது கனியர் பூசையினூற் கன்னி தீர்த்த மென்றுபெயர். (௧0௮)

முன்னு பிரம மௌக்கிரே தத்தின் மொழிவர் திரேதத்திற்
பன்னு பாபா பநோதமெனப் பகர்வர் முத்தி தீர்த்தமெனத்
துன்னி வருது வாபரத்திற் சொல்வர் கன்னி தீர்த்தமென
மன்னு கலியி னுரைப்பர்மகா மகதீர்த் தமுமா மதித்துலகோர்.

இன்ன தன்மைச் சினகரஞ்சூழ்ந் திலங்கு மந்தத் தீர்த்தமதிற்
பன்னீ ராண்டுக் கொருமுறைதான் பகரு மாசிப் பூரணையிற்
றுன்னு மகநாட் சிங்கத்திற் சொல்லும் பிரசற் பதியென்பான்
மன்னு திருநா டேவரெலாம் வழுத்தும் பெயர்மா மகமாமால்.

அந்நாட் டீர்த்த மாடுபவர்க் கரிய நியம மறையுங்காற், சொன்னூன் மறையா கமமுறையாற் றெருசுத்த நானஞ் செய்வலெ

(௧0௭) அவிமுத்தேசமென்பதும் பாடம்.

(௧0௮) அபநோதம் - அகற்றல். கனியர் - கன்னியர்; (இடைக்குறை.) (௧0௯) மகாமக தீர்த்தமென மதித்துரைப்பதல்லாமலும் கன்னிதீர்த்தமெனவும் கலியிலுரைப்பரென்பது.

(௧௧0) தீர்த்தமதிலாடுபவரென இயையும்.

ன்றே, யின்று வொழியச் சங்கற்பத் தெய்திக் கௌர கரும முடித், துன்று மூழ்கித் தென்புலத்தார்க் குறுதித் திலநீர்ச் சுவையளித்தே. (ககக)

மீட்டு மூழ்கி முன்னுளில் விளக்குங் கரும விதிப்படியே
கூட்டும் பஞ்சப் பிரமசடாங் கத்தான் மற்றைக் குலமனுவாற்
றீட்டு மங்க ஙியாசமுடன் கரஙி யாசஞ் செய்தன்பி
னூட்டுஞ் சிவபூ சனைமுடித்துத் துதித்து நயந்து வலம்வந்தே.

திருந்து காரோ ணத்திறைதா டெரிசித் துபவா சமுஞ்செய்து, பொருந்து விழிக டுயிலாமற் கங்குற் போது போக்கியி னன், பரிந்து தோன்று மறுநாணீர்ப் படிந்துள் ளளவு தானமளித், தருந்தும் விருந்துக் களமுதவி யதற்பி னரும்பா ரணஞ் செய்வார். (ககங)

கொடிய பிறவித் துயர்தீர்ந்து குழுவார் பதக மலைகளெல் லாங், கடிய வழன்முற் றூறதுபோற் கரியப் பொரிய நீற்றிடு வார், முடியைப் புனைந்து புவியாள்வார் மொழியுங் கலைகண் முழுதுணர்வார், குடிநற் றனையர் பெருஞ்செல்வங் கூடிப் போகந் துய்த்திடுவார். (ககச)

தரும கருத்த ராயிருப்பர் தரியார் பரவச் சயம்பெறுவ
ரொருமை ஞான முளபெரியோர்க் குறவ தாவர் பெரும்பாவ
கரும காரிக் கயலாவர் கடுவெம் பிணியைத் தவிர்ந்திடுவ
ரிருமை தருபல் போகமெனு மிகமும் பரமு மணைந்திடுவார்.()

இன்ன குடந்தைப் பதியின்கண் ணெய்தி யமா ரியக்கர்சித்தன்
மன்னு மணிமா மகதீர்த்த மருவிப் புகுந்து நீராடிற்

(ககக) க்ஷௌரகர்மமென்பது கௌரகருமமெனத் தற்பவமாயிற்று.

(ககங) இனன் - சூரியன்.

பன்ன வரிய பவங்களெலாம் பானு வுதய பனிக்கொப்பாப்
பின்னப் படுத்து முனற்கரிய பேறுந் தருமங் கேகென்ருன்.()

ஆதிப் பரம சிவன்கன்னகக் கறைந்த குடந்தைச் சருக்கமதை
நீதிப் புவியி லடியேனு நிகழ்த்து மூறைமை நிகர்வதுதா
ஞேதிற் றுயிலிற் கண்டகனு ஆம னுரைத்த தாஞ்செக்கர்ச்
சோதிச் சுடர்வீ ரேசர்கதைச் சருக்க மதனைச் சொல்லுவனுல்.

திருக்குடந்தைச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள் - கஎ௫.

## வீ ர ப த் தி ர ச் ச ரு க் க ம்.

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அந்த வாய்மையிறை யருள வானதிமி னம்பு யப்பதம் வண ங்கியே, யிந்த வாய்மையரு ளென்னை யன்றியய வியாவர் பெற்றவர்க ளென்றுதன், புந்தி யாரமகிழ் வெய்தி மெய்ம்ம யிர் பொடிப்ப நற்பரவ சத்தளாய், நந்தி நம்பகயி லாய வாண வுமை நாய காவென வழுத்தியே. (க)

போற்றி போற்றிதிரி சூல மேவுகர போற்றி போற்றியரி யடுபவ, போற்றி போற்றிவிட முண்டி ருண்டகள போற்றி போற்றிசுரர் புயகர, போற்றி போற்றிபணி பூணு மாபரண போற்றி போற்றிபுலி யுடையவ, போற்றி போற்றிமதி சூடி யார்சடில போற்றி போற்றியுயர் புண்ணியா. (உ)

போற்றி போற்றிகரு ணுக ரக்கடவுள் போற்றி போற்றி மலை வில்லா, போற்றி போற்றிதிரி புரமெ ரித்தசிவ போற்றி போற்றிநுத னேத்திர, போற்றி போற்றிமத னெரிய நோக் கிறைவ போற்றி போற்றிசபை நாயக, போற்றி போற்றிநட மாடி டுஞ்சரண போற்றி போற்றிபரி பூரணு. (௩)

என்று போற்றிநிறை கங்கை மாதவ ளியம்பு கின்றிடுவின்
னப்பமிங், கொன்று கேட்டருளி யந்த வுண்மைவர முதல
வேண்டுமிவ ணடிகணீர், கன்று தீவினையொ ழித்த தற்பினுறு
கதிய ளித்திடுகு டந்தையி, னின்று போதியென வருள்செய்
தீரரிவை மார்க ளேகிவர லெளியதோ. (௪)

துணையி லாதுமட வார்த னிக்கின்மிகு துயர நீடுமென
ரெூன்மையே, யுணரு நாலுமறை யாக மங்கலைக ளாதி யோ
துமென வுரைசெய்தீ, ரிணையி லாவுமது மொழிநி னைந்துதனி
யேகு தற்குமன மிசைகிலே, னணிய ஞகவொரு துணைத ரக்
கருணை யருளி யாளுகென வண்ணலும். (௫)

இவ்வி டத்திலுறு வோர்க டம்மினுன திதய மொப்பவர்க
ளெவர்களக், கவ்வை யற்றதுணை வினவி ஞமுமது கருணை செ
ய்துமென வுரைசெய்வாள், செவ்வை யொத்துள நினைந்து முன்
புமது திருவு ளக்கருணை பெற்றுநீள், குவ்வொ டெவ்வுலகு
ளோர்க ளுந்தனது கோல்செ லுத்தியர சாளுவான். (௬)

பதும நான்முகன ளித்த தக்கனருள் பாவை மார்கள்பல ர
வரிலோர், சுதையை நிற்கென வளிக்கு மன்றுகலி யாண தொ
ன்மக முடித்தபின், கதுமெ னப்பரம நீக ரக்கவுள் கனன்ற வ
ன்னுனையு மிகழவச், சதியெ னும்பரை தவஞ்செ யக்கருணை
தந்து வந்துகொடு போனபின். (எ)

தக்க நிந்தைமொழி தவறு ரைக்கவுயர் சதுர்மு கத்தவன்
முன் னமரர்தா, முக்க ணுயகனை யிவனி கழ்ச்சிசெய மூளும்
வல்வினைய தெண்ணியே, கக்கெ னக்கயிலை யெய்தி நின்குறை
கள் கழறி லவ்விறைவர் காக்குமென், றக்க ணத்தவர்கள் சொ
ல்லி வாழ்பதிய டைந்து போயினர்பின் பவனுமே. (அ)

தேவர் சூழ்கயிலை யெய்தி நுஞ்சரண சேவை காணவரு
வான்வழிக், காவ லானகண நாதர் நில்லெனுரை கழற வம்பி

கைபி தாவென, மூவ ருக்குமொரு முதல்வி தன்னைமக ளென்
றுரைத்தல்பழி மொழியெனக், கோவ முற்றவர்கள் கூற லு
ம்மனது குறையு றப்பதியின் மீண்டுதான். (௯)

நிந்தை செய்துமறை வேள்வி செய்யவுள நினைவு கொண்ட
மரர் பலரையும், வந்தி டப்பகர வவர்கு ழீஇக்கனல்கொண
மகமி யற்றவவன் மகண்மையோர், சிந்தை வெஃகிநல் விமான
மேகுவது தேவி கண்டுமென வுவகையா, லுந்த மக்குரைசெய்
திங்ஙனம்மையவ னொழிபு செய்யவுற றருமமோ. (௧௦)

என்றுரைத்ததனை நோக்க வேண்டுமென விறைவி கூறியவ
னெய்தலுந், துன்று சாலையி னிருந்த தேவரடி தொழுதல் கண்
டவனு மிகழ்தலாற், கன்றி நெஞ்சுகனல் கதுவ விக்கயிலை கண்டு
நின்னொடுரை கழறியிங், கின்று தக்கன்மக ளென்னும் வாய்மை
கெட விமைய மால்வரையி னெய்தினள். (௧௧)

ஐய நின்னுதலின் விழிவி ளக்குளெழு பரிய சோதியன லுரு
வமாய், வெய்ய கோரமுள வீர பத்திரன்முன் மேவ நம்மை
யு மிகழ்ச்சியால், வையு மாகொடியன் மாய வேள்விபுரி மலின
தக்கன்முத லாயினோர், நைய வேகியவன் மகம ழித்திவணை
நாடி மீடியென வருளவே. (௧௨)

வீர பத்திரனு மடிப ணிந்துவல மாக வந்துமிகு வெகுளி
யோ, டார பத்திரவில் லம்பு வாள்சுரிகை யாதி யங்கையினெ
டுத்துமீக், கோர பத்திரக ணத்தி னுதர்செறி கூளி பாரிட
குழுக்களா, கார பத்திரரொ டொளிரி லாடமுறு கண்ணன்
வெற்றிகொள நண்ணியே. (௧௩)

ஊழி வெள்ளமது நிகர்வ தானபடை யூடெ ழுந்துபுவி தேர
தா, வாழி வெண்கதிரி னிலவி னுலிருளை மாற்று கின்றமதி

(௧௦) மகண்மையோர் - மகளாந்தன்மையோர். ஒழிபு - ஒழி
ந்து. (௧௧) இன்றுகெட என இயையும். (௧௨) எழுபு - எழு
ந்து. (௧௩) இலாடம் - நெற்றி.

கவிகையா, வாழி யொற்றையுள வாத வன்கிரண வால வட்டமென வசைவதா, வேழ மார்பொதிய மலைவ சந்தம்வட வாடை சாமரையின் விரவிட. (௧௪)

ஓங்கு மாதிசிவ லிங்க மேவலுறு முயர்ச டாமகுட மொளிரவே, வாங்கு மாழியரி மச்ச மன்னியதொர் மகர குண்டலம துகளவே, தூங்கு மாலயனிந் த்ராதி தேவர்தலை மாலை தோளிலணி சூழவே, பூங்க ணேனவெயி றிணைசெய் முத்தணியல் புரள மார்பினொளி பெருகவே. (௧௫)

தன்னை மானுவதொர் கூர்ம வோடணியல் சாற்று கின்ற விடை தோற்றவே, துன்னு மாரநர சிங்க நற்றலையொண் டொடையி னூரவெழி லடையவே, மின்னு மாலினுர மணிக வுத்வமணி வீர கண்டைமணி யாரவே, பன்னு மாயர்விழி முளரியுற்றொலிசெய் பரிபு ரச்சரண மருவவே. (௧௬)

முந்தை நாளழி முராரி பாற்கவரொண் முதிய சங்கமெதிர் முரலவே, யுந்து விக்கிரம னூர ழிந்தமுது கென்பு காகள முரற்றவே, நந்து வேதன்மக வான்சி ரங்கைகள்வெண் ணரலை யென்னநனி நரலவே, சிந்து மந்தகன தூர்த்தி மேதியின் சிருங்க மல்குபு சிலம்பவே. (௧௭)

போர்செய் பூதகண நாதர் சேரவவர் பொருக லாதெவரு நழுவவே, பார வில்லுகைக யெடுக்க வும்மவர்கை பற்று வில்லுகள் பறக்கவே, வீரர் தங்கடலை துணிக வந்திரள் விரவி யெங்குநட மிடுகவே, கோர நாய்கழுகு கொடிய ருந்துநரி கூளி நின்றுகளி கூரவே. (௧௮)

(௧௬) நரசிங்கத்தலை தோளிலணியப்பட்ட தலைமாலையினிடையே கோக்கப்பட்டுத் தொடையளவு தொங்குதலுடையதாயிற்றென்பது. இதனை "முடங்குளை மடங்கன் முகனுடுக் கோத்த - வெண்டலை மாலை கண்டவர் வெருவத் - தண்டாது கிடக்குந் திண்டோட் பொருப்பினன்" என்னும் இஷ்டலிங்க அகவலானும் உணர்க.

ஆனை தேர்புரவி தானை தூளிபட வுடல்செய் பூதகண மறைவவே, தானை யாவிவிட மின்னி றைச்சிமலே தன்னெ டொத்த பிணமன்னவே, மோன மாதவர்கள் வேணி தாடிசுட முடுகி யோடியிடை யொடியவே, வான மாதிபுவி குருதி நீர்பெருகி மருவி வாரியலை யெறியவே. (கக)

மட்டில் யானை நுதல் பட்ட வாளியின் மருப்பொ டிந்ததின் மிதிப்பவே, குட்டை யானகுற ளலகை கோடிபுனை சொண்டு நீந்திமெய் குளிப்பவே, சுட்ட வாளியழன் மேக பந்தியறல் சுவறி மெய்கருகி யுழலவே, வட்ட மிட்டபத தூளி வான்முகடு மறைய வாளிரவி சுழலவே. (உ0)

சிங்க நாதவொலி செவிப டக்கரிக டிசையி னின்றுடல் விடுப்பவே, சங்க நாதவொலி காது றச்செவிடு தட்டி யாருயிர் படுப்பவே, திங்கள் வானவர்க டங்க டங்கள்பதி தேடி யொண் கத வடைப்பவே, வங்க மார்புணரி துகளின் மேடுபட வயிர வன்படை யடுப்பவே. (உக)

நாலி ரண்டுதிசை யாளு வார்திசையை நாடி யோடவிவர் சாடவே, பாலி ரண்டினுறு மிருடி மார்தமது பதியை நாடியவ ரோடவே, காலி ரண்டுகொடு யாக சாலையது கரிப டத்துகள் செய் தாடவே, வேலி ரண்டருகு விடுசு டர்ப்பொறியின் விண்ணு மண்ணுமழ லூடவே. (உஉ)

வட்ட வானளவு மாட மாளிகையை மலேத கர்த்தெனவி டித்துமே, விட்ட பொற்றவிசி யான மானமுத லேர சித்தெரி கொளுத்தியே, நட்ட நட்டதிரள் யூப தம்பநிரை நலிய நற்சரணி னெற்றியே, பட்ட வர்த்தனர்க டானை நாயகர்கள் பால ராதியரை மொத்தவே. (உங)

வச்சி ரக்கரனை ராவ தத்தினும்வெம் வன்னி மேடமது தன்னினு, மெச்சு காலனொரு மைப்ப கட்டினுமல் வெல்லு மா

நிருதி நரனினு, மச்ச மார்முதுகின் வருண னுங்கொடிய மாரு
தங்கலையி டத்தினு, மிச்சை யார்தனதன் புட்ப கத்தினுமீ சா
ஞன் வெள்விடையி டத்தினும். (உச)

வந்து வந்துசம ராடு போழ்தினவர் வாக னங்கள்பட மாய
வே, யிந்தி ரன்புயநெ ரிந்து கார்க்குயில தாகி நீடுமர மேய
வே, சந்தி ரன்கலைகண் மாற வார்கழல்கொ டாள்க ளால்வடிவு
தேயவே, செந்த ழற்கடவு ளங்கை யற்றருகு சிதற வோய்வு
கொடு சாயவே. (உரு)

பரிதி வாயிலுள பல்லு குக்கவுடல் பதைப தைத்துமிக வா
டவே, பிரம னுலுதலை நடுந டுங்கமுடி பேர வங்கைகொடு
சாடவே, கருது பாரதியை நாசி கொய்யமர கதமெய்ம் மால்
வெருவி யோடவே, சுருதி நாலும்வழி நாடி யோடிமதி சுழல
வாளிகொடு மூடவே. (உசு)

அத்த னின்னைமுன மவம தித்தகொடி யான்மு டித்தலைய
தலறியே, தத்தி வீழவவ ளேம குண்டமது தன்னி லிட்டுமக
வெச்சனைப், பத்தி யிற்சிரம ரிந்தி ரத்தமது பாவ கற்கிரத
மாகவே, மெத்த விட்டுரிய சமிதை யென்றவர்கை வில்லொ
டம்புபல தூவினன். (உஎ)

காளி யார்கள்பல கோடிகோடிகண நாதர் பூதகணர் கோடி
யே, கூளி யார்கள்பல கோடி கோடிகுறள் கொள்ளி வாய
லகை கோடியே, யாளி யார்கள்பல கோடி கோடிபடை யடுதி
றத்தினர்கள் கோடியே, வாளி யார்கள்பல கோடி கோடிமழு
வட்ட மாடுவர்கள் கோடியே. (உஅ)

இந்த னங்கள்கொடு தக்கன் வாழ்பதியி னெரிகொ ளுத்தி
யிமை யோருண, வெந்த னங்கள்கறி பண்ணி காரமிவை விட்
டி டாவயி னிரப்பியே, தந்த னந்தனன வென்று கூளிசதி

(உகூ) வெந்தன மென்புழிப் பெயரெச்சத்தகரம் தொக்கது.

தாள மொக்கட மாடியே, பந்தி னங்களுற வாடி யையனிசை
பாடி யோடுவ பரப்பெலாம். (௨௯)

வேலு லாவுபடை சக்க ரங்கவசை மிளிரும் வான்குலிசம்
விற்றிரி, சூல தோமரமு சுண்டி குந்தம்வடி சுரிகை பட்டயம்
வெல் கண்டகோ, டாலி பாசம்வளை தடிமுள் வாள்கதைகை
யம்பு கண்டிதகத் தரிகளான், மூல தானைகிளை ஞோர்கள் சே
னைதலை முடியு ருட்டினர்கண் மலைகளின். (௩0)

மாய ஞாசுரர் சேனை கோடிகள் மடிந்தி டச்செய்கதி ராயி
ரந், தாய பேரொளிப டைத்த சக்கரமுள் ளழல விட்டபொழு
தாழியென், ஞய ஞரென நடுங்கி மூன்றுவலம் வந்து நற்ச
ரண்வ ணங்கிமுன், னேய மாகவடி யிணையி லிட்டவிழி முளரி
யென்ன நிலை பெற்றதே. (௩௧)

பொய்ய தாமிரத மெய்ய தாமிரத புடையில் வாரியிடை
மோதியே, பொய்ய தானகரி மெய்ய தானகரி புரள வாரியி
டை மோதியே, பொய்ய தானபரி மெய்ய தானபரி பொருமை
வாரியிடை மோதியே, பொய்ய தானவணி மெய்ய தானவணி
புடவி மோதுவசில் பூதமே. (௩௨)

சேனை தேர்புரவி யானை நாலுவித திரள்ப சாசுசில வுருவ
மாய்ச், சேனை தேர்புரவி யானை நாலுவித திரள்க ளோடுடை
பொருதியே, சேனை தேர்புரவி யானை நாலுவித திரளை யம்பு
னைக ளாடியே, சேனை தேர்புரவி யானை நாலுவித திரளை யுங்
கொலைசெய் துண்ணுமே. (௩௩)

சிரந்து ணிப்பருறு செவிது ணிப்பர்பொரு சிலைது ணிப்பர்
படை சேரநீள், கரந்து ணிப்பர்புய மலைது ணிப்பரிரு காறு
ணிப்பரிரு கவசமா, ருரந்து ணிப்பரொளி விழிது ணிப்பர்கரு

---

(௩௩) நாலுவிதபசாசு - நாலுவகையாகக் கூறப்பட்டுள்ள
பேய்கள்.

வுடறு ணிப்பரெதி ருற்றதோர், சரந்து ணிப்பர்கண நாதர்
போர்புரித ருனு ரைக்கவள வில்லையால். (௩௪)

சத்தி ரஞ்சிவிகை யால வட்டநிரை சாம ரந்துவசம் வாகை
யிற், பத்தி ரந்துகில்கள் மகுடம் வீரமணி பணிக ளுள்ளவை
பறித்துவிச், சித்தி ரங்குறளி பூத நாதர்க டிரண்டி ரண்டருகு
சென்றுநின், றத்தர் சந்நிதியின் வைத்து நம்மடிமை யான
தின்றெனமுன் னுடுவார். (௩௫)

மாய னூர்கருடன் வாணி யாடன்மண வாள னூரன மிரண்
டுமோ, காய மீதிடை பறக்க வப்புளிரு காலை வாரிதில மோதி
நெய், யாய வாரியின னைத்து மிக்கவட வாமு கத்தனலில் வா
ட்டியே, வாயில் வைத்துநறு முறென மென்றுமகிழ் வாகி
யாடுவன பூதமே. (௩௬)

கொடிய பூதகண நாதர் தெவ்வருயிர் கொன்று தின்றிரத
மில்லையென், றடிபெ யர்த்திலவ ணேத கத்துறவ ழுத்தி யப்
பிணம ருந்தலாற், கடிய தாகம்வர விக்கு நன்மதுநெய் களைக
ளாற்றுததி பாற்கடல், வடிய வுண்டுடல மூன்று சுத்தசல மா
கு மாகடலின் மூழ்குவார். (௩௭)

வட்ட வாரிதிக ளேழு நீரும்வட வாமு கங்கொளென மறுக
வே, திட்ட தாகியுள தீவெ லாமணல்செய் சிற்றில் போலடி
சிதைக்கவே, யட்ட வெற்பொடுயர் சக்ர வாளகிரி யாதி நீறு
பொடி யாகவே, மட்ட றப்பெரிய வண்ட ரண்டபகி ரண்ட
மானபெயர் மாறவே. (௩௮)

பார டங்கவிரு தாள்க ளாகுவன பரிபு ரத்திலிடு தரிசதாய்,
நீர டங்கவெழு கடல்க ளாகுவன நிலவு திக்குடைய தாவன,
போர டங்கவுயர் கிரிக ளாகுவன பொற்பு யங்களுய ரண்டமே
ஆர டங்கசடை முடிக ளாகுவன வுருவு கொண்டனனெம்
மையனே. (௩௯)

பன்னு தக்கனுய ரியாக சாலையது பாழ்ப டுத்தியுறு காலை
யின், மின்னி ழற்றுபணி வேத வல்லியவள் வீர பத்திரர்ப தா
ம்புய, மன்னி மங்கலிய பிச்சை தாவென வருந்தி யங்கவன்
வணங்குபோ, தன்ன வட்குவர மாய்ம றித்தலையை யங்க மை
த்துயிர ளிக்கவே. (௪௰)

தக்க னுருயிர ணைந்தெ ழுந்திலகு தாம ரைச்சரண்வ ணங்
கிநின், பக்க மாயருகு நின்றி டக்கருணை பாலி யென்னவர மு
தவிமுற், றெருக்க புன்மகம ழித்து முல்லைமலர் சூடி மிக்க
கண நாதரோ, டொக்க விக்கயிலை யெய்தி யையவுன துபய
தாண்மலர் வணங்கினன். (௪௧)

தன்னை நின்கருணை கூர மார்பினிடை தழுவி யுச்சியிடை
மோந்துகொண், டின்ன வாறுநமை யிகழ்பொ லான்மகம திட
ழித்துமறி தலைதரு, முன்னை யொப்பவர்க ளில்லை யென்றுதி
ரு வுளம கிழ்ந்தனை பின் னிரணியன், முன்னர் தூணினர சி
ங்க மாயுர முறித்து வார்குருதி பருகுமால். (௪௨)

வெறியெ டுத்தலகி லியாவ துநகெட மிதித்து விண்ணுலகு
ழித்தபோ, தறிவு பெற்றமர ருனது பாதமல ரடியி ரப்பவவ
ணிவனை நீ, குறியு றக்குருதி யுளம கிழ்ந்துவெறி கொண்ட சிங்
கனை யடக்கியிங், குறுகெ னப்பகர வெண்ப தச்சரப வுருவு
கொண்டரியும் வெருவவே. (௪௩)

தோளி ரண்டினிரு தாளும் வைத்துலவு தொடையி ரண்டி
னிடை தொடரிரு, தாளும் வைத்துவெரி நப்பு றத்தினிரு தா
ளும் வைத்திரு தடக்கையிற், றுளி ரண்டையும்வைத் தேய
மூத்தியுறு தமர்ப டத்தலையின் மயலெலா, மீள நாசிகொடு
கொத்தி யக்குருதி வீச வீசவெறி தீர்ந்ததே. (௪௪)

தீர்ந்த பின்பமரர் சித்தர் கந்தருவர் சேனை கூடிமலர் மாரி
பெய், தார்ந்த மாமணி முடிக்க டிக்கமல மார வேயெவரும்

(௪௪) தமர் - துளை.

வாழ்த்தினர், சேர்ந்து நின்றுநர சிங்க மானுமலர் திருவ டித்
துணைவ ணங்கியுட், டேர்ந்த நானுமறை பாடி நாடரிய தேவி
தென்றுபல துதிசெய்தான். (௪௫)

தக்கன் மாமக மழித்து மைத்தலை தரித்து நல்குமருள் போ
ற்றியின், செக்கர் வானிறமெய் யத்த போற்றிபிறைச் செஞ்ச
டாமகுட போற்றிவின், ஞெக்க நின்றிடுமைம் பூத தேகவுயி
ர்க் குயிர தானமுதல் போற்றிவில், லிக்கி ஞெனரிய விழிதி றங்
திரந்தி யேற்க வீந்தவிறை போற்றியே. (௪௬)

அத்தி யானனர்தம் மனுச னுகவர னழல்வி ழித்தனய போ
ற்றியென், பெத்த நீக்கியுயர் முத்தி தந்தருளும் பிஞ்ஞ காவ
டிகள் போற்றியென, சித்தி யோகமது செய்யு ஞானியர்கள்
சித்த முற்றசிவ போற்றிபொற், பத்தி னாக்குறும ணுள போ
ற்றிகண பணித ரித்தபர போற்றியே. (௪௭)

நாத விந்துகலை நாத போற்றிது தி நாத கீதவிறை போற்றி
நால், வேத மோதரிய வாதி போற்றியுயர் வீர சைவமுதல்
போற்றிமெய்ப், போத மானகுரு நாத போற்றியருள் பொ
ழிய வக்தமுகில் போற்றிபொற், பாத பங்கயமென் முடியில்
வைத்தசர பாவ தாரவர போற்றியே. (௪௮)

என்று போற்றிநர சிங்கன் வாழ்த்தவரு ளிச்செய் திக்க
யிலை யெய்திவாழ், வொன்று மிம்மதலை வீர பத்திரனை யுறுது
ணைக்குவர வருள்கென, நன்று நன்றுமொழி கின்ற தென்று
வரு நாடொ ணுப்பழியு மாற்றிமேல், வென்றி கொள்வனென
வெண்ணி யேமிக விரும்ப மீட்டுமிது சொற்றனள். (௪௯)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முந்துசதா சிவமூர்த்தந் தருஞான மகேசுரமா மூர்த்தந்
தம்மு, ளந்தமதா மையைந்து மூர்த்தமதி லரியதொரு மூர்
த்தி மாக, வந்தவடி விதற்கிணையிங் கில்லையென வேமகிழ்ந்து

மனோக ரத்தாற், சுந்தரமா கியவயன்மான் முதலான தேவர்களுந் தொழுகிற் பாரால். (ரு0)

முன்பொருநாட் டேவரீ ருடன்காளி வாதாடி முனைபங் கத்தாற், றன்பெருமை தானழிந்தே கைந்நெரித்துத் தலைகுனிந்து தயங்கும் போதி, லென்கணவ ராமவரியா ரென்றுபணிந் தேகேட்க வெமது கூற்றாற், றுன்பமற வேயுனையா மணம்புரிவோ மென்றருளிற் சொல்ல லாலே. (ருக)

கல்லியா ணஞ்செயற்குக் கனகக்காற் பந்தரிட்டுக் களிப்பினாற்பொன், மெல்லியதாஞ் செம்பட்டு வத்திரத்தால் விதானித்து விளங்கு பானே, மல்லிகைநன் முல்லைமலர் மாலைநவ ரத்தினமா லைகளு நாற்றிச், சொல்லரிய தோரணங்கண் ணாடிகடேக் கிக்கும்பந் துலங்க வைத்தே. (ருஉ)

மங்கலமா கியவேதன் மனுவுடன்மா மகம்புரிய வாஞ்சையாலே, மங்கலமா கியவரியும் வரிசையுடன் றாரையினை வார்க்க மிக்கு, மங்கலவாத் தியமுழங்க வீரபத் திரன்மணமண்டபத்தின் மேவி, மங்கலநா ணணிந்துருபத் திரகாளி யுடன்மகிழ்வுற் றிருந்தானாக. (ருங)

அக்கணத்தி லிறைவியுமுன் பாசிசொல வரம்பையர்க ளழகினோடே, மிக்கமலர் மாதுகலை மாதுநல்லார் சோபனங்கள் விழைந்துபாடத், தக்ககணங் குடைசிவிறி யாலவட்டங் கவரியினை தாங்க நீரோ, பக்கமுடன் முடிகூட்ட வமரர்களும் பணிபதத்திற் பதிந்தானென்ன. (ருச)

---

(ருச) இச்செய்யுள்காலமுணர்த்திய வீரபத்திரக்கடவுள் பெருமை இறைவரறிந்தவையேயாகவும் கங்கையெடுத்து விண்ணப்பித்தது இறைவர்திருவுளத்தல் அவரையேகோடற்கும் அவர் பெருமை யாவருக்கும் புலப்படுத்தற்குமென்க. இங்ஙனமே திருவிளையாடற்புராணம் இலக்கணமுபதேசித்தபடலத்தல் அகத்திய முனிவர்பெருமையைச் சிவபெருமானுக்கு உமாதேவியாரும், கந்தபுராணத்தில் சூரபத்மனாதியரியல்பை முருகக்கடவுளுக்கு வியாழபகவானும் விண்ணப்பித்தமையுங்காண்க.

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நன்று கேண்மொழிது முன்பு நீமுதல நவமின் னார்கள்கலி வலியறச், சென்ற காலைதனை யைங்க ரத்தனைமும் செலவி டுத்தனமஃ தாதலா, லன்று தொட்டுரிய கங்கை வீரணமென் றுகு நாமமுள தத்தலத், இன்று மிம்மதலை கங்கைவீரனென விசைக வென்றிறைவ ருவகையால். (௫௫)

நயனம் வந்தவனை நோக்கி யேவருமுன் னவைய கற்றமன வுறுதிகொண், டயன மேகவுன தாண்மை கண்டுசொன தா த லாலிவன்பின் மருவியே, பயண மேகுகென விறைவர் கூற மிகு பரிவின் வீரபத்தி ரன்பணிந், தயனை நோக்கியெனை யங்க லிங்கியென வாக்கி னீரகில மெங்கணும். (௫௬)

நீணி ரஞ்சனமிக் கோது சூனியநன் னிட்க ளஞ்சிவசித் தா யது, தானு வாகியசின் னாத விந்துகளை தழுவு மொப்பரிய சுடருமா, யாணி யாம்பிரண வாதி யாகியக ராதி யாகியுள விழியினாற், காணு நீரெனது கரம தானசின கரம மைந்தனி ரிவ் வுண்மையால். (௫௭)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வீரசைவ சத்தார்த்த முணர்த்துகென வடியேன்முன் வினவ வந்த, வீரசைவ மெனுமொழியுள் வீவித்தை ரகரமதை விரும் பிச்சேர்தல், வீரசைவ மிலிங்காங்க சையோக மெனவறிக விதி த்த வாற்றால், வீரசைவர்க் கெடுத்தசன னத்திலெய்து முத்தி யென விளம்பி மேலும். (௫௮)

ஓதரிய வத்துவெனு முரியதல மிலீலையினா லோங்கி மிக்க, காதலுறு மிலிங்கமுத லங்கமவை பலவாகக் காணு மிந்த, நீத முள வீரசைவ நிலைமையர்க்குச் சிவாத்துவித நிகழ்த்து ஞான, போதமது தானுரைக்கின் முப்பொருள தாகுமெனப் புகன்றீ ரன்ன. (௫௯)

---

(௫௬) அயனம் - வழி. பயணம்-இனவெதுகை. அயன்-போலி.

குருவிலிங்க சங்கமங்க ளம்மூர்த்தி சாட்சியதாங் குறியா
காதி, குருவிலிங்க சங்கமங்க ளிட்டமுத லிலிங்கமவை குலவி
நிற்குங், குருவிலிங்க சங்கமங்கள் காயமுத லர்ப்பிதமுன் கொ
ண்டு நேராக், குருவிலிங்க சங்கமங்கள் சத்தமுதற் பிரசாதங்
கொடுக்கு மாதோ. (கூ0)

ஆறிலிங்க மாகியுமுன் ஞறங்க மாகியும்பின் னவைய டுத்த
வாறுசத்தி யாகியுமெய் யாறுபத்தி யாகியுமா றத்த மாயு
மாறுமுக மாகியுமா றர்ப்பிதங்க ளாகியுமிக் கவிர ளத்தா
லாறுபிர சாதமா கியுமட்ட சகிலமென்றூர்ந் திடுமென் றீரால்.

ஆபரணந் திருவெண்ணீ றுபரண மக்கமணி யுடற்கு வாக்
குக், காபரண மஞ்செழுத்தா மாபரணங் குருவுளத்திற் கமரு
ங் கைகட், காபரண மிலிங்கமதற் காபரணஞ் சங்கமநன் கறி
வா லாரற், காபரணந் தீர்த்தமொடு பிரசாத மிவையட்டா ப
ரண மாகும். (கூஉ)

ஏகலிங்க நிட்டையது நாதாதி மூன்றகரா திகண்மூன் று
மற், றேகலிங்க நிட்டையது பதிமுதலா கியமூன்று யிருக்கு
மின்னு, மேகலிங்க நிட்டையது தற்பதமா தியமூன்று யிலகு
மிற்று, லேகலிங்க நிட்டையது நீயாறு யெனலெனவுள் ளிரு
த்தென் றீரால். (கூங)

என்றருளி யுலகீன்ற தாயிமைய மலைபயந்த விறைவி யார்க்
குங், குன்றமுறழ் நான்குபுய முக்கணிரு தாணந்திக் கோமா
னுக்கும், வென்றியுறு மூன்றுபதம் பெற்றுநட மிடும்பிருங்கி
மேலோ ருதி, நன்றிதிகழ் கணங்களுக்கு மேகலிங்க நிட்டையி
ங்ங னவின்றோ மென்றும். (கூச)

ஏராரு மறைநான்கு சாத்திரமா றுகமங்க ளெழுநான் கோ
ங்கி, யாராருங் கலைகளவை யெட்டெட்டுப் புராணமூ வாறீ

(கூக) அவிரளம் - நீக்கமின்மை. விரளம் - நீக்கம்.

வற்றி, னோரோரும் பரமவதி ரகசியத்தைத் தொகுத்துரனி கிகழ்த்த லாலே, சோரும் வீரசைவ தத்துவப்பிர காசமதின் றெளிவி தென்றும். (சுரு)

அப்படிமுன் பருள்செய்தீ ரின்றுகங்கை யன்னையின்பின் படியேன் றன்னை, மெய்ப்புடனே விற்பாதோ தகம்பிரசா தங் கிதமும் வேண்டு வேனியா, னெப்படியே குவனென்ன நாம் பரம குருவாயங் கெய்து வோநீ, யொப்பிலதா கியகுடங்தைக் கேகுகெனக் கருணைவர முதவ வாங்கே. (சுசு)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருமால் பிரமற் கரியாய் சரணங் திகழ்நான் மறையின் முடியாய் சரண, முருவா யருவா மொருவா சரண மொளியாய் வெளியாய் யளியாய் சரணங், குருவாய் வடவா லுறைவாய் சரணங் குறியா யறநான் கருள்வாய் சரணங், கருமா மிடறு டையவா சரணங் கயிலைக் கிறையே சரணஞ் சரணம். (சுஎ)

சூலா யுதமார் கையாய் சரணங் தொழுவார் வினைவே ரரி வாய் சரண, மாலார் விழிசே ரடியாய் சரணம் வடிவா கிய வைம் முகவா சரணம், வேலா யுதனைத் தந்தாய் சரணம் வெண்ணீ றணிமெய் யுடையாய் சரணங், காலால் யமனைக் கடி வாய் சரணங் கயிலைக் கிறையே சரணஞ் சரணம். (சுஅ)

பெண்ணு ணலியல் லவனே சரணம் பேரு ருருவில் லவனே சரண, கண்ணார் புரமெய் தவனே சரண நடமார் சபைநா யகனே சரணங், தண்ணா ரமுதக் கடலே சரணங் தனையொப் பவரில் லவனே சரணங், கண்ணார் மணியுள் ளொளியே சரணங் கயிலைக் கிறையே சரணஞ் சரணம். (சுகூ)

---

(சுரு) ஐம்பத்தேழாவது செய்யுண்முதல் இச்செய்யுள்காறும் அருளிய வீரசைவதத்துவப்பிரகாசமென்னும் நூலினுணுக்கங்கள் இப்புராண வசனத்தில் விளக்கப்படும் ஆண்டுணர்க.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்றடி வாழ்த்திப் போற்றி யிருவரும் வலமாய் வெள்ளிக்
குன்றிறை விடைபெற் றன்னூர் குடந்தையை நினைந்து மந்தத்
தென்றலூ ரிமைய வெற்புஞ் செம்பொன்மால் வரையும் பின்
டொன்றுநா வலந்தீ வாரு முயர்தலங் களைக்கண் டுற்றார்.[னிட்

கண்டவத் தலத்தின் மேலாங் காரணக் குடந்தைச் சீர்தா
னண்டர்மா தவர்க ளானு மளப்பரி தாதல் கண்டு
மண்டிய கனவிற் காட்சி வாயிலா னவில வெண்ணிக்
கொண்டது போலு நாயேன் கூறிடத் துணிந்த வாறே. (எக)

### கலிவிருத்தம்.

மின்னு மாமறை வேதியர் வீதியு
மன்னு மாமனு மன்னவர் வீதியும்
பன்னும் வாணிகர் பற்பல வீதியுந்
துன்னு சூத்திரர் வீதியுஞ் சூழுமால். (எஉ)

அந்த ணாளர்க் கருமறை யோதுதல்
சந்த மோதுவித் தன்மகந் தான்செயல்
செந்த ழற்செயல் செய்வித்த றன்கொளல்
வந்தி ரப்ப வருக்கீத லாறுமே. (எங)

வேத வோசையும் வேள்விசெ யோசையு
மாத வத்தர்சி வார்ச்சனை யோசையுஞ்
சோதி வானவர் தோத்திர வோசையு
மோத வாரிதி யோசையின் மிக்கவால். (எச)

தேரி னோசையுந் திண்கரி யோசையு
மூரு மாபுர விக்குர லோசையும்
வீர ரோசையும் வெண்சங்கி னோசையும்
பேரி யோசையு மாகிப் பிறங்குமால். (எரு)

அன்ன சாலையு மாயுத சாலையுஞ்
சொன்ன சாலையுந் தூமணிச் சாலையும்
பொன்னி னம்பர பூடண சாலையு
மன்னி யெங்கும் வளம்பொலிந் தோங்குமால். (எசு)

ஆனை நாயக ராம்பரி நாயகர்
தானை நாயகர் தந்திர நாயகர்
கான நாயகர் கல்வியி னாயகர்
சேனை நாயக மாகிச் சிறக்குமால். (எஎ)

கைம்ம தத்துளி கன்னம தத்துளி
செம்மைக் கோசத்திற் சிந்தும தத்துளி
மும்ம தத்துளி மொய்ம்முகில் போற்றுளித்
திம்ம திக்களி றெற்றள றாக்குமே. (எஅ)

தேர்க ளூர்தரத் தின்டிறற் பண்டிக
ளூர மாபுர வித்திர ளோடமின்
வீர கிண்கிணி வீரர்மி தித்திடப்
பாரெ ழுந்திடு தூளிவின் பற்றுமால். (எகூ)

ஆனை யானை பொருத்திடு மார்ப்பொலி
வானும் வானு முருத்தென மானுவ
பாணி றத்தடற் பாய்புர விக்கதி
யூனி லாச்சண்ட மாருத மொக்குமே. (அ0)

மணிகு யிற்றிய மாடத்தின் மீதெழிற்
றணிப தாகை யருக்கனின் வெம்மையைத்
தணிவு செய்யால வட்டத்திற் சார்ந்துவின்
பணிய வோங்கிப் பரந்தன வெங்குமே. (அக)

மாக நீடுவெண் மாடத்து மைத்தெழு
மேக பந்தி மருங்கின் விளங்குத

---

(எஅ) எற்றுதல் - தெறித்தல்.

லாக நீற்றை யணிந்தர ஞரணி
வேக நீல மிடற்றின் விளங்குமால். (அஉ)

வதியு மேனிலை மாடத்து வஞ்சியர்
பதியும் வாண்முகப் பான்மையை நோக்கிவெண்
மதிய நாமுவ மைக்கிணை யன்றெனக்
கதியு றக்களங் காய்க்கடல் வீழுமே. (அங)

பந்த டித்திடு பாவையர் பாதத்தில்
வந்து வீழுஞ் செவிக்காவி மாமலர்
கந்து கம்முலைக் கொப்பல கண்ணிற்கு
நந்த மொப்புமொப் பன்றென நாணியே. (அச)

பொன்னி னிற்செய்த பூண்முலை யாரிடை
மின்னி னைக்கண்டு விண்புடை மின்னிவர்
நன்ன லத்துக்கொப் பன்றென நாணியே
பன்னு மேகத்துட் பாறி மறையுமால். (அரு)

வடித்த வண்சுதை மாடத்து வஞ்சியர்
நடித்தல் கண்டொளிர் நன்மணி நூபுரத்
தடுத்த வோசை யடாதுவெற் பாமுலை
யெடுத்தி டையொடி யும்மென வேங்குமே. (அசு)

தண்ணி லாமதி சாளர வாயில்புக்
குண்ணி லாவி யுயிர்த்துணை யீரிவ
ணண்ணி நீர்கன வர்ப்புணர் நாளென
வெண்ணி லாவைச்செங் கையின் விலக்குவார். (அஎ)

தங்கள் கொண்கர் தழுவிப் பிரியத்தங்
கொங்கை யுற்ற குறியினை நோக்கியே
நங்கை மீர்நங்க ணுதர் வராக்குறிக்
கொங்கை யுற்றதென் பார்மயற் கோட்டியால். (அஅ)

---

(அஉ) அணிந்தவென்னும் பெயரெச்சத்தகரம் தொக்கது.
(அரு) நன்னலத்துக் கொப்பன்மையின் என்பதும்பாடம்.

ஆடு நுண்ணிடை யார்தங் கணவரோ
டேடி நீத்த வொளிர்மணிப் பூண்சுதை
மாட வீதி மறுகிற் கிடத்தல்விண்
ணீடு மிந்திர வில்லி னிகர்க்குமால். (அகூ)

ஆர்த்த தூச்சிறை யன்ன நடைநலார்
கூர்த்த கண்ணிணை கொண்டங் கிளைஞரைப்
பார்த்த பார்வை பசுமரத் தாணியிற்
கோர்த்த தாப்பிரி யாது குலாவுவார். (கூ0)

பானு வைக்கண் டொடுங்கும் பனிமதிக்
கீன மெய்தா திளங்கொடி வாய்மல
ரான கொண்கர் பிரிவடை வங்நலார்க்
கூன வெல்லு மதியு முறமுமே. (கூக)

தரள மாதி சவிமணி சங்குவாற்
பரவு சாமரை பைங்கள பங்களுண்
மருவு சந்தகில் வண்கன காம்பரம்
விரவு மாவண வீதிவி ளங்குமால். (கூஉ)

மகர தோரண மாளிகைத் தோரணஞ்
சிகர தோரணஞ் செய்மதிற் றோரணம்
பகர்மு கப்பிற் படர்ந்திடு தோரண
நிகரின் றெங்கணு நீடிநி றைந்தவே. (கூங)

தரள மாலிகை தண்மலர் மாலிகை
கிரணம் வீசு கிளர்மணி மாலிகை
மரக தச்சுடர் மாலிகை செந்துகிர்
விரவு மாலிகை மின்னின் விளங்குமால். (கூச)

காவ ணங்கள் கதலி நிரைகளும்
பூவ ணங்களும் பூரண கும்பமுந்

(கூக) பிரிவு எல்லும் அடைவு மதியும் ஒக்குமென்பது.

தூவ ணந்துகில் சூழணி யாடியு
மேவி யெங்கணும் வீதிமி லேந்தவால். (கரு)

ஆல யம்பொன் னணிமதி லாளிகை
மாலை தூங்கு மணியிழை மாளிகை
சால வோங்கு தபனிய சாளிகை
நீல மாமணிச் சூளிகை நீடுமே. (கசு)

வரிசை நான்குகால் வாய்ப்புள மண்டபம்
பெருகு சோடசக் காற்பெயர் மண்டப
முரிய நூற்றுக்கா லுற்றுள மண்டபங்
கருது மாயிரக் காலுள மண்டபம். (கஎ)

பொன்னி னுயர் பொற்புள கோபுர
மன்னு மாமணி வைத்துள கோபுர
மின்னும் வச்சிர மேய்ந்துள கோபுரம்
பன்னு பச்சை பதித்துயர் கோபுரம். (கஅ)

அண்ட மெட்டி யளந்துயர் கோபுர
மண்டு வெண்மதி வானதி சேர்தலாற்
றுண்ட வெண்மதி தூநதி செஞ்சடைக்
கொண்ட சங்கரன் சென்னிகு றிக்குமே. (கக)

அந்த ரத்தள வாநிலைக் கோபுர
மிந்தி ரன்பதிக் கெய்தலி னந்நிலை
சந்தி ரன்றப னன்னிவர் தாநுழை
வந்து போந்திடும் வாயில்கள் போன்றவே. (௧௦௦)

ஆறு கால மமைந்துள பூசனைக்
கேறு மாவினைந் தேற்கு மருக்கியங்
கூறு பாத்திய மாசம னங்குளிர்
வீறு மின்புன லெண்ணெய் விரைப்பொருள். (௧௦௧)

(௧௦௦) நிலைகள் நுழைவாயில்கள் போன்றன என்பது.

மாவு நெல்லிநன் மஞ்சள்பஞ் சாமிர்தம்
பூவின் றேன்வண் புதிய சருக்கரை
யாவின் பாறயி ராச்சிய மாட்டனீர்
மேவு தெங்கிள நீர்மிக வாட்டியே. (௧0௨)

கனிவ ருக்கத் திரதங் கருப்பஞ்சா
றினிய வில்வஞ்சந் தின்குழம் பின்பமர்
தனிய தாரை சகத்திர தாரையோ
டினிய சங்கபி டேக மியற்றியே. (௧0௩)

திருவொற் றுடை சிறந்தசந் தக்கைத
மருமி குந்தலர் மாலை புனைந்துநன்
கருணை நெய்வழி யோதனங் காயடை
விரைகொ பேதீ பாதி விளைத்துமேல். (௧0௪)

கவிகை யாலவட் டம்வெண் கவரியோ
டுவம மில்பஞ்ச வாத்திய வோசையுந்
திவிய நாட்டிய முஞ்சிறக் கச்செயூப்
புவியின் ஞேர்பணிந் தேத்திப் புகழவே. (௧0௫)

காலம் பார்த்துக் கவின்கொடி யேற்றியே
யோல மாமணி வாத்திய மோலிடச்
சால வேள்வித் தழற்கண் டருளிநன்
மூலட் டானத்தை முன்வலஞ் செய்தரோ. (௧0௬)

திகழுங் காலையிற் றேவவி மானத்து
மகிழு மாலையின் மால்விடை யாதியா
நிகழும் வாகனத் துங்நெடு வீதியிற்
புகழு மாறு விழாக்கொண்டு போந்துபின். (௧0௭)

---

(௧0௨) ஆச்சிய மாட்டனீர் - இளவெந்நீர். (௧0௫) பணிந்தேத்திப்புகழப் பெருமான் விழாக்கொண்டு செழிக்குமென்க.

தேரி னேறிச் சிறக்கும் விழாமுடி
வாரும் விண்ணுல கத்திமை யார்களும்
பாரு ளாரும் படிந்திடப் பாவங்க
டீரும் தீர்த்தமு நல்கிச் செழிக்குமால்.　　(௧0அ)

ஒருப லச்சல முண்ண வுதவினு
லருகி லத்தலத் தன்னது கோடியா
மொருபி டித்தன்ன முண்ண வுதவினுற்
றிருகி யுற்பவஞ் சேர்குவர் முத்தியே.　　(௧0௯)

மன்னு மாமுனி வோர்கண் மடங்களுந்
துன்னு சைவர் துலங்கு மடங்களுந்
தன்னி கர்வீர சைவர் மடங்களு
மன்ன சத்திர மும்மள வில்லையால்.　　(௧௧0)

ஆது லர்க்கன்ன சாலை யுடைதர
லோது வோர்க்கூண் மகவு வுயிர்ப்பித்தல்
காத லின்மகப் பாறரல் காத்திடன்
மாத வர்க்கு மடம்புரிந் தீகுதல்.　　(௧௧௧)

அறுச மையத் தவர்க்கன மெண்மணம்
பிறர றஞ்செயல் பிச்சைமுந் நூலிடல்
சிறைய வர்க்கனந் தின்பண் டங் கண்ணடி
யிறமு யிர்க ளிருது தவிர்த்திடல்.　　(௧௧௨)

ஆவு ரிஞ்சுக லானவ யித்தியங்
கூவல் வாயுறை கொள்ளடைக் காய்சுண்ணம்
வாவி நீர்ப்பந்தன் மாண்டபி ணஞ்சுட
ஞவி தன்பொழி னன்மிரு கத்துணல்.　　(௧௧௩)

பெண்ணின் போகம்பெற் றம்விடல் கண்மருந்
தெண்ணெ யேகாலி யெண்ணுன் கறங்களும்

(௧0௯) ஒருபிடித்து - ஒருபிடியளவினது.

பண்ணி நாளும் பரிபா லனஞ்செய்வார்
புண்ணி யத்தடம் போந்தம ருங்கெலாம். (கக௪)

நானஞ் செய்பவர் நற்றில தர்ப்பணந்
தானஞ் செய்பவர் சந்ததம் பூசனை
ஞானஞ் செய்பவர் நன்னெறிச் சிந்தித
மோனஞ் செய்பவர் மொய்த்துவி ளங்குமால். (கக௫)

அன்ன தானமு மம்புவித் தானமுஞ்
சொன்ன தானமுந் தூமணித் தானமுங்
கன்னி தானமுங் கட்டுடைத் தானமு
மன்னு தாம்பூல வண்பல தானமும். (கக௬)

சுரபி தானமுந் தும்பியின் றானமும்
புரவி தானமும் பூடண தானமும்
பரவு பல்லக்குப் பாதரட் சைக்குடை
விரவி டுந்துலா பாரமு மேவுமே. (கக௭)

பொன்னை யன்ன வழகு பொழிபசுங்
கன்ன லன்ன மொழியிணைக் காற்சிவப்
பன்ன மன்ன நடைகுன் றனமுலை
மின்ன லன்ன விடையவர் மேவியே. (கக௮)

தாழு மாதர் முகஞ்சல சங்கணீ
ராழு மாறு மவர்முக மேலெழற்
றாழி யீதெழுஞ் சந்திரர் தோற்றமும்
வீழு மாமக தீர்த்த விரிவெலாம். (கக௯)

(கக௯) தாழ்தல் - மூழ்குதல். தேவர்கள் அமுதங்கடைந் தெடுப்பதற்குத் தாழிபோன்றமையின் பாற்கடலைத் தாழியென் றார். மாமகதீர்த்தநீர் பாற்கடல்போலுந் தோற்றத்ததென்பது. வீழ்தல் - ஒத்தல். "சந்திர ரொப்புமாம், வாழு மாமக தீர்த்து மருங்கெலாம்" என்பதும் பாடம்.

நாரி மாரறன் மூழ்கு நளிர்முகங்
காரைம் பால்கண் மறைக்கக்கற் போடுறன்
மாரி தன்னுண் மறைந்து விளங்கிடுந்
தார கைநடுச் சந்திர ரொத்தவால். (கஉ0)

கோதை மார்மணிக் கொப்பப்பின் மூழ்கியே
மீது தோன்றுதல் விண்படர் செங்கதி
ராத வன்றனை யப்பணி யுண்டுபிற்
போது மிழ்ந்தன போன்றுவி ளங்குமால். (கஉக)

தைய லார்புனற் றாழ்ந்துபின் மேலெழச்
செய்ய செப்பிளங் கொங்கை தெரிந்திடன்
மைய லானேமி வாகப்புண் மூழ்கியே
மெய்யெ லாந்தோன்ற மேல்வரல் போன்றவே. ()

புனல்புக் காடியம் பொற்றுகில் சாத்தியொண்
டனமுற் றார்மறைத் தாலெனத் தாமிணைக்
கனகத் தாற்செய் கலசமொப் பாந்தன
மனவுற் றார்கச் சணிபெண்கண் மட்டிலார். (கஉங)

மட்டி லார்தம் மகிழ்நரை வேண்டுவார்
மட்டி லார்நன் மதலைகள் வேண்டுவார்
மட்டி லார்வளர் வாழ்வினை வேண்டுவார்
மட்டின் மாமக தீர்த்த மருங்கெலாம். (கஉச)

**எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

சைவல மளகஞ் சரோருகம் வதனந் தண்ணறுங் குவளைக்கண்
வள்ளை, தைவருஞ் செவிசெவ் வாம்பல்வாய் தரளந் தந்தம்

(கஉ0) கற்பு - முல்லைமலர்; அது மகளிர்கற்பை வளர்த்த லாற் கற்பெனப்படுவதாகலின் அவற்றை இடைவிடாதணிவது தோன்றக் கற்போடுறலென்றார். இதனை "முல்லையந்தொடையலருந்ததிமுதலெழுவர்" என்பதனானுமறிக. முல்லைமலர் ஈண்டுத் தாரகைக்குவமை. (கஉங) மனவு - மணிப்பொது.

வெண் சங்குகந் தரஞ்சேர்க், கைவிரல் களிறு குவிமுலை குமிழி கவின்வயின் மடியலை சுழிதா, னைவள ருந்தி வரால்கணைக் கால்கூ ருமம்புற வடியுமை வடிவாம். (௧௨௫)

செங்கிடை சடில மிரவிதண் மதியஞ் செழுஞ்சுடர் விலோச னங் கருமை, யங்குறு மடைகந் தரங்குளிர் கருணை யடர்ந்தநா ளந்திகழ் மூன்றாற், பொங்குநீர் நிறம்வி பூதியங் கதம்பூண் புனைதலாற் சதாசிவ வடிவா, மங்கைநல் வாமம் வலஞ்சிவ மொன்றும் வடிவுமா மாமக தீர்த்தம். (௧௨௬)

விண்ணவ ரியக்கர் கருடர்கந் தருவர் மேதகு கின்னரர் சித் த, ரொண்ணுகிம் புருடர் சாரணர் வித்தி யாதர ருரகர்குய் யகரென், றெண்ணுபன் னொருவர் முப்பதின் முக்கோ டியவ ரொடு மிலேகர்மா தவத்தி, னண்ணுநாற் பத்தெண் ணுயிர மு னிவர் நாரியர் தம்மொடு மடைந்தே. (௧௨௭)

வாமமெய் யன்பிற் புகுந்துநீ ராடி மறைமுறை பூசனை புரி ந்தே, பூமலி பதக்கா ரோணரா தியனைப் போற்றெலி மிச்சு வத் தடத்திற், காமுற மூழ்க மூழ்கினர் தம்மைக் கண்டிட வதிற்படி காற்றுத், தாமுறப் பெற்றோர் பவமொழிந் திகழும் பரமுமுற் றிடுவர்சத் தியமால். (௧௨௮)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இத்தகைக் குடந்தை மூதா ரெய்தியங் கிருவர் தாமும்
பத்தியால் வேந்தன் சிங்கம் பதியுமா மகநா டன்னின்
மெத்துமா கமங்கள் சொன்ன விதிமுறை தீர்த்த மாடி
யத்தனை ரருளி லிங்க வருச்சனை புரிந்தா ரங்ஙன். (௧௨௯)

கங்கைபா லங்க ணீக்கிக் களித்தகும் பேசர் தம்மை
மங்களாம் பிகையைச் சோம நாதரை வாம பாகர்

(௧௨௯) வேந்தன் - வியாழபகவான். சிங்கம் - சிங்கவிராசி.

தங்குசோ மகுல வல்லி தன்னையொண் ணுக லிங்க
வெங்கணு யகரை யேர்சால் பெரியநா யகியை யேத்தி. (கூo)

அகிலநா யகரை வாமத் தமர்விசா லாட்சி தன்னைத்
தருமபி முகரைப் பங்கிற் றையலைக் கௌத மேசர்
மகிழபி ராம வல்லி யம்மையை வணங்கி வாயாற்
புகழருந் துதிசெய் தங்கம் புனிதமுற் றதன்பின் கங்கை. ()

ஆதியிற் கங்கை கோதா வரிநரு மதைகா வேரி
மேதகு யமுனை யேதா மிரபர்ணி வாணி சிந்து
தீதில்வே கவதி யென்னத் திகழ்நவ கன்னி மார்க்குச்
சாதகம் புரிந்த விச்சு வேசர்சந் நிதியி லுற்றாள். (கூஉ)

மாமக தீர்த்தத் தோங்கும் வடகரை வாமங் கூர
வேமமார் சினக ரத்தி னின்பமுற் றடியார் வேண்டுங்
காமம தருள வீர பத்திரர் களிப்பி னுற்றன்
னாமமார் வீர சைவ நலம்பெற வாழ்ந்தி ருந்தார். (கூக)

வெள்ளியங் கிரியில் வாழும் விமலருங் கருணை யாற்றன்
னுள்ளமை காதல் கொண்டங் குயர்குரு மூர்த்த மாகி
யெள்ளொணு நீறு மக்க மணியுமா றெழுத்து மோங்கத்
தெள்ளிய குடந்தை மூதூர் சேர்ந்தவா றுரைக்க லுற்றாம். ()

நித்திய மெக்கா லத்து முள்ளதாம் நின்ம லந்தான்
பற்றுறு மலமில் லாதாம் பகர்நிர வதிக ஞான

---

(கூக) தருமவிமுத்தரென்பதும் பாடம். கௌதமேசரென் புழி இரண்டனுருபுவிரிக்க. கங்கை உற்றனள அடுத்தகவி யின் முடிவுறும். (கூஉ) தாமிரபர்ணி வேகவதி சிந்து என்பவற்றிற்குப் பதிலாகக் கன்னியாகுமரி பயோட்டிணி சரயு என்னும் நதிகளைக்கூறுவது திருக்குடந்தைப்புராணம். சாதகம் - ஈண்டுக் கலிதோஷ நிவிர்த்திப்பு உதவியின் மேற்று.

(கூச) ஆறெழுத்து - பிரணவத்தோடுகூடிய பஞ்சாக்கரம்.

மொத்தது முயர்வு மில்லா துயர்தரு ஞான மாகு
மற்றநி ரவய வந்தா னவயவ மில்லா தாமால். (கஙரு)

நிராதார மிடமில் லாதாம் நிராலம்பஞ் சார்வில் லாதா
மொராதநிட் கார ணந்தா னுண்டாகைக் கேதில் லாதாம்
பராவுநிட் பிரேர கந்தான் படைப்பது தானில் லாதா
முராவுநிர் விகார மென்ப துதிப்புமுற் றெழிலில் லாதாம். ()

பொருவினிட் புண்ணி யந்தான் புண்ணிய முதலில் லாதா
மருநிர திகாதி கந்தா னதிகமி லதிக மாகும்
விரவிய நிர்ச்சங் கந்தான் மிக்ககூட் டமுமில் லாதாங்
குருவிலா நிர்க்கு ணந்தான் குணங்களில் லாத தாமால்.(கஙஎ)

அறையுநிட் காமந் தான்சூ ழாசைக ளில்லா தாகும் [ம்
குறையினிட் குரோதந் தானுட் கொளும்வெறுப் பில்லா தாகு
பறையுநி ரசூயை தான்வீண் பகர்பொறா மையதில் லாதாங்
கறையினிர்ச் சஞ்ச லந்தான் கவலையில் லாத தாமால். (கஙஅ)

அடர்நிரு பாதி கந்தா னவதிக ளில்லா தாகு
மடமிலா நிர்மோ கந்தான் மயக்கமில் லாத தாகுந்
தொடர்நிரா மயம தொன்றுந் துக்கமில் லாத தாகுந்
துடநிரே துக்கா ருண்ணியஞ் சகலான்ம தயவ தாமே. ()

உரந்தரு சாந்த மென்ப தோங்குசீ தளம தாகு
நிரந்தர மென்ப தெங்கு நிறைந்துநிற் பதுவ தாகுந்

(கஙரு) இல்லாததாமென்பது இல்லாதாமெனத் தொகுத்தலாயிற்று. இன்னோரன்னசில இச்செய்யுளாதியவற்றில் மற்றும் வருவதோர்க. (கஙசு) சார்வு - பற்றுக்கோடு. ஓராத - ஒருவாத. படைப்பது - பிரேரிப்பது. உராவல் - உலாவல். உதிப்புமுற்றெழில் - உதித்தல் இருத்தல் வளர்தல் குறைதல் மாறுதல் நசித்தலென்னும் அறுவகைச்செயல். (கஙஎ) அதிகமில் அதிகம் - தன்னின் உயர்வதில்லாத உயர்பொருள், கூட்டமின்மை - ஒன்றினும் ஒட்டாமை.

தாந்திக ழேக மெங்குந் தகுவியா பகம தாகு
மரந்தையி னிட்கம் பந்தா னண்டபிண் டமுந்தா னுதல். ()

பரஞ்சோதி யென்ப தெங்கும் படர்சுயம் பிரகா சந்தா
னிரஞ்சன மாங்கா ரத்தா னினைப்பறி வில்லா தாகு
முரஞ்செறி யுருவா தீத முலகுபோ லுருவில் லாதாம்
வரஞ்சமை யுருவா தீதம் வாயுப்போ லுருவில் லாதாம். (கசக)

அருவாதீ தஞ்ச டாகா யம்போலு முருவில் லாதாந்
திருவாரும் வருண தீதஞ் சிருட்டிகொ ணிறமில் லாதா
மருவாரு மந்திரா தீத மந்திர வுருவில் லாதா
முருவாரு மிலிங்கா தீத முற்பத்தி லயமில் லாதாம். (கசஉ)

காதவிந் துகளா தீத நாதாதி கடந்த தாகும்
வாதிலத் துவாதீ தந்தான் மந்திராதி கடந்த தாகும்
பாதுசெய் பராதீ தந்தான் பராசத்தி கடந்த தாகு
மோதுவந் துவாதீ தந்தா னொருபற்று மில்லா தன்றே. ()

சந்தேகா தீத மென்னல் சத்திய ஞான னந்த
முந்திய பிரம மென்று மொழியும்வே தாக மங்க
ளந்தமில் விகற்பா தீத மவனவ ளதுவ தாக
கந்துமுன் னிலைக ளொன்று நணுகரு நாட்ட மாமே. (கசச)

**எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

சடகசன வுருவகோ டியிலோர் பங்கு சாற்றிடுசிற் கனமெ
ன்ப சடாகா யத்தி, னிடைபடுறா நிலக்கத்தி லொருகூ றுகி

(கச0) அண்டபிண்டங்கள் கம்பமற்று ஒடுங்கப்பெறுத லே தான் கம்பமற்றுறைவதற் கேதுவென்பார் தானுதலே அரந்தையினிட்கம்பமென்றார். தானுதல் - தன்னிடத் தொடுங்கப்பெறுதல். (கசக) நினைப்பறிவு—நினைத்தலும் அறிதலும். உருவாதீதம் இருவேறுகவியந்தது அவ்வுருவங் கண்ணிற்குப்புலப்பட்டும் பரிசமாதியவற்று லறியப்பட்டும் நிற்கும் வேற்றுமைகுறித்தென்க. (கசஉ) வருணம் - நிறம். (கசங) பாது - காவல். ஓ - வியப்பிடைச்சொல்.

யிலகுசிதா காயவுரு வாயு முன்சொற், சடகக ன வியாபகத்தி னூறி லக்கந் தான்விரிவாஞ் சிதாகாய வியாப கந்தான், ஒருட ரணுவிற் கணுவாகுஞ் சடாகா யந்தான் சொல்லணுவி னுண் மைசிதா காயந் தானே. (௧௪௫)

மகத்தினுக்கு மகத்ததுதான் சடாகாய விரிவின் மாவிரிவ தா னசிதா காயவியா பகமாய், நிகழ்த்துசுபா வங்குறைவு நிறை வுமில்லா தாகு நேரிலாச் சம்புவென்கை சந்தோட மாகுந், தொகுத்தசுத்த மென்கைபுண்ணி யாசனத்தல் லாத சுயஞ் சுத்தஞ் சத்தியந்தான் மெய்ய தாகுஞ், சகத்துளசர் வப்பிரா ணான்ம கந்தான் சகலான்ம வுயிர்க்குயிர தாகுந் தானே. ()

பகர்சருவ கதான்மகந்தான் பாவ மில்லாப் பல்லுயிர்பா லுள் ளேய மறைந்த தாகு, மிகல் சருவ வியாபகந்தான் பருவான் மாவின் மிகுமிரும்பி லழனிறைவி னிறைந்த தாகும், புகல்சுபா வஞ்சருவத் துவமொருவ ருந்தாம் போதியா தெலாமறிந்து நிற்ப தாகு, மிகல்சருவஞ் ஞத்துவந்தா னெல்லா மாகி யெக் காலத் தினுமறிந்து நிற்ப தன்றே. (௧௪௭)

---

(௧௪௬) சம்பு - சுகத்தையுண்டுபண்ணுகை. பாவபல அனு பவமுடையவர்க்குமட்டுமோ புண்ணியபல அனுபவமுடையதே வருக்கும் இயற்கைச்சுத்தம் இன்றென்பார் புண்ணியாசனத் தல்லாத் சுயஞ்சுத்தமென்றார். புண்ணியம் - ஈண்டுப் புண்ணி யபலம். அசனம் - அனுபவித்தல். பிராணாத்மகம் — பிராண னுக்குப்பிராணன். (௧௪௭) சருவகத ஆத்மகமென்பது எவற் றோடுங்கூடிய சொரூபமுடையதெனவும் சருவவியாபகமென் பது எவற்றிலும் எங்கும் நிறைந்துநிற்பதெனவும் பொதுப்ப டப் பொருள்படுவனவேயாயினும், அவை ஈண்டு முறையே அபக்குவான்மாக்களில் மறைந்தும் பக்குவான்மாக்களில் விளங் கியும் சிவம் நிற்குநிலைமை சுட்டிநின்றன. பாவம் - பாவனை.

சருவவயிச் சுவரியந்தான் பகருங் காலைச் சகலபாக் கியமு
ந்தா னுள்ள தாகுஞ், சருவவா னந்தமது இளக்குங் காலைச் சரு
வசுக முந்தானே யுள்ள தாகுஞ், சருவசா மர்த்தியந்தான் சொ
ல்லுங் காலைச் சகலபல முந்தானே யுள்ள தாகுஞ், சருவசுதந்
தரமதனைச் சாற்றுங் காலைச் சகலசுதந் தரமுந்தா னுளதே
யாகும். (க௪அ)

சருவவா திபத்தியமஞ் ஞானந் தீரச் சச்சிதா னந்தவின்பந்
தருவ தாகுஞ், சருவதோ முகமதுதா னுரைக்கி னெங்கும் தன்
னறிவே சொரூபமாய்த் தழைந்த தாகுஞ், சருவபூ ரனந்தபூ
ரணதிருத்தி சருவானந் தமுநிறைந்தொன் றையுங்கூ டாதாஞ்,
சருவமா தத்துவா தீதந் தானே சகலதத் துவங்கடந்து நிற்ப
தாமே. (க௪௯)

போற்றரிய வசலமெனல் புகலுங் காலைப் போக்குவர
வெனுமிரண்டு மில்லா தாகு, நீற்றவதி சூக்குமந்தா னிகழ்த்
துங் காலை நேர்மையினு நேர்மையா முருவ மாகு, மாற்றுமப
ரோட்சமெனன் மறைப்பில் லாதா மன்னுபர வியோமம்பா
வனைக்கெட் டாதா, மாற்றுமகண் டிதமெனல்கண் டிதமில்
லாதா மனந்தமென்ப துரைக்கினள விலாத தாமே. (க௫0)

அரியதொரு பிரமாணா தீத மென்ப தளவைகளா லளவிடவு
முடியா தாகு, முரியசம யாதீதஞ் சமயந் தன்னை யொருவி
யப்பா லாயவியா பகமாய் நிற்கும், விரியும்வா சகமொடுவாச்
சியாதீ தந்தான் வேதத்தா லிலக்கணையிற் றுணிவ தாகும், பரி

(க௪௯) சருவதோமுகம் - எங்கும் ஒருபடித்தாயிருப்பது.
(க௫0) இந்திரியங்களாலறியப்படுவன மறைப்புடையவைகளே
யாதலின் அவை ஒருகால் அறியப்பட்டும் படாமலும் நிற்பன
வாம்; இது அவ்வாறன்றி அவற்றாலறியப்படாததாய்த் தானே
விளங்கி நிற்பதென்பார் மறைப்பில்லாததென்றார். (க௫௧) இல
க்கணைகொண்டு துணியப்படுபொருள் இலக்ஷியார்த்த
மெனப்படும்.

யுமத்தி னாத்தியதீ தம்விரித்துப் பகரினுள்ள தில்லதல்ல தாகுந் தானே. (௬௧)

*அளவில்கிரி யாதீத மெனக்கி ளப்ப தருச்சனைசெய் தெளிதறிய வரிய தாகு, முளவில்வச னாதீத மாகு மென்ப துற்றிடு சொல்லா னறிய வரிய தாகு, மெளிமையலா தறுவாயு வதீத மென்ப திரேசகா தியினறிய வரிய தாகுந், தளர்விலரு மனாதீத மாகு மென்கை சாற்றுமன தாலறிய வரிய தாமே. ()

சொல்லலரு மான்மஞா னாதீ தந்தான் சுழலான்ம சித்தறிவிற் கரிய தாகும், வெல்லலரும் விஞ்ஞான சட்சுதரி சனந்தான் மெய்ஞ்ஞானக் கண்களினாற் காண்ப தாகு, நல்லநித்த பூரணசச் சிதானந் தந்தா னசமென்று சொல்லுவதெக் காலுமின்றி, வல்லபமா யெங்கெங்குந் தானே யாகி வழிந்திடுஞா னானந்த விரத மாமே. (௬௩)

மத்தியபூ ரணமதோ பூரணஞ்சர் வபூரணமே பூர்த்தபூரணமான் மாவி, னொத்தறிவி னடுவுகீழ் சூழ்வு மேலோ டோங்குவியா பகஞான விரத மாகு, மத்தியசூ னியமதோ சூனியஞ்சர் வசூனியமே பூர்த்தசூ னியமான் மாவி, னொத்தறிவி னடுவுகீழ் சூழ்வு மேலோ டோங்குவியா பகானந்த விரத மாமே. (௬௪)

சுவாநுபவா தீதமதை யடியிற் கோத்த தொகையில்வியா பகசத்திய ஞானா னந்தந், தவாவிரத மாகியெங்கு நிறைந்த சச்சி தானந்த நித்தபரி பூர ணந்தா, னவாவொடுமப் பரம்பரம குருவாய்த் தாமுன் பருள்செய்த படிவீர பத்தி ரற்குச்,

(௬௪) சூனியம் - அவ்வானந்தத்தைத்தவிர வேறுபொருள் தோன்றமை. (௬௫) அடியிற்கோத்தல் - அடியிற்கொள்ளுதல். அனுபவத்தை ஒட்டியது அழிவுள்ளதாகலால் அனுபவாதீதத்து அழிவில்லாத இரசமெனப்பட்டது. தவாமை - அழியாமை. அப்பரம் அவாவொடும் வந்தளிக்க என இயையும்.

சிவாநுபவ விலிங்காங்க சிற்பந் தத்தாற் றீர்த்தபிர சாதம ருள் செய்ய வேண்டி. (கருரு)

அஞ்சுமுகத் தீசான முகத்தில் வந்தே யாதரவி னுலளிக்க வயின்றன் பாரு, நெஞ்சிலுறு ஞானநிலை யிப்பீ டத்தி னிகழ் ஞான குருவாய்முன் னிகழ்த்த லாலே, விஞ்சியதோர் வீரசி ங்கா தனமென் றேபேர் வீரபத் திரர்விளக்கக் குடந்தை யின் கட், டஞ்சமென்றோர்க் கருள்புரிந்து வதிந்து ஞான சற்குரு வின் மான்மியத்தைச் சாற்று வாரால். (கருசு)

குருவுருவே தியானத்திற் குறிப்ப தாகுங் குருபாத பூசை சிவ பூசை யாகுங், குருமொழியே யரும்பெருமந் திரம தாகுங் குருவருளே கூறரிய முத்தி யாகுங், குருவுருவே யீன்றளித்த தாயு மாகுங் குருவுருவே யளித்தாண்ட தந்தை யாகும், குரு வுருவே யுறவாகுங் கருத்தா வாகுங் குருலிங்க சங்கமமாங் கூறுங் காலே. (கருஎ)

சகரமது சனனமறல் ககரவினை வறலே தகுமகர மலநாசஞ் சார்தலிற்சங் கமமா, மிகரமுறு லகரமுல குற்பத்தி ககர மிலயமதா மிவைபுரிவ திலிங்க மாகுங், குகரமந்த காரம் ருக ரம்மொளியா மதனுற் குலவுமிரு ளோட்டியொளி கொ டுப்பதுவே குருவாம், புகரறுசங் கமமிலிங்கங் குருவிம் மூன் றும் போதமதா லேகமெனப் புகலு நூலே. (கருஅ)

சங்கமராய் வந்துபிர சாத தீர்த்தந் தானருளி வீரசைவர் தம்மங் கத்திற், றங்கிலிங்க மொருமூன்று யுவந்தே வற்றுஞ் சார்ந்திலகு முருவுருசி நிறைவு தான்கொண், டங்குமருட் குரு வாய்வந் தங்க மூன்றி னத்தகுவே தாதிகளாந் தீக்கை செய் தற், கெங்கள்சதா சிவன்முதலா கியநா மத்தோ டிலகவிருந் தனன்சிவனென் றிசைக்கும் வேதம். (கருகூ)

---

(கருஅ). இருள் - அஞ்ஞானம். ஒளி - ஞானம்.

இருந்தருளி யிலிங்கயிற்செல் சதாசிவன்ற னெழின்ஞான சந்ததியி னியற்கை யாக, வருந்தகைமை யேகாக்கர் வாழ்ந் தார் பின்னர், மன்னுமவ ரிலிங்கயினுன் மறைய வந்த, வருந்த வர்சந் ததியினிரே ணுகர்தாம் வாழ்வுற் றுங்ககல வவர்பினிரே வணர்முன் னேனோர், பொருந்துமுறை பேரொளியொன் ஞெ ன்றிற் றேன்றும் பொற்பதுபோ லொப்பிலதாய்ப் பொலியு மன்றே. (கசுo)

தகுவீர பத்திரர்தஞ் சரித மாகுந் தண்டமிழ்ப்பாற் கடலைப் புன் கவியாம் பூசை, மிகுபரிவாற் குடித்ததென லொப்ப நா யேன் வெம்மொழியாற் கூறினேன் கயிலை நீங்கித், தொகுகு டந்தை வீரசிங்கா தனத்தி ருந்த தொன்மையிரே ணுகர்சரி தந் துதிக்க வெண்ணி, னகுவர்புல வோர்களென நாணு தென் றனுவினுற் றெரிந்தபடி நவில லுற்றேன். (கசுக)

வீரபத்திரச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள் - ௩௩௬.

## இரேணுகாசாரியச்சருக்கம்.

அகிலமெலா மொருகுடைக்கீ ழிருந்து மேனு ளரசாண்ட வரிபத்தி மிகுமோர் சோழன், சகலவகை யினுஞ்சிவது டணை கள் செய்து தான்கெடல்கண் டவன்சைவஞ் சார்வுற் றுய்வா, னிகலினிரே ணுகர்சரித மாய்நூற் றென்று யிலகுதலத் தினிற் சிவா திக்க மேன்மை, மிகுதலிற்சித் தாந்தசிகா மணியா மீது வீரணு ராத்திரியர் விளம்பிற் றுமால். (க)

**பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

சீருலா வியவண் கயிலையங் கிரியிற் றிகழ்கரிப் பகையணை மீதிற், சிவனுமை யுடனே யினிதெழுந் தருளச் செங்கண்மா

(க) தலம் - அவ்வப் பொருட்டன்மை. ஈது - இச்சரிதம்.

லயன்முத லியரு,— நேருலா வியசே வடிதொழு திறைஞ்ச ரிமலரங் கருள்புரிந் தயனே, நெடிதுநோக் குற்றுச் சிருட்டி யந் தொழிலை நீபுரி யெனவவன் மருண்டு,— பேருலா விய வென் னையநீ செயில்யான் பின்புசெய் குவலென வரனும், பி ரியமாய்த் தமைப்போ லழிவிலா ரென்னப் பிரமத கணம மைத் தவரு,— ளேருலா வியரே ணுகன்மிகு தாரு கன்னெ னச் சிறந்திடு மிருவர்க், கெழில்குலாம் வாயில் காப்பளித் தரு ள வின்தவர் புரக்குநர் ளொருநாள். (௨)

இரவிக ளனந்த கோடியி னொளிசே ரிருந்தவி சினிதெ ழுந் தருளி, யிருந்தெழி லடைக்கா யின்பிர சாத மீந்திட வி ரேணுக வாவென்,— றானருள் புரிய வம்மொழி கேட்டங் கணைந்திடத் தாருகற் கடந்திங், கவமதித் தனையாற் புவியிடை யுதியென் றறைந்திட வடியனே னறியா,— விரவுதா மதத் தா லுதித்திடி லுன்றுண் மேவுதற் கரிதென விரக்க, வியந்திடு கொல்லி பாகநற் றலத்தின் மேவுசோ மேசமெய்க் குறியி ன்,— மருவியே யுதித்து வீரசை வத்தின் மான்மியம் விளக்கி நீ நம்பால், வருகெனத் திருவாய் மலர்ந்தருள் புரிய மகிழ்ந் துளத் துயரகன் றன்பால். (௩)

கடிமலர் கரங்கொண் டருச்சனை புரிந்து கசிந்துள முருகி யின் றேங்கிக், கருதுமட் டாங்கம் புடவியிற் படியக் காதலிற் பலமுறை வணங்கி,— யடியவ ரிதய கமலம்வீற் றிருந்தே யானந்த நடனமே யியற்று, மடியிணைக் கமல முடிக்கணி யாக வணிந்துமார் பகத்துற வழுத்திப்,— பொடியணி புயத் திற் சூட்டியே செவியிற் புனைந்துகண் ணிணையினி லொத்திப், பொருந்துநா சியினின் மணந்துசெவ் வாயிற் போற்றிநற் செ ன்னியிற் சாத்தி,— வடிவெலா மிலைச்சி யடிபெயர்த் திட்டு வாய்கரம் புதைத்துடன் பின்னே, வாங்கிமே லன்பி னுலுயர் வலமாய் வந்துசந் நிதிமுன்னர் வணங்கி. (௪)

கண்ணினுண் மணியே கருத்தைவிட் டகலாக் காட்சியே க
னிநறுஞ் சுவையே, கட்டியே பாகே கோதிலா வமுதே தன்
னலே கறந்திடாப் பாலே,— மண்ணிய மணியே கருணைவா
ரிதியே வள்ளலே குணபருப் பதமே, வளர்சிவக் கொழுந்தே
தளர்விலா முதலே மாறிடா வின்பமே தவத்தோ,— ரெண்
ணமே யயன்மா லிருவர்தே டரிய விறைவனே யீறிலா தவ
னே, யிமையமா தெழிலார் கணவனே பணிவா ரிருவினை
மும்மல மொழிக்கு,— மண்ணலே சகல பல்லுயிர்த் தொகை
யுண் டாக்கியாண் டழித்துளா யருளு, மத்தனே பரம முத்
தனே யறிவா லறியுமா னந்தநா யகனே. (௫)

என்றுவா யாரத் துதித்துநல் விடைகொண் டெழுந்துபல்
கணங்களும் வணங்கி, யேகுவார் கிரேதா யுகத்தினிற் சதாசி
வருந்திரே தாயுகத் தெழிலி,— னென்றுமே காக்க ருங்குரா
வர்களா யுற்றவா துவாபர யுகத்தி, லுயரிரே ணுகராய்க் குண
கடன் மருங்கே யோங்கிடு கொல்லிபா கத்தி,— னின்றசோ
மேச லிங்கத்துற் பவமாய் நிறைபருட் குருவடி வாகி, நீண்
டசெஞ் சடையும் யோகபட் டிகையு நீறுட னக்கமும் விளங்
கச்,— சென்றுதென் மலய பருப்பத மெய்திச் செங்கையாற்
கடன்முகந் துண்ட, செழுந்தமிழ்க் கிறையா மகத்தியன் க
ண்டு தெரிசனஞ் செய்யவுற் றனனால். (௬)

குறுமுனி நோக்கி யெழுந்தெதிர் நடந்து கோதிலாப் பதம
லர் பணிந்தே, கூறருக் கியநற் பாத்தியா சமனங் கொடுத்
துயர் தவிசிடை யிருத்தி,— மறுவறு பூசை விதிமுறை யியற்றி
வாஞ்சையா முணவினை யருத்தி, மகிழ்பிர சாதங் கொண்டு
தன் னறிவால் வழுத்திமுன் படிதொழு தடியேற்,— கறிவுறு
த் துதற்கா சிரியரா யணைந்த தனேகசன் மஞ்செய்புண் ணிய
மென், னையனே வீர சைவனே யான்மா வறிவுறு போத
மொன் றருளென்,— றிறையடி பணிய முருகனுற் சிவதன்

மோத்தாமியம்பிட வறிந்தா, யாதுனக் கெம்மா லறியவேண் டுவதொன் றியம்புதி யெனவவ னுரைப்பான். (எ)

ஆதிவே தாக மங்களை யுணர்ந்து மறிந்திலே னுற்பல மொழிக்கு, மமலமாம் பரம சிவாத்துவி தந்தா னதனையிங் குரைத்தரு ளென்ன,— வோதுபே தத்தின் விச்சையிற் பொருளு மொக்கமும் பற்பல யோக, முற்றசாங் கியம்பாஞ் சராத்திரம் பாசு பதத்தொடு முறவதாய் விளங்கும்,— வேதமோ தியது சத்திய மதனுல் விளங்குவா தத்தினுல் விலக்கா, விழுமிய யோகா திகளுமே வேதத் தொருபுடை யாகயாங் கணுமாய்த்,— தீதிலாச் சாங்கி யாதியிற் சைவஞ் சிறந்ததாய்த் திகழ்ந்து முன் னிலக்குஞ், சேரொணுப் பிரம மோதுசித் தாந்தத் திலகிய மறைப்பொரு டேர்ந்தே. (அ)

அண்ணன்முன் னுரைத்த வாகமங் களிலே யறைந்திடுஞ் சைவமே யிலாகு, ளங்கிகழ் பாசு பதத்தொடு சோம மென்பன வவற்றினுட் சைவங்,— திண்ணமாம் வாமந் தக்கண மிசிரந் தீதில்சித் தாந்தமென் றெருநாற், றிறத்ததாம் வாமஞ் சத்திதன் பரமாந் தக்கணந் திகழ்வயி ரவர்தம்,— வண்ணமோதுவது மிசிரமேழ் மாதர் வகைபகர்ந் திடுவது மறையின், வாக்கியு தருமம் வகுத்தலாற் புறமா மதத்தினை மறுத்தலால் வழங்கு,— திண்ணய மெனல்சித் தாந்தமாஞ் சிவாக மங்களு நிகமமுஞ் சமமாய், நேரிலத் துவித முரைத்தலா லிரண்டு நிகரென நிகழ்த்துவ ருணர்ந்தோர். (கூ)

சைவமென் பதற்குச் சாதன மிங்ஙன் சாற்றலா லதிகமா மந்தச், சைவமேழ் விதம்யா முரைக்குவங் கேள்சா மானிய சைவமொன் பூர்வ,— சைவமிச் சிரசை வஞ்சுத்த சைவஞ் சௌத்திர சைவமே மார்க்க, சைவநல் வீர சைவமென் றிவற்றுட் சான்றதாய்ச் சிறந்திடும் வீர,— சைவமுன் ருஞ்சா மானியம் விசேடந் தகுநிரா பாரமென் றிவைசொல், சைவசித் தாந்த

தந்திரங் காமி காதியுத் தாத்தவா மிந்த,— சைவசித் தாந்த
சிகாமணி தனைத்தற் பரனுமை குகற்கரு ளியவா, சைவநந்
தியுஞ்சின் மயகணற் கருளச் சாற்றின ரெற்கவர் தாமே. (௧௦)

தீதிலாச் சிவசீ வைக்கியமென் பதனைத் திகழ்த்திடும் வீயெ
னல் வித்தை,சேர்ந்ததில் ரமித்தல் செப்புமால் ரகரஞ்சிவனொ
டு கலத்தலே சைவ,மோதிலிவ் வகையா ளுமமும் வீர சைவனெ
ன்றேமறை யுரைக்கு, முவனகப் பூசை யுடையனும் வித்தை
யூடுலாய் மாயையை யொறுத்தே,—நீதியிற் கைத்து நாயெனக்
கண்டு நெகிழ்த்துமுன் வருணமாஞ் சிவத்தி, னேசமா முத்தி
யோன்வீர மகேச னிகழ்புறப் பூசையோ னுநீ,— ளாதர வீர
சைவனே சடத்த லத்தவ னளவிலாச் சனனத், தணைந்தபுண்
ணியத்தாற் புனிதமா மனத்த னுதலாற் பிண்டநா மியுமாம். ()

ஆதியாம் பிண்டம் பிண்டஞா னம்பி னடர்சமு சாரநீக்
கம்பே, ரருடருங் குருகா ருணியநல் லிலிங்கம் விபூதிருத்
திராக்கதா ரணமே,— யோதுறும் பஞ்சாக் கரம்பத்த னுபய
முயர்திரி விதத்தசம் பத்தி, யொளிர்சதுர் விதாசா ரத்
தொடு முபாதி யுணர்நிரு பாதியே சகச,—நீதியி னிவைவாய்ந்
துள்ளவன் பத்த னெறிமகே சுரத்தல மிலிங்க, நிட்டைபூ
ருவாச்சி ரமநிர சனமே நிகழத்து விதநிர சனமே,— சாதக
வாவா கனநிர சனமுன் சாரட்ட மூர்த்திநி ரசனந், தக்கதாஞ்
சருவ கதநிர சனஞ்சேர் சால்சிவன் சகமயஞ் சாற்றின். (௧௨)

பத்ததே திகதே வம்மெனு மிவைகள் பரிவினுற் றவன்பகர்
மகேசன், பதிபிர சாதி குருவின்மான் மியமும் பரிவுறு மிலி
ங்கமான் மியமும்,— பெத்தமில் சங்க மத்தின்மான் மியமும்
பெருமைசேர் பத்தமான் மியமும், பெயர்விலாச் சரணன்
மான்மியம் பிரசா தமான்மியம் பெறும்பிர சாதி,— சத்தியப்
பிராண லிங்கிநற் பிராண லிங்கவர்ச் சனைசிவ யோக, சமாதி
சேர் ரிலிங்க நிசமங்க லிங்கந் தன்னையுற் றவன்பிரா ணலிங்கி,—

மெத்திய சரணக் தாமச விரச னம்வியன் ஞானவிர்த் தேசம்,
விளங்குசீ லசம்பா தனையொரு நான்கு மேவியிங் குற்றவன்
சரணன். (கங)

அயிக்கியஞ் சர்வா சாரசம் பத்தி யறைந்திடு மேகபா சன
மீ, தார்சக போச னஞ்செறி பவனே யயிக்கனங் கத்தல மீ
தா,— மியக்குறு மிலிங்கத் தலஞ்சொலிற் றீக்கா குருசீக்கா
குருஞான குருவே, யியம்பிய கிரியா லிங்கமே பாவ லிங்கமே
ஞானலிங் கஞ்சீர்,—பயக்குறு சுயமே சரம்பர மென்னப் பக
ர்வவா சாரலிங் கந்தான், பகர்கிரி யாவா கமம்பாவா கமஞா
னகமம் பலிப்புறு சகாய,— நயக்குறு மகாய மிகுபர காய
னன்றிசேர் தருமவா சார, நாட்டிய பாவா சாரமே ஞான சா
ரமு நற்குரு லிங்கம். (கச)

கேதகா யானுக் கிரகமிர் தியானுக் கிரகமே கெழுபிரா
ணனுக், கிரகமே காயார்ப் பிதமொளிர் கரணார்ப் பிதங்கிளர்
பாவார்ப்பி தஞ்சேர்,—வாதமில் சீட சிசுருடை சேவி யஞ்சிவ
லிங்கமாஞ் சீவான், மாவொடு மந்த ரான்மாவே பரமான் மா
வளர் நிர்த்தேகா கமமே,—யாதிநிர்ப் பாவா கமீங்ட்டா கமமா
திப்பிர சாதியே யந்தி, யப்பிர சாதி சேவியப் பிரசா தியாமி
வை சங்கம லிங்கஞ்,— சாதக தீக்கா பாதோத கஞ்சீக் காபா
தோ தகஞ்ஞான பாதோ, தகங்கிரி யாநிட் பத்திசால் பாவ
நிட்பத்தி ஞானநிட் பத்தி. (கரு)

அரியதோர் பிண்டா காயமே விந்தா காயமே மகதாகா
யஞ்சீ, ரமைகிரி யாப்பி ரகாசமே பாவப் பிரகாச ஞானப்பி
ரகாச,— மூரியவித் திறனும் பிரசாத லிங்க முணர்சுவி கிரு
தப்பி ரசாதி, யோங்கிய சிட்டோ தனமொடு மொளிருஞ்
சராசர லயமுயர் பாண்டங்,— தெரிவுறு பாச னத்துட னங்
கா லேபமே செறிசுபா ரஞ்சஞ், செப்புபா வாபா வந்திகழ்

(கசு) கேதகாயம்-கேதத்தைவிளைக்குங்காயம். கேதம்-துன்பம்.

ஞான சூனிய மாலிங்க மாகும்,— விரியவிங் குரைத்த வங்க லிங் கத்தின் வியன்றலங் தொகுக்கினூற் றொன்று, மேதகும் வீர சைவரா சியத்தின் விளக்கமா மிவைக்கரு கனுநீ (கசு)

ஆதலா லுனக்கின் றுரைத்தன மென்ன வடியனேன் விண்ணப்ப மினுமொன், றுதியா சிரியர் வரவுகூ றுகவென் றறைந்துங் கேட்டிமுன் னுகத்தி,— லோதுநஞ் சிவனே சதாசிவனாதி யுயர்குரு மூர்த்திக ளாகி, யோங்கிய வெவ்வே றுருப்பெயர் செய்கை யுற்றுலா வினனென வருளப்,— போதியானுய்ந்தே னென்றடி பரவப் பொருவருங் கருணைகூர்ந் திலங்கா, புரியினுக் கெய்தக் கண்டுவீ டணனும் பொருக்கென வெழுந்தடி பணிந்தே,— மாதவ விவணீ வருவதற் கேது மாதவஞ் செய்தன னெனமுன், வழுத்திநற் பூசை விதிமுறை யியற்றி மணித்தவி சளித்திட விருந்தார். (கஎ)

இருந்தபோ தரக்கர் கோமக னிறைஞ்சி யியம்பும்விண்ணப்பமொன் றுளதிவ், விலங்கையர் கோமான் றவம்புரி காலை யிறையவர் தாமெழுந் தருளிப்,— பொருந்தவே வேண்டும் வரமெலா முதவப் புவியிடை யொன்பது கோடி, புண்ணிய விலிங்கப் பதிட்டைசெய் திடவுட் புந்திசங் கற்பமா யினன்மெய்,— திருந்துமா தவத்துக் கிரசத கிரியார் சேவின்மேற் றோன்றிவேண் டிடுவ, சிந்தையிற் களிகூர்ந் தருளலும் பெற்றுத் திரிபுவ னங்களை யாண்டான்,— பரிந்தறு கோடியிலிங்கதா பிதங்கள் பண்ணினன் பழியினு லிராமன், படைவிட வுடலிற் பட்டுயிர் விடுப்பப் பதைப்புழித் தமியன்வந்தனனுல். (கஅ)

வந்தரு குனக்கென் னிதயநோக் கென்ன வகுத்தனன் மற்றைமுக் கோடி, வளர்சிவ லிங்கப் பதிட்டைசெய் திடவும் வாய்த்திடா மனத்துய ரொன்றே,— யந்தநற் பணியை முடி

---

(கஅ) உதவச்செய்திட சங்கற்பமாயினனென இயையும்.

த்திடென் றுரைத்தே யரசனு மக்கண மடைந்தா, னதற்குறு காலந் தேவரீ ரணைந்த தாமிதைச் செய்திட வருளென்,— றிந் தவா றுரைத்தங் கிரந்திட யாமே யியற்றுது முபகர ணங்க; ளிக்கணங் கொணர்தி யென்னவே பணிக்க விலிங்கமு மியல் வதாம் பொருளுந்,— தந்தனன் முகூர்த்த மொன்றின்முக் கோடி சற்குரு வாகியே யிலிங்க, தாபிதஞ் செய்தவ் வீட ணன் றுதிக்கத் தாமருள் புரிந்தன ரகன்றே. (௧௯)

அணிதிரு நீறு மக்கமு மெழுத்தா றுடன்குரு வும்மிலிங் கமுஞ்சங், கமமுநற் றீர்த்த மும்பிர சாத முடனட்டா பர ணமு மன்பாற்,— பணியிலிங் கமுமங் கமுஞ்சத்தி தானும் பத்தியு மத்தமு முகமும், பரியுமர்ப் பிதமுஞ் சேடமு மென் னப் பகரட்ட சகிலமும் பரவத்,— துணிவுறும் வீர சைவர்க டமக்குத் தொகுத்திடும் பொருளிவை விளங்கத், தாய்திருக் குடந்தை மருவியே ஞானந் துலங்குசிங் காதனத் திருந்து,— மிணையிலாக் காஞ்சித் தலமுத லியவற் றிகல்பர மதத்தினைச் செயித்து, மிறையருள் புரிந்த படிவந்த விலிங்கத் தின்பமிக் கெழுந்தரு ளினரால். (௨0)

ஆதியங் கயிலை தன்னின்முன் பரனா ரருளிய படியிரே ணுக ர்தா, மழகமர் கொல்லி பாகநற் றலத்தி னமர்ந்திடு சோமலிங் கத்தி,— லேதமில் லாம லுதித்தகத் தியனுக் கிணையிலா வீர சைவத்தி, னியல்பினைத் தெளிய வுரைத்தெழி லிலங்கை யெ ய்திவீ டணனுளப் படியே,— சோதிலிங் கங்கண் மூன்றுகோ டிகளைத் தொகுத்துயர் ப்திட்டைசெய் தருளித், துலங்குதென் குடந்தை வதிந்துசோ மேசச் சொற்குறி யணைந்தது சொற் றேன்,— மாதவ மிகுநல் லிரேவண சித்தர் வளர்தரு சந்ததி வருமா, மழையமல் லேசர் மகத்துவ மவற்றுள் வந்தன வழுத் திடப் படுமால். (௨௧)

இரேணுகாசாரியச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள் - ௩௫௱.

## மழையமல்லேசுரச்சருக்கம்.

### விநாயகக்கடவுள். கலிவிருத்தம்.

தழைபெ ரும்புகழ்த் தன்னடி யுன்னிடில்
விழைத ரும்பொரு ளியாவும் விளைத்திடு
மழைம தர்த்தகண் மாதுமை நல்கிய
புழைநெ டுங்கரப் போதக வேழமே. (க)

### சிவபெருமான். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னொங்கு செஞ்சடைமேற் புனைந்தமதி தன்னுருவிற்
புரிந்து மாறாய்க், கொன்னொங்கு வயின்பந்தம் வெருவிமார்
பகத்தமைந்த கொள்கை யென்ன, முன்னொங்கு மொருகே
ழன் முடக்கோடு புனைந்தருளு முக்க ணெம்மான், றன்னொங்கு
சேவடியென் றலைமனத்து நாடோறுந் தரித்து வாழ்வாம்.(உ)

### உமாதேவியம்மை. மேற்படி வேறு.

தண்ணறு வொழுகு செங்கேழ்த் தாமரைத் தவிசின் மாதும்
வெண்ணிலா விரிக்கு மேனி விளங்கிழை வாணி யுந்தன்
கண்ணென வுடைய பச்சைக் கவின்பெறு முமைமா தென்றாய்
வண்ணவான் கமல மேய்க்குந் திருவடி மனத்துள் வைப்பாம்.

### விநாயகக்கடவுள்.

மாழையம் பொற்றை யேடா வைந்நுதி யாணி கோடா
வாழிசூ ழுலக வேந்த ரைவர்சீர் வரைந்த பிள்ளை
யேழையேன் மனவன் கல்லிற் றன்னுரு வெழுதி வைத்துத்
தாழுற வதனை நோக்கத் தந்தருள் புரியு மன்றே. (ச)

(ச) தாழ்வற என்பதும்பாடம்.

**சுப்பிரமணியக்கடவுள். மேற்படி வேறு.**

நல்லை தீரருட் பெருக்கினு லெளியனு மென்பிழை யெண்ணும
னல்ல சீரடி யாரொடு மொருவனு நயந்தெனை யினிதாண்ட
வல்லி மான்மக ளின்புறத் தழுவிய வரைபக வெறிந்தோன்று
னல்லு நன்பக லுந்துதித் திடுவதுற் பவமற வழகாமால். (௫)

**வீரபத்திரக்கடவுள். கலித்துறை.**

நீர துற்றிடு நெடுஞ்சடை முடிகொணன் னிமலன்
சீர தற்றிடச் செய்சிறு விதிமகஞ் சிதைக்கும்
போர துற்றிடப் புரிந்துபிற் குடந்தைமா மடம்வாழ்
வீர பத்திரன் விரைமலர்த் தாண்மிலைச் சிடுவாம். (௬)

---

பழைய வல்வினை மூலமா மலத்தின்வேர் பறியக்
குழையு மன்பினிற் சிவனையர்ச் சனைசெயுங் கொள்கை
மழைய மல்லிகார்ச் சுனகுரு வாழ்குடந் தையினிற்
பிழையி லாவடி யாரொடும் பெரிதுவந் திருந்தார். (௭)

அன்ன சற்குரு மகிமைதா னரவிறை யறிவா
னுன்னி யோதிட லன்றியிவ் வுவரிசூ ழுலகி
லென்னை நேர்பவ ரியம்பிட வெளியதோ வெனினுந்
தன்னை நேர்தருஞ் சரிதையிற் சிறிதுசாற் றுவனால். (௮)

ஆதி தற்பரன் கயிலையங் கிரியினி லமர்ந்தே
காத லானுறத் தேவியுங் கண்டடி தொழுது
நீதி சூழ்குர வோர்புகழ் நிகழ்த்தென நிகரின்
றோது கேமிது கேளெனக் கருணையா லுரைக்கும். (௯)

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

பேரரு ளுதவ நாமே பிறங்குபல் லுயிர்ப்பொ ருட்டாற்
சீரிய சதாசிவன்பிற் சிறந்தவீ சுரன்ம கேச
னேருருத் திரனென் னும மூலகினிற் கிரேத மென்ன
வாருமுன் னுகத்தின் மேவி யமைந்தனுக் கிரகஞ் செய்தேம்.

இரண்டெனு முகத்தி லேகாக் கன்றுவி தாக்க னென்ற
வுரங்கொள்பஞ் சாக்க ரனுது சடாக்கர யுற்ற மேலுஞ்
சரஞ்செய்மூன் றுமு கத்தி லிரேணுகன் றரு கன்சால்
வரங்கொள்கோ கன்னன் சங்கு கன்னனாய் மருவினனுமால். ()

ஏற்றநான் காமு கத்தி லிரேவண சித்த னன்பின்
மாற்றரு மருள சித்தன் வயங்குமே கோரா மையன்
பாற்றரும் புகழ்கொள் பண்டி தாராத்தி ரியனெ னப்பேர்
சாற்றுறுங் குருவாய் நல்குந் தன்மையை விளங்கச் சாற்றின்.

ஒப்பருஞ் சத்தி யோசா தாதிமா முகத்து தித்தே
செப்பரு மூவே மூான தீக்கைபக் குவர்கட் காற்றித்
தப்பரும் வீர சைவத் தன்மையி னெறிவி ளங்க
விப்பெரும் புவியில் வந்தே யிருந்தன மியல்பி னாலே. (கரு)

நேசமார் சதாசி வாதி நீண்டசந் ததியின் மேவுந்
தேசர்கு ணியசிங் காத னத்தராய்ச் சிறந்தார் பின்சொல்
பாசமி னல்வ ரோடு பரமவல் லமனைக் கூட்டி
யாசிலா வீர சைவா சாரிய ரைவ ரென்பார். (கச)

என்றர னுமைக்கு ரைத்த வெழின்மிகு குரவ ராகு
நன்றிசெய் சீர்த்தி மல்கிந் நால்வரு நவிலு நான்கு
வென்றிசிங் காத னாதி மிகுத்தபல் சாத னங்க
ளன்றவ ணியில்வெவ் வேறு வமைத்தினி தமர்ந்தா ரன்றே. ()

பேசிய குரவர் தம்முட் பெரியரே வணசித் தேசர்
மாசிலா வளவர் கோமான் மடந்தையா தியர்ம ணந்தே
யாசிலாத் தடமொன் றுக்க வக்குளந் தோண்டும் போது
நேசமா யளவி லாவந் நேரிழை யவர்க்கு ரைத்தார். (கசு)

தோட்டுமண் கூடை கொண்டு சுமந்திடு மென்ன வன்னார்
கேட்டன ரச்சங் கொண்டு கிளக்குமப் பணிபு ரிந்தார்

---

(கச) ஈண்டியம்பியவர் இறைவர் ஈசானமுகத்துத்த அல்லமர்.

வாட்டுணைத் தடங்கட் சேரன் மடந்தைசூற் கொண்ட மெய்யிற்
கூட்டிய துயரான் மாட்டே னெனுமவர் குறையுட் கொண்டே.

வேந்தனுர் பாவாய் நஞ்சொல் விரும்பிடா திகழ்த லாலே
போந்திடாய் தந்தை பாலே யெனவவள் பொருக்கென் றேக
வாய்ந்திடு கருப்பந் தந்து மற்றுநீ யேகென் றேத
வேந்திடு கருப்பந் தன்னை யெவ்வண்ணங் கொடுப்ப தென்றுள்.

உதரத்தை யுகிராற் கீறி யுற்றிடு பிண்டங் கொண்ட
புதல்வனைத் தரணி மாது போற்றுகென் றருளப் பூமான்
கதுமெனப் பிளந்து வாங்கிக் காத்தன ளரசன் கன்னிக்
கிதமறு மூறு தீர்த்தா ரேகின டந்தை தன்பால். (ககூ)

உருவினை யுருத்து வாங்கி யுலக்மா துட்கொண் டோங்கி
வருவகை யாலு ருத்தி ரமண்ணிய மாமு னிப்பேர்
தருவது தகுதி யென்னுச் சாற்றிநீ றக்க மாதி
பொருவற வளித்து ஞான போதனை புகன்று பின்னர். (உ0)

மூந்திலீ லையிஞ லையுர் மறைந்திட மொழியு மன்னர்
சந்ததி யாமு ருத்தி ரமண்ணிய முனிவர் சால்பிற்
சுந்தர வீர சைவ சமயமே துலங்கப் பார்மேல்
விந்தையின் ஞான லீலை விளங்கிடச் சரித்தா ரன்றே. (உக)

சரித்திடு காலை மேலாந் தகைமைகொள் படைவீ டென்றும்
பருப்பத மென்று மொப்பிற் பகர்பாளை யள்ளி யென்றும்
விரித்தசீர்க் குடந்தை யென்றும் விளம்புநான் காத னத்தி
லருத்தியி னமர்ந்த தன்மை யணிபெற வுரைக்க லுற்றும். ()

விரிதிரைப் பரவை சூழு மேதினி புரக்குஞ் செங்கோ
னரபதி தம்முன் னோர்க ணண்ணிடுந் தலமாய்ச் செம்பொ

---

(உஉ) படைவீடு பருப்பதம் பாளையள்ளி குடந்தை யென்னும் தலங்களின்பெயரே ஈண்டு அவ்வத்தலங்களிலுள்ள சிங்காதனங்களுக்கும் ஆயின.

னிரதமாப் புரவி காலா ளென்னுநாற் படையோ டைய
ரரசர்வா ணிகர்வே ளாள ராதிய குடிகண் மல்கி. (உங)

அளவிலா மறுகு சோதி யளவிலா மாட கூட
மளவிலாத் துவசம் பூவா ரளவிலாக் காவ ணங்க
ளளவிலாத் தோர ணஞ்சீ ரளவிலா வாவ ணங்க
ளளவிலாத் தரும மூண்போர்க் களவிலா வன்ன சாலை. (உச)

அளவில லயந்தீ வேட்கு மளவிலா யாக சாலை
யளவிலாத் திருநா ளொப்பி லளவிலா நடன கீத
மளவிலாச் செல்வ மல்கு மளவிலாக் கல்வி யோங்க
வளவிலாச் சிறப்பின் மேல தாம்படை வீடு தன்னில். (உரு)

மன்னிய வருளு ருத்தி ரமண்ணிய முனிவர் பாத
முன்னிய வீர சைவ ருகந்துடன் வணங்க நோக்காற்
பன்னருங் கருணை கூர்ந்து பணியுமங் கவர்க்கு நன்கு
தன்னிக ரிலாத ஞான போதனை சாற்றுங் காலை. (உசு)

தவன்சம தக்கி னிக்குத் தாரமாம் பன்னி கற்பாற்
சிவனபி டேகத் துக்குத் தெளிகங்கா சலந்தி ரட்டிக்
கவனமாய்ப் பதிமுன் வைக்குங் காலையி லொருநாள் விண்ணி
லெவனகந் தருவன் மானத் தெய்துரு நீரிற் கண்டாள். (உஎ)

கண்ணுறு நிழலை நோக்கிக் கருத்தினிவ் வடிவ நன்றென்
றெண்ணினுள் கற்பு மாறி யிருஞ்சலந் திரட்டு தற்கு
நண்ணிடா தாகக் கங்கா நதிக்கரை யுடலங் கம்பித்
தெண்ணிலாத் துயர மச்ச மெய்தினின் றிரங்கும் போதில். ()

இங்கிவள் கற்ப ழிந்தா ளென்பது ஞானத் தெண்ணி
வெங்கொடுங் கோபம் பொங்கி விழிவழி வடவை சிந்த

(உசு) இப்பரசுராமர் திருமாலின் அவதாரமூர்த்திகளுள் ஒருவராயினும் சங்காரத்திற்குரிய உருத்திரசத்தியும் மழுவும் பெற்றவரென்பார் “வங்கவெற்பகத்தான் மெய்யு மழுவுமாயவ

வங்கவெற் பகத்தான் மெய்யு மழுவுமா யவத ரித்த
சிங்கனை நோக்கி நீயே சேதியின் றிவனை யென்றான். (உ,க)

தந்தைசொன் மிக்க தாமந் திரமிலாத் தகுதி யெண்ணித்
தந்தைசொற் றலைமேற் றாங்கித் தமதுடற் கருப்ப நல்குந்
தந்தையே மூல மீன்ற தாயவற் கடிமை யாலே
தந்தைசொற் றவறி லான்சற் புத்திரன் றனெப் பில்லான். ()

என்றவாக் கியங்க ணூலி னியற்கையென் பதனை யெண்ணி
நன்றுநன் றெனவுட் கொண்டு நாந்தக முறைவி திர்த்து
மென்றிதழ் கடித்துச் சீற்ற மீக்கொள நடந்து முன்னி
நின்றவள் சிரத்தை யங்க ணிமிடத்திற் சிதைத்து வந்தான். ()

தாதையுன் மகிழ்ந்து சேயைத் தழுவியுச் சியினை மோந்து
நீதவ றிலாது செய்யு நியமத்தா லுவந்தே முள்ளக்
காதலின் வரங்கே ளென்னக் கழறினன் கனிந்து தந்தைக்
கோதுவான் றவருக் கையா வுறுசினந் தவிர்த னன்றும்.(௩௨)

தாயென யானெண் ணுது தக்கணங் கொன்ற தோட
நீயகன் றிடச்செ யிங்ங னிமிடத்திற் போன வாவி
காயமுற் றிடப்பண் மூன்று கண்ணர்பா சுபதம் வாங்கற்
கேயநல் வரம ளித்தி யிம்மூன் றும் வேண்டு மென்றான்.(௩௩)

தந்தன மெழுப்பிக் கொள்க கமண்டலச் சலத்தா லென்ன, வுய்ந்தன னென்று போற்றி யுடலிற்கம் பொருத்தித் தெண்ணீர், சிந்தையிற் களிப்பான் மைந்தன் றெளித்திட வுயிரும் பெற்றே, வந்தடி வணங்கிப் பன்னி வாய்புதைத் தினைய சொன்னாள். (௩௪)

புலைப்படும் புத்தி யாலிப் புவியிடை யுயிர்கட் கெல்லாந், துலைப்படு மனதே சாட்சி தான்றடு மாற லாலே, தொலைப்பருங்

---

தரித்தசிங்கன்" என்றார். வங்கவெற்பு - வெள்ளிமலை. வங்கவுற்பல வத்தானென்பதும் பாடம்.

குறைநா யேற்குச் சூழ்ந்தது கதியே தென்ன, நிலைப்பமன்
பதைக்கோர் தேவாய் நீடுவாழ்ந் துறைதி யென்றான். (௩௫)

அவ்வரம் பெற்றெல் லம்மை யாய்ப்புவி மருவி வாசஞ்
செவ்விதாம் படைவீ டாகச் சிறந்தவ ளிவர்தா ளெய்தி
நொவ்வுறு மனத்த ளாகி நுந்திரு வடியைக் கண்டேற்
கெவ்வமாம் பவங்க டீர வின்றருள் புரிதி யென்றாள். (௩௬)

ஓமென நோக்க நோக்கா லுறுபவந் தீர நோக்கிக்
கோமளக் கரத்தாற் சென்னி குலவிய பரிசஞ் செய்து
மாமனுச் செவியின் வாக்கால் வழங்கிமுத் தீக்கை யுஞ்செய்
தாமென விலிங்க தார ணஞ்செய்தங் சடிமை கொண்டார். ()

அன்றுதொட் டடிய ளாகி யலகிட்டு நீருந் தூவி
நின்றன ளடியார் கூட்ட நெருங்கிய மடத்தின் பாங்கர்ச்
சென்றெதிர்ந் திரந்தோர்க் கெல்லாந் திவ்விய வரங்க ணல்கி
வென்றிகொள் புகழு ருத்தி ரமண்ணியர் வீற்றிருந்தார்.(௩௮)

இருந்திடு மிப்பான் மல்லி கார்ச்சுன விலிங்கம் போற்றி
யருந்தவ வேடங் கொண்டாங் களவிலற் புதத்தி னோடு
பொருந்திடு நாம மல்லி கார்ச்சுன ரென்று போற்றத்
திருந்துதம் மையர் பொற்றாட் டெரிசனத் துரிய ரானார். ()

உரியரா மிவரு முன்னா ளுறுமடி யவருந் தொண்டு
தெரிவுற விருக்கும் போழ்தி னிவர்திறந் தெரிவிப் பாராய்ப்
பொரிபடு கடலை யிட்ட லிங்கவர்ப் பிதம்பு ரிந்தே
பரிவினாற் சீடர்க் கெல்லாம் பகர்பிர சாத மீந்தார். (௪0)

வாங்கிய தொண்ட ரெல்லா மகிழ்வினப் பிரசா தத்தைப்
பாங்குட னயின்றார் மல்லி கார்ச்சுனர் பரிவி னாசான்
றீங்கறப் பிடியென் றிட்ட திருவுளக் கருத்தை யுன்னி
யாங்கவர் சரணைப் பற்று மன்புபோற் பிடித்தா ரன்றே.(௪௧)

---

(௩௬) நொ - வருத்தம்.

சிலபகல் கழிந்த பின்னர்த் தேசிக ரிதயத் தெண்ணிப்
பலரையு நோக்கி யுங்கள் பாற்பிடித் திடுமென் றீந்த
நலமிகு கடலை யெங்கே நாடிடக் காட்டு கென்னச்
சொலுமுறை தளர்ந்திட் டைய துய்த்தன மென்று சொன்னார்.

மல்லைய தேவ ரண்ணல் வான்கதி ருதயத் தோற்ற
மெல்லிதழ்க் கமல மன்ன சேவடி விதியிற் றாழ்ந்தங்
கொல்லையின் விரலை நீக்கி யுற்றிடு கடலை காட்ட
வல்லவ ரன்பு போன்று வான்முளை வளர்வு கண்டார். (௪௩)

மெய்ம்மயிர் பொடிப்பக் கண்ணீர் விரைந்துடன் றதும்பப்
பூவார், கைம்மலர் விரித்த ழைத்துக் கட்டியிங் கெமது சீர்
த்தி, யிம்மகி தலமுன் னாக விசைதிரி புவன மூற்றுஞ், செம்
மையின் வளர்க்கு மென்று திருவுளஞ் செய்து பின்னர். (௪௪)

முளைசெயுங் கடலை தன்னான் முளையமல் லேச னாகென், றள
வற வாழ்த்திக் கும்ப கோணத்தி லணைதி யென்ன, வொளிர்
மணித் தாளைப் போற்றி யுகந்துநல் விடையுங் கொண்டு, இளர்
சிவ லீலை யெண்ணில் கெழுமிட வணைந்தார் மாதோ. (௪௫)

அதிதியா ருயி ரத்தோர் விரத்தர்மூ வாயி ரத்தோர்
துதிபொனல் வெள்ளி பச்சை துலங்குகுப் பாசம் புற்றோல்
விதமுறப் புனைந்தோர் பன்னீ ராயிரத் தோர்க ளென்னு
மிதமுள விருபத் தோரா யிரமகத் தோருஞ் சூழ. (௪௬)

மேவியே குடந்தை மூதூர் வீரசிங் காத னத்திற்
றாவிய சதாசி வாதி சற்குரு சந்த திக்க
ணாவியே யனையா ரெங்கட் கருடரு முளைமல் லேச
தேவரு மிருந்தார் ஞானஞ் சிறந்தினி திருக்குங் காலை. (௪௭)

**கோச்சகக்கலிப்பா.**

விரித்தவிருக் கெசுர்சாம மதர்வணமாம் வேதமொடு
நிருத்தஞ்சோ திடஞ்சிட்சை நிகழ்சந்தோ விசிதிகற்ப

மருத்திவியா கரணமெனு மாறங்க மாழிபோ
னிரைத்தொலிக்க வீசன்ற னீசானு தியிற்றோன் றும். (சஅ)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காமிக யிளிர்யோ கசஞ்சிந்தி யஞ்சீர்க் காரண மசிதமே தீப்த்தந், தோமில்சூக் குமஞ்ச கச்சிர மஞ்சு மான்சுப்பி ரபே தமே விசயம், பூமலி நிசுவா சம்பொலி சுவாயம் புவமிக்க வ னலஞ்சொல் வீர, நாமமா ரிரௌர வங்கிளர் மகுட நண்ணிய புகழ்மலி விமலம். (சக)

சந்திர ஞான முகவிம்பம் புரோற்கீ தந்தகு லளிதமே சித் த, முந்துசந் தான மொழிதருஞ் சர்வோத் தமம்பர மேச்சுர முறைமை, வந்திடுங் கிரணம் வாதுள மீறுய் வருந்தொகை யி ருபதொ டெட்டு, மிந்துசேர் முடியா ரருள்சிவா கமங்க ளெ ழுமுகில் போன்முழங் கிடுமால். (ருo)

சைவமே பவிடி யஞ்சொன்மார்க் கண்டஞ் சாட்சியா மிலிங் கமே காந்த, மெய்யுறு வராகம் வாமன மச்சம் விளங்குகூர் மம்பிர மாண்ட, மையிரண் டாகு மிவைசிவ புராண மாய்ந் தகா ருடநா ரதந்தான், பொய்யில்விண் டொடுபா கவதமிந் நான்கும் புகழரி புராணமாம் புகலின். (ருக)

நலங்கிளர் பதுமம் பிரமமிவ் விரண்டு நாடுநான் முகத்தவன் புராணந், துலங்குமாக் கினேய மொன்றுமே யெழுநாத் தோ ன்றழற் கடவுடன் புராணம், பலந்தரும் பிரம கைவர்த்த மொ ன்றும் பகர்ந்திடிற் பாற்கரன் புராண, மிலங்குமீ ரொன் பான் புராணமு முழங்கி யியைந்திடு மெழிற்றிருச் சபையே.()

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருச்சபை காண வேந்தன் றிகழ்விழி போதா வென்பான், றிருச்சபை வழுத்தச் சேடன் செறிந்தநாப் போதா வென்பா ன், றிருச்சபை தொழவா ணன்சேர் கரம்போதா வென்பா

னேலத், திருச்சபைச் சிறப்பென் றுவாற் செப்பலாந் தகை
மைத் தேயோ. (ருங)

நித்தவ நித்த வத்து நிலையினை வினவ வன்பர்
வத்துநிச் சயஞ்செய் தேநான் மறைசிவா கமங்கள் சொன்ன
வுத்தரப் பொருள்க ளீதென் றுணர்த்தமெய்க் கருணை கூர்ந்து
சத்திய வீர சைவத் தன்மைநீ ரறிமி னென்றே. (ருச)

பொறிபுலன் கரண மேவும் புருடனைப் பொருந்தி யாரு
மறிவினு ளறிவ தாகுஞ் சைவம தாயுங் காலை
நெறிகொண்மா லிங்க மொன்றே நிறைந்ததே யெங்கு மாமக்
குறியெனுந் தலமி லிங்காங் கங்களா மிலீலை கூறின். (ருரு)

அங்கமு மூன்று மந்த விலிங்கமு மூன்றும் பின்னு
மங்கமு மாறு மந்த விலிங்கமு மாறு மின்னு
மங்கமு மாறு றுமவ் விலிங்கமு மாறு றுமே
லங்கமு மிருநூற் றீரெட் டிலிங்கமு மவையா மன்றே. (ருசா)

இவ்வகைத் தலமி ரண்டுந் தோற்றியாங் கொடுங்கு மின்பா
லிவ்வகைத் தலமி ரண்டி னியற்கையீ தினிது நாடி
னிவ்வகைத் தலமி ரண்டி னியல்புநீ நாமா மேனு
மிவ்வகைத் தலமி ரண்டு மேகமா யிலகு மீதால். (ருஎ)

வருபவ னிழலை நோக்கி மதித்திடி லொன்று மாபோற்
பொருவிலா காயஞ் சத்தம் பொருந்தியே யொன்று மாபோற்
பரிதிபே ரொளிக ளென்னப் பகர்வன வொன்று மாபோற்
கரதலா மலக மென்னக் காட்சியிற் றெளிந்து கொண்மின். ()

நாகநா னெனவோ ரான்மா நாடில்வே றின்றென் றோதல்
கோகநா னுண்டே னனு ரெனவினு விக்கு றித்தல்

---

(ருஎ) அங்கம் ஆன்மாவும் இலிங்கம் சிவமுமாகலின் நீநாம் என்றார். (ருஅ) வருபவனிழல் ஆகாயஞ்சத்தம் பரிதிபேரொளி என்பன உம்மைத் தொகையன.

சோகமே யவனு னென்னல் சொலுமிலிங் காங்க வைக்க .
போகமே சிவோக மென்ன லெனப்பொருட் டெளிவு தேற்றி.

புவியெலாஞ் சமண்பண் டோங்கப் புகலுநா ரதன்விண் ணப்ப
சிவனறிந் தினிய நந்தி தேவனை யனுப்ப வொற்றைக் [ஞ்
கவிகைவிச் சலற்க மைச்சாய்க் கடுஞ்சம ணடக்கி யொப்பி
றவநெறி வீர சைவ தாபிதஞ் செய்யுங் காலை. (சூ0)

அல்லம தேவ ரென்னு மமலரெண் ணிகந்த லீலை
மல்லலிற் புரிந்து மேலாம் வசவண ராதி யோர்க்கு
நல்லமெய்ஞ் ஞானந் தேற்றி நவையிலா நந்தி பத்தி
வல்லவா கொண்டின் புற்று மகிழ்ந்தருள் செய்தா ரன்றே.()

உற்றிடும் வீர சைவர்க் குயருப தேச மென்னச்
சொற்றிலிங் காங்க வைக்க வநுபோக சூத்தி ரப்பேர்
வெற்றியத் துவித ஞான சாத்திர மிகப்போ தித்தே
நற்றவர் பலத லத்தை நாடயா னத்தெ ழுந்தார். (சூஉ)

கலித்துறை.

அளவி லாத்தல முற்றிடு மகிலமா மிதனில்
வளரு மாயிர மதிகிகர் முளையமல் லேசர்
கிளரும் வெண்ணிலாக் கிரணமா ருடுவெனத் தவர்சூழ்ந்
திளகி லாப்புகழ் தன்னொடுஞ் சரித்திட வெங்கும். (சூங)

வெண்க லத்தணி பேரிகை வாத்தியம் விருதின்
வண்பொ னுற்றவெக் காளமா மணியுறு சின்னம்
பண்க ளொத்தவெண் சங்கமத் தளவொலி பரந்து
விண்க ளூற்றவெண் டிசைசெவி டுறமிக வெழவே. (சூச)

உபய சாமரை யாலவட் டம்முயர் குடைமேற்
சுபம தாமிட பக்கொடி யருகினிற் றுலங்கச்

---

ப(சூக) என்றுசொற்றெனஇயையும். (சூரு) நபம் - விண்.

சபைமுன் வாழ்நரு மளப்பருந் தமதரு ளிலீலை
நபமண் ணோர்தொழ முளையமல் லேசுரர் நடந்தார். (சுரு)

ஆல வாயருஞ் சேதுமேற் கலைகட லருகின்
பால தாமலை யாளமே பரவுகோ கன்னஞ்
சால வேயுயர் சையமார் குடகுநற் றலங்க
ளேல வேயிவை யாதிய பஃறல மிறைஞ்சி. (சுசு)

கொல்லி பாகசோ மேச்சுரங் கும்பிட்டுக் குலவு
மல்லி கார்ச்சுன பருப்பத மாதல மருவி
யெல்லு லாவுமல் லேசரை யிறைஞ்சிநின் றேத்திச்
செல்லு மாபுக ழுயர்ந்தசிங் காதனத் திருந்து. (சுஎ)

மாத வத்தர்வாழ் மங்கள புரிமோகாம் புரியு
மாதி மாதலம் பரவியே பாலையள் ளியினிற்
போத மாமணி யிழைத்தசிங் காதனம் பொருந்திக்
கோதி லாவிழு திப்புர நஞ்சுண்ட கூடல். * (சுஅ)

நேரி லாதகோட் டேர்நெடு மாநில நிகழ்த்தும்
பேர தாம்வச வேசரிங் குளாபுரி பெருகுஞ்
சீர தானரே களிகைராச் சூட்டிசே ரம்பை
யார வாழ்த்தியே காளிவா முசினியி னடைந்தார். (சுகூ)

அரிய காளிமல் லேசரைப் பணிந்துநின் றடியே
னுரிய நும்மடிக் கடியளா வுகந்தருள் கெனலும்
பரிவி னன்னவட் கருள்புரிந் தமர்ந்தனர் பண்பின்
மருவ வோர்மடம் புரிந்தரி யாதனம் வகுத்தே. (எ0)

இருந்து மேலுயர் காசியந் தலத்தினை யெண்ணிப்
பொருந்து மாதலம் பற்பல கடந்துபோய்ப் புகழால்
விரிந்த காசிவாழ் விசுவநா தரைத்தரி சித்தே
யரும்பொ ளுற்புரி யரியணை யமர்ந்தினி தகன்றே. (எக)

(சுஎ) மல்லேசரென்பது மல்லிகார்ச்சுனேச ரென்பதன்மரூஉ.

ஆத ரத்தினி லயோத்தியத் தினபுரி கடந்து
வேத மோதுகே தாரமாந் தலத்தினை மேவிச்
சீத மாமதி சூடிய சிவன்றனைத் தரிசித்
தோது மத்தலத் தரியணை மீதிலுற் றனரால். (எ௨)

இருந்த வெம்மிறை யியம்பிடும் பஃறல மிவற்றுட்
பொருந்த வேமடங் களையமைத் துணர்வினுற் பொலிவின்
வருந்தி மாசிவ பூசனை மகிழ்ந்துசெய் குரவோ
ரருந்த வத்தர்மா மகத்தரை யதினதி னமைத்தார். (எ௩)

தரையெ லாமொரு தடாகம தாகவத் தடத்தின்
விரைகொள் வீரசை வக்கம லங்களை விரிக்கு
கரையி லாவிளங் கதிரெறி ஞானசூ ரியனென்
றுரையி னுற்புகழ்த் துரைப்பமற் றியாவரு முவந்தே. (எ௪)

**பதினன்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

அங்கநற் கலிங்கம் புலிந்தஞ்சோ னகமே யவந்தியாஞ் சால
னே பாள, மருணஞ்சவ் வீர நிடதம்பாண் டியம்பல் லவங்கிரா
டங்குரு குடகம்,— வங்கங்கான் மீரங் குலிந்தங்காம் போச
மராடங்கன் னடஞ்சீனஞ் சோழ, மச்சங்கூர்ச் சரங்கன் னுட
மாந் திரம்வண் மகதங்குந் தளமலை யாளஞ்,— சிங்களங் கருச
மொட்டியம் யவனந் திராவிடங் கேரளம் போடந், திகழ்சகங்
காசங் கேகயஞ் சூர சேனங்காந் தாரமே யிலாடங்,— கொங்
கணந் துளுவம் பப்பர மிலங்கு கோசலந் தெங்கணங் குலவுங்,
குருகுமா ளவஞ்சா லவஞ்சிந்து விதர்ப்பம் யுகந்திரங் கொல்
லம்வங் காளம். (எ௫)

**கலித்துறை.**

அங்கங் கேதிக ளைம்பத்தா றுமித்தே சங்கொள்
பொங்கு மார்கலி யுலகெலாம் புகழினிற் பொலிவான்

(எ௫) இத்தேயப் பெயர்களுட்சில பிறழ்ந்தும் மாறுபட்டும் பிரதிகளிற்காணப்படுகின்றன; வழுவாதலின் குறிக்கப்படவில்லை.

கங்கை யாதிய நதிகளுங் காசிமுற் றலமும்
பங்க யப்பதம் வைத்தவ ரிலீலையைப் பகர்வாம். (எசு)

மக்க ளாயினோர் தம்முரு வமைந்துமம் மக்க
டொக்க மாட்சிமை யிகழ்ந்துளோர் சூழ்ந்துயர் தருமத்
தொக்க நிந்தகர் பெற்றமா திகளினா னுணவோர்
துக்க மத்திய பானத்தான் மிகுமுளச் சுழல்வோர். (எஎ)

ஏதஞ் செய்துளோர் புராணவா கமமறை யிகழ்ந்து
பேதஞ் செய்துளோர் சிவாலய மாதிகள் பெயர்த்து
வாதஞ் செய்துளோர் வருணமி லாதுளோர் மயக்கும்
போதஞ் செய்துளோர் புகலுந்தம் மதத்தையே புகழ்வோர்.

பாவ மாமிது புண்ணிய மிதுவெனப் பகரார்
கோவ மாமிது கொலையிது வென்பதுங் குறியா
ராவ தாமிது வழிகுவ திதுவென்ப தறியார்
சாவ தாமிது பிழைப்பிது வெனலுந்தா முணரார். (எகூ)

இத்தி றத்தினர் சூழ்ந்திடும் டில்லியி லிருந்து
தத்து நீரலை யுடுத்தபார் தனிக்குடை நிழற்று
மெத்து மன்னவன் வீரிய மேதனு வெடுத்தோன்
பைத்த தன்றெய்வ மல்லதெல் லாம்பிழை பகர்வோன். (அ0)

கரிக ளெண்ணில பதாதிக ளெண்ணில கதிசேர்
பரிக ளெண்ணில படர்கொடே ரெண்ணில பரந்த
வரிக ளெண்ணில வாயுத மெண்ணில வமைந்தே
யெரிக ளெண்ணில படர்ந்தன படையுட னிருப்பான். (அக)

அரச னன்னவ னணிமதி லுடுத்தமக் காவில்
வரிசை யானதம் பெரியவர் மட்டிலா தவர்கட்
குரிமை யாகுமுண் டிகண்முத லியாவையு முதவித்
துரிசி லாப்பல துருக்கர்துற் றிடத்துலங் குவனால். (அஉ)

(எசு) பதம்வைத்தல் - ஆங்காங்குமெழுந்தருளல்.

இத்து வன்றிசி லாமெனுஞ் சாதியோர்க் கிறையா
யத்த மாமுரு வழிந்தழி யாதுறு மல்லா
நிக்தை யின்றியே நிமாசுசெய் திடுவனே யமொடு
முந்தி மேக்குறு திசையினை நோக்கியங் குகந்தே. (௮௩)

பூரு வந்தனின் மக்கவீச் சுரமெனப் பொலிந்தே
மேரு வொப்பென விளங்கிடுங் கோயில்பள் ளியதாய்ச்
சாரு மாலிது சான்றுகந் தம்பிரான் சபைமுன்
பாரி தாமணி தூக்கிடப் பட்டுறும் பரிவால். (௮௪)

மறிதி ரைப்பெருங் கடலிடை மருவுமக் காவிற்
செறிமல் லேசர்முற் சிவக்குறி யாதுமொன் றின்றி
நெறிநி லாவுறு பகீரிக டுருக்கர்க ணெருங்கிக்
குறைவி லாதமர் பள்ளிமுன் குறுகினர் குலவ. (௮௫)

விண்ணி னூடுறத் தூக்கியே விளங்குநா வில்லா
வண்ண மாமணி மல்லையர் வுரவினை மகிழ்ந்தே
பண்ணு லாமொலி யெழுப்பிடக் கேட்டபட் டினத்தோ
ரெண்ணி லாவிடி முழக்கமோ வென்னவேங் கினரால். (௮௬)

பாங்கு பள்ளியி லிருந்துவாழ் பகீரியா தியருந்
தாங்கு மித்தலஞ் சலித்ததோ தகவறி கிலமென்
றேங்கி யெண்ணிதன் காரண மெனமன மிரங்க
வோங்கு மாமணி யுரைக்குமோங் காரமா மொலியே. (௮௭)

---

(௮௩) இஸ்லாம் நிமாஸ் என்னும் அரபிபதங்கள் இசிலாம் நிமாசு எனத்திரிந்தன. மேல்வரும் முஸ்தஹப் குதா என்பன வும் இன்ன. அல்லாநிமாசு என்றியையும். நிமாஸ் - வணக்கம். மக்காவென்னுந்தலம் முக்கியமாகலின் அதுகுறித்து மேற்கு நோக்கி மேலெழும்பித்தொழுவது இசிலாமதத்தர் கொள்கை.

(௮௪) மக்கிச்சுரமென்பது சிவஸ்தலமென்பதனைத் தேவாரம் அடைவுதிருத்தாண்டகத்தானும் உணர்க.

(௮௫) முற்சிவக்குறி - பூர்வம் ஆங்குள்ள சிவசின்னங்கள்.

ஓங்கி யோங்குமோங் காரமா மொலிதனை யுணரி
ஞோங்கி யோங்குமோங் காரமக் கரங்குளூற் பவமா
யோங்கி யோங்குமோங் காரநா தாதியை யுறலா
லோங்கி யோங்குமோங் காரமே பொருளென்ப துணர்த்தும்.

மொழிதல் கேட்டுமல் லேசராங் குளாரெலா முறையாற்
றொழுது மேலுமுத் தகப்பெனும் வணக்கமுற் சூழ்ந்தே
யழுது பொன்னடி வணங்கவா திருசம யிகட்கும்
பழுதி லாததாம் பரமசற் குருவெனும் பண்பால். (அ௯)

அன்னர் தம்மையு மடிமைகொண் டவர்மதுப் படியே
முன்ன் ருய்த்துமேற் பக்குவ முறுவித்து முறையே
பின்னர் நற்கதி பெறுவிப்பான் திருவுளத் துன்னி
நன்ன ராங்கவர் கொள்கையி னவிற்றலுற் றனரால். (௯0)

ஏக மாம்து வத்துமிக் கிணையிலா ததுவாந்
தேக மாருயிர் பொசிப்பொடிச் சகத்தையுஞ் சிரப்ப
வாக வேயரு ளுறுதியே படைத்தளித் தழிக்கும்
யூக மாமவர்க் கல்லதிஃ துணரொணு துரைக்கின். (௯௧)

ஒன்று பொன்பணி பலமண்ணுென் றுருப்பல வாமா
லொன்று பாற்பசுப் பலவுயி ரொன்றுடற் பலவா
மொன்று வத்துவு முலகினிற் சமயமும் பலவென்
றுென்று ரைத்தவர்க் கருளினூர் நல்லுப தேசம். (௯௨)

---

(அ௯) மல்லேசர் தாம் அறிருசமயிகட்கும் பரமசற்குரு வெனும்பண்பால் ஆங்குளாரெலாம் அடிவணங்க அன்னரையும் அடிமைகொண்டு நற்கதி பெறுவிப்பான் உன்னி நவிற்றலுற்ற னரென முடிக்க. முத்தகப்பு - முஸ்தஹப் என்பதன் றிரிபு. (௧௧௭) வ்திில் வருவதும் இது. இதுகடவுன்மாட்டும் அடியார் மாட்டும் செய்யும் ஓர்வகைவணக்கம் என்பர். முஸ்தரப்பென் பதும்பாடம். (௯௧) மிக்கு - உயர்வு. இணை - ஒப்பு.

இகம தாகிய லாவிலா காவில்லல் லாகு
முகம தர்ரசூல் லாகியென் மந்திர மொழிதான்
மிகுமு யிர்க்குயி ராய்ப்பரப் பிரமமா மெனமே
தகுமல் லேசர்தாஞ் சாற்றினர் துருக்கர்க டமக்கு. (௯௩)

இப்ப டிக்கவர்க் கியல்புட னியம்பவெம் மிறைவ
னுப்பி லாதமக் கீச்சுர னுயர்சொரு பமதே
தப்பி லாவிவர் சொரூபமாஞ் சார்ந்தல குய்வா
னெப்பு விக்கணு மெழிலுப தேசஞ்செய் திலங்கும். (௯௪)

தம்பி ரானுரு வினிவிவர் தாமெழுந் தருளித்
தம்பி ரானடி யவர்கண்மேற் றயைபுரிந் தலகிற்
றம்பி ரான்றன தகைமைநா மறிந்திடச் சாற்றுந்
தம்பி ரானெனச் சற்குரு தமைத்துதித் தனரால். (௯௫)

முல்லை மல்லிகை முகைமருக் கொழுந்துவேர் பவள
மல்லி கையிரு வாட்சிசெவ் வந்திசண் பகநீ
ரல்லி தாமரை யலரினுன் மலரடி யருச்சித்
தெல்லு லாவுநற் றூபதீ பாதிகொண் டிறைஞ்சி. (௯௬)

பொன்னி னூற்புரி மணியணி பொற்படா முதல
முன்ன மேயளித் தரசனு முறைமுறை தொழுதான்

(௯௩) "லா இலாஹா இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூல் லாஹி" என்பதுவாக்கியம். இது, (லா - இல்லை; இலாஹா - கடவுள்; இல்லல்லாஹு - கடவுளைத்தவிர; முஹம்மது - முஹம்மதென்பவர்; ரசூல் - தூதர்; உல்லாஹி - கடவுளுடைய.) என்றிங்ஙனம் பொருள்பட்டு இருமுடியாகி, கடவுளைத்தவிரக் கடவுளில்லை; முஹம்மதென்பவர் கடவுளுடையதூதர் எனமேல்கீழாகப் பொருள்கொள்ளநின்றது. கடவுளைத்தவிரக் கடவுளில்லையென்றது அவரினும் உயர்ந்தோரில்லை என்றபடி. இவ்வுணர்ச்சியுடையவனே அம்மதத்திற்கு உரியனுதல் விளக்கி நிற்றலின் இது முக்கிய மந்திரமென்பர்.

மின்னு லாவிய வேணிவெண் ணீறுமீ தொளிர
மன்னு மலையர் யாவரும் பார்த்திட மறைந்தார். (௯௭)

குற்ற மீதென வறிகிலேங் குதாவுநீ குறைக
ளுற்ற வாயினும் பொறுத்திரட் சிப்பதுன் கடனே
முற்று நின்னடி நம்பினே மியாங்களென் மொழிகேட்
டற்றை வைகலி லவர்க்கருள் செய்தகன் றனரால். (௯௮)

அகலு மலைய மாகுரு வாரணு கமங்கள்
புகலும் வத்துவே பொருந்தின வாருயிர்ப் பொருட்டாற்
சகமி திற்றிரு வுருக்கொடு சார்ந்தலீ லையினா
லிகலி லாதொளிர் வதரிமா நகரில்வந் திறுத்தார். (௯௯)

வந்து மாதவ முனையமல் லேசரு மகிழ்வா
னுந்து மந்நகர் வினோதமா வுகந்துநோக் கலுமு
னந்து தவ்வையந் நாட்டைவிட் டகன்றுள நாணச்
செந்தி ருக்குடி கொண்டுகந் திருந்தமை தெரிப்பாம். (௧௦௦)

இருவ கைப்படு கோளிலொன் றிடருறுத் திடவே
தரையின் மாமழை யின்றியே யுலகெலாஞ் சாம்பப்
புரவ லன்முத லியாவரும் புந்திநைந் திரங்கிப்
பருவ ரற்படுந் தாரது பகருதற் கெளிதோ. (௧௦௧)

சிறந்த பூசனை திருவிழாத் தீர்த்தமற் றுளவு
மறந்து மானுடர் பிதிர்தினந் திதிமதி வழங்கார்
கறந்தி டப்பசுப் பாலிலாக் காலமெக் காலு
மறிந்தி லோமென யாவருந் தியங்கினா ரன்றே. (௧௦௨)

---

(௯௮) குதா - கடவுள்; வல்லவனென்பதுபொருள் என்ப.

(௧௦௧) மழைக்கோளாகிய சுக்கிரன்பிற்படச் செவ்வாய் முற்பட்டுச் சேறலின் பன்னீராண்டு மழையில்லையாயிற்றென் பார் "இருவகைப்படு கோளிலொன்றிடருறுத்திட" என்றார்.

(௧௦௨) அடியவராராதனை முதலியவையன்றித் தேவாராதனை அவர்க்கு உடன்பாடன்று; தேவவணக்கமே உடன்பாடு.

சத்தி யம்மிலைச் சௌசமு மில்லைநற் றான
சித்தி யம்மிலைச் செபதவ மில்லைநே யமுநேர்
புத்தி யும்மிலைப் பூசனை யில்லைநற் பொறைகள்
பத்தி யும்மிலைப் பணிவது மில்லைநாம் பகரின். (க0ங)

மான மும்மிலைக் குலங்களு மில்லைவண் மையுமெய்ஞ்
ஞான மும்மிலை முயற்சியு மில்லைநன் னடைக
ளான வும்மிலைக் கல்வியு மில்லைதா ளாண்மை
யேன வும்மிலை யிணைவிழைச் சென்பது மில்லை. (க0ச)

ஈன வெங்கொலை களவுகட் காமம்பொய் யியைந்த
வான மென்மழை மறுத்தலால் வழங்குறு மாமுங்
கான கந்தளிர் காய்கனி யற்றுடல் கறுத்த
யானை யாதிய விலங்குபுள் ளேனவு மழிந்த. (க0ரு)

கள்ளி தீந்தன கடும்பனை தீந்தன கருகா
முள்ளி தீந்தன முளரிக டீந்தன மூல
வள்ளி தீந்தன வனமலை தீந்தன மரமார்
சுள்ளி தீந்தன சொல்பெய ரலாதெலாந் தொலைந்த. (க0சு)

இனைய வற்கடம் பன்னிரண் டாண்டியை தலினாற்
றுனியி னாணிலா தூழ்கினைந் துற்றதொல் விதியென்
றனைய பல்லுயிர் வருந்துவ தறிந்துமல் லேசர்
வினைய மோர்ந்துபின் பகீரிக ளிடத்துமே வினரால். (க0எ)

மேவு மெல்லைமல் லேசரைக் காண்டலு மிகுதம்
பாவ வார்கலி வறந்திடப் பரிவுளம் வாய்ப்ப
யாவ ரும்முடல் புலர்ந்தன மழைவள மீந்தே
பூவ லர்ந்திட வருள்கெனக் கனிவினாற் புகன்று. (க0அ)

என்னை கொல்லிவ ரடைதலு மெமக்குமுன் னில்லா
நன்னீர் மெய்த்தழை வுற்றது நணுகரு மின்பந்

துன்னு இன்றதிவ் விம்மிதஞ் சொற்றர சனையு
மின்ன ரைப்பிரார்த் திக்குமா செய்வமென் றெவரும். (கoகூ)

மன்ன னுக்கினி துரைத்திட வவனுமன் வணங்கி
நின்னை யொப்பவ ரில்லையிந் நீணிலப் பரப்புத்
தன்னி லொண்மழை பொழிதரத் தந்தரு ளென்று
னன்னை யென்னவா ருயிர்களுக் கருளுமல் லேசர். (கக0)

அடியர் வேண்டிய வனைத்தையு மருளலே யியல்பா
னெடிய தாம்வளைத் தம்பமே னின்றுநன் னெறியாம்
படியும் வானமுஞ் செவிடுற முழக்கினர் பணில
மிடைய றுவொலி புயலினை விளித்ததா மெனவே. (கககு)

மந்த ராசல மொத்தது தம்பமம் மலைமே
லுந்து மேனியி னீறுவெண் மேகமொத் ததுசூழ்
வெந்தொ ழிற்புலி யாடைசெம் மேகம தொத்த
தெந்தை யோகபட் டிகையதிந் திரவிலொத் ததுவால். (கக௨)

பரிவி னீண்டபல் செஞ்சடை பகர்மின லொத்த
விருமை சேர்பணி லத்தொனி யெழுமிடி யொத்த
கரிய ருத்திரக் கண்மணி கார்முகி லொத்த
வரைவி லாவருண் மல்லையர் மழைப்புய லொத்தார். (கக௩)

அனைய சற்குருத் தம்பம்விட் டிழிந்திடா ததன்முன்
கனைய மாமுகில் கணத்தினிற் கூடின கருகித்
துனிய தாகிலத் துயரகன் றொழிந்திடத் துனையா
முனைவர் தண்ணருள் வழிந்தபோற் பொழிந்தன முகில். ()

நதிக ளியாவையுங் குளத்தினு நிரம்பின நன்கு
பதிக ளியாவையுஞ் செழித்தன கலிவலி பறந்த
வதிகர் மல்லைய ரடியிணை யரசனும் வணங்கித்
துதிசெய் தெம்பிரா னுமெனத் துதித்தனன் றுணிந்தே. ()

மட்டு லாமலர் மலரடிக் கிறைத்துள மகிழ்வா
லிட்ட மானபட் டணிகரி பரிமுத லிவையுந்
தட்டி லாநிதி நவமணி தகைவற வழங்கிப்
பட்டி னம்வலம் பவனிவந் திடச்செய்தான் பரிவின். (௧௧௬)

மேடை சேர்த்தியே வியன்றவி சிரீஇத்தொழு தடியே
நாடி டாதமுத் தகப்பினி னவின்றநற் பொருணீ
யூடு தண்பயத் துறுபுனல் பருக்குமோ திமம்போற்
பீடி லாவெமக் கருள்கெனப் பரிவினுற் பேசி. (௧௧௭)

உதக மென்பதே யுணர்வெனும் வத்துவா முலகி
னுதக மென்பதே யநாதியா யுயிரையோம் பிடுமா
லுதக மென்பதே யுயிர்க்குயி ராகியோங் கிடலா
லுதக மென்பதற் கொப்பிலை யெனவுரைத் தனரால். (௧௧௮)

இன்ன தன்மைய வுதகமின் றியாம்படு மிடரை
யன்னை யொத்தநீ யடைந்திவ ணகற்றினை யைய
துன்னு மிவ்வுத விக்கியாஞ் சூழ்தருங் கைம்மா
றென்னை யிவ்வுல கெழிலிமாட் டெவன்செயு மென்னு. (௧௧௯)

இவ்வ ணத்தினி லிசைந்தன வெண்ணிலா தியம்பி
யவ்வ ணத்தவ ரகமகிழ் வொடுமதி சயித்துச்
செவ்வ ணத்துமல் லேசர்தந் திருவடி தொழுதிங்
கெவ்வ ணத்துநம் மிறையெனத் துதிபல விசைத்தே. (௧௨௦)

பிழையி னெஞ்சொடு பகீரிகள் விடைகொடு பெயர்ந்தார்
மழைய மல்லிகார்ச் சுனகுரு வெனப்பெயர் வழுத்தி
விழைவின் மன்னவ னிறைஞ்சியே விடைகொடு மீண்டு
தழையு மன்பின்வேண் டுவபுரிந் திடவங்கட் சார்ந்தார். (௧௨௧)

அந்த மின்றுளத் தார்தரு முழுவலன் பதனுல்
வந்து போற்றுபத் தாதிமா கேசுரர் வழாது

சந்த துந்திருப் பாததீர்த் தம்பிர சாத
மெந்தை தந்தருள் கென்றுகொண் டிருந்தன ரிப்பால். (௧௨௨)

## கலிவிருத்தம்.

அங்கர் மல்லைய ரமர்ந்து வைகுநாட்
டன்னிக ருத்தர தலத்தி ருந்தவண்
மன்னுகா ளாமுக மதத்தர் பற்பலர்
துன்னின ரங்கர் துலங்க வெங்குமே. (௧௨௩)

இருந்திடு காலையி னெங்கள் மல்லையர்
பொருந்தடிக் கிரும்பணி பூண்டோர் வீதியின்
வருந்திற் நோக்கியே மாறு கொண்டெதிர்
விரைந்துகா ளாமுகர் வெகுண்டெம் மண்ணலை. (௧௨௪)

கண்டன ரிரும்பணிக் கரிய சங்கிலி
சொண்டதெ னுமரெனக் கூறி னார்களிம்
மண்டல மறியநம் மழைய மல்லைய
ருண்டிது நமக்கென வுரைத்திட் டாரரோ. (௧௨௫)

எம்பணி யிதுவென யாங்கள் கூறிட
நும்பணி யிதுவென நுவலு கின்றதென்
வெம்பணி யரன்றிரு வேடம் பூண்டவ
ரெம்பணி நும்பணிக் கிசைவ தேதென்றார். (௧௨௬)

அவையினிற் றழலினிட் டரிய சங்கிலி
யிவையெடுத் தணிந்தவர்க் கேய்ந்த வாமெனு
நவையற வொருமொழி நடுவ தாச்சொல
வவர்களு மிதுவெமக் கடுக்கு மென்றனர். (௧௨௭)

அன்னதை மல்லைய ரறைய யாவரு
மின்னது புரிவதே யியல்பு மக்கெனுச்

---

(௧௨௩) காளாமுகமதத்தர் - உட்சமயிகளறுவரு ளொருவர்.
(௧௨௫) இது நமக்கு இம்மண்டலமறியவுண்டு என இயையும்.

செங்நெறி யழலிடைச் சிவக்கக் காய்ச்சியே
முன்னர்நீர் தரிக்கென மொழிந்திட் டார்களால். (கஉஅ)

அக்கொடு மதத்தர்முன் னறைந்த வாய்மொழி
மிக்கது செய்கலா திருக்க வேறுளார்
தக்கதோ நுமக்கெனச் சாற்ற வெந்தையுங்
கக்கெனக் கழற்கணி சாலைச் சாத்தினர். (கஉகூ)

காளமார் விடத்தினைக் களத்த ணிந்தவப்
பாளமா ரெரிவிழிப் பரம னுமிவற்
காளதா மனலமு மறலு மென்றிடிற்
கேளதா யொழுகுதல் கிளக்க வேண்டுமோ. (கஙo)

அறைந்திடி னரியவைம் பூத னுதலா
னிறைந்துள நெருப்புட னெருப்ப தென்செயு
முறைந்திடு தாருகா வனத்த ருக்கிரம்
பறைந்தன வேவிடப் பணிந்த தொத்ததே. (கஙக)

தண்ணுறுந் தாமரைத் தாம மாமென
வண்ணலார் மழையமல் லயர ணிந்திடக்
கண்ணினு னோக்கியே கவல்கா ளாமுக
ருண்ணிகழ் மானமோ டொல்லை வந்துமுன். (கஙஉ)

அடியிணை படிந்துநம் மடிமை யாக்கவென்
றிடிகடன் முழக்கென வியம்பித் தோத்திரம்
படியுளோர் வியந்திடப் பரிவி னோதினர்
வடிவில்கா ளாமுகர் வந்த திக்கினே. (கஙங)

கண்டவ ரியாவருங் கருது ளங்களித்
தண்டநா யகரென வடிவ ணங்கினர்
புண்டரீ கப்பதம் போற்றி வாரிசூழ்
மண்டல மன்னவன் வணங்கி யன்பொடும். (கஙச)

---

(கஉகூ) கக்கெனல் - விரைவுக்குறிப்பு.
(கஙo) பாளம் லளவொற்றுமை; பாலம் - நெற்றி.

அரியபட் டணிமணி யளவி லாநிதி
தெரியமுன் னவையிடைச் சேர்த்திங் கென்னையா
ளுரியசற் குருவென வோதி யேவிடை
பரிவுடன் பெற்றுத்தன் பதியின் மன்னினான். (௧௩௫)

வெதிரிமா நகரினை விட்டு முத்தெறி
நதிபொதி விசயமா நகரி லெய்தவப்
பதியர சனுமுனோன் பண்பி னுங்கெழுந்
திதமுடன் சேனையோ டெதிர்சென் றானரோ. (௧௩௬)

சென்றுமல் லேசர்தஞ் செய்ய தாமரைத்
துன்றிருஞ் சேவடி தொழுது மானமேன்
மன்றவப் பதிதனை வலஞ்செய் தாடகப்
பொன்றிணி யாசனம் பொலிய வேற்றியே. (௧௩௭)

திவ்விய பதமலர் சிறக்கப் பொன்சொரீஇச்
செவ்விய பணிபல திருந்தச் சாத்திநெஞ்
சவ்விய மகற்றுதன் னகத்து ளெய்திய
கவ்வையை யன்பொடுங் கழறன் மேயினான். (௧௩௮)

இறைகுரு மூர்த்தமா மெந்தை யென்மனக்
குறையிரிந் திடவிவண் குறுகி னீரென
வறைகழ லரசனு மடிவ ணங்கிமுன்
மறைவிலா மனதுடன் வகுத்து ரைத்தனன். (௧௩௯)

எங்குல மேலையோ ரிருந்து வாழ்மனை
வெங்கொடும் பேய்க்கணம் விரவிச் சாலவும்
பொங்குறு துயர்புரிந் திருந்த பொற்பொரீஇ
மங்கையர் சாம்பியே மனந்த ளர்ந்தனர். (௧௪௰)

கன்னியர் பருவமாங் கால மும்மெழின்
மன்னிய விருதுவு மகக்க ருப்பமுந்

துன்னிய மகப்பிர சூத கங்களு
மின்னவை யகன்றுநொக் திருந்த தன்றியும். (கசக)

சொற்பனத் தளவிலாத் துயர மூழ்கியே
யற்பக ணித்திரை யாதி யின்றிநேர்
பற்பல பொசிப்புந்தன் பாணி யுங்கொளாப்
பொற்பறு மிவ்வியல் பொருந்தி னாரரோ. (கசஉ)

இப்படி யளவிலா திருந்த சன்னிய
ரப்படி துயர்க்கட லழுந்தி னாரெலா
மொப்பிலுன் னிணைப்பதக் கதிரை யுற்றனர்
மைப்படு துனிப்பணி மாற்று வாயென்றான். (கசங)

அன்னதை யகற்றிடி லடியனாயுனக்
கென்னரு நிதிகளிற் பாதி யீகுவே
னின்னது சரதமென் றியம்பித் தம்பிரான்
பொன்னடி தாழ்ந்தனன் புலவு வேலினான். (கசச)

மற்றது வினவிய மாசில் சற்குருத்
தெற்றென வவன்மனை சேர்ந்தி ருந்தபே
யுற்றன வவையெலா முருவின் வந்திட
வெற்றிகொண் மனத்தராய் விளித்தி யம்புவார். (கசரு)

கடியினை நீவிரிக் காவன் மன்னவ
னெடுமனை தன்னையு நீங்கிச் சேணுலாங்
கொடுநக ரிதனையுங் குறுக லின்றியே
படிமிசைச் சேரிடம் பார்த்துச் செல்கென்றார். (கசசு)

கேட்டலுங் கழுதினங் கிளரு மாகுருத்
தாட்டுணை வெருவொடு தாழ்ந்தெ ழுந்தெமை
யோட்டிட வோவிவ னாற்ற தையவெம்
மாட்டொரு சிறிதுநீ ரிரக்கம் வைத்திலீர். (கசஎ)

(கசங) இப்படி - இவ்வெல்லையில்.

## கோச்சகக்கலிப்பா.

என்றென் றியம்ப வினையி லொருபெரும்பேய்
நன்றென் றெமைத்துரத்த நாடுவதி ஞனிலைத்திற்
கொன்றெங் களைநீர் கொடியமற லிக்குணவா
வின்றிங் களிப்பீரே லின்பமெமக் கேயெனலும். (கசஅ)

மற்று மொருசோகு மந்திரிதா னெந்துயருஞ்
சற்று முமது திருவுளத்திற் சார்ந்திலதேற்
கற்றைச் சடிலமுடிக் கண்ணுதனீ ராடுங்காற்
பற்றிலரா மெம்மைப் பரிப்பு நினைந்திலிரோ. (கசகூ)

ஆகாத பாவ மடியேம் புரிந்தமையாற்
போகாத வின்னல் பொருந்தினே மென்றுசொல
நாகா பரணசிவ ஞானியிரு தாடொழுது
சேகார் மனத்தொருபேய் செப்புந் துயர்கூர. (கரு0)

எங்கள் கொடுந்துயர மென்னென் றியம்பிடுவோஞ்
சங்கரநீ ரீன்ற தனிமதலை சாத்தாவா
மங்கவரு மல்லா துடல்சேர் வயிரவருந்
தங்குகொடுங் காளிதுர்க்கை சாமுண்டி யாமிவரும். (கருக)

வாரி யனைய குளத்தருகே வந்தாலும்
பாரி லொழுகு பலதிபாற் போயிடினுங்
காரியலுஞ் சோலைக் கடைவாய் செறிந்திடினுஞ்
சோரி யொழுகத் துளைப்ப ரெமதுடலம். (கருஉ)

மந்திரவா தத்தோர்கள் வாய்மூடிக் கைதளைத்து
விந்தை முடிசுழல மெய்யிளைக்க மாறடித்துப்
பந்த மதனாற் பழுவெலும்பெ லாங்கொளுத்திச்
சந்ததமு மாணியினுந் தைத்திடுவர் தாருவினில். (கருங)

பற்றும் பசித்தீயும் பாணியின்மேற் றுக்கமுமா
யுற்றுச் சுழன்றே யுறைய வொருதலமு

மற்றிங் கடைந்தே மடியே முமதருளான்
முற்றுந் துயரஞ் சிறிது முடிந்திருந்தேம். (௧௫௪)

இப்போது தேவரீ ரேகுநீ ரென்றக்கா
லப்பாலென் செய்வே மடியே மெனவிரங்கி
மைப்பா வியமேனி மண்ணே யழுதலறக்
கைப்போ தமைத்துக் கழறுவரம் மாமுனிவர். (௧௫௫)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீங்க ளிருக்கு மிடமறிந்து நில்லா திருக்குங் கொள்கையினு, லோங்கு புகழ்க்கற் பரிவையரை யுபாதி படுத்துஞ் செய்கையி னுற், றூங்கும் புவிமன் னவனவனைங்கித் தானிங் குரைக்குந் தன்மையினு, லீங்கின் றும்மை யேகுமென வியம்பி னேனுநீ ரேகுமென. (௧௫௬)

அப்போ தலகை யானவெலா மஞ்சிக் கூறு மகிலமிதி, லிப் போ துயிரி னியல்புரைக்கி னெறும்பீ றயனு தியவிவற்று, ளெப்போ தினுநீ ருயிர்க்குயிரா யிருக்கும் படியா லிசைக்கு மறை, தப்போ சருவ சீவதயா பரனென் பதுசத் தியமன் றே. (௧௫௭)

கனக மலேதற் சார்ந்தகரும் காக்கை யியல்பு கருதாமற், றனது நிறமாக் குதலெனவு மிரதந் தனைச்சே ரிரும்புதனே, யினிய பொன்னுக் குதலெனவு மெந்தை நும்மைச் சார்ந்தவெ மைப், பனிய கடைக்க ணேக்கியருட் பார்வை யளிக்கி னுய் வோமால். (௧௫௮)

என்ன வலகை யியம்பிடலா லெந்தை யுளத்தின் மிகவிரங்கி
மன்னுங் கருணை நயனவருள் வழங்கிக் கொடிய வுருவகல [த்
வுன்னு மனுவஞ் செழுத்ததனை யுரைப்போ மென்ன நனிசிந்தி
தன்ன வளவி லாவலகைக் கார வுபதே சம்புரிந்தார். (௧௫௯)

## மேற்படி வேறு.

நெஞ்சினி லருள்கூர்ந் தந்த நெடுந்தகை யியம்புங் காலை
யஞ்சிநின் றயரும் பேய்க ளகஞ்செவிப் புக்க தம்மா
வெஞ்சலி லிரவி முன்ன மிருளிரிந் தோட லேய்ப்ப
வஞ்சக வலகை மேனி மாறின வொல்லை மாதோ. (கசுo)

காதா வகன்ற தீய கடியுரு வகன்றப் போதே
மேதக வுடைய விண்ணோர் மேவரு விமான மேறி
பாதிதன் னருளி னாலே யமரர்தம் முலக மெய்திச் [த.
சோதிகொண் மனையின் மேவித் தொலைவிலின் படைந்தி ருந்

அரண்மனை யதனில் வாழு மரிவைய ரளவி லாது
விரவுமா பிணிக ளெல்லாம் விலங்கின தெவ்வா றென்னிற்
றருமதி கங்கை முன்னர்ச் சார்மிடி தாபம் பாவ
முரனுள குருமுன் மும்மை மலமொழி வொப்ப தாமால். ()

ஈதுதி சயமென் றெண்ணி யெழிலரண் மனையின் வாழு
மாதரு மலர்மா தென்ன வடிவழ கொழுக வந்தே
போதமார் குருவின் பக்கல் புகழுமங் களம தாதி
யோதியா லத்தி கொண்டங் குகந்துமுன் பணிந்து நின்றார். ()

வெங்கொடு மலகை மேனி விலக்குசற் குருவின் பாத
பங்கய மிறைஞ்சி யாழிப் பாரது புரக்கு மன்னன்
சங்கர னிவரே யென்று தன்மனத் தெண்ணி யன்பா
லங்கவர் தமக்குத் தானோர் விண்ணப்ப மறைய லுற்றான். ()

அடர்களி யானை திண்டே ரணிபரி சேனை யொப்பில்
வடிவமை மகளிர் போக மகிழ்ந்தென வென்றி ருந்தேன் •

---

(கசுஉ) தருவாதியமூன்றன்முன் மிடியாதியமூன்றும் குரு முன் மும்மைமலமும் ஒழிதலையொப்பதாமென்பது. "குருமுன மூன் றொருங்கொழி வொப்பதாமால்" என்பதும்பாடம்.

றடையறு கருணை யான் தந்தன வின்ன வாமென் [ன்.
னுடல்பொரு ளாவி மூன்று முவந்துகொள் ளெனப்ப ணிந்தா

ஞானநாட் டந்தன் ஞலே நாடியே யருகு வாவென்
றுனதோ ராஞ்ஞை மூன்ஞந் தீக்கைசெய் தருளி யுண்மை
தானறி யங்க லிங்க சம்பந்தந் தான ளித்துச்
சேனைகா வலவ மேலாய்ச் சிறந்துல காணீ யென்றுர். (௬௬௬)

எம்பிரான் கருணை செய்ய விணையிலா வரசர் கோமான், சம்புசங் கரனே யுன்னைச் சார்ந்தயான் வேண்டே னென்னச், செம்பொன்மா மகுடஞ் சூட்டித் திருவெண்ணீ றணிந்தெப் போது, மம்பைவி ருபாட்ச னென்ன வரசினைச் செலுத்து கென்றுர். (௧௬௭)

அன்றுதொட் டரச னைய ஞக்கினை செலுத்தி மேலாய்
வென்றிசேர் தருவி ருபாட் சிராசனென் றேவி ளங்கக்
குன்றின்மேல் விளக்குப் போலக் குரைகட லுடுத்த பார்மே
னன்றிமல் லபர்க்கி ராச குருவெனும் பெயர்நண் ணிற்றுல். ()

அருந்தவ ஞான வாசா ரியரையு மடிய ரோடு
மிருங்குல சிரேட்ட ஞன விறையவன் பூசை செய்யக்
கருந்தடங் கண்ணி பாகக் கடவுண்மல் லேச தேவ
ரிருந்தனர் பன்ஞட் பின்ன ரெய்தினர் குடந்தை நோக்கி. ()

வரும்பொழு துயர்கா ளத்தி வளன்றிகழ் காஞ்சி முன்ன
மூரம்பெறு படைவீ டொப்பி லாதுய ரருணை நல்லூர்
திரம்பெறு விருத்த காசி சிதம்பரம் புகலி யெண்ணி
லரும்பல தலங்க ளுக்கி யடைந்தனர் குடந்தை யின்கண். ()

தக்கசீர் வீர சிங்கா தனத்தெழுந் தருளி யந்திச், செக்கர்வா ன் சடைபொன் மேனித் திருவெண்ணீ றிலங்கச் செய்ய, கைக்கணி யக்க மாலைக் காரண குரவீர் ஞானந், தொக்கமல் லேச தேவர் துலங்கவீற் றிருந்தா ரன்றே. (௧௭௧)

மன்னுசீர் பொருந்து மெங்கண் மழையமல் லேசர் செய்கை, யென்னறி வளவ தாக வியம்பினேன் மூர்க்க னார்தம், பன்னருஞ் சரித மின்சொற் பாவலர் பாத தூளி, சென்னியிற் புனைந்து யானுந் தெரிந்தவா செப்ப லுற்றேன். (௭௭௨)

மழையமல்லேசுரச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் ௫௨௧.

## மூர்க்கநாயனார்சருக்கம்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மிக்க வண்புகழ்ச் சேக்கிழார் விளம்பிய வியன்கதை புலப்பட்டுந், தக்க சீர்பெறு மூர்க்கனார் சரிதம்யான் சார்புபெற் றிடக்கூற, லிக்கு நல்விர தத்தினாற் செய்திட வியன்றசன் டினமானத், தொக்க சொன்னலி னீர்கொடு புரிந்திடத் துணிந்தவன் செயலாமால். (க)

பங்க யத்திறை தருசுதன் காசிபன் பாலக னெனும்வெய்யோன், றங்கு மாமர புதித்துள செம்பியன் றண்புனற் கராசாகுங், கங்கை மூழ்கிடப் பாதலப் பணியிறை கன்னிகை தான்கண்டு, பொங்கு மாமயல் சொண்டுகோன் டணைந்தவள் புயங்கனுக் குரைசெய்தாள். (௨)

பதியி வற்குநான் சதியெனப் பணித்திடப் பணியென வதுசெய்தான், புதும ணத்தொடும் புணர்ந்தன ளவள்வயிற் புதல்

(க) சொன்னல் - சோளம்; அது தானேயுணர்த்திநின்றது. (௨) சோணாட்டிலே நாகபட்டினத்திலே அரசுபுரிந்திருந்த சோழபூபதியென்னும் அரசன் சேஷமலையை யடைந்து வேட்டையாடுங்கால் ஒருதேமாநிழற்கீழ் இந்நாககன்னிகை காணப்பட்டனளென்பது வடதிருமுல்லைவாயிற் புராணமாகலின், கங்கையென்பது ஆங்குள்ளதோரு தீர்த்தம்போலும். புயங்கன் —தனுசனென்னும் நாகராசன்.

வனும் போந்துற்றான், கதுமெனப்புவி மேவிடச் செம்பியன் கருத்தொரு மித்தந்தச், சதித னக்குரை செய்திடத் தந்தை யார் தமக்குரை செய்திட்டாள். (௩)

அப்படிக்கர விறைவனா நாகரை யனுப்பியம் புவிபோ கச், செப்பி விட்டனன் சேறலுஞ் செம்பியன் றேவியு நனி பேண, வொப்பி லச்சுதன் வளர்ந்தனன் பலகலை யோதிட வுற்றார்க, டப்பு ரைத்தனர் தந்தையி லானெனத் தாயடி தொழவன்னாள். (௪)

உந்தை பூவுல கரசுள னென்றவ னுரைத்தது முரைத்தன் னோன், றந்த வாதொண்டைக் கொடியினாற் பிணித்துத தியி னிடூஉக் கரைசார்ந்தா, ளந்த மைந்தனுங் கடற்றிரை யுய்த் திட வசன்கரை சாருங்கால், வந்து கண்டுசெம் பியனிறும் பூது றீஇ மகிழ்ச்சியிற் கொடுசென்றே. (௫)

தொண்டை சூட்டிய குறியினான் மகப்பெயர் தொண் டைமா னெனவாழ்த்தி, மண்ட லத்தர சீந்தன னவன்பெயர் வாய்த்திட வரசாள, னண்டர் மாதவர் தொண்டைநன் னாடென வரசுசெய் தருளாலு, மெண்டி சைக்கணுந் தன்புகழ் பரப்பிவாழ்ந் திருந்தனன் மகிழ்வாலே. (௬)

---

(௫) அரசனுரைத்ததாவது - அவன் தன்னகரடையத் தெரிவித்தவழி, அவள் உமக்குப்பிறந்த இவன் அவ்வரசசெல்வத்தைத்துறந்து இங்கிருக்கவிரும்புவனோ என்றதும், என்மூத்தமனைவிக்குக் குமாரனிருக்க இளையவனாகிய இவன் அரசனாவனோ ஆகான் ஆயினும், இத்தொண்டைக்கொடியைக் குறிபாகச் சுற்றிக் கடலிவிட்டால் யாதுங்கவற்சியின்றிக் கரைவருவனாயின் அப்போது இவன் அரசுக்குரியனாவன் என்றது. திரையாற் கரையேறினமையின் திரையன் என்பதுமுண்டு. இதைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் இவனைச்சுட்டிப்பாடிய பெரும்பாணாற்றுப்படையானும் உணர்க.

உன்னு மாமனு நீதியா லிங்ஙன முலகளித் தினிதாண்ட,
சென்னி தன்மக னாகிய தொண்டைமான் றிருந்திய செங்கோ
லான், முன்ன நன்கர சியற்றிய முறையினான் மொழிந்தவன்
பெயர்பெற்றே, தொன்னி லத்திரு மடந்தைதன் முகமதாந்
தொண்டைமண் டலமாதோ. (எ)

### கலிவிருத்தம்.

அன்ன மண்டலத் தங்கண னார்தலங்
கன்ன லம்பொழிற் காஞ்சிகா ளத்தியு
மன்னு மால வனங்கழுக் குன்றமு
மின்ன நீர்த்தல மெண்ணில வுண்டரோ. (அ)

### கலித்துறை.

மாசு சூழ்மணி மன்னுகார்க் சண்டனை மான
வேசி லாவள நாடதை விளங்கிட வியற்றும்
பாச வேரறுத் தாடினர் பலப்பிணி யகற்றும்
வீசு தெண்டிரைப் பாலியாம் வியன்றரு குடிஞை. (கூ)

கமலம் வான்முகங் காவியங் கண்குமிழ் துண்டஞ்
சமல மில்வளை தனிக்களந் தோளமை தனங்கள்
விமல மாமிள நீரிணை யடிகண்மென் றளிரா
மமல னூடுநீர்ப் பாலியா மணங்கெனு மவட்கே. (கo)

### கலிவிருத்தம்.

கொன்றை கூவிளங் கொக்கி னிறகொடு
கன்று மான்புலி கட்செவி யாதிய
துன்று நீத்தந் துரிசறத் தாங்கலான்
மன்று ளாடிய வள்ள னிகர்க்குமால். (கக)

---

(கூ) குடிஞை மானவியற்றும் என இயையும். (கo) சமலம்—அழுக்கு. (கக) சிவனணிந்து அண்டங்களைக்கொறித்துழன்ற குரண்டாசுரனது இறகென்க.

நிலவு மன்னுயி ரியாவு நிரப்பலான்
மலையின் வந்து மருவி வளர்தலாற்
சிலைவிற் ருங்கிய செல்வன் மருங்கம
ருலக வன்னையை யொக்குமங் கீத்தமே. (௧உ)

பொதியும் வான்மை பொருந்தி விளங்கலாற்
கதியின் மேம்படு காட்சி மருவலா
லதிக வானந்த மாகிய வாதலாற்
பதியை மேவுயி ராகுமப் பாலியே. (௧௩)

இத்தி றத்தி னெழில்பெறு பாலியி
னுத்த ரத்தி னொருபதி யுண்டது
குத்தி ரத்தின் குமரி யருள்குகன்
கைத்த லத்திற் படைப்பெயர்க் காடதே. (௧௪)

ஊன்மை பெற்ற பவப்பய னுற்றிட
ரோன்மை பெற்ற மறைவழி நோன்புசெய்
நான்மை பெற்ற வருணத்து ணன்கமை
மேன்மை பெற்றவே ளான்குடி மிக்கதே. (௧௫)

**கலித்துறை.**

ஒப்பி லாதவ ரடுத்தவர்க் குதவிட லானு
மெய்ப்பி லாதின்மை யும்பெரு மையுமினைய வானுங்
கப்பி லாதெவற் றுங்கமை கருத்துற லானுந்
தப்பி லாதவர் பூமிபா லகரெனத் தகுவார். (௧௬)

உயர்ந்த செல்வமுங் கல்வியு மொழிவறு கவினும்
வியந்து பிங்கல னரவிறை வேழவிற் காம
னயந்த வங்கக ரோர்தமைத் தோழமை நயப்பார்
பயந்த நன்மையான் மற்றுள குணத்தரும் பரிவார். ()

(௧௪) குத்திரம் - மலை. குகன்படைப்பெயர்க்காடு - திருவேற்
காடு. (௧எ) செல்வமாதியன நிரனிறை.

மின்னு ளோர்தமைத் துருவனார் விழைந்துதாங் குழல்போன்
மன்னு ளோர்தமைத் தாங்கும்வே ளாளர்கண் மரபிற்
றன்னி லாமுடித் தற்பர னடியருக் கன்ப
ரென்னி லார்களேய்ந் திருப்பதா மெழிற்பதி யிதுவே. (க௮)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அப்பதி தன்னின் மிக்க வரியவே ளாண்கு லத்தி, லொப்ப
ருங் கதிய ளிப்பா னுதித்தவ ருலக வாழ்வை, மெய்ப்பொரு
ளென்ன வெண்ணார் விழுமியோர் வேட்கை யில்லார், மைப்படு
மிடற்றெங் கோமான் வழிவழி யடிமை யுள்ளார். (க௯)

மேதகு திருவேற் காட்டூர் விண்ணைதா விளங்கு மாந்தர்
சோதிசொ ருடுக்க ளாகத் துலங்குவெண் டிங்க ளானார்
தீதிலாச் சூத ரென்னுந் திருப்பெய ருடைய வன்பர்
காதலாற் சிவம கேசர் கழலிணைக் கடிமை செய்வார். (௨0)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சாலியோ தனமும் பருப்புட னெய்யுஞ் சமைத்தநற் சுவை
கமழ் கறியும், வாலிதாம் பாலுந் ததியுமுக் கனியும் வளஞ்செழு
சருக்கரை யுடனே, யேலவே யடியார்க் கிதமுட னருத்தி யி
லைதிகழ் பாகுவெண் பளிதஞ், சாலவே யளித்துத் தனிப்பெ
ருந் தொண்டிற் றன்மன மிகக்களித் திருப்பார். (௨க)

இவ்வழி யொழுகுந் தொண்டர்தம் மனத்தி லிறைதலம்
வணங்கிட நினைத்துச், செவ்விதி னெழுந்து காஞ்சியே முத
லாந் திருத்தல மனைத்தையு மிறைஞ்சிக், கொவ்வைவா யுமை
யாள் கொழுநனா டுறுசீர்க் குருமணிப் பெண்ணையின் கரை
போ, யவ்வயி னணைந்த வருந்தல மனைத்து மன்பினால் வணங்
கியே யகன்றார். (௨௨)

அன்பர்த முளம்போ லானந்த நடன மனுதின மியற்றுந்தற்
கிடனுங் கொன்புனை விராட்டி னுளக்கம லமெனுங் கோயிலை

ஞ் சிதம்பர மதனை, முன்புகன் டிறைஞ்சித் தொழுதுநின் றேகி முன்னவன் சந்நிதி யணுகி, யென்பெலா முருக வன்புரு வாறு ரிடர்தரும் பிறவிநோ யொழிப்பார். (உங)

சிற்சபை யிடத்துத் திருநட மியற்றுஞ் செழுங்கம லப்பதம் வணங்கி, யற்புத முறலா னகன்றிடா தந்த வருந்தல மமர்ந்து சின் னுளி, லுற்பவ மொழிக்குங் காவிரி வளங்கூ ரொண்டிரு நாட்டிடை யேகிப், பற்பலபதியும் பணிந்துமே யிறைவன் ப டர்ந்தமர் குடந்தைசென் றடைந்தார். (உச)

## கலிவிருத்தம்.

குடந்தை யென்னுங் குலநக ரண்ணிவெம்
படந்த யங்குறு பாம்பணி பண்ணவ
னிடந்த யங்கு சிகரமி றைஞ்சினா
மடந்தை பாகர் மலரடி யுன்னியே. (உரு)

பின்ன ரூர்வளம் பெட்புற நோக்கினு
ரின்ன தன்மைய தென்றதை யான்குறித்
துன்ன வும்மறி யேனுரை யாடிடி
லென்னை யானிழு தைத்திறத் தேய்ப்பரால். (உசா)

ஆயி னுஞ்சில யானறி தன்மையின்
வாயின் வந்தன வல்லை வழுத்துவேன்
றூயி னல்ல புலவர் தரித்ததை
யேய பேரருள் செய்குவ ரெண்ணியே. (உஎ)

கன்ன லோடு கலந்துய னின்றிடுஞ்
செந்நெ லாதிய செல்வத் திருமக

---

(உஅ) செந்நெலாதிய நின்றிடுமென இயையும். செந்நெல் விளைவாதியவற்றில் திருமகளுறைவளென்பது நூற்றுணிபாதல் பற்றி அவற்றைத் திருமகள் வடிவமாக வுருவகித்தார்.

டன்லை னேருந் துணையரை யப்புரத்
தின்ன றீர்க்க விருந்திடுஞ் செய்கைபோல். (உஅ)

வயலி னின்றமள் ளத்தியர் தங்கிழற்
கயலி னீரி லரம்பையர் சாயையை
யியலி னோக்கி யெதிர்தொழில் செய்வலா
துயலிஃ தென்னென் றுரைத்து நகைப்டராவ். (உகூ)

மலைசெய் செங்கெலின் போரைமள் ளத்தியர்
தொலைவி லாத்தொகை யாரப்புரி சுற்றுதன்
மூலையை யன்ன மொழிக்குள மூட்சியால்
வலைய வோடி வரிந்தது போன்றதே. (௩0)

முற்று சோலையின் மூடு மிருளினை
யுற்ற மந்தி யுலவையின் வைத்திடு
கற்றை யஞ்சுடர்க் கட்செவி மாமணி
விற்றெறு டர்ந்துடன் வீசிவி ழுங்குமால். (௩க)

பற்ப லப்பல பன்னுப லாவினில்
விற்ப லப்பல வேரின்வெ டித்திடும்
பொற்ப லப்பல பொற்சுளை தின்றிடுஞ்
சொற்ப லப்பல மந்திகள் சூழுமால். (௩உ)

விண்ணி னோங்கு வியன்பொழின் மாமலர்த்
தண்ண றுக்கனி தாதுகள் சிந்திட
மண்ணின் மாது மதுக்கனி சர்க்கரை
யெண்ணி யுண்ணக்கைக் காந்தள்கொண் டேந்தலாம். ()

தாழை முப்புடைக் காய்விழத் தாழ்ந்துள
மாழை வாழைக் கனிகளு மாய்வன
வூழி னூற்றம் மகிழ்ந ருலந்திட
வேழை மாரு மிறந்து படுவபோல். (௩௪)

---

(உகூ) உயல் - ஒழிதல்.

பழுது மாமறை யோரும் பரிதிசெவ்
வழியின் வந்த வழிகெழு வேந்தரும்
வழுவில் செல்வ வணிகர்வே ளாளருங்
குழுவு மக்க ளிற்குடி யாவுமே. (௩௫)

புறத்தி னேங்கெயில் சூழும் புரிவயி
னறத்தி னேங்கு மருங்குடி யாவது
மறத்தி னேங்கு குடிகளு மில்லைமாண்
குறைத்த செல்வக் குடிகளு மில்லையாம். (௩௬)

தடங்க ளெண்ணில வுண்டு சரணர்வாழ்
மடங்க ளெண்ணில வுண்டு மதஞ்சொரி
கடங்க ளெண்ணில வுண்டுகற் போர்செறி
யிடங்க ளெண்ணில வுண்டெம் மருங்குமே. (௩௭)

உந்து மாடத் துறுதவ னீங்கிய
செந்தி ருத்துணைத் தேன்மொழி யார்சிலர்
மந்த மாருதத் தாலும் வரிக்குயிற்
சந்த வோசையா லும்மிகச் சாம்புவார். (௩௮)

இரதி யன்ன வெழில்பெறு மாதருட்
குருதி மாமணிப் பூண்கள் குலைந்திடச்
சுரத வின்பந்துய்த் தோர்குயி லோசையை
மருவு தென்றலை வாழ்த்துவர் சாலவே. (௩௯)

ஈகை யின்றம ராவதி போகமேய்ந்
தீகை மாநக ரென்றொரு பேர்கொள

(௪௦) புண்ணியமேலீட்டோர் புக்கனுபவிக்கப்படும் போகப்பெருக்க முடையதன்றி வறியார்க்கொன் றீதலுடையாரைப் பெற்றதன்றாகலின் அமராவதி ஈகையில்லதென்றார். இதனை "ஈவாரும் கொள்வாரு மில்லாத வானத்து, வாழ்வாரே வன்க ணவர். என்பதனானும் அறிக" என்பது-என்றுசொல்லிக்கொள்வது.

வீகை போக மிரண்டையு மேகொளீஇ
யீகை மாநக ரென்பதின் றிந்நகர். (௪0)

ஐந்த வித்தவ ரியார்க்கும் விடயஙீத்
தந்த மாநக ராக்கு மடக்கமே
யந்த மார்புலன் வேட்டவர்க் கக்கண
மைந்தெ னும்விட யங்களை யாக்குமால். (௪க)

விரியு மன்பினர் மேதகு மாதவர்க்
கரிய சாலியி னன்னம் படைத்திடப்
புரியுங் காதலிற் பூசைசெய் யாங்கிடும்
விரைகொ பேங்கள் வீதிம ணக்குமே. (௪உ)

மலையி னுள்ள வளங்களும் வாரிதிக்
கலனி லெய்துங் கணிப்பில பண்டமு
நிலனி லுற்ற பொருளு நிரம்பியே
தொலைவின் றந்நகர் தோன்றிவி ளங்குமால். (௪௩)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கந்தடர்த் தெழுந்த சீற்றக் கறையடிக் களிநல் யானை
மந்தர மலைநி கர்த்த மாடவீ தியினிற் சென்றே
சிந்துறு மதநீர் மிக்க செறிதுக ளடக்கச் சீர்சா
லிந்திரத் திருவின் மேலா மெழில்விழா வியலு மன்றே. (௪௪)

## கலித்துறை.

கருவி மாமழை பனிவெயிற் கதிர்பல செறிந்த
விரவி வானவன் கடவுதேர்க் கெண்ணில்சே மத்தே
ரிருநி லத்திலிந் நகரிடை யிருத்தின னென்னத்
திருவின் மேம்படு தேர்பல செறிந்திடுந் தெருவே. (௪௫)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புதுவெயி லெறிக்கு மணிபல குயின்ற பொலந்திகழ் மாட
மே லமர்ந்த, விதுநிகர் முகத்துப் பைந்தொடி நல்லார் விண்

ணர மகளிர்வந் தணையக், கதுமென வெழுந்தங் கவரடி பணி
தல் கண்டிட லாதியா லலதிங், கதிசய மடந்தைக் கவின்கொடு
பேத மறிந்திடப் படாதமர்ந் திடுவார். (சசு)

காசினிக் கதிகங் கண்ணுதற் றலங்கள் கண்ணுதற் றலங்க
ளுட் கழறி, னுசிலாக் காசி யதிகமா சில்லாக் காசியி னரும்
பெரு மகிமைத், தேசுறுங் கும்ப கோணம தநிகந் தேசுறுங்
கும்பகோ ணத்தை, யீசனுர் மொழிவே தாகம மனைத்து மிய
ம்பிடு மிணையில தென்றே. (சஎ)

படர்வன விருக்கம் பறவைநாற் காலி பயத்துறை வனசர
ரிவரி, லிடருறு மீனர் பாவமிக் கவர்க ளெனினுமவ் வள்ளவா
யக் கமலத், தடமலி குடந்தைத் தனிநக ரதனிற் றணந்திடி
லுயிரவை யனைத்தும், விட்வர வணிந்த விமலன்மா லோகம்
விழைந்தடைந் தினிதிருந் திடுமால். (சஅ)

என்பதை நினைந்து மீசனுர்க் கினிதா மித்தல மென்பதை
நினைந்து, மன்பெரும் புகழ்சேர் வீரசை வர்கடம் மடங்களுட்
சிறந்ததோர் மடத்தி, லன்பதே வடிவா யார்கலி யுலகத் தடை
ந்தவெம் பிறவியை யகற்றும், பொன்புரை கடுக்கை புனைபவற்
கினிய புனிதநற் சூதனுர் பொருந்தி. (சகூ)

அத்தலத் தியற்று மரியபா தகமவ் வயினன்றி யகல்கிலா
மையினுற், றத்துநீர்ப் புணரித் தாரணி யதனிற் றலங்களு
ளதிகமென் பதனு, லத்தனு ரடியார்க் கமுதுசெய் வித்தே
யகமகிழ் வொடுமதி லிருந்தார், பத்தியே வடிவாப் பகருநற்
சூதர் பரமனு ரடியரைப் பணிந்தே. (ருo)

### கலிவிருத்தம்.

மற்ற வர்மட மாமக தீர்த்தத்தி
னுற்ற வுத்தரத் துற்றிடு மென்பாராற்

---

(சகூ) வடிவாய்ப்பொருந்தி என இயையும்.

பெற்ற காதல் பிறங்கிட வன்னதில்
வெற்றி யோடும்வே ளாண்மைசெய் தாரரோ. (ருக)

தீது றுந்தொழிற் செய்பொரு ளாயினும்
மாது பாக னடியரை மன்னினு
லோது நான்மறை யொள்ளிதென் றோதலாற்
சூது செய்தொழி லேதொழி லாக்கினர். (ருஉ)

ஒட்டி யாநேர்க் கொல்லைமுன் றோற்றதிற்
பட்ட காதலிற் பற்றிநின் றார்கள்பான்
முட்டி லாது முயற்சியின் வென்றிகொண்
டிட்ட மோடிசை யும்பொருள் கொள்வரால். (ருங)

**கலித்துறை.**

வியந்த சூதினிவ் வென்றிகொள் வினைஞராய்த் தம்மு
னயந்த சொற்படி நன்பொருட் கிசைந்திடார் தம்மைப்
பயந்தி டாதுமெய் யூறுசெய் திடுதலாற் பரவ
முயங்கு நாமநன் மூர்க்கரென் றுலகுளோர் மொழிவார். ()

உற்ற மாதவ ரொண்டிரு நீறுகண் டிகைதாம்
பெற்ற மெய்யினர் பேணுறுஞ் சைவவுட் பிரிவோ
ரொற்றை யாழியந் தேரவ னுருத்திர னன்பர்
முற்றி வர்க்கறு சுவையன முற்படைத் துண்பார். (ருரு)

---

(ருஉ) செய்பொருள் - ஈட்டும்பொருள்.

(ருரு) சூரியனன்பர்—சௌரமதத்தர். உருத்திரனன்பரென்றது பாசுபதர் மகாவிரதர் காபாலிகரென்பவரை. இவர் முறையே மாயை வித்தை காலமென்னும் தத்துவங்களிலிருக்கும் உருத்திரர்மூவராற் செய்யப்பட்ட பாசுபதம் மகாவிரதம் காபாலிகமென்னும் அதிமார்க்கசாத்திர மூன்றின் கொள்கையராகலின் உருத்திரனன்பரென்னப் பட்டனர்.

பிறையி லங்கிய சடைமுடிப் பெருந்தகை தாட்கன்
பிறையு மில்லவ ராயினுந் திருவெண்ணீ றிட்டார்
கறையி லங்கிய களமுடைக் கடவுளென் றடியின்
முறையின் வந்தனை செய்தவர் வேண்டுவ முடிப்பார். (ருகூ)

இப்பெ ருந்திருத் தொண்டினி லியைந்திடு நாளி
லொப்பில் வீரமா கேசர்த முயர்தவ முணர்ந்து
தப்பி லாதவர் சரணபங் கயங்களிற் றாழ்ந்தே
யெப்பெ ரும்பொருள் களுமவர்க் கீந்தினி திருந்தார். (ருஎ)

இருந்த சூதர்பின் மழையமல் லேசுரர்க் கினிதிற்
பொருந்த வேயுட லாதிமுப் பொருளையுந் தத்தம்
புரிந்து போற்றிமற் றவரனு போகசூத் திரந்த
மருந்த வத்தினு லறைந்தனு பவநெறி யளிக்க. (ருஅ)

மன்னு பத்திஞா னம்வயி ராக்கியம் வழாது
துன்னு றுஞ்சிவாத் துவிதஞா னந்தனிற் றுலங்கி
யன்ன மாமடத் தமர்ந்திடுங் கங்கைவீ ரேசர்க்
கிந்நி லத்தவர் தொழுதிட வினியதொண் டேய்ந்தே. (ருகூ)

அங்க லிங்கசம் பந்தியா யமலமல் லேசர்
பங்க யத்திணைப் பாததீர்த் தப்பிர சாதந்
துங்க வன்பின்முக் காலமு மேற்றருந் துபுமெய்
தங்கு மிட்டநல் லிலிங்கமிட் டையினனி தழைந்தே. (சுo)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உருச்சுவை நிறைவென் றுள்ள வொவ்வொன்றிற் பலப குத்து
தரித்துய ரிலிங்கங் கட்குச் சந்தத மளித்துச் சத்தா [த்
விரித்திடுந் தரும முன்னு மகேசரும் விழைவா னன்னோர்
பெருத்தமெய்ப்பத்தி கொண்டு பெட்புடனுறைந்தார் மன்னோ.

(ருஅ) போற்றித் துலங்கி எனஇயையும்.

### கலிவிருத்தம்.

நாள்பல கழித்தபின் னவையின் மூர்க்கனுர்
தோள்பல வுடையவவ் வரக்கன் றூக்கிடத்
தாள்வலி யாலரன் ருழ்த்து மோங்கலிற்
கேளொடு மெய்தினுர் கெழுமு மன்பினுல். (௬௨)

ஆதலிற் கொலைகள வாதி செய்கையாற்
போதுறு பொருள்களும் பிரான்பொ ருட்டினுன்
மாதவர்க் களிக்கின்மும் மலமொ ழிந்துவெங்
கோதறு முத்தியிற் குறுகு வாரரோ. (௬௩)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நலங்கிளர் சூத மூர்க்க நாயனுர்க் கருளும் வண்ணந்
துலங்கிடு மாசி மாதந் தோன்றுபூ ரணைம கத்தி
லிலங்கிறை விடையின் மீதே யெழுந்தரு ளிக்கண் சாத்தும்
பலங்களிப் பாரோர்க் கெய்தும் பரிசின்றுங் காண லாகும். ()

### கலிவிருத்தம்.

சாற்றரு மூர்க்கனுர் சரித மோதினே
னூற்றகைக் கடல்சுலா நாணி லத்தையா
ளாற்றலி னகளங்கச் சோழ னுர்கதை
தேற்றமி லேனெரு சிறிது செப்புவேன். (௬௫)

மூர்க்கநாயனுர் சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள் - ௫௬௪.

---

(௬௪) 'மூர்க்கநாயனுர்க்கருளியபடி சிவபெருமானெழுந்தருளித் திருக்கண்சாத்துவது இன்றுங்காணலாகும்,' என்றலின் இம்மகோற்சவம் அத்தலத்திலே ஆதியிலேற்படுத்தியவர் இந்நாயனுர் போலுமென்பது தோற்றுகின்றது. இந்நாயனுர் திருநக்ஷத்திரம் கார்த்திகைமாத மூலநக்ஷத்திரமாம்.

# அகளங்கச்சோழச்சருக்கம்.

### கொச்சகக்கலிப்பா

குடம்பமுனி வரன்கொணர்ந்த குண்டிகையி னுதித்தேகி
யிம்பர்நிலந் தனைவிளக்கு மெழில்கொருங்கா விரியிருபா
லம்புவியை யரசாளு மரசர்கோ னடற்செல்விக்
கும்பர்புனை மணிமகுட மொத்திலங்கு புயமலையான். (க)

வேல்கொண்ட விழிவாணி வீற்றிருக்கும் வியனாவான்
மால்கொண்ட மலர்மாது வாழ்ந்திருக்கு மணிமார்பான்
கால்கொண்ட கழற்டான்கா தலித்தமருங் கருத்துடையா
னூல்கொண்ட நெறியினர்க்கு நோன்மைதிகழ் கருவனையான்.

### கலிவிருத்தம்.

அருளி னாழி யடலி னிராமனே
மருளி லாமையின் வாழ்த்து சனகனே
பொருளிற் பிங்கலன் புத்தியிற் பொன்னனேர்க்
கிரவி யொண்டமி ழிற்கும்ப னென்பரால். (ங)

தாரத லங்குடைத் தண்ணிழற் காத்தலிற்
பராவு வாசவப் பண்பினன் வையகத்
திராச ராச னெனும்பெய ரான்களங்
கராவு சற்குணத் தாலக ளங்கனே. (ச)

### கலித்துறை.

வெய்ய வன்குலத் துதித்திசை விளங்கிய வேந்தன்
வைய கம்புரந் தருளக ளங்கன்வாழ்ந் தனன்முன்
பொய்யில் பாரதி புருடமெய் யெடுத்தனள் போன்று
மையி லாக்கவி வரனொட்டக் கூத்தன்வாழ்ந் தனனால். (ரு)

### பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதியாம் பிள்ளைக் கவியலங் கார பஞ்சகங் கலம்பகம் பர
ணி; யரியதாம் வருக்கக் கோவையும் மணிக்கோ வையினொடு

மகப்பொருட் கோவை,— நீதமா லியலூர் பெயரிவை நிகழ்த்து
நேரிசை யின்னிசை வெண்பா, நிலவுமூர் வெண்பா கடிகை
வெண் பாவே நிகழ்த்திடுங் கைக்கிளை வெண்பா,— கோதிலா
வரசன் விருத்தமன் றுணூர் கொடைகரி வேல்வில்வாள் செங்
கோல், குதிரைநா டிவைவெவ் வேறுரை விருத்தங் குழமகன்
பாடல்சின் னப்பூ,— தீதிலா வொருபா வொருபதோ டிருபா
விருபது தசாங்கநற் பத்து, திகழ்வுறு தசாங்கப் பிராந்தமெண்
செய்யு ளாந்திணைச் செய்யுள்டொன் னூசல். (சு)

கலவிரண் டிரட்டை மணியொண்மூம் மணிநான் மணியி
ணை மணிநவ மணியே, கருதுபன் மணிபல் சந்தமே யநூா
கம்பெரு மகிழ்ச்சியே தானை,— மலிவுறு காப்பு வேனிலுற்
பவமே வசந்தமே தண்டகம் புகழ்ச்சி, வருக்கமெய்க் கீர்த்தி
தாரகை நாமம் வாகையே தும்பைவண் காஞ்சி,— வலமிகும்
வெட்சி கரந்தையே நொச்சி யுழிஞையே யென்னுமா லைகளும்,
வரலாற்று வஞ்சி பலபொருள் வஞ்சி செருக்கள வஞ்சிபா டல்
களும்,— பலமிகுஞ் சதகந் தாண்டகம் பதிகம் பகருந் தூது
வண் புலவர், பாணரே பொருநர் கூத்தர்த மாற்றுப் படையுட
னட்டமங் கலமே. (எ)

மன்னிடு பதிற்றந் தாதிநூற் றந்தா தியிரெடு மொலியலந்
தாதி, மங்கல வள்ளை யானைபோர்த் தொழினா லுலாமடல்வள
மட லுலாவே,— பன்னிடு மங்க மாலைகே சாதி பாதம்பா தா
திகே சங்கள், பகர்ந்தசா தகமே நயனப்பத் தரிய பயோதரப்
பத்தொடு வியப்பி,— னுன்னிடும் பெருங்காப் பியஞ்சிறு
காப்பி யம்பெரு மங்கலம் பலவா, யுயர்கலித் தொகையே

---

(சு) அரசனூராதிய ஒன்பதுங்கூறுவது விருத்தவிலக்கண மென்ப. (எ) இரட்டைமணிமாலையிரண்டனுள் ஒன்றை இரட்டைமணிமாலையெனவும், மற்றொன்றை மணிமாலையெனவும் வழங்குவர்.

நெடுந்தொகை யணிய குறுந்தொகை யெனுந்தொகை நிலை
று,— றுன்னுகன் படையே தயிலெடை விளக்கு புறங்கடை
கையறு நிலைகள், சொலுஞ்செவி யறிவு றூஉப்புற நிலைவா
யுறையென்வாழ்த் துகளொடும் பவனி. (அ)

இடம்பொருள் காலம் பற்றிவந் தனநா னாற்பதோ டெழுத்தி
யே குறத்தி, யிசைப்பெழி லெழுகூற் றிருக்கைகன் முதுகாஞ்
சியினொடு மியன்மொழி வாழ்த்தென்,— றடைந்திடுந் தொண்
ணூற் றாறெனும் பிரபந் தங்களு மியல்வழா தறைத, லன்றி
யே பாண்டிக் கோவையன் னிருப டலமபி நயஞ்சாந்தி புரா
ணந்,— தொடர்ந்திடு மிராமா யணந்தொல்காப் பியஞ்சிந்
தாமணி யாதியா மிவற்றுத், தொக்கசிங் காரம் வீரமே நகை
கள் சொற்றிடுஞ் சாந்தமே கருணை,— யொடும்பயங் குற்சை
யற்புதங் கோப முந்துறு நவரச மதுர, மொழுகுசொற் கவி
தை புயல்பொழி வதுபோ லுரைத்தகங் களித்துவீற் றிருந்
தான். (கூ)

ஆசுநன் மதுரஞ் சித்திரம் வித்தா ரத்திறக் கவிகள்வல்
லவரு, மறைந்திடு மியலு மிசையுநா டகமு மாகுமுத் தமிழ்
கள்வல் லவரு,— மாசிலா வெழுத்துச் சொற்பொரு ளியாப்பு
மகிழலங் காரம்வல் லவரு, மலிசிந்தா மணிசூ ளாமணி வளை
யா பதிவளர் சிலப்பதி காரங்,— காசில்குண் டலகே சியினொ
டு மணிமே கலையெனுங் காவ்யம்வல் லவருங், கருதுமீ ரடி
நா லடிமுதற் சங்கக் கவிகள்கல் லாடம்வல் லவருங்,—தேசுலா
வியவிஞ் ஞானவீச் சுரமுந் திகழ்புரா ணதிவல் லவருஞ், செப்

---

(அ) யானைபோர்த்தொழினூல் — வாதோரணமஞ்சரி.
(கூ) இடம்பற்றிவந்தன - களவழிநாற்பதுபோல்வன; பொருள் பற்றிவந்தன - இனியதுநாற்பது இன்னாநாற்பது போல்வன; காலம்பற்றிவந்தன-கார்நாற்பதுபோல்வன. இசைப்பென்பதை எழுத்தியிசைப்பு குறத்தியிசைப்பு எனத் தனித்தனி கூட்டுக.

பிலொப் பிலதர்க் காதிவல் லவருஞ் செயசெய வெனப்புகழ்ந் திடவே. (கO)

**கலித்துறை.**

மன்னு நாள்களில் வீரசிங் காதன மடத்தி
லுன்னி வாழ்தவ ரளவில ரவரிலோ ருரவர்
தன்னி னேர்தரு முத்தமிழ் விரகனூர் தமிழை
யின்ன தீர்தர வோதியே பலியெடுத் திடுவார். (கக)

வீழி நாதனுர் வியன்றிருப் பதிகமே விளம்பித்
தாழ்வி லாமனே தொறும்பலி தாங்கொளும் பொழுதக்
காழி வானவன் கருத்தறி யாதவக் கவிஞன்
வாழு மாமனே புகலுமக் கூத்தனும் வதிந்தான். (கஉ)

**கலிவிருத்தம்.**

அல்லார்கள விறைவன்புக ழுறையும்பதி கத்திற்
கல்லானிழற் கிழாயெனுங் கவியின்னிசை பாடி
வல்லாரர மியகின்றிட வடிக்குந்தமிழ்ப் புலவ
னெல்லாமறிந் தவனக்கவி யியறேர்ந்திட வறியான். ()

கவிவாணனு மதுகாலேயிற் கல்வித்திற மதனூற்
சுவையார்மொழிப் பொருணுடினன் ரேன்றுமையின் ம
சிவயோகியை யதுகூறெனச் செப்பாதவ ரிகலி [யங்கிச்
நவையாதுமி றமிழ்நற்பொரு ளுடற்கறி கிலனல். (கச)

பொன்னார்புக லியின்வாழ்வுறு புலவன்றமி ழதனி
னின்னுலிசை யொன்றுயினு நிரம்பும்படி யுளதோ

---

(கரு) கல்லானிழற் கிழாயிடர் காவாயென வாளுே - ரேல்லாமொரு தேராவயன் மறைபூட்டிநின் றய்ப்ப - வல்லாயெரி காற்றீர்க்கரி கோல்வாசுகி நாண்கல், வில்லாவெயி லெரித்தானிடம் வீழிம்மிழலேயே. (திருவீழிமிழலை சடையார்புனல்.)

வென்ஞுவுரை செய்தாரவ ரிகலாரொட்டக் கூத்த
னன்ஞன்மிகு சினமெய்தின னடன்மாதவர் தம்மேல். (கரு)

நசையோங்குமின் னிசையாற்பொரு ளுடற்கரி தாலிவ்
விசையோங்குறு மசைவில்கவிக் கெவனுட்பொரு ளென லுங்
திசையோங்குவெவ் வசைகூறலிற் றியங்கிப்புல வனுமேல்
விசையோங்குவன் கசைதாக்கினன் விழுந்தாருயிர் கழிந்தே.

ஈறில்லவ னடியார்தமை யீறெய்திட வியற்றி
மாறொன்றிய மனத்தான்மிகு சினத்தான்மனை யுறவெள்
ளேறொன்றிய கொடியானடி யவரெய்திய மடத்திவ் [ர்.
வூறொன்றிய மொழிகேட்டலு மொல்லென்றொலித் தெழுந்தா

எழுந்தார்குரு வருளின்படி யெல்லோருமங் கிறைஞ்சிச்
செழுந்தாபத வேடத்தவர் சிலைவாள்கதை கழுமுள்
ளழுந்தாவுயிர் கவர்சக்கர மடுவேற்படை யாவுந்
தழும்பாணிய ராகித்தமிழ்ப் புலவன்மனை சார்ந்தார். (கஅ)

இன்னோர்வரு முன்னேதவ ரெய்துந்திறம் வினவித்
தன்னோர்தரு மன்னன்முனஞ் சார்ந்தெய்திய தியாவுஞ்
சொன்ஞனவை சோழன்செவிக் கேளாத்துய ருற்று
னன்ஞனர சிளங்கன்றினை யான்கன்றினுக் கரைத்தோன். ()

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நெஞ்சக மிகம யங்குந் தெளிந்திடு நெடிது யிர்க்குந்
துஞ்சலே யறமா மென்னுந் தொல்விதி யிதுவோ வென்னும்
வஞ்சக மறலி செய்த வாறிது வெனவ ருந்துந்
தஞ்சநீ யருளா யென்று சங்கரன் றனைத்து திக்கும். (உ0)

இன்னணம் வருந்தி மன்ன னிணையில்சோ கத்தி ருக்கப்
பன்னருஞ் சினத்தாற் றூயோர் பாவலன் றன்னைத் தேடி
மன்னவ னிடத்தி ருந்த மாற்றமும் வினவி யெய்திப்
பின்னவர் நிகழ்ந்த வெல்லாம் பேசினர் பிதிர்த லின்றி. (உக)

ஓதியா லுயர்ந்த மன்ன னுமையொரு பாக னுக்குப்
பேதியா வடிவ மூன்ரும் பிரித்திடிற் குருவ தொன்றவ்
வாதியா மிலிங்க மொன்றவ் வரியசங் கமமொன் றன்றே
வேதையாந் தேர்வ மின்ன வியம்பும்வே தாக மங்கள். (உஉ)

மற்றது நிற்க விப்பான் மனையினிற் பலிக்கு வந்து
குற்றமின் ருகிநின்ற சங்கமர் தம்மைக் கொன்ருன்
கற்றுமிவ் வொட்டக் கூத்தன் கலங்கிநம் பக்கல் வந்தா
னிற்றிதற் கியாது செய்வோ மெனவுளத் திரங்கி மன்னன். ()

விளம்பருந் துயர நீத்து மேதக வுடையீர் வேத
மளந்தறி வரிய சீர்த்திச் சங்கமக் கொலைக்கி யானே
களங்கனி யனைய கண்டன் கழறுமா கமத்திற் றீர்வை
யுளங்கொடு புரிவ னென்றங் கோதியன் னவர்ப்ப ணிந்தான்.

மன்னவன் மொழியைக் கேளா மாதவர் வளவர் கோவே
யென்னிது மொழிந்தா யாங்க ளிறைவனு கமத்திற் காணேஞ்
செந்நெறிச் சங்க மர்க்குச் செய்திடுங் கொலைக்குத் தீர்வென்
றுன்னியங் குரைப்ப வேந்த னுணர்ந்தினி துரைப்ப தானுன்.

**கலித்துறை.**

மனைவி செய்திடும் பாவமு மகிழ்நருக் காகுந்
தனையர் செய்திடும் பாவமுந் தந்தையர்க் காகுஞ்
சினமில் சீடன்செய் பாவமுந் தேசிகர்க் காகு
மனைவ ருஞ்செயும் பாவமு மரசர்க்கா மென்றே. (உசு)

உரவு வெண்டிரைக் கருங்கட லுடுத்தமே தினிக்கட்
கருதி யாகம மொழிதலிற் காசினி புரக்கும்
புரவ லன்றனை யடையுமென் றறிந்தியான் புகன்றேன்.
வரநெ டுந்தவத் தீரிது மனங்கொளத் தகுமால். (உஎ)

ஆகை யாலெனை யக்கொலைக் காத்தடிந் தற்றம்
போகு மாறருள் புரிகெனப் பொன்னடி தாழ்ந்தான்

வாகை வேலிறை மாதவக் குழாங்களு மனத்திற்
சோக மோடிவை சொற்றனர் தொன்னெறி துருவி. ()

## கலிவிருத்தம்.

மனுநெறி போற்றிடு மன்னர் மன்னவிங்
குணையெவர் கொலைபுரிந் திடுதற் கொப்புவார்
கனைகட லுலகினிற் கரும போகஞ்செ
யனையவர்க் கன்றிமற் றயலர்க் காகுமோ. (உகூ)

கொலைபுரிந் தோன்றனைக் கொல்வ தன்றிமற்
றிலையெமக் கொருசெய லென்றி யம்பலுந்
தலைவனு மம்மொழி தாங்கி மற்றொரு
நிலையினைத் தேர்ந்துபின் னெடிது யிர்த்தரோ. (௩0)

அரும்பெற லரசனு மரிய சங்கமர்
திருந்தடி பணிந்துநீர் திகழு மாமடத்
திருந்திவ ணுளவந் தெய்தி னுங்களுக்
கருங்கொலைப் புலவனை யளித்து மென்றனன். (௩க)

அரசிவை யியம்பிட வண்ண லன்பருங்
கரைசெறிந் தொலிக்குமா கடலிற் சீறிவெண்
முரசக லாதுநின் முன்றி னீங்கிப்போய்
வரைதிகழ் மடம்புகே மெனவ ழங்கினார். (௩உ)

நன்றெனா வரசனு நவின்ற விம்மொழி
துன்றுமா கேசுரர்த் தொழுது நல்லற
மன்றிய புலவனை யடலிற் போக்கிமேல்
வென்றிகொள் புதல்வனை வியப்பி னெண்ணியே. (௩௩)

மந்திரி யொருவனை வரவ ழைத்துமெய்ச்
சுந்தரப் புதல்வனைத் துருவி யிவ்விடைத்
தந்திடென் றுரைத்திடத் தாளிற் றாழ்ந்துவெள்
ளிந்துலா மாடமா ளிகையி னெய்தினான். (௩௪)

எய்திய வமைச்சனு மரச னீன்றிட
வையகம் புரந்திடு மைந்தன் பாலடைந்
தையநின் றந்தையா ரருளி ஞர்வரச்
செய்கையீ தென்றிடச் சேர்ந்திட் டானரோ. (௬௫)

தாதைதாள் பணிந்திடுந் தனய ஞர்தமை
வேதனை மிகுத்துளம் வெந்து மார்பொடு
மோதுறப் புல்லிமே லுச்சி மோந்துகட்
போதுறக் கலுழநீர் பொழிந்து கூறுவான். (௬௬)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சேட்டிளம் பரிதி யன்ன சேயிவ ணிகழ்ந்த வெல்லாங்
கேட்டியோ வெனக்கி ளத்திக் கேடிலாப் புகழெ னக்குக்
கூட்டிட வேண்டு மென்று குமரனைக் குறையி ரந்தான்
கோட்டமில் குணத்தான் றந்தை குரைகழ லிறைஞ்சிக் கூறும்.

கலிவிருத்தம்.

மைந்தர் செய்தி வழக்கம் வளங்கெழு
தந்தை தாய ரியம்பிய தன்மைசொல்
லெந்த வாறெனி னுந்தவ மென்றுங்கொள்
புந்தி யென்னப் புகன்றிடும் வேதமே. (௬அ)

இரவி தன்குலத் தெய்தினர் தந்தைசொற்
குரவர் சொற்கடக் குங்கொடி யாரையித்
தரையி டங்கொளா தாபத்தைச் செய்திடு
நரகி டங்கொளு நாயக னேயென்றும். (௬௯)

தார மைந்தர் தனம்பரி யானைதேர்
சேருஞ் சேனை சிவிகை கவிகையின்
ஞர மாதி யரியதன் றையவொண்
சீர தொன்றுமே தேடற் கரியதால். (௭0)

உறங்கல் போல்வது சாக்கா டுறங்கியே
யுறங்கி லாமை பிறப்பொப்ப தாமென

வுறங்கு மாக்கை நிலையாமை யுற்றதிங்
குறங்கி லாதெனும் வள்ளுவ ரோதுநூல். (சக)

பொன்று காயம் பொருளென வுன்னியே
யுன்றன் வாய்மை யொழிந்திடு வேனலே
னின்று நீயிதற் சென்செய வேண்டுமோ
நன்று செய்கென வேநவின் றனரோ. (சஉ)

மேற்படி வேறு.

கான்முளை யியம்பிய கனிக்கு மின்சொலை
வானமு தாமென மகிழ்ந்து கேட்டபி
னூனுறை வேலினு னுழையி னின்றிடு
சேனைகா வலன்முகந் தெரிந்து கூறுவான். (சங)

மறைத்திடு சிவிகையுந் தாங்கு மார்தரு
மிறைப்பொழு ததனினீ தருதி யென்றலுங்
கறைத்திகழ் வேலினன் கடிது கொண்டுவந்
துறைப்பெரு வாளினற் குணர்த்தி னனரோ. (சச).

மற்றதை நோக்கியே மன்னர் மன்னனுந்
தெற்றென வதன்மிசைச் சிறுவற் சேர்த்தினன்
பொற்றட வெழினியும் புனைந்து பின்வர
நற்றவ ரிருந்திடு மவையி னண்ணினன். (சரு).

செறிந்திடு மகேசர்தாள் சேர்ந்து சேர்கலை
குறைந்திடு பிறையணி குழக னன்பரை
யெறிந்திடு மிவனைநீர் நோக்க லின்றிமுன்
மறைந்திட விவனுயிர் வாங்கு வீரென்றான். (சசு)

கூற்றடு குரைகழற் கன்பன் கூறிய
தேற்றமா மொழியென வெவரு முட்கொளாக்

---

(சக) திருக்குறள் - ௩௩௧.

காற்றினும் விசைபெறு கதியிற் போய்த்திரு
நீற்றெழு மேனியி னிமலற் றுங்குவார். (௪௭)

ஒல்லென வொருபுடை யுற்று மன்னவன்
சொல்லிய பணிசெயத் துணிய வக்கவி
வல்லனோ வெனவிவன் வதன நோக்கிப்பின்
கொல்லுது மெனச்சிலர் குறித்துக் கூறினார். (௪௮)

செய்யுமெக் கருமமுந் தேர்ந்து செய்கிலா
தையமாய்ச் செயின்மனத் தடையுந் துக்கமே
மெய்யிது சகாயமாய் மேவுங் கீரியைக்
கையினாற் கொன்றகா ரிகைகை வொக்குமால். (௪௯)

என்றலு மிசைந்துட னெழினி நீக்கிடப்
பொன்றிகழ் முகின்மறை புனிற்றி ளங்கதிர்
நன்றிகொள் சிவிகையி னண்ணிற் றுமென
வன்றிறல் வேந்தனார் மகனைக் கண்டனர். (௫௦)

காண்டலு மாதவர் கவலை கூர்ந்துநன்
மாண்டரு மதலையை மார்பிற் புல்லிமண்
ணீண்டதோர் கடலென நெடித ரற்றமெய்
யேண்டரு குமரனிவ் வாறி யம்பினான். (௫௧)

---

(௪௯) உச்சயினிபுரத்திருந்த வந்திதேவனென்னும்வேதியனும் அவன்மனைவியும் தமக்குப்புத்திரப்பேறின்மையால் ஒரு கிரியைவளர்ப்புழி ஓராண்குழந்தையுதிக்க; அதனை அரிது பேணி வந்தனர். ஒருநாள் அவர் அக்குழந்தையைத் தொட்டிலிற் றூங்குவித்து வெளிப்போந்ததருணத்தில் அத்தொட்டிலில் ஒரு கரும்பாம்பேறலும், அதுகண்டஅக்கிரி அதனைத்துண்டித்துக் குருதிபடிந்தமுகத்தோடும் எதிரெய்த; அஃதுணராத பார்ப்பனி அது தனதுமகனைக் கொன்றடைந்ததாகவுன்னி அதனை மடித்துப் பின்பு கவலையுற்றனளென்பது பஞ்சதந்திரம்.

மாதவக் குழாங்கணீர் மனத்தி லுன்னிய
தேதனை யியற்றிடு மீண்டெ னக்கெனக்
காதர விலாதவக் கணங்கள் கன்றியுள்
ளாதர வுடன்மகற் கறைதன் மேயினர். (ருஉ)

வெங்கொடும் பாதக மதனுள் வெவ்விதாஞ்
சங்கமக் கொலையது தன்னைச் செய்தவன்
கொங்கவிழ் தாரிணுய் கொடிய கூத்தன்மற்
றங்கவன் றனைவிடுத் தரசி னின்னையே. (ருங)

சிவிகையில் வைத்துவெந் தீய கூத்தனுங்
கவியிவன் றன்னை நுங் கண்ணிற் காணுத
றவமெ௫ மறைவிடந் தன்னிற் கொல்லுமென்
றவநெறி யியற்றின னரச னையனே. (ருச)

எனுமொழி மாதவ ரிசைக்க மைந்தனு
மனமிசைந் தியானுமெம் மரசும் வாய்மையி
னினையன நிகழ்த்தலி னிசைந்து நீவிரு
மனையவா புரிதனல் லறம தாகுமால். (ருரு)

எங்குலத் துதித்தவ ரெந்தை வாய்மொழி
சங்கையைத் தாங்கிமா முடித விர்த்துமுன்
பங்கயற் கிறைபதம் பரவித் தாம்புகழ்
தங்கிய வடியனேன் றவிர்த லொண்ணுமோ. (ருசு)

என்றிள வரசனு மிசைத்த வம்மொழி
துன்றிருஞ் செவியிடைச் சுறுக்கென் றேறிடக்
கன்றிநெஞ் சயர்ந்துகட் கலுழி நீருகுத்
தின்றுநின் செய்கைபோ லியார்வ ரேற்றுளார். (ருஎ)

மகன்றந்தைக் காற்றுறு முதவி வாரிசூ
மகலிடத் துன்கணே யறிந்தும் யாமந்தத்

---

(ருசு) புகழ் தங்கிய - புகழ்க்கண் நிலைபெற.

தகவுரை நிறுவுதற் சான்று நீயுனை
நிகர்வர்மற் றிலையென நிகழ்த்து கின்றனர். (ருஅ)

சங்கரன் றிருவரு ளெம்மைச் சார்தலா
லிங்குனை நோக்கினே மென்றி யம்பிமேற்
சங்கம ரியாவருந் தனயற் கொண்டுபோய்ப்
பங்கமின் மன்னவன் பால்வி டுத்தனர். (ருகூ)

இவ்வகை யார்புரிந் திடுவ ரேந்தலே
யொவ்விலா மதலையைக் கொன்று மோதொரு
வெவ்வம தியற்றியுன் னுழைவந் தெய்திடு
மவ்வியக் கவியைநீ காக்க லாகுமோ. (சூ0)

இன்னண மளவிலா தியம்பி மாதவர்
மன்னவ வெமதுரை மாண்ப தல்லதே
யுன்னொரு வலியினு லொழித்தி யெங்களை
யன்னது வரமெனி லவனைத் தாவென்றார். (சூக)

சிவகணத் தவருரை செவிபு காமுன
மவலமுற் றிடுகவிக் கரிய சங்கமத்
தவர்கொலை நோக்கிம தலையை யீந்தெனக்
குவரும்வல் வினைக்கொழி வுற்றி லேனென. (சூஉ)

வேந்தனுந் துயரமுற் றிருக்கும் வேலையி
லேந்தெழிற் புலவனு மென்னை யீதியென்
றுய்ந்தவ ணியம்பலு மரச னுந்திடச்
சாந்தமாய்ப் பாவலன் சாற்று வானரோ. (சூங)

யானுமக் கடைக்கல மென்ற யானிங்கன்
றுனெனை யளித்திடு மென்று சாற்றினு
லீனமென் பவமுமக் கின்றெ னக்கவி
மானமி லேனுங்கண் மனதென் றோதினுன். (சூச)

(ருஅ) திருக்குறள் - எ0. (சூ0) ஓவ்வு - ஒப்பு.

பூட்டுவிற் றடக்கையான் புகன்ற வாய்மொழி
கேட்டிருந் தவர்கணங் கிள்ளி யுன்மனக்
கோட்டமின் றுகிநீ கொடுக்கிற் போவமென்
றேட்டலர் தாரினாற் கியம்பி னார்களால். (சுரு)

ஆர்செறி தோளினா னரிய செஞ்சடை
நீர்செறி கடவுளு நீரென் றெண்ணினேன்
வார்செறி முரசொடு மடத்துட் போமெனக்
கூர்செறி யின்சொலாற் கூறி னானரோ. (சுசு)

மல்லடு தோளினான் வாய்மை நேர்ந்தபின்
சொல்லுது மெனக்கவி வரற்கொண் டேகினார்
நல்லவர்க் குதவிசெய் பவரி னன்கதி
ரெல்லையு மேற்கட லிடத்தி னேகினான். (சுஎ)

அப்பொழு தருங்கவி யரன தங்கமா
மெய்ப்பொலி கணத்தர்முன் விளம்பு வான்மொழி
முப்பொழு தினுஞ்சிவ பூசை முற்றுவேன்
றப்பின தருச்சனை சமைக்க நல்கென்றான். (சுஅ)

கருத்தனார் பூசனை கடக்க வொண்ணுமோ
வருத்தியா லதுசெய்கென் றறைய யாவரும்
பொருத்துறும் வனசமென் பொகுட்டின் மீதுறு
திருத்தகு மரிசொலார் நதியிற் சென்றனன். (சுகூ)

சென்றுமுன் னனமுஞ் செய்து மெய்யெலாந்
துன்றிய நீறெனுஞ் சுதைய ணிந்துகண்
ணென்றிய மணிவட மூக்கி யஞ்செழுத்
தென்றுமெய்ப் பொருளென விதயத் தெண்ணியே. ()

பூசனைக் குரியன பொருளெ லாங்கொணர்ந்
தீசனைப் பூசனை யியற்றி யென்மன

வாசது வகலநீ யருள்கென் றுன்னியே
மாசறு மனத்துடன் வணங்கி னானரோ. (எக)

முடிந்தபின் காளியா மூளைச்சா ளம்மைமுன்
னுடன்படு முளத்தினு னுரைத்துத் தோத்திரம்
படிந்துமன் வணங்கியே பக்கம் பார்த்தயற்
கடந்துபோய்க் கோயிலுட் கதவம் பூட்டினான். (எஉ)

பூட்டிய புலவனைப் பொருக்கெ னக்கணம்
வீட்டுது மெனச்சிலர் வெகுளச் சிற்சிலர்
கோட்டமுள் ளடைந்தனன் குறித்தல் செய்வது
தேட்டமன் றிருள்புலர்ந் ததன்பின் செய்கெனு. (எங)

சொற்றனர் சொற்றது துகளி லாக்கலை
கற்றிடுங் கவிக்கரன் கருத்தி னர்ச்சனை
யுற்றமார்க் கண்டர்த முயிருண் கூற்றுவற்
செற்றிடை வருமொரு திறமை யொத்ததே. (எச)

இருதலைக் கொள்ளிநள் ளியங்கெ றும்பென
வொருதலை துணிந்திடா வுரவுத் தோளினன்
மருவிய துயர்ப்பனி மாற்ற வெய்யவன்
வருவனென் றேகல்போல் வல்லை யேகினான். (எரு)

சென்னிற மாதவன் றிகிரி யாதவன்
றன்னைமுன் மறைத்தன தகைத்த செக்கர்வான்
பன்னுதன் மரபுறும் பழிக்கு நாணியே
யுன்னியவ் வினன்முழு கழலி னுைத்ததால். (எசு)

அருந்தமிழ்ப் பலதுறை யாய்ந்து மிக்கவி
திருந்துசங் கமக்கொலை செய்த தென்னெறுப்

(எச) அரன்வருதிறமைஎன இயையும். (எரு) வல்லை வருவனென்றேகல்போல் வெய்யவனேகினான் என்க. (எசு) செல்- மேகம். இனன் - சூரியன்.

பொருந்துவான் மகளிறும் பூதிற் றேற்றிய
முருந்திள முறுவலின் முகிழ்த்த தாரகை. (எஎ)

புன்னையி னரும்பெனப் பொடித்த தாரகை
தன்னையுட் பொதிந்துமேற் சார்ந்த கங்குறு
ளன்னரக் கவிபுகழ் சிறுமை நண்ணுமா
துன்னிய கொலைப்பழித் தோற்றம் போன்றதே. (எஅ)

தாமரை குவிந்தன தளவ லர்ந்தன
காமர்செய் புட்குலங் காவிற் புக்கன
வாமமேய்ந் திசைமகள் வதன மாமெனச்
சோமனுங் குணகடற் றோன்றி னனரோ. (எகூ)

புரைகொளா யிரந்தலை பொருந்து பாரமாந்
தரையொரு தோளினுற் றுங்கித் தாபத்தை
யுரகனுக் காற்றக ளங்க னுச்சிமேல்
வருதர ளக்குடை மானு மான்மதி. (அ0)

கலையுணர் கருத்தக ளங்கன் காசிலா
நிலைதரு புகழென நிறைந்த வெண்ணிலா
வுலகினுக் குறுதுணை யாகி யோம்பவன்
மலைவறு சத்திய மடந்தை வாழ்வுமாம். (அக)

இவ்வகை யிரவுவந் திறுத்த தெம்பிரான்
செவ்விய நிலையுணர் சிவக ணங்களு
மவ்வயிற் றேவியா லயத்தைச் சூழ்ந்திகல்
வவ்விய புலவனை வைத்துப் போற்றினர். (அ௨)

புதியவச் சத்தியா லயத்திற் புக்கிடு
மதிசயப் புலவனு மவளைப் போற்றினன்
மதிசெயச் சத்தியும் வந்து தோன்றிநிற்
கெதுசெய வேண்டுவ தென்று கூறினள். (அ௩)

கலமிகு புலவனு நவின்ற காளிதன்
குலமறை கவற்றிடுங் கோதில் சேவடி
பலமுறை வணங்கினன் பரிந்தின் றன்னையென்
கொலைதவிர்த் தடிமையாக் கொள்ளு வாயென. (அச)

அப்பொழு தருந்தவர்க் கநாதி யாயுறுஞ்
செப்பரும் வீரபத் திரரெந் தெய்வமென்
றிப்படி யுனதுளத் தெண்ணி யெம்மிறைக்
கொப்பரு மருந்துதி யோது வாயெனு. (அரு)

விறல்கெழு நீலிதான் விளம்ப வேள்வியைத்
திறல்கொடு சிதைத்தமை சிந்தை செய்தனன்
பிறையணி சடைமுடிப் பிரானுக் கன்புளங்
குறைவறக் கொண்டதைக் கூற வெண்ணியே. (அசு)

திண்ணிய கதவினைச் செறிந்த டைத்தவன்
பண்ணிய காவலிற் பட்டி ருந்தவ
னண்ணிய வுனதரு ணன்மை யாலெனக்
கெண்ணெயுந் தீபமு மெழுத வாணியும். (அஎ)

ஓலையுந் தருகென வுரைத்திட் டன்னவள்
காலிணை தலைமிசைக் கொண்டு காசிலா
நீலியைப் போற்றின னிமிடத் தேயரு
ளோலவே யாவையு மிரங்கி யீந்தனள். (அஅ)

வெண்மலர்த் தவிசின்வீற் றிருந்த மின்னனுள்
புண்ணியத் துணைப்பத புண்ட ரீகத்தைக்
கண்ணிணை முகிழ்த்தகக் கருத்தொ டைம்புல
னெண்ணவே நினைந்தவ னுரைக்க லுற்றனன். (அகூ)

பத்திர காளிமுன் பகரு வான்கவி
யத்தனுர் சரித்திர மாக யான்சொலு

மித்திற மொழியைநீ யெழுதி ஞலிங்ஙன்
முற்றிடு மருள்கென்முன் முளேச்சா ளம்மைமுன். (கo)

அப்படி யாகவென் றமைத்த தோர்கரந்
தப்பறத் தகளியைத் தாங்கு மோர்கர
மெய்ப்பறத் தாலவே டேந்து மோர்கர
மிப்புவி புகழ்ந்திட வெழுது மோர்கரம். (கக)

இத்திறஞ் சரித்திர மெழுதுங் காலந்தக்
கைத்தலச் சுடரது கம்ப முற்றிடத்
தத்துவக் கடவுளேத் தானி னேந்தியான்
வத்துநிச் சயமதை வழுத்தும் வேலேயில். (கஉ)

அஞ்சுத லின்றிக்கை யசைவ தென்னென
வஞ்சுத லின்றிமுன் னரிய நாவல
னஞ்சுத லுறவவ ளள்ளத் தேவிர
லஞ்சுறு கையிஞ லறைந்திட் டானரோ. (கங)

ஆர்ந்தவீ ரச்சுவை யறைவி னக்குணஞ்
சார்ந்திங்ஙு னியற்றிப்பின் சாந்த மோதுழி
யோர்ந்துள நடுங்கவத் தேவி யுன்செய
றீர்ந்திது நிகழ்ந்தது தியங்க லென்றனள். (கச)

அத்துணை வீரன்வேள் வியைய ழித்திடும்
வெற்றியை நான்குசீர் விரவு மீரடி
யொத்துள பரணியி னுரைப்ப வல்லிரு
ளிற்றிடக் குணதிசைக் கிரவி யெய்தினன். (கரு)

உற்றிடு மூழவ னுெப்பி லாக்கவி
பெற்றிடுந் துயர்க்கடற் பெயர்த்தெ டுப்பபோற்

(கங) அள்- கன்னம்.

(ககரு) ஊழவன் - வெயிலவன்; ஊழ் - வெயில்.

கற்றையங் கதிரெனுங் கயிற்றைக் காசினிக்
கெற்றிவெண் டிரைக்கட லெழுந்திட் டானரோ. (௯௬)

கங்குலா மடந்தையுங் காட்சி மாகவி
துங்கமா மனவிரு டமித்திட் டேகினா
ளங்குறு காலையி னடன்ம கேசருஞ்
சிங்கலில் புலவனைச் சென்ற ழைத்தனர். (௯௭)

மேம்படு புலவனும் விளித்த வேலையிற்
கூம்பலின் மனமொடு கோட்டத் துள்ளிடை
யாம்பொறி புத்தக மடுத்த தையர்நீர்
தாம்படித் திடுமெனத் தமரி னல்கினான். (௯௮)

நன்றென வவரதை நயந்து வாங்கிநேர்
பொன்றிக ழோருழிப் பொருந்தி யோதியே
தன்றுணை வீரபத் திரர்ச ரித்திர
மின்றிவ ணியம்பிய தினிதென் றெண்ணியே. (௯௯)

மற்றது கொண்டுதம் மனத்திற் கொண்டிடுஞ்
செற்றமு மொழிந்தனர் சிம்பு ளானவன்
பெற்றிடு பரணியைப் பெரிது வந்துள
நற்றவ ரிரவிமுன் னளின மாயினார். (௧௦௦)

கதவிடைத் தங்கள்கைக் கத்தி யீந்துவுன்
மதமனம் விரும்பின வரிசை யிற்செய்கென்
றிதமுற மாதவ ரியம்பு மின்சொல்கண்
டதிசய மெனக்கவி யறைதன் மேயினான். (௧௦௧)

இகல்செயு மடியனா வியற்றுங் கோறலுக்
ககமிக நொந்தெனை யடுதற் கெண்ணுநீர்

(௯௯) தன்றுணை வீரனார் சயங்கொள் காதையை என்பதும் பாடம். தன்றுணை-தனக்குதவியாக.

தகவுரை சாற்றலென் னெனனு முன்றானும்
பகர்பல பிரபந்தம் பாடிக் கொள்ளலாம். (க0உ)

என்றுனக் களித்தன மிடர்செய் வாளினை
வன்றிறல் வில்லிதண் மலரி னான்மக
னன்றுசெய் யுயர்மக மழித்த சீர்த்தியை
யுன்றனுத் தழும்புற வுரைத்த பான்மையால். (க0ங)

என்னவம் மாதவ ரியம்ப முன்புலந்
தன்னவன் கண்டுகண் டடிவ ணங்கினான்
றுன்னிய கதவினைத் துறந்து கண்டது
பன்னுகட் படலம்போய்ப் பார்த்த தொக்குமால். (க0ச)

முன்பொர்புத் தகந்திருக் கோவன் மூர்த்தியை
வன்கொலை கொண்டது வாய்க்க நீதரு
நன்புகழ்ப் புத்தக நாடொ னாக்கொலை
யின்புறத் தவிர்த்ததென் றியம்பி னாரரோ. (க0ரு)

பயந்தரும் விடம்பரித் தண்ணல் பண்ணவர்
பயந்தவிர்த் ததுநிகர் பன்னு முக்கிரன்
பயந்தரும் பரணியைப் பரித்திங் குன்கொலைப்
பயந்தவிர்த் தனனெனப் பழிச்சன் மேயினார். (க0சு)

அருங்கவிப் புலவனீ யறைந்த செய்யுளுக்
கிருங்கட லுலகமு மேம நாடுமே
தரும்பரி சாயினுந் தக்க வாகுமோ
நெருங்கிநின் புகழ்நிலை நிற்கு மென்றுமே. (க0எ)

இவ்வகை புலவனுக் கியம்ப வின்றமிழ்ச்
செவ்விய புலவனுஞ் சிந்தை நொந்துமுன்

---

(க0ரு) திருக்கோவல் மூர்த்தி - திருக்கோவலூரில் விளங்கிய மெய்ப்பொருணாயனார்.

வவ்விய மனத்தொடும் வணங்கித் தீவினை
யெவ்வகை போக்குவ தியம்பு வீரென்றான். (கOஅ)

வடிவொடு பெயர்குண மற்று மில்லரா
னடியரைக் காத்திட வருளின் மும்மலம்
பொடிபட மூன்றுருப் பொருந்து மாங்கவற்
றிடைதுனி யிரத்தம்வீழ்ந் திடவி யற்றிடின். (கOகூ)

பாலர்மா மறையவர் பசுக்கண் மட்டிலைச்
சூலினு ரியரிரு கோடி சூழ்வதை
யேலவோர் கோடியேய்ந் திடினு மன்னவை
சாலுமிவ் வதைக்கிணை சாற்றற் பாலவோ. (ககO)

இயம்புமூ வடிவினு ளிணையி லாததாய்ச்
சயம்பெறு சங்கம வடிவஞ் சார்ந்தவ
ருயர்ந்தவ ரவர்களை யுலகிற் கண்டவர்
நயம்பெறு சிவகதி நண்ணு வாரரோ. (கக்க)

ஆதலாற் சங்கமர்க் கடிமை யாகிலப்
போதுதீக் கொலையது பொருந்தி டாதுனைத்
தீதிலாக் கவிவர வென்று செப்பினார்
மேதகு நிலையுள வீர சைவரே. (ககஉ)

விளம்பிட விசைந்தவர் விரைம லர்ப்பத
முளங்கொடு பணிந்தன னெப்பி லாக்கவி
துளங்கலின் மாதவ ராசி சொற்றனர்
களங்கனி மிடற்றிறை கருணை யெண்ணியே. (ககந)

தொழுதனர் துதித்தனர் துளிக்கு மானந்தத்
தழுதனர் தம்மிறை யரிய சீர்த்தியைப்
பழுதற வுரைத்தவப் பாவ லன்றொடு
மெழுதிரைக் கடல்கலித் தெழுந்த தென்னவே. (ககச)

---

(கOகூ) மூன்றுரு - குரு இலிங்கம் சங்கமம்.

ஏகினர் குருவடி யிறைஞ்சிச் சங்கமர்
போகிய வாய்மைகள் பொருந்த வோதிமெய்ச்
சோகமோ டிறந்தவர் துயர நீக்குவான்
வாகைவீ ரேசுரர் கோயில் வந்தனர். (கக௫)

இறப்பதும் பிறப்பது மிலிங்கத் தேயலா
விறப்பொடு பிறப்பெமக் கில்லை யீண்டெணி
னிறப்பதும் பிறப்பது மேனை மன்னுயிர்க்
கிறப்பொடு பிறப்பினா லியம்பு மின்னதே. (ககசு)

ஆயினு மிவருட லகலு மேல்வையிற்
றீயமுன் னிலைகொடு சென்று போயின
ரேயிது வுலகினுக் கிடரென் றெண்ணிமுற்
போயின வுயிர்தரப் புந்தி கொண்டனர். (ககஎ)

அறுவித கரணமா மவற்று ளண்ணலை
யறுவித விலிங்கமா வமைத்து வைகுவோர்க்
கறிவருள் குருபர னடித்து ணைப்புன
லறிவுற வேற்றந்த வங்கத் தாட்டினர். (ககஅ)

ஏண்டரு நீறுமெய் யெங்கும் பூசினர்
மாண்டவர் தமதுநெற் றியின்ம லர்க்கரஞ்
சேண்டொடு புகழினர் வைத்துச் சீரிதா
யீண்டெழுந் திருமென வெவருங் கூறினர். (ககக)

அத்துணை யத்தவ ரருஞ்சு ழுத்திவிட்
டொத்திடு சாக்கிரத் துற்று ளாரெனக்
கைத்தல நீட்டினர் கண்வி ழித்தன
ரெத்திசை களுமுடி யெடுத்து நோக்கினர். (க௨0)

எழுந்தன ரன்புள மெய்தி மல்லையர்
செழுங்கம லப்பதஞ் சென்று சென்றுறப்

(ககஅ) அறுகரணம் - நாசி நா கண் மெய் செவி மனம்.

பழுந்துறப் பணிந்தன ரருந்த வத்தருஞ்
செழுங்களிப் பொடுமவை சேர்ந்தி ருந்தனர். (௧௨௧)

மிக்கவண் கங்கைவீ ரேச ருக்கெதி
ரக்கினி குண்டமா தியவ மைத்தலுந்
தக்கயா கப்பர ணியினைச் சால்பினி
லக்கவி வரனரங் கேற்ற வுன்னியே. (௧௨௨)

ஆதரத் தெவரும்பா ராட்ட வண்ணரு
ணீதியின் வணங்கிமுன் னிலவி வாய்புதைத்
தேதமில் கவியரங் கேற்றக் கண்டருண்
மாதவ மழையமல் லயர்ம கிழ்ந்தரோ. (௧௨௩)

சிவிகைகோ சிகமணி செம்பொன் சீர்பெறு
கவிகைபல் விருதெலாங் கணிப்பின் றீதலும்
புவிமுடி யுறவடி போற்றி யேற்றுமு
னவியமி லான்விடை யருள்பெற் றேகினான். (௧௨௪)

ஏகினான் காற்றெனச் சிவிகை மேலிவர்ந்
தாகமூ டுயிருற வவன்முற் காகள
மூகமாந் தூதுசென் றுரப்ப தாயுரு
வாகைவே லிறைசெவி புகலும் வந்தெதிர். (௧௨௫)

நேர்வழக் குறுமனு நெறியி னீரமு
பார்வழக் குறவருள் பார்த்தி பன்கொலைப்
போர்வழக் கெவ்வணம் போயிற் றென்னவாண்
டார்வழக் கெண்ணெயா மாக்கிற் றீர்வெனு. (௧௨௬)

இவ்வுரை யதிசயத் தியம்பி யின்சொலாற்
செவ்விய பரணியான் செப்பி னேனெனக்
கவ்வையற் றரசனுங் களிப்பு மீக்கொளீஇ
யவ்வுரை தனையவைக் கறைதன் மேயினான். (௧௨௭)

வினவியெல் லவர்களும் வியப்ப மன்னனு
மனமகிழ்ந் தளவிலா வரிசை செய்திடக்
கனகவிப் புலவனுங் களித்துத் தானுறை
மனையினுற் றந்தணர் வறிய வர்க்கரோ. (சஉஅ)

தானமுந் தருமமும் புரிந்து தாபதர்க்
கூனமி லாடைபொன் னுகந்த ளித்துத்தன்
னேனைய சுற்றமோ டினிய மைந்தருன்
மேனிக ழூடெடு விதுவொத் தெய்தினன். (சஉகூ)

இன்னண மிருந்தன னிருந்த வத்தினர்
மன்னிய பரணிப்பா மாலை வேய்ந்துதற்
றுன்னிய சங்கமர் துகளி லாவுயிர்
கன்னயம் பெறவரு ளுதற் காகவே. (சஙO)

ஆலயம் புதுக்கிநல் லணிய ரோரண
மாலையுஞ் செறித்துமங் தாகி னிப்புன
லேலவே கனவபி டேக மாட்டிவெண்
பாலுறு மோதனம் படைத்துப் போற்றினர். (சஙக)

குருசர ணோதகங் கொண்டு கோதிலா
வருவுரு வாகிய வமல னர்ச்சனை
பெருமையி னியற்றியே பிறங்க நாடொறு
மிருமைசே ரிலிங்கதிட் டையினி லேய்ந்தரோ. (சஙஉ)

மங்கல வாத்தியம் வானத் தூடுறச்
சங்கமர் பூசனை தனைப்பி லாதளித்
தெங்கணுந் தம்புக ழிறைஞ்சி யேத்திடத்
தங்குமா மடத்திலத் தவத்தர் வாழ்ந்தனர். (சஙங)

இத்திறம் வினவிநல் லிரவி தன்குல
வுத்தம வரசனுள் ளுவந்து தேர்கரி

தத்துவாம் பரியடர் தானை சூழ்தர
மெய்த்தவ ருறைமட மேவ நண்ணினன். (கரு௪)

திருமணிக் கோபுர தெரிச னஞ்செயூஉப்
பருமணித் தேர்கரி பரிப தாதியை
யொருமருங் கிருத்தித்தா தொல்லை யேவித்தன்
மருமலர்க் கானடை மருவ வந்தனன். (கருரு)

வந்தக ளங்கனம் மழைய மல்லையர்
தந்துணைச் சரண்மலர் தாழ்த்து மாமுடி
யிந்தியங் களினுற விருத்திப் போற்றினின்
றுய்ந்தன னடியனென் றுரைத்தன் மேயினன். (கருசு)

ஆயிரம் பணமுடி யனந்த னவினு
லாயவிந் திரகுரு வறிவி னனுன
தாயசீர் துதிப்பதற் கரிய தேவென
தாயவா யாற்றுதித் தறைதற் பாலதோ. (கருஎ)

மெய்யர்தம் மெய்யனே வினையி னனுறு
பொய்யர்தம் பொய்யனே புகழும் வீரமார்
சைவர்தஞ் சைவனே தமியன் பாலரு
ளையமி லையனீ யருள வேண்டுமால். (கருஅ)

என்றவன் பணிதலு மிருத்தி யெம்பிரா
னன்றுயர் மனுநெறி யரசை நோக்கிமா
மன்றிறை மலரடி மனத்துள் வைத்தநின்
னன்றிகொள் புகழையார் நவில வல்லரே. (கருகூ)

ஆதவ குலத்தினி லவத ரித்தரு
ளேதமில் சிவநெறி யிறையுங் குன்றிலாய்
மாதவர் பத்தியு மனுவிஞ் ஞானமு
மோதியாங் குன்னிடத் துண்மை கண்டனம். (௪௱௦)

கட்டபின் னவர்செயு நவையை யெண்ணலார்
சிட்டர்க ளென்பது நின்னிற் றேர்ந்தன
மொட்டுறு கூத்தனை யுவந்து நின்னுடைப்
பட்டவர்த் தனைநீ பழிக்க ளித்தலால். (௧௬௧)

மானுடப் பிறப்பினை மன்னி ஞோர்க்கெலா
மூனம துற்றிடு மொன்று நிற்கிலை
யானதை யுணர்ந்தக ளங்க னென்றுபேர்
தேனலர் தாரிஞய் சிவன்றந் தானெஞ. (௧௬௨)

வேந்தனை வியத்தலும் வீர சைவருக்
கேந்தலித் துணைப்புக ழிசைக்கொ ளுநெனக்
காந்துணை யாயெனை யருளிற் காப்பது
வாய்ந்தநுங் கடனென மறித்துங் கூறுவான். (௧௬௩)

தொல்லையில் வருங்கொடுந் தொலைவில் வல்வினை
யெல்லையி லுமதரு ளெய்தி னேற்கிலை
வல்லிபங் கினனுரு மருவு நும்மருள்
புல்லிய வடியன்மேற் புரிந்த வாற்றிஞல். (௧௬௪)

ஈறிலாப் பவக்கட லிடையிற் பட்டுழன்
றேறலா காதவென் னின்ன ஞேக்கிநீர்
மாறிலாக் கருணையம் புணைவ ழங்கலா
லேறினேன் முத்தியங் கரையி லின்றெஞ. (௧௬௫)

மற்படு தோளிஞன் மகிழ்ந்து தன்பெயர்
நற்பதி துகின்மணி யாதி நல்கியென்
சிற்பர தேசிக தேவ தேவெனப்
பொற்புறு பதமலர் போற்றி யேத்தியே. (௧௬௬)

பாருளோர் போற்றுமப் பழைய மாமடத்
தீரமென் கங்கைவீ ரேசர் பொற்பத

(௧௬௧) திருக்குறள்-அ௦௭. அழிவந்த செய்யினும்.

நேருடன் வணங்கினன் னேயத் தான்மணித்
தேருடன் விழாவினைச் செய்து போற்றினன். (கசஎ)

அரசனன் மைந்தனோ டமைச்சர் நாவலர்
வரிசையின் முறைமுறை வணங்கி வாழ்த்திநற்
கருணைகூர் மழையமல் லேசர் கண்ணருள்
பரிவுடன் பெற்றுவாழ் பதியி னெய்தினர். (கசஅ)

மேதக வமைவுறும் வீர பத்திரன்
காதையை நிரந்தரங் களிப்பி னுய்ந்தநிந்
தோதுமா மடத்தினி லுகந்தி ருந்தனர்
தீதிலாத் தவரெலாஞ் சிறப்பி னோங்கியே. (கசகூ)

ஆரமார் புயவக ளங்கன் காதையை
வீரமார் நரசிங்கன் வினவக் கூறிய
பாரமார் சோமசே கரர்தம் பண்பினை
வாரமா யடியனேன் வழுத்த லுற்றனன். (கருo)

அகளங்கச்சோழச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள் எசச.

## சோமசேகரச்சருக்கம்.

### கலிவிருத்தம்.

இருந்தநம் மழையமல் லயரி லீலையிற்
பொருந்தவன் னவர்முறைப் புகழ்கொள் சந்ததி
வருந்தவ மிகுகுர வோர்கள் வாழ்ந்தனர்
பெருந்திற லவரிலோர் பெரியர் மிக்கவர். (க)

வீரசிங் காதன மடத்தின் மேலதாய்
வீரசிங் காதனம் விளங்கப் பாவலர்

வீரசிங் காதன மிளிர்வித் தோரொன
வீரசிங் காதன மேவி ளூரரோ. (௨)

சோமசே கரரெனுந் தூய்ய தேசிகர்
காமமார் முகிலெனக் கருணை பெய்திட
நாமமார் வீரசை வத்தி னற்றிறம்
வாமமார் பயிரென வளருங் காலையில். (௩)

வளவர்கோ ளுண்டருள் வாரி சூழ்புவிக்
கிளையமன் னவர்புரந் திருந்து தம்புகழ்
விளைவுறத் திருத்தினர் விசய மாநகர்க்
கிளரரி யாசனங் கெழுமி யோங்கவே. (௪)

காரண மூர்த்தியாங் கடவுண் மல்லையர்
பூரண கருணைவி பூதி சாத்தவாழ்
தாரண முடைவிரு பாக்கன் றன்கிளைச்
சீரண விபசிலர் செழித்து மேயபின். (௫)

## மேற்படி வேறு.

தேவவழி பாடொளிர் சிவார்ச்சனை நடாயொண்
ணுவலர்கள் வேதியர்க ணற்றவர்கள் சூழப்
பூவலய முற்றுமொரு பொற்குடை நிழற்று
மேவலர்கள் சிங்கமெனும் வீரநர சிங்கன். (௬)

ஆழியுள தேர்கலுழி யானைபரி காலா
ளாழியென வுள்ளவ னருங்குடிக ளியாவு
மாழியென வாழவரு மன்புளவன் மால்போ
லாழிதனை யேவியுல காளுமர சாளுன். (௭)

சேரலர்க டேவியர் திருத்தருக வென்றுஞ்
சேரலர்க ளெம்முடைய சென்னிதரு கென்றுஞ்
சேரலர்க ளும்மடிமை சேர்துமரு ளென்றுஞ்
சேரலர்கள் சேர்தரவெல் செவ்விபெறு வேலோன். (௮)

மண்டலிகர் மன்னர்திரள் வந்துதிறை தந்து
தெண்டனிட வஞ்சலுரை செப்பிமரு வார்தா
மண்டுபுவி கொண்டவர ளித்தபுதல் வோரைக்
கொண்டிடுக வென்றுதவு கொள்கைபெறு கோமான். ()

வீரமட மாதவள் விரும்பியுறை தோளான்
மூரரசர் கையுறு தழும்புபெறு தாளான்
காருருவ மாவலகை கண்டுகளி வாளான்
சூரன்மர பாளர்முறை சூடிநிறை கோளான். (௧௦)

மெய்யுரையி லார்தமை வெறுத்திடு முளத்தான்
செய்யமணி யக்கமணி சேர்ந்திடு களத்தான்
பொய்யுரையி லாநெறி புகன்றுரை வளத்தா
னையர்திரு நீற்றினை யணிந்திடு குளத்தான். (௧௧)

ஆரமுடி யாரடி யணிந்திடு சிரத்தா
னரசமி னள்குடி நயந்திடு முரத்தான்
காரெனவி டாதுதவு கங்கண கரத்தா
னேரும்விரு பாக்கனென் றெழுந்திடு வரத்தான். (௧௨)

ஆதிவிழி யாலெரிசெய் யாதரவ மாரன்
சோதறவி ளங்குநிதி கொண்டிடுகு பேர
னீதிதவ றுமத்தாழுத நித்தியவி சார
னோதறுய கைச்சமய மதார்ச்சுமுப காரன். (௧௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இத்திறத்தி னொலிகடல்சூழ் புவியையளித் தரசபுரந் திருக்குநாளி, லத்தயா மத்திலண்ட கோடியெலாங் காத்தருளு மண்ணலானார், சித்தர்வடி வேசர்களாம் புரவிடலர் முடிவெலீ

(௧௪) காத்தருளண்ணலாதிய பத்தும் வைரவக்கடவுளுக் குரிய திருநாமங்களாம்.

வர் தேவர் ஞானர், முத்தர்கேத் திரபாலர் காரியார் தமிழ்க்
குரிய முதன்மை பூண்டார். (கச)

ஆனவயி ரவக்கடவு ளருஞ்சமய பரிபால ராஞெ ரங்க, மே
னிவருங் கரியசட்டை யரைக்கர்தை மயிர்க்கயிறு விசித்து மா
ர்பி, லூனமிலாப் பஞ்சவடி சிறுங்கா தக்குழலு முறுத்திக்
காதிற், கேனயஞ்செய் யோடணிர்து குப்பாய மாரமுடி யெ
ழில தானேர். (கரு)

அக்குமணி வடம்படிக செபமாலை மயானவெண்ணீ றங்கந்
தோய்ந்து, செக்கர்வடி வக்காவிப் படாம்புனேர்து வயிரவரைச்
சேவை செய்யுந், தக்ஷகுறிப் பாளரயில் குந்தம்வடி வேல்சுரி
கை தடிமுள் வாள்வில், கக்குசுடர்ப் பரசுகண கத்தரிகை யடம்
புமுதற் கையிற் கொண்டே. (கசு)

பிரளயகா லத்தில்வட வாமுகர்தா னுருத்தெழுந்து பிறங்
கல் ?பான்றுங், காளமெழுந் ததுபோன்றுங் காலமா ருதம்
போன்றுங் களித்துச் சிர்தை, மருளவுல குத்தரத்தி லிருந்தெ
ழுந்து தக்கிணத்தின் மருவி யெண்ணி, றிரளரிமா வொடு
பூமிப் பிரதக்கி ணஞ்செய்தெழிற் குடர்தை சேர்ந்தார். (கஎ)

சேர்ந்துமா மகநடத்தின் றிசைநான்குந் தஞ்சேனை செறி
யத் தீர்வர், றோர்ந்ததனிற் படிந்தவெண்ணீ றணிந்துதங்க
ணியமமுற்றி யுளத்தி லன்பு, கூர்ந்துபரா யணஞ்செய்து குல
வுவயி ரவக்கடவுட் கோமான் மேன்மை, தேர்ந்துதிகழ் குருவு
ரைப்பக் கேட்டுமகிழ் திருந்தவணிற் சிறந்தா ரன்றே. (கஅ)

இரவிகுண திசையிலெய்துங் காலத்து மவ்விரவி யிசைந்து
மேற்குப், பரவைபடுங் காலத்துந் தங்கள்கருத் தனைக்குறித்
துப் பரவிப் போற்றி, விரவுசிங்க நாதசங்க நாதவொலி செய்

---

(கசு) அக்கமணி என்பதும்பாடம்.

இடுமவ் வேலை மிக்க, வுரவுளமா கேசர்கேட் டிவண்சங்க மொ லிப்பதென்னென் றுற்று ரன்றே. (௧௯)

உற்றறிவுற் றுடன்மீண்டு சோமசே கரர்சரண மூவந்து போற்றி, வெற்றிபெறு சங்கவொலி செய்தனர்சோ இயரென வின் ணப்பஞ் செய்ய, முற்றவுணர்ந் திக்கரும மவர்க்கடா தெனவையர் மொழிந்து தம்பா, னற்றவரி லிருவர்தமை நோ க்கிநீர் விரைந்தவர்பா னயந்து போந்தே. (௨0)

எங்களது சங்கவொலி யுங்களது சிருங்கவொலி யிங்ங னன் றி, யுங்களது சங்கமென வொலிசெய்வ தரியதன்றென் றுண ர்த்து கென்றார், நங்கள்குரு வெனவோதி மீடிரென நவில வையர் நளினத் தாளிற், பங்கமறப் பணிந்துவயி ரவசமயத் தவருழையிற் பரிந்து சென்றார். (௨௧)

சென்றுங்கள் குரவர்மொழி செய்தியுங்கட் குரைக்கவிவண் சேர்ந்தோ மென்று, துன்றியுரைத் திடலுமவ ரம்மொழிகேட் டேக்கனல்போற் றுள்ளி யெங்கட், கென்றுமுள சிருங்கசங்க மிரண்டுமென மொழியவ்வ ரிசையா துங்கட், சொன்றுசிருங் கமேயுள்ள தெனவுரைக்கக் கொதித்தவர்க ளுருத்தா ரன்றே.

இக்கரும நங்குரவற் கியம்புவமென் றேமடத்தி லெய்திப் பங்க, சக்கமல வடியிணையிற் றாழ்ந்துவாய் புதைத்தருகு சார்ந் தன் ஞோர்த, மிக்கமொழி விண்ணப்பஞ் செய்யவரன் வடி வாக விளங்கு மையர், தக்கதன்றித் தவறுரைத்தார் சோகி யர்க ளெனக்குறித்துச் சாற்று வாரால். (௨௩)

அடுப்பதல்லா மொழியவர்கள் புகன்றுலு நாம்வெகுள்வ தறு மன் றென்று, கடுப்படகர் றால் சமட்டேத தானதன்ட வுடாய வகை நவிற்ற றன்ஞல், வடுப்படகர்ந்தா ராலும் மாறுவது சின மெனழுன் வழங்கும் வாய்மை, தடுப்பதன்றின் னமுமேகிச் சார்ந்தவர்கட் குரைத்திவணீர் சாரு மென்றார். (௨௪)

ஐயரருள் செயக்கேட்டங் கடிவணங்கி யவர்பாற்சென் றன்
பிற் சொற்ற, துய்யமொழி புகன்றிடலு மவர்மறுக்க விவர்
மீண்டு துணுக்கென் றெய்தி, யுய்யும்வகை யவர்க்கடிக ளுண்
மையுரைத் திட்டாலு மொப்பா ரிங்ஙன், செய்யும்வகை யருளீ
ரெனச் சேவடியில் வணங்கவண்ணல் செப்பு கின்றார். (உரு)

சிவகணத்தார் தமைக்கூவிச் செற்றல்செய்து சங்கவொலி
செய்யும் பொல்லா, வவகணத்தார் பாலேகி யரசனதாக் கினை
கூறி யகற்று மென்னத், தவகணத்தார் வெகுண்டெதிர்ந்து
சாற்றிடவும் பிடித்தபிடி தவாது தீய, பவகணத்தா ரிகழுமற்
றும் பரிந்தனநல் குதுமிதுநீர் பாற்று மென்றார். (உசு)

எமக்கில்லா தொன்றுளதே னீர்தரவாங் குதுமெம்பா லிய
ன்றதேது, முமக்கில்லா ததையிரக்கி லியாமளித்துஞ் சங்க
விரு தொழியே மென்னக், கமைக்குரியோ ரிறைக்கறியக்
கழறியருள் பெற்றுவெல்லக் கதைகளாதி, சுமக்கவல்ல படை
யெடுத்துத் தக்கன்மக மழித்தவனைத் துதித்துச் சூழ்ந்தார். ()

அறம்பாவம் போன்றுஞா னஞ்ஞானம் போன்றுமும்ப ரசு
ரர் போன்றார், திறம்பாச்சத் துடமசத்தி யப்போன்றுந் தப
னனொடு திமிரம் போன்று, மறம்பாய்கல் லுரவானால் வாய்
போன்றும் புண்டரீக மறியே போன்று, திறம்பாவுட் சமய
முடன் புறச்சமயம் போன்றும்போர் நேர்ந்தா ரன்றே. உஅ)

மேற்படி வேறு.

எண்பதச் சரப முன்னா ளிரணியற் கொன்ற சீயம்
புண்படச் சமர்செய் வெற்றிப் போர்புரிந் தமையா லண்டர்
விண்படர் சரப மொத்தா ரிசைவயி ரவர்த மண்டர்
பண்பிலுஞ் சானனைத் தந்தை யொத்தனர் புகலுங் காலே. (உகூ)

இப்பரி சம்போர் செய்யு மெல்லையில் வேயர் சென்றே
யொப்பறு மரசற் கோதவுள்ளழிந் திரங்கி யீதங்

கெம்பரி சதனாற் றீரு மீசனல் லடியா ராஞோர்
மெய்ப்படு குருதி காணில் வீயுநஞ் செல்வ மென்றே. (௩௦)

அரசனு ரஞ்சி சூழ்ந்தே யமைச்சரை நோக்கி மிக்க
குரவரை நோக்கி வேதக் குழுவினர் தம்மை நோக்கி
விரவுநா வலரை நோக்கி மேதக வோரை நோக்கிப்
புரிவதென் விலக்கு மாறென் புகன்றிடு மெனப்ப கர்ந்தான்.()

அங்கவ ரரசை நோக்கி யறைகுவ ரடியர்க் குற்ற
பங்கம தகற்றல் வேண்டும் பரிசரிப் பரிய தாயிற்
சங்கர னடிய ராஞோர் தமதிடர் கேட்டு மிங்ஙன்
றங்குத லறமன் றெய்தித் தடுப்பதே யறம தாமால். (௩௨)

வையகம் புரக்கும் வேந்தன் வளருயிர் காக்கு நீர்மை
யைவகைத் திறம தாகு மவைதன்னுற் றற்சூழ்ந் தோரால் [ற்
வெய்யவெம் பகையாற் சோரம் விளைப்போரா னுயிர்க டம்மா
செய்யுறுந் தீது தீர்த்துச் செவ்விதிற் புரப்ப வென்ப. (௩௩)

கோனெறி கோடுங் காலக் கொண்டலு மில்லா வாழ்க்கை
மானனார் கற்பு மில்லா மாதவர் தவமு மில்லா
வூனமின் மறையோ ராற்று மொழுக்கமு மில்லா தெய்வந்
தானுமுன் னில்லா தோங்குந் தருமமு மில்லா தன்றே. (௩௪)

கலியது பெருகுந் தீய கருமமும் பெருகும் பாவ
வலியது பெருகுங் குக்கி வன்பசி பெருகு மேற்கும்
பலியது பெருகுந் தீராப் பழியது பெருகுங் கோவென்
னொலியது பெருகு மென்றே யுரைத்தன ரரசற் குள்ளார். ()

அம்மொழி கேளா வேந்த னன்னவர் தமையுங் கொண்டு
வெம்மொழி யறிக்கை செய்த வேயரை நோக்கிச் செல்லா

---

(௩௩) இது பெரியபுராணத்துள் மனுநீதி கண்டபுராணம் ௩௯-வது செய்யுளின் கருத்து. (௩௪) கொண்டலு மில்லாமை-மழைபெய்யாமை. (௩௫) கோவெனல் - இரக்கக்குறிப்பு.

விம்மொழி யெங்க ளுற்ற தேகுமி னங்க ளென்று
செம்மொழி புகன்று நான்கு சேனையோ டெழுந்து வந்தான்.

வந்துமா மகதீர்த் தப்பான் மலைவுறு மிருவோர் தம்மை
வந்தனை புரிந்து வெள்ளி மலையினான் வடிவம் போன்று
வந்துள பெரியோர் நீவிர் வழுத்துமுட் சமயர் தீது
வந்துறப் பொருத லொன்று வையகத் தியற்கை யன்றால். ()

என்றுரைத் திருதி றத்தோ ரிகலிய படையை மாற்றிக்
கன்றுதல் வந்த வாறென் கட்டுரைத் திடுநீ ரென்னக்
குன்றனை குயவுந் தோட்டோ மானிவை கூற வன்னார்
சென்றுரைத் தனர்கள் வந்த செய்தியின் வாய்மை யெல்லாம்.

கேட்டன னரச னிப்பாற் கிளர்சதுர் மறைக ளாயுஞ்
சேட்டர்க ளாதி யாய திறத்தினர் தம்மை நோக்கி
நீட்டிய பகையை யாற்று நெறியுணர்ந் துரைமி னென்ன
வாட்டுணைக் கரத்தான் கூற மற்றவ ருரைக்க லுற்றார். (௩௯)

இவரவர் மொழிந்த மாற்றத் திலிகித மாட்சி சாட்சிக்
கெவர்தமை வினவ லாவ தில்லையா லுலக ரல்லர்
தவரிவ ருவரி மீறித் தாவிடிற் றடுப்ப தாரிவ்
வவனிகம் பித்தாற் கையா லமைப்பரு முளரோ வன்றி. (௪௦)

வடவரை யசைந்தா லம் மற்றவ் வரையினை நிறுவு வாரார்
சுடரொளி யிரவி கீழ்பாற் றோன்றுத றவிர்ந்து சாயுங்
குடதிசை யுதித்தா லந்தக் கோளினை மாற்று வாரா
ருடுவக விடத்து திர்ந்தா லுறுத்தலாந் தகைமைத் துண்டோ.

---

(௩௯) அறிக்கை - அறிவிக்கை. யேயர் - ஒற்றர்.

(௪௦) இலிகிதம் எழுத்து; அது ஆவணம் ஆட்சி அனுகை. இதனை "ஆட்சியி லாவணத்தி லன்றிமற் றயலார் தங்கள் - காட்சியின் மூன்றி லொன்று காட்டுவாய்" என்பதனானும் அறிக. பெரியபுராணத்தில் தடுத்தாட்கொண்டபுராணம். ருகு.

தரணியி லுருமு வீழ்ந்தாற் சத்திரந் தாங்கு மோசூழ்ந்
தெரியெழுந் தடர்ந்தாற் றாறங் கெதிர்நின்று தடுத்த லாமோ
வரியெழுந் தடர்ந்தாற் பூளை யலரெதிர் நிற்க வற்றோ
பெரியவர் சினந்தா லம்போற் பேதையர் மொழிவ தென்னே.

சமர்நிடச் சமஞ்செய் தேசீர் தூக்குங்கோல் போன்று சா
யா, தமைமந்தொரு பாற்கோ டாமை சான்றவர்க் கணியாங்
கோணிற், குமைந்துகங் கறுத்து நீங்காக் குற்றம்வந் துறுமின்
னோர்தந், தமந்தவிர் தவத்தைத் தெய்வத் தன்மையா லறி
தல் வேண்டும். (சங)

என்றவ ரியம்பக் கேளா விறைவனு ளுவந்திச் செம்மே
லொன்றுறுங் கருணை யாகயா னுய்ந்தன னென்று செம்பொற்
குன்றவிற் குழக னண்ட கோடியி னுயிர்கட் கெல்லா
நின்றசான் றவனின் னோர்த நிலையினை யுணர்த்து மென்றே. ()

ஆதரத் துபய வாதி யருந்தவர் தமையு நோக்கி
நீதியிற் சங்க வாத நெறியினை யுணர மாட்டேன்
வாதம தொழிந்து நுங்கண் மகத்துவத் திறத்தாற் சங்கைப்
போதவிட் டித்தீர்த் தத்திற் போதுமா புரிதி ரென்றான். ()

இன்னண மிசைதல் வேண்டு மென்றிறை கமல மன்ன
பொன்னடி தாழ்ந்து போற்றப் போந்ததென் றிருவர் தாமு
நன்னெறி மொழிந்தாய் நீதி நரபதி நின்போற் பாரின்
மன்னிய வரசற் காணே மென்றுள மிகம கிழ்ந்தே. (சரு)

சொற்றது புரிது மென்று சூழ்ந்தன ரவருள் வந்தோ
ருற்றிட வெங்கட் குங்கட் குறுமிட முரையு மெனப்
பற்றறு மகேச ரெங்கள் பால்வட திசையென் றோத
மற்றவர் தென்பா லெங்கள் வயமென விசைந்தார் மன்னோ. ()

(சஉ) அரி - காற்று. (சங) இது நூற்றுப்பதினெட்டா வது திருக்குறளின் கருத்து.

அஞ்திகா ரோண நாத ரமர்வது வலமதாலு
மஞூவீ ரேச ரென்னு மண்ணன்மே விடம தாலு
மஞூசங் கமர்க ளாதி சோகிய ராத லாலு
மஞூசற் குருதா னம்மா தலாலுர்தாம் வடக்கி சைந்தார். ()

ஆதியார் பங்கி லுற்ற வம்மையங் குறுத லாலு
மாதியாம் வயிர வேச ரருளிட மாத லாலு
மாதிசோ கியர்க ளென்னு மமைதிய ராத லாலு
மாதிசற் குருதா னம்மா தலாலுந்தெற் கவரி சைந்தார். (ருக)

மாமடத் திருந்தெ ழுந்து வந்துமா மகதீர்த் தப்பாற்
சோமசே கரரும் பைம்பொற் சோடசக் கால்ப தித்த
காமமண் டபத்தி னுப்ப ணற்றவி சின்கண் மேவிக்
காமமார் செபவ டத்தைக் கரத்தமைத் தினிதி ருந்தார். (ருO)

இருந்துயர் சிவத்தி யானத் திலகுமெம் மிறைவர் பாதம்
பொருந்துறு மடியார் கூடிப் பூசனை புரியப் பாரோர்
வருந்தவ மென்று வாழ்த்தி மல்கிவின் றிறைஞ்ச ஞான
வருந்தவ ரனேகர் சூழ்ந்தங் கருகினி லிருந்தா ரன்றே. (ருக)

வயிரவ சமயத் தாரு மாமணித் தவிசின் மீது
தயிரியத் துடன்சே ராசான் றன்புடை சூழ்ந்து தங்க
ளுயிரெனும் வயிர வேச ருயர்பதந் தியானித் தேத்திச்
செயிரறு சிருங்கஞ் சங்கந் திகழொலி செய்தி ருந்தார். (ருஉ)

வீரமா கேச ரெல்லாம் வியன்வடக் குறலு மிக்க
சீரில்சோ கியர்க ளெல்லாஞ் சேர்ந்துதெற் குறலு நோக்கித்
தாரணி புரப்போன் றுனு மமைச்சரா தியர்தற் சூழ
வேரணிக் குடபா லெய்தி யிருந்தனன் செய்கை சொல்வாம்.

துவரிவ ரிருவர் தாமுந் தங்குர வர்கடம் பாத
மவையறப் பணிந்து வாதி னலம்பெறு சங்கர் தம்மைச்

சிவபர மாக வைத்துச் செய்யுமர்ச் சனைகள் செய்து
சுவைமிவே தனம டைக்காய் தூபதீ பாதி நல்கி. (ருச)

மங்கல வாச்சி யங்கள் வானவர் முழக்க யோசர்
மங்கல வாசி கூற மற்றுளோ ரன்பு மீற
மங்கல வரசன் ருனு மகிழ்ச்சுசங் கனிந்து தேற
மங்கல சங்கந் தம்மை மரபினிற் கரங்கொண் டேகி. (ருரு)

புணையுமொன் றமைத்து மேலாம் பொற்றவி சதன்மே லேற்றி
யிணையிலத் தடத்து ளுப்ப ணெய்தி யல் லவுருங் காணத்
துணையதாஞ் சங்கந் தம்மைத் துதித்திரு வோரும் வாழ்த்தி
மணமுறு மாலை சாத்தி வைத்தனர் வாதி ளுலே. (ருசா)

வைத்திரு வோரு மீண்டு வந்தனர் கரையின் மீதே
யெய்த்திடை யுமையாள் பாகற் கினியராம் வீர சைவ
ருய்த்திடு சங்கைச் சங்க முயர்விண்ணோர் மண்ணோர் வாழ்த்த
மெய்த்துயிர் பெற்றுப் பீட மேலுற மிதந்த தம்மா. (ருஎ)

படந்திக ழரவப் பூண்கொள் பரம்பரன் கருணை யானு
மிடந்திகழ் மெய்ம்மை முன்னின் றிலகிட மொழிவ தானு
மடந்திகழ் மகேசர்க் குள்ள மாவிரு தானு மாசத்
தடந்திகழ் சங்கம் வாயாற் றழங்கிய தோமென் ருேசை. ()

ஓமென வுரைத்தல் சர்வ வியாபகத் துருவ மாகு
மோமென வுரைத்தன் மந்தி ரயந்திரத் துயிர தாகு
மோமென வுரைத்தன் மேலா மொளிர்பரப் பிரம மாகு
மோமென வுரைத்தன் முத்தி யாகுமென் றொலிக்குஞ் சங்கம்.

மலைமக ளிறையைப் போற்றி வழுத்திமுன் வீர சைவ
நிலையினை யுணர்த்து கென்று நேயமுற் றிரந்து கேட்பத்
தலைமவே தாக மத்தின் றன்மையங் கிரண்டு பாலா
முலைவில்பூ ருவமொன் றேங்கு முத்தர மொன்றென் றேதி.

(ருஎ) எய்த்துடை - எய்த்த இடை; அகரந்தொக்கது.

பூருவங் கரும காண்டம் புகன்றிடு முத்த ரந்தா
னேருறு ஞான காண்ட நிகழ்த்திலிங் காங்க யிக்கச்
சீருறும் வீர சைவத் திறநீதென் றுரைத்த வாய்மை
யேருற விளக்கல் போன்றுங் கெழுந்தது சங்கத் தோலம்.(௬௧)

கையடை யாகு மெம்மைக் கைவிடல் கடவ தோவென்
றையர்செங் கரத்தை நாடி யரற்றுதல் போல வோலிட் [தை
டுய்யவந் தணைந்தோ மென்னு முண்மைபோ லொன்னார் சிந்
நையகம் வீர சைவ நலம்பெற வந்த தன்றே. (௬௨)

இரவா ரிதியிற் றோன்றிக் கிளர்ந்தன மிருவே மெம்மு
ளாரவன் சோமன் றன்னை யணிந்தப்பே ரணைந்தீ ரெம்மை
வாரமாக் கொண்டு சங்க மன்னெனும் பெயர்கொள் கென்னு
வீரமார்ந் தொலித்து வந்த மேன்மைபோன் றணைந்த தம்மா.

உம்பர மாகு மெம்மை யும்பர மல்லார் வாய்வைத்
தும்பரி லொலித்தார் மிச்சி லுற்றிடு பவங்க ளர
வும்பர மாக வந்தே மொழித்தருள் புரிகென் றோத
வும்பர்தம் பெருமா னேமென் றுபயசெங் கரத்தா லேற்றார்.

தாயர்கை குழவி நாடித் தவழ்ந்துவந் திவர்தல் போன்று
நேயவா ரிதியை யாற்று நீர்விரைந் தணுகல் போன்றுந்
தூயகாந் தத்தி ரும்பு தொடர்ந்ததி லுறுதல் போன்று
மாயையி லாசான் கைம்மேல் வளைபடர்ந் துற்ற தன்றே.(௬௫)

வையைமா நதியாங் குற்ற மாமகத் தடஞ்சம் பந்தர்
கையிலே டொளிருஞ் சோம சேகரர் கரத்திற் சங்கஞ்
செய்யநல் வழுதி சென்னி சீரமைச் சடியார் கூட
லையமில் கும்ப கோண மமணர்சோ கியர்க ளாமால். (௬௬)

---

(௬௩) அப்பேர் என்றது சோமசேகரரென்னும் பெயரினை.

(௬௬) சோமசேகரதேசிகர்வெற்றி ஆளுடையபிள்ளையார் வெற்றி போன்றதென்பது.

தண்டுகண் களித்தே யார்த்துக் கற்பக மலரின் மாரி
விண்டலத் தோர்க ளேர்த்தார் விளங்கிய வுயிர்கட் காதி
யண்டநா யகரை வாழ்த்தி யஞ்சலி சென்னி சேர்த்து
மண்டலத் தோர்க ணோக்கி வானவர் போன்றார் நோக்கால். ()

அரசனல் லமைச்ச ராதி யனைவருந் திரண்டே யாழித்
திரைகடன் முழக்க மென்னச் சிவவர கரவென் றேத்திச்
சுராபர வீச னன்ன சோமசே கரர்தஞ் செய்ய
மரைமலர்த் தாள்க டாழ்ந்து வணங்கிமுன் மகிழ்வ தானார். ()

பாதபுண் டரிகந் தம்மைப் பன்முறை வணங்கி நாவாற் [ன்
போதவாழ் ந்தெடுத்துக் கண்ணீர் பொழிதர நோக்கிக் கையா
மேதகப் பரிசித் தங்கள் விழுத்துகண் மெய்யிற் றோய்ந்து
பூதகம் புனித மாகப் புளகித்தா ரடிய ரெல்லாம். (சுசு)

அரசனவ் வதிச யங்கண் டன்புமீக் கூர வையர்
கரதலத் தழைத்த சங்கைக் கனகமின் மணிகு யிற்றிப்
பெருவொளிச் சிவிகை யிற்பொற் பீடமிட் டதன்மே லேற்றிப்
பரவுபட் டினவ லம்பண் ணுவிக்கவுட் கொண்டான் பாங்கின்.

முரசினை யறைந்து மேலா முதுநகர் முழுதும் பந்தர்
விரவுபூ ரணகும் பங்கண் மிக்கபூங் கமுக ரம்பை
மருவிள நீர்பூ மாலை மணியொளிர் தோர ணங்கள்
பெருநறைத் தூப தீபம் பிறங்கிட வலங்க ரித்தே. (எக)

ஆலயந் தோறு மிக்க வபிடேக மாடை புட்ப
மாலைநை வேத னங்கண் மகிழடைக் காய்தூ பாதி
மேலுறு நிருத்தங் கீத மிசுமுப சார மெல்லா
மேலுற வமைச்சை நோக்கி யியம்பிட வவன்செய் வித்தான்.

சோமசே கரர்தஞ் செய்ய துணைமலர்ச் சரணம் போற்றிப்
பூமலி சங்கத் தோடும் புரவலஞ் செயவென் னுள்ளங்

(சுசு) பூதகம் - உடல்.

காமம தாயிற் றைய கருணைபா லிக்க வென்று
ஞெமென வருட்கண் வைத்தா ருளங்குளிர்ந் துவகை யாலே.

மற்றது செய்ய வெண்ணி மன்னன்மா தவரை நோக்கிப்
பெற்றநங் குரவர் தம்மைப் பெரிதலங் கரிப்பீ ரென்ன
வற்றது புரிது மென்று ரமைச்சரை நோக்கி வேந்தன்
வெற்றிசெய் நான்கு சேனை விரவிடச் செய்க வென்றான். ()

திருமுடி மகுட மாகச் செஞ்சடை திருத்தி யையர்
திருநுத லிலக நீற்றைத் திரிபுண்ட ரத்திற் றீட்டித்
திருகிறை வடிந்த காதிற் சிறந்தகுண் டலங்கள் சேர்த்துத்
திருமணிக் களத்திற் பஞ்ச தாழ்வடந் திகழச் சாத்தி. (எரு)

வாகுவிற் றரள வக்க வலயங்கள் செறித்துத் தக்க
வாகமுன் கைக்குப் பைம்பொற் கங்கண மமைத்துச் செங்கைக்
கோகையின் மனுவங் குட்ட மாலிகை யுறவே பூட்டி
மோகமாய் நந்தி வாழு முத்திரை யாழி குட்டி. (எசு)

மருங்கினிற் காவி யாடை வயங்குற வீக்கி மேலாய்
நெருங்குற யோக பட்டை நிறுவிப்பட் டுத்த ரீய [துத்
மொருங்குசந் திரகா வித்து சொளிர்பிதாம் பரமும் போர்த்
திருந்துவெண் ணீறுத் தூள னந்திமிர்ந் திலங்கச் செய்தே. ()

அடியவ ரகத்துஞ் சென்னி யதனினு நான்கு வேத
முடிவினு மாக மத்தின் முதலினுங் கனக மன்றி
னடுவினுங் குடியி ருக்கு நளினபொற் சரண மீது
வடிவுள வீர கண்டா மணியினைத் தரித்தா ரன்றே. (எஅ)

இவருறும் வீர சைவ குரவரா யிலிங்காங் கத்தி
னவிரள ஞான மொப்பி லருந்தவர்க் கருள்செய்வார் தம்மை
நவமணி யிழைத்த பைம்பொ னலம்பெறு சிவிகை மீதி
லவருமஞ் சலிசெய் தேத்த வெழுந்தரு ளச்செய் தாரால். ()

சோடச கலையிற் றன்ன தூயவெண் குடைநி ழற்ற
நீடுபாற் றரங்க மன்ன நிலவுசா மரையி ரட்ட
வாடன்மாப் பரிதி யன்ன வாலவட் டங்க ளாட
வாடைசேர் வசந்த மன்ன வளரொலிச் சிவிறி வீச. (அ௦)

நந்தலி லாத வெற்றி நந்தியந் துவச மாட
வந்திகர் துதியு நான்கு மறைகளா கமமுங் கூட
முந்துமூ வர்கடே வார மொய்த்திரு மருங்கும் பாட
மந்திர வாத வூரர் வாசக வாழ்த்து நீட. (அக)

மகரதோ ரணஞ்சே ராடி மன்னுதூ வட்டம் வண்மை
பகாரு மிடக்கி யஞ்சூழ் பரிசைதீ வர்த்தி பல்க
தகரகுங் குமம்பன் னீர்கொள் சந்தனக் குழம்பு தூவ
நிகரறு தொண்டர் புட்பாஞ் சலியுட னேர்நின் றேத்த. 0

தோற்கரு விகளுந் தொக்க துளைக்கரு விகளுங் கஞ்சப்
பாற்கரு விகளுங் கண்டம் படுகரு விகளு மின்ன
நாற்கரு விகளை யப்புக் கருவியி னண்ணி வண்ணின்
மேற்கரு விகளு ளான மிக்கெழுந் தொலிக்க வெங்கும். (அங)

சின்னமெய்க் காக ளங்கள் செறிகொம்புக் காக ளங்கள்
சின்னரி காக ளங்கள் செகவுரி பொற்கா ளங்க
ளன்னய காக ளங்க ளவுரிகா களங்கள் பூமி
மன்னுமா திரங்க ளெங்க வளரொலி வழங்க மாதோ. (அச)

அதிர்வடி யுருமு வென்ன வண்டமட் டதிர வாசப்
புதுமலர்க் குழலார் கீதம் பொருந்துகட் டுருவ மாதர்
மதிமருண் டிடச்சங் கீத வகையெலாந் தெரிந்து பாடச்
சதிவிதப் பரத மொக்கத் தையலா ராட மன்றே. (அரு)

இன்னண முரசா ரங்க ளேய்ந்திடக் கங்கை மாது
துன்னிய பவத்தைத் தீர்த்துத் துலங்குமா மகத்த டத்தைப்

பொன்னணி புரத்தை யீசர் பொலிசின கரத்தைச் சூழ
மன்னியே வலம தாக வந்துமா மடத்தைச் சார்ந்தார். (அசு)

சார்ந்தருட் கங்கை வீர பத்திரர் தாள்கள் போற்றிச்
சேர்ந்தருட் சென்ன வீர பத்திர ரெனப்பேர் சேர்த்திப்
பேர்ந்தருட் குருபீ டத்திற் பின்முடி தாழ்த்தி யேத்தி
யார்ந்தருள் வீர சிங்கா தனத்தினிற் சங்க மைத்தார். (அஎ)

அமைத்தபின் வெற்றிச் சங்குக் ககிலநா யகர்க்குப் பச்சை
யுமைக்குவீ ரேச ருக்கு முகந்தபூ சனைசெய் தங்க
ணிமைத்திடா விண்ணோ ருண்ட வின்னமு துவர்த்து வெஃகக்
கமைத்திற மகேசர் பூசை காதலின் முடித்திட் டாரால். (அஅ)

புவியர சர்கள்பொன் மாரி பொழிவடோற் பொழியப் பொற்
கவியர சர்களு மேத்தக் கருதிலிங் காங்க யிக்கத் [பிற்
தவவர சர்களும் போற்றச் சங்கவெற் றியிற்சி றந்த
சிவவர சரும்வெல் வீர சிங்கவா தனத்தி ருந்தார். (அகூ)

இருந்தபின் னரச னுதி யியைந்துளோர் தங்கட் கெல்லா
மருந்தவத் தோர்க்கு மெய்ஞா தருளினு லமர ருண்ட
மருந்தன வனமுந் தூசு மணிப்பல கலனு மற்றும் [ன்றே.
பொருந்துற வளித்தார் வேந்தும் புசித்துமேற் புனைந்தான் ம

அரியவிவ் வீர சிங்கா தனத்தின்மான மியத்தை யைய
விரிவுற வுரைத்தி யென்றே யரசனும் வினவ மிக்க
இரிஷி லாயந தோன்றிக் கிளருமா தனத்தின் மேன்மை
பரிவினக் குரவர் சாற்றப் பலமுறை பணிந்து பண்டால். (கூக)

மன்னனுங் கேட்டு வந்தே வளர்மணிப் பணிப்பட் டாடை
சொன்னமாப் பரிய சுக்க டொல்வீர மங்க லத்தோ
டுன்னரு மோலை யாமங் கலமுமே யுதவிக் கன்மேற்
றுன்னுசா தனம்வ ரைந்து துதித்தடி பணிந்தி ருந்தான். 0

வயிரவ சமயத் தாரும் வாதினிற் றாழ்ந்தோ முள்ளச்
செயிரற வெம்மே லன்பு செய்கெனப் பணிந்து போனு
ரயிரறும் புவியை யாளு மரசனும் விடைபெற் றன்பி
னுயிரவர் பாலி ருத்தி யுற்றுவாழ் பதியைச் சேர்ந்தான். ()

சொல்லரும் வெற்றி கொண்ட சோமசே கரரெந் நாளும்
புல்லுதிக் கயமு மட்ட புயங்கமு மரியு மாற்றல்
வல்லகூ ருமமுந் தாங்கும் வளர்வெள்ளிப் பொருப்பை யன்ன
வெல்லரும் வீர சிங்கா தனத்தினில் வீற்றி ருந்தார். (கசுச)

கலித்துறை.

மாட மாளிகை கோபுர மணிபல ருயின்று
நீடும் வச்சிரத் தாளிக ணிரைநிரை வகுத்தே
யாட கத்தினு லிழைத்துய ரணிமதிற் சிகரத்
தாடு மின்கொடி யிரவிவான் றேரின்மீ துலவும். (கசுரு)

மேனி லைத்தளத் திடபங்கள் விண்ணிட பத்தைத்
தானெ திர்ந்திடுஞ் சிங்கங்கள் சிங்கத்தைத் தழுவுங்
கான கன்னியர் கன்னியைத் தழுவுவர் கும்ப
மான கும்பத்தை யடுத்திடு மும்பதத் தணுகி. (கசுசு)

வீர பத்திரத் கணிசின காமிங்கள் மீளிர
வார பத்திர மாசுவுந் திருப்பணி யமைந்தே
தார பத்திரைக் கவிர்மணிக் கோட்டமுந் தண்பூ
வீர பத்திர னர்தன வனங்களு மிலகும். (கசுஎ)

தாறு காய்கனி நனைமலர் தளிரிலை தழைந்தே
வீறு நீள்பல சோலைகள் விரவியே வன்னுட்
டேறு கற்பக வனநிக ராய்ப்புய லிரங்கி
யாறு தற்கிட மாகியங் கமர்ந்திடு மணியாய். (கசுஅ)

பங்க யங்குமு தங்கழு நீரிவை பரிதி
திங்க ளின்றியே மலர்ந்திடுஞ் செம்மணி தாளச்

சங்க வாவியு மோடையுந் தடாகமு மரம்பை
மங்கை மார்புன லாடுதற் குரித்தென மருவும். (கூகூ)

இத்தி றத்தமா மடத்தினி லெண்ணிலார் பரவ
வத்தன் மெய்த்தரு ஞானந்த வின்னமு தறிவாற்
றுய்த்து கந்தநஞ் சோமசே கரப்பெயர்த் தூயோர்
மெய்த்த பேரருட் சந்ததிக் குரவரோர் விபுதர். (க00)

வேட தாரிய னெனப்பல விதவடி வினைக்கொள்
வீடில் சாரங்க பாணியா மிறைவர்போற் புவியி
னீடு சற்குரு வாயுயிர் புரந்திடு நிலையா
னூடு சாரங்க தேவென நண்ணினர் மற்றும். (க0க)

நண்ணு நாமரு பக்கிரி யையினடித் துறுங்கான்
மண்ணை யாளுமல் லிகார்ச்சுன ராயனு மகிழ்வா
லன்ன னீர்வனத் துழைநிலை வழையுஞ்சான் கவெனத்
தின்னை மாய்வரச் செய்துமேற் றிருக்கணைக் கதனால். ()

வந்த மான்களை மகிழ்ச்சியிற் போக்கினர் வனத்தி
லந்த வேதுவி னப்பெய ரடைந்தது மாமாற்
கொந்து லாவுதார்ப் புயத்தனும் முரைசழ லிறைஞ்சி
யெந்தை நும்பெயர் சாரங்க தேவென விசைத்தே. (க0ங)

அன்ன வன்மல்லி கார்ச்சுனத் தனுதிமா மடத்திற்
பொன்னி னுறுமுயர் பீடமா திபபுரிந் தவர்த
மன்னு பூசையு மாதவர் பூசையும் வகுத்தான்
றுன்னு சாரங்க தேசிகர் மடமெனத் துலங்க. (க0ச)

ஆந்த ரத்தவன் பத்தியிற் றத்தலைத் தமர்ந்து
போத மார்குரு சாரங்க தேவர்பாற் போந்து
காதலாற்றிருக் குடந்தையம் பதியினைக் கலந்தே
யோதும் வீரசிங் காதனத் திருந்தன னுகந்தே. (க0ரு)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மெச்சுசற் சனரே சுத்த சிவாசார மிகுசம் பந்த
ரச்சமில் விபூதி ருத்தி ராக்கமார்ந் தைந்தெ ழுத்தைப்
பொச்சமற் றுளத்தி லெண்ணிப் புகழ்பரி பூர ணத்தி
னிச்சய வேக லிங்க நிட்டையே நிட்டை யானோர். (க0சு)

இயமமா தியவட் டாங்க யோகமு மியைந்த யோகர்
பயிறரு பிருங்கி நந்தி வீரபத் திராற் பல்கு
சயமுள சகல வேத புராணசாத் திரசம் பன்னர்
வயமிகுந் திலங்குந் தெய்வப் பிருதுவி மாம கத்தர். (க0எ)

வரமிகு கும்ப கோண மாமட மதனின் ஞானம்
விரவிய வீர சைவ வீரசிங் காத னத்துக்
கருகசா ரங்க தேவா சிரியர்தம் மடிக ளன்பாற்
பரவிய மகேசர் சூழப் பண்பின்வீற் றிருக்கு மெல்லை. (க0அ)

அடியவ ராயி னோர்க ளையர்தாள் வணங்கி ஞான
மடிவிலத் துவித ஞான மாண்பெமக் குணர்த்து கென்ன
வடிவினீ றணிந்து மன்னி மாகுரு தியானஞ் செய்தே
படிபுகழ் ஞான போதம் பக்குவர்க் குரைக்கின் றரால். ()

அனுதியின் றுண்டா மென்னு மாரண வாக மங்க
ளனுதியின் றுன்மா வென்ப தாய்ந்திடி னதுவே தாந்த
மனுதியுண் டான்மா வென்ப தாய்ந்திடி னதுசித் தாந்த
மனுதியென் றிங்ஙன் சொற்ற தங்கமா கையினு லன்றே. ()

செகசீவ பரங்க ளென்ப செப்புமுப் பொருளென் றுளும்
பகர்மறப் பறிவு பந்த முத்தியும் பரத்துக் காகா
மிகுமுயிர்க் காகு மென்னு மேன்மையாற் சீவ னுதி
நிகழ்சக மநித்த நித்தம் பிரமமென் றிடுநீள் வேதம். (ககக)

---

(ககக) பரமனுதி என்பதும் பாடம்.

பதிபசு பாச மென்னப் படுவமுப் பொருள ளாதி
பதியரு ளமல னாகும் பசுவவ்வஞ் ஞான போதன்
பதியுறா துயிரைச் சாரும் பாங்கதஞ் ஞான பாசம்
பதிபசு பாச நீர்மை பகருமா கமங்க ளிங்ஙன். (கசஉ)

உததியென் பதுசி வன்மற் றுயிர்கணீ ருப்புப் பாச
முததியென் பதுவிம் மூன்று மொத்தலுக் குவமை கூறி
னுததியென் பதுசி வத்தோ டியிருடன் படலா னுற்ற
துததியென் பதிற்சி வத்துக் குவருறா வுயிர்நீ ருக்காம். (ககங)

ஆதலா லான்மா தற்பந் தித்திடு மாண வாதி
யேதமா மலங்க டம்மி லியைந்திரு வினையா லெய்தும்
போதநந் திக்கா லின்முற் கறங்கெனச் சுழல்வு போக்கிக்
கோதிலா தருள்வ ஞான குருலிங்க சங்க மங்கள். (ககச)

வேதாந்தத் துஞ்சித் தாந்தத் தும்பொருள் விரிவிம் மூன்றே
போதாந்த முடிவி லேயப் புகல்வீர சைவ மாகு
நாதாந்த வுரையி னாற்றா னவின்றவஃ திரண்டு பாலாம்
பேதாந்த விதிய தொன்று பிறங்கிடும் பத்தி யொன்றாய். ()

சாற்றிடு மபக்கு வர்க்குச் சார்தரும் விதிய தாகு
மேற்றமார் பக்கு வர்க்கே யிசைதரும் பத்தி யாகு
மாற்றலில் விதிமார்க் கத்தோ ரடைவர்புண் ணியபா வங்கள்
போற்றிடும் பத்தி மார்க்கர் பொருந்துபுண் ணியமே சார்வர்.

சொற்பல புண்ணி யத்தாற் றோற்றிடுஞ் சிவாமி சந்தான்
விற்பல சிவாமி சத்தான் மிகுசிவ பூசை யாகு

---

(ககங) கடலும் கடனீரும் அந்நீரினுப்பும் முறையே வியாபகமும் வியாத்தியும் வியாப்பியமும் ஆமாறுபோலப் பதிபசுபாசங்களுமாமென்பது. வியாபகம் - மிகுநிறைவு. வியாத்தி - சமநிறைவு- வியாப்பியம் - ஒன்றில் ஒடுக்கநிறைவு. (ககரு) ''முடிவிலேதான் புகல்வதாம் வீரசைவம்' என்பதும்பாடம்.

நற்பல பூசை யாற்று னல்லறி வினிதுண் டாகும்
பற்பல வறிவான் மேலாம் பத்தியங் குரிக்கு மன்றே. (ககஎ)

பத்தியென் பதனுன் மிக்குப் பயின்றிடு சரியை யுண்டாம்
பத்தியென் பதனுற் பண்பிற் பகர்கிரி யையுமுண் டாகும்
பத்தியென் பதனு லோங்கிப் பயன்றரு மியோக முண்டாம்
பத்தியென் பதனு னன்கு பலிக்குஞா னமுமுண் டாமால். ()

ஞானபூ சனைகோ டிக்கு நிகருநற் றோத்தி ரந்தான்
ஞானதோத் திரங்கோ டிக்கு நிகருநன் னுருச்செ பங்கண்
ஞானமார் செபங்கோ டிக்கு நிகருநா டுறுந்தி யான
ஞானநேர் தியானங் கோடிக் கொக்குநன் மனோல யந்தான்.()

மங்கையர் தம்பா லன்பு வகுத்திடி னிருவ கைத்தாங்
கொங்கையைக் குழவி தீண்டக் குறிசெந்நீர் பால தாதல்
பங்கமின் மகிழ்நன் றீண்டப் பான்முறிந் துதிர மாத
லிங்கிவை பக்கு வாபக் குவர்களுக் கியம்பற் பால. (கஉ0)

சத்துச்சித் தானந் தச்சீர்த் தற்பர னுதய மாகு
முய்த்தலிங் காங்க சையோ கம்மெனும் போக மோங்கப்
பத்தியென் மழையி னல்வன் பரமெனும் பைங்கூழ் பல்கி
வித்தையாம் வீர சைவம் விளைந்தது மேன்மேற் பாரின்.(கஉக)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சைவமெச் சமய நெறிகளுந் தன்பாற் சார்வதா யெழுவகைத்
தாமச், சைவநல் வகைக ளொன்றிலொன் றுகத் தழைந்திடு
முடிவதாம் வீர, சைவமொண் சாமா னியமொடு விசேடந் த
குநிரா பாரமா மிந்தச், சைவமே சிவசம் பந்தமா வதெனச்
சாற்றிடுஞ் சிவாகம மனைத்தும். (கஉஉ)

வாதுளா கமத்தி னுத்தரத் துறுதந் திரோக்தவண் பிரதிட்
டை மருவு, மாதியாஞ் சிவசித் தாந்தந் திரத்து மதர்வண

வேதமத் தியினு, நீதியா மனுதி வீரசை வத்தி னிலையினைத் தொகுத்தா னிகரின், றேதிடும் பரம ரகசிய மாக வுரைத் தன னுமையவ டனக்கே. (கஉங)

**கலிவிருத்தம்.**

என்று ஞான நெறியி னியல்பெலா
நன்று ணர்த்தலு நற்றவர் தாந்தெளிந்
தொன்று மந்த வொழுக்கத் துறைந்தரோ
வென்று மின்பி னிருந்தனர் பாங்கரின். (கஉச)

இச்சை ஞானக் கிரியை யியைந்திடு
மெய்ச்சொ ரூபம் விளங்கக் குடந்தையிற்
சச்சி தானந்த சற்குரு வாயிங்ங
னச்சு வார்க்கரு டந்து நடத்துமால். (கஉரு)

வெகுளி மாற்றுதன் மிக்குல வாநெறி
புகல லைந்தவித் தாற்றல் பொறுத்திடல்
பகரும் பூத தயவு பரிந்திட
லிகலி லாதய வின்சொ லியம்பிடல். (கஉசு)

இச்சை யோடு மனிச்சையி லாதுநேர்
நச்சு சற்குண நண்ணிட னொடொறு
மெச்சு ஞானம் விளம்பிடன் மிக்கவ
ரச்ச மில்லடி யார்களா வாரரோ. (கஉஎ)

வித்தை சூழ்குரு மேவு மடத்தினைப்
பத்தி யாற்றொழு தேமுன் பணிகுவார்
தத்து நீர்க்கடற் றாரணி யாண்டுசற்
புத்தி ராதிசெல் வங்கள் பொருந்துவார். (கஉஅ)

மூந்தும் வீரசிங் காதனச் சீர்மொழி
யிந்த மாக்கதை யார்வத் தியம்புவார்

சந்த மார்பொரு டாம்வின விப்படித்
துந்த வேவரை வாரூழி வாழ்வரால். (கஉக)

மாரி பெய்க மநுநெறி மன்னுக
நேரி லட்டா பரண நிலவுக
காரி பாக னடியர்க ணண்ணுக
வீர சைவ விதிமிக வோங்கவே. (கஙഠ)

சென்னி நாமந் திருந்திய நாட்டிடைப்
பொன்னி மாநதி பொற்புறக் கங்கையின்
றுன்னு பாவந் தொலைத்த குடந்தையுண்
மன்னும் வீரசிங் காதனம் வாழ்கவே. (கஙக)

சோமசேகரச்சருக்க முற்றிற்று.

---

வீரசிங்காதனபுராண முற்றுப்பெற்றது.

---

ஆகச்செய்யுள் - அஎரு.

---

திருச்சிற்றம்பலம்.

---

மறைஞானமல்லேசதேசிகர் திருவடிவாழ்க.

---

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# வீரசிங்காதனபுராணவசனம்.

காப்பு.

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருவளர் மருமத் தரிந்தம ஞாதி தேவரு முனிவரும் பிறரு
மருவளர் மலர்கொண் டிறைஞ்சவேட் டனபல் வரமுநல் குபு
குடந் தையிற்சற், குருவளர் புகழ்சால் வீரசிங் காத னங்குலா
மடத்தினிற் கருணை, யுருவளர் விமலன் யானைகாத் தவனென்
றொளிர்விநா யகனடி தொழுவாம்.

---

## திருக்கைலாயச்சருக்கம்.

உலகெலாமுணர்ந்தோதற்கரிய முழுமுதற்கடவுளாகிய முக்கணெம்பெருமான் தாம் ஆன்மவர்க்கங்களுக் கநுக்கிரகம்புரிவான் அருட்டிருமேனிகொண்டு அமருந்தானமாயிருத்தலின் ஆதவன்சந்திராதியகிரகங்களும் நக்ஷத்திரங்களும் நாடோறும்வலம்வரும் மேருவாதியமலைகளும் அடைக்கலமாகி வழிபடப்படும் அத்தகுதிருக்கைலையங்கிரியிலே, பன்மணிகளாற்சமைந்த பொற்சபையிலே, அரதனமயசிங்காதனத்திலே, அம்புலி கங்கை அரவம் தும்பை கொன்றை வெள்ளெருக்கு கூவிளம் மத்தம் மருவியசெஞ்சடைத் திருமுடியொளிரவும், சோமசூரியாக்கினிகளென்னும் முக்கண்களுந்துலங்கவும், தும்புருநார

தர்வடிவாகிய சங்கக்குழைகள்துதையவும், திருவாக்கில்செழு மறைகளொலிக்கவும், திருநீலகண்டஞ் செறியிருள்பரப்பவும், மான்மழு வலமும் இடமும் கரங்களின்மருவவும், உபவீதமும் திருநீறும் உருவிற்பொலியவும், அரைஞாணும்வெண்பட்டும் அரையிலிலங்கவும், அடியில்வீரகண்டாமணியலம்பவும், அம்பிகைபாகராய் என்றும்போல ஒருநாள் அமர்ந்தருளினர்.

அந்நாளில், திருமாலாதியதேவரும்முனிவரும் திருமகளாதியதெய்வமகளிரும் கங்கையாதியபலதீர்த்தமங்கையரும் பிறரும் கற்பகமாதியவற்றின் பொற்புறுமலர்கொண்டு அருச்சனைபுரிந்து அடிவணங்கித்துதித்து நெருங்கலும், அவர்முடி ஒருங்குதாக்குதலால் சிந்தியநவமணிக்குவியலைநோக்கிய நந்தியெம்பெருமான் அவரை மாறுகொண்டொதுக்க; அதுகண்ட அமலர் திருவருள்கூர்ந்து அவரவர்வெஃகிய வரம்பலபாலித்தமருங்கால், கங்காதேவியுமணுகிப் பரிவாலிறைஞ்சிப் பலவாறு துதித்து, "அடியேன்முறைப்பாடொன்றுளது ; அதனைத் திருச்செவியேற்றருளவேண்டும்; உலகில் மானுடராதியவுயிர்கள் மூழ்கி என்பாற்கழித்த பாவங்களை என்னென்றுரைப்பன்" என்று விண்ணப்பஞ்செய்வாளாயினள்.

"பசுக்கள் மறையவர் கன்னியர் சிசுக்கள் எளியவர் அடைக்கலம் புக்கவர் மூத்தவர் இளையவர் யானை குதிரை கருப்பம் என்னும் இவ்வதைபுரிந்தவர், குரவர் தந்தைதாய் குலத்திற்சிறந்தோர் கற்புடைமகளிர் ஞானியர் கடவுள் வேதவாக்கியம் இவற்றின் நிந்தனைபுரிந்தவர், செய்ந்நன்றிமறந்தவர், செம்பொற்றிருடர், பிச்சையிடுமுனுண்டவர், அந்தணரூரழித்தவர், பொய்கூறியவர், மதுவுண்டவர், புலைமகளைக்கலந்தவர், அடைக்கலப்பொருளபகரித்தும் அடுத்தவரை ஆதரியாதுவிடுத்தும் பொய்ச்சான்றுபகன்றும் கூலியேற்றுப் பொய்வழக்குக்கூறியும் நீர்நிலைகளைச்சிதைத்தும் இவ்வாறு உயிர்களுக் கிடுக்கண்புரிந்

தவர், பிறர்மனைவியரைக்கலந்தவர், அங்கவீனரையிகழ்ந்தவர் குரவராசனத்திருந்தவர், உறவுபாராட்டிப் பிறரைவஞ்சித்தவர் கரவிற்பாதகமியற்றியவர், துணைச்சென்று மகளிரைச் சூதாகவிடுத்தவர், கணவரல்லவரைக் காதலித்தமகளிர், உணவில் விடங்கலந்தவர், விளைநிலமழித்தவர், குருவாக்கியமறந்தவர், சூதாடினவர், தவநெறிதவிர்ந்தவர், கூறுவாதுகுறித்துரைத்தவர், உபாத்தியாயரையிகழ்ந்தவர், அயலவர்மனையிற் றீங்குபுரிந்து அனலிட்டவர், நியமத்தைத்தவிர்த்தவர், இரக்கமில்லாதவர், ஈவதுவிலக்கினோர், ஒருவர்க்கொன்றீவதுகூறி இல்லையென்றவர், தருமமடங்கட்குத் துரோகம்புரிந்தவர், சுற்றமிகழ்ந்தவர், மனைவியைவறிதுவிடுத்தவர், குடிகளைமெலிவித்தவர், தலைவன்மடியச் சமர்க்களத்தொளித்தவர், ஏற்பவர்க்கிடாது தாமேயுண்டவர் செல்வோர்வெருவ, வழிபறித்தவர், கொன்றூன்றின்னப் பிறரறிவைக்குலைத்தவர், நதிதடாகங்களில் அசுத்தம்புரிந்தவர், பசுவையடித்தவர், நெல்லிற்பதரைக் களவிற்கலந்தவர், அளவுக்கருவிகள் குறைத்தவர், அவைகுறைப்பித்தவர் இன்னோரன்னவர்களும் ஏனையுயிர்களும் இத்தகையமாபாதகங்களும், இவற்றின் கனிஷ்டபாதகங்களும், அதிபாதகங்களும், அவற்றின் பேதபாதகங்களும், உபபாதகங்களும், பிறபாதகங்களும் என்பாற்கழித்தமையின் அப்பாதகச்சூழலினால் காந்தியெலாமிழந்து உடலமாசுபடலால் என்னெஞ்சமுருகிக் களியிழந்துசோர்ந்து அந்தகாரமடைந்து நடுக்கமுற்றது. இக்கவலைதீருமாறு இனிதருள்புரிக" என்று கங்கைவேண்ட; அக்கங்காதரர் மிகநன்றென நகைத்து "யாம் கட்டளையிடுவதைக் கேட்பாயாக ; அது நின்னைவெதுப்புந்தீமையை ஒழிக்குநெறியாகும்" என்று அருள்வாராயினர்.

---

# திருக்குடந்தைச்சருக்கம்.

---

## திருக்கேதாரம். காசி.

திகழ்மகாமேருவின் தென்றிசையிலுள்ள சம்புத்தீவிலே தேவராதியர்வழிபடும் தெய்வீகத்தலங்கள் பற்பலவுண்டு; அவை புதியனவன்று; பல்லூழிகாலங்களுக்கு முற்பட்டு மிக்க பழையனவாய்நிலவித் தம்மையடைந்தவர் தீவினைமுழுமையும் நிவிர்த்தித்தமரும். அவற்றுள், கேதாரமென்றொருதலமுண்டு:— அது பனியின் அதிதேவதை நம்மைப்பூசைபுரிந்து மலமொழிந்து நமதுதிருவடிகளையடைந்த மங்கலபுரியாகும். நீகாண்பாயாக. காசியென்றொருதலமுண்டு;— எதனிடத்துப் பரமான்மரூபமாகிய தேசசு பிரகாசித்துக்கொண்டிருக்கிறதோ அது காசியெனப்படுமாகலின் அத்தகைய இத்தலம் அப்பெயர்பெற்றதாயிற்று. அதனிடத்தே மணிகர்ணிகையென்றொருதீர்த்தம் நிலவும்; அது முற்காலத்திலே திருமால் தனது சக்கரத்தாலாக்கினமையின் சக்கரதீர்த்தமென்றும், வெயர்வு நீரால் நிரப்பப்பட்டதாகலின் பிரமத்திரவமென்றும், பின்பு அவ்வாவிக்கரையில் அத்திருமால் தவஞ்செய்யுங்கால் விசுவேசராகியயாம் பிரசன்னராகித் தவத்தைவியந்து சிரக்கம்பஞ்செய்ய நமதுகுண்டலத்தினின்றும் நழுவியநாகரத்தினம் விழுந்தமையால் மணிகர்ணிகை யென்றும், பெயரை உடையதாயிற்று. அது நின்வடிவாகிய கங்கைவந்துசேர்ந்ததுமுதல் அதிவிசேடமுடையதாகிக் கிழக்கே கங்கையினடுவும், தெற்கே கங்கேசுரமும், மேற்கேசுவர்க்கத்துவாரேசுரமும், வடக்கே அரிச்சந்திரேசுரமும் எல்லையாகக்கொண்டு சகலபாவங்களையும் பலர்க்கும்போக்கிச் சாம்பூநதநிறமுடையதாய்விளங்கும். வைரவன் அத்தலத்தே மரித்தவர்களைத் தமதுசூலத்தேற்றிப் பாவங்களைப்போக்கி அவர்கட்கு உண்மைமுத்தியையளிப்பன்.

## கோகர்ணம்.

கோகர்ணமென்று ஒருதலமுண்டு:— அது ஆதியில், இராவணன் இலங்கையழியாமைப்பொருட்டுத் தாபித்துப்பூசிப்பதற்கு ஈசுரனைவேண்டி ஒருசிவலிங்கம்பெற்றுச் செல்வதையறிந்த தேவர்பிரார்த்தனைப்படி, விநாயகர் அவனுக்கு நீரதிகரிக்கப்பண்ணித் தாம் பிரமசரியவடிவோடெய்தி, அச்சிவலிங்கத்தையேற்றுக்கொண்டு, அவன் சலவிசர்ச்சனத்துக்குப் போய்வருமுன் தாங்கவலியில்லாதவர்போலக் கீழேவைத்துவிட; அவன் சேர்ந்தெடுக்குங்கால், அது வாராது பசுவின்காதுபோற் குழைந்தமையின் அச்சிவலிங்கம் மகாபலலிங்கமெனவும், அத்தலம் கோகர்ணமெனவும் பெயர்பெற்றன. அன்றியும், பூர்வம் கேகயநாட்டிலுதித்த ஓரந்தணன்புத்திரி சௌமினியென்பவள் இளமைப்பருவத்திலேயே கணவனிறந்தமையால் கூடாவொழுக்கமுடையளாய்க் கருப்பமடைந்தமையின் உறவினரால் நீக்கப்பட்டு, ஒருவேளாளனையடைந்து வாழ்ந்தனள். அந்நாளுள் ஒருநாள் அவன் வேற்றூரையடைய அவள் மதுவுண்டமயக்கத்தால் ஆடென ஆவின்கன்றைச்சேதித்து அரியுங்கால் ஆண்கன்றெனத்தெளிந்து சிவசிவவென்றுச்சரித்தும் ஊன்வேட்கையால் அதைச்சமைத்தருந்தியதோஷத்தால் கண்ணின்றிப் புலைமகளாய்ப்பிறந்து வழிச்செல்வோரைப்பற்றி அக்கோகர்ணத்தையடைந்து வீதியிலிருந்து உணவுவேண்டினள். வழிச்செல்வோனொருவன் விளையாட்டாக ஒருவில்வபத்திரத்தை அவள்கரத்திட்டகல; அவள் எறிந்தவழி அது மகாசிவராத்திரி புண்ணியகாலமாகிய அத்தினத்தில் ஒருசிவலிங்கத்தின்மேல் விழ அதையே அர்ச்சனையாக அங்கீகரித்து அவளுக்கு நற்கதியளித்தனம். ஆதலால் ஆங்கிருந்து புண்ணியஞ்சிறிதியற்றினும் மலைபோல்வளரும்; பாவம் மலையளவியற்றினும் தினையளவாய் முன்னிலவிப் பின் அவ்வளவுமில்லையாக அழியும். அதுநோக்குவாயாக.

### மல்லிகார்ச்சுனம். திருககாளத்தி.

மல்லிகார்ச்சுனமெனவுந் திருப்பருப்பதமெனவும் பெயர் பெற்றதொரு தலமுண்டு:— அது நமது உண்மைவடிவமைந்த இரண்டாஞ்சம்புவென்னும் நந்தியின் சொரூபமாயுள்ளது. து ங்கபத்திரை கிருஷ்ணை வேணி பவநாசனி முதலிய பலதெய் வநதிகள் ஒருங்குசேர்ந்துவரும் பாதாளகங்கையென்னும் தீர்த் தத்தோடு அகநாசனியென்னும் அருவிதீர்த்தத்தையுமுடை யது; தனதுசிகரத்தைத் தரிசித்தவர்க்கும் பூர்வவினைகளையும் இம்மையிலீட்டியவினைகளையும்போக்கித் தொடரும்பலபிறவி யையும் ஒழித்து உயர்ந்தமுத்தியை எளிதினிலளிக்கும். சீகா ளத்தியென்றொருதலமுண்டு:— அது சிலந்தி பாம்பு யானை யென்னும் மூன்றுமருச்சித்தமையால் அப்பெயர்பூண்டது. அதில் திண்ணனென்னும் ஒருவேடன் ஊன்களை அரிதுதேடிப் பாகஞ்செய்து தன்வாயிலிட்டுச் சுவையுள்ளனதேர்ந்தெடுத்து நமக்குண்பித்தவழி அம்மிச்சிலுணவிற்கும் அவன் நம்மைப்பூசி க்குங்கால் முந்தியபூக்களைக்களையுங் காற்செருப்பின் தாக்குதலு க்கும் களித்தனமாகிக் கண்ணோய் உடையோம்போல விளங்க அதுகண்ட அவன் இடர்ப்பட்டுத் தன்கண்ணைக் களைந்திட்டப் பலும், யாம்திருவருள்சுரந்து அவனுக்கு அக்காரணத்தால் கண்ணப்பனெனப் பெயர்சூட்டினம். அப்பெயர் இன்றும் வழங்காநிற்கும், அத்தலமகிமை சொல்ல எளியதோ.

### காஞ்சீபுரம். திருவிரிஞ்சி.

காஞ்சியென்றொருதலமுண்டு:— அது ககர அக்கரத்திற்கு ரிய பிரமதேவனால் * அஞ்சிக்கப்பட்டமையாலும் காஞ்சியென் னும் விருக்ஷமுடைமையாலும் அப்பெயர்பெற்றது. சகலவொ ளிகளுக்குங் காரணமாய்ச் சோமசூரியாக்கினிகளின்சொரூப மாகிய நமதுகண்களை உமாதேவி ஓர்விளையாட்டால்ஈண்டுமூடி யவழி உலகெங்கும் இருளடர்தலின் ஆன்மாக்கள் திகைப்புற்று

* அஞ்சித்தல் - பூசித்தல்.

நித்தியகன்மாநுஷ்டான முதலியவற்றை இழந்தமையாலேனா ந்ததோஷநிவிர்த்திப்பின் காரணமாக நாம்கட்டளையிட்டபடி அத்தலத்திலே வேதவடிவாகிய மாமரத்தினடியிலே நம்மைப் பூசித்து முப்பத்திரண்டறங்களையும் வளர்த்தனள். அதனைவழி படும் எவர்க்கும் கொடியவினைகளெல்லாம் அழிந்தொழியும். திருவிரிஞ்சியென்றொருதலமுண்டு:— பிரமதேவன் ஒருசிருட் டியாரம்பத்திலே தியானிக்க நாம் நீலலோகிதருத்திரனாய்த் தோன்றி அச்சிருட்டிக்கிரமத்தை யருளினோம். அருளப்பெற்று அத்தலத்தெய்தி நம்மைப்பூசித்து மற்றும்பலவரங்களும் பெற் றமையால் அது திருவிரிஞ்சியெனப் பெயர்பெற்றது. அதில் ஆதிசைவமரபில் அத்திரிகோத்திரத்துதித்து நம்மையருச்சித் தொழுகிய சிவநாதனென்னும்பிராமணன் நம்பதமடைய; அ வன்புதல்வன் ஐந்துவயதுடைமையால் அவன்பொருள்கவர நாடி ஞாதியரொருநாள் "குழந்தாய் இன்றைக்கு நின்முறை யாகையால் நீபூசிக்கமுடியாதேல் நின்சொத்துக்களை எங்கள் பேருக் கெழுதிக்கொடுக்க" என்றனர். இதை மகனுலறிந்த நயனுனந்தினியென்னுந்தாய் நமதுசந்நிதியின்முறையிட்டு நாம் கனவிலருளியவாறு மகனைத் தீர்த்தத்தின்மூழ்குவிக்க; அப்பு தல்வன்மூழ்கி ஆசாரியவிலக்கணம் முற்றுமமைந்தவனுய் வெளி க்கொண்டு நம்மைப்பூசித்தவழி, சிற்றுருவமைந்த அப்புதல்வ னுக்கெட்டும்படி நமது உன்னதத்திருமுடிவளைந்து பூசையேற் று அநுக்கிரகித்தோம்.

## திருவொற்றியூர்.

திருவொற்றியூரென்றொருதலமுண்டு:— முற்காலத்திலே இ க்கைலையில் இந்நந்தி நமையிறைஞ்சி அமர்ந்துபுரியும் அங்கடனத் தைக் காட்டியருளவேண்டி நமதுகட்டளைப்படியே அத்தலமணு கிப் பூசித்துச் சிவயோகத்துறையத் திருமால் ஒருநாள் எம்மை யருச்சித்து வைகுந்தத்தில் தியானத்திருக்குங்கால் தனதிதயத் தில் நாம்காட்சியாகாமையின் மனத்தாலாராய்ந்து நாம் இருவா

ரூரிலே அம்பிகைகாண அமர்ந்தநடனம் புரிந்திருப்பதையுணர்ந்து அதுகாண்பான் யாம் அசரீரியாலறைந்தவாறே இலக்குமியோடெய்தி அங்கு வழிபட்டிருந்தனன். அந்நாளில் உரோமசமுனிவனும் அந்நடனவிருப்பத்தாற் பூசித்தமரப் புதிதாகவுதித்தவோர்பிரமனும் வாணியோடுமன்னி அர்ச்சனையாகாதிகளால் வழிபட; ஓர்மாசிமாதத்திலே ஆதிவாரமும் அமாவாசையுங்கூடிய சுபதினத்திலே எழுந்தருளி நந்தி உரோமசன் திருமால் பிரமன் என்னுநால்வர்க்கும் அந்நடனங்காட்டியருளி அவ்வாறே நடித்தமருகின்றோம். அது சமுத்திரதீரத்ததாய் வேண்டியசித்திகளையளித்து விளங்கலின் சதா தேவரும்வழிபடுவர்.

## திருக்கழுக்குன்றம்.

வேதாசலமெனவும் கழுக்குன்றமெனவும் பெயர்பெற்றதொருதலமுண்டு:— முன்னாள் நான்குவேதங்களும் இக்கைலையையெய்தி நம்பால்வரம்பெற்றுச்சென்று வேதாங்கமுதலியகலைகளை மற்றையவயவங்களாகக்கொண்டு இருக்குவேதம் அடியாகவும் எசுர்வேதம்நடுவாகவும் சாமவேதம்அந்தமாகவும் அதர்வணவேதம்சிகரமாவும் இங்ஙனம் மலையுருவாய் அமைந்திருந்துகொண்டு தம்முச்சியில் சிவலிங்கவடிவாயமருநம்மைப் பூசித்து இடுக்கணகலப்பெற்றன. ஆகலின், அத்தலம் வேதாசலமெனவும்; கிரேதாயுகத்திலே சண்டன் பிரசண்டனென்னுங்கழுகுகளும் திரேதாயுகத்திலே சம்பாதிசடாயுவென்னுங்கழுகுகளும் துவாபரயுகத்திலே சம்புகுத்தன் மாகுத்தனென்னும் இருடிகளாயிருந்து சத்திபெரிது சிவம்பெரிதெனத்தர்க்கித்து அத்தருணத்தே அம்மூர்த்திகள்வந்துகூறிய அபேதநிலைமையையு மறுத்தமையாற் பெற்றசாபத்தால் அச்சுமாறிய கழுகுகளும் பூசித்துமுத்தியடைய; இக்கலியுகத்திலே * பூடா விருத்தா என்னும் இருமுனிவர் போகத்தைநாடித்தவம்புரிந்துழி யாமெழுந்தருள

* பூடா விருத்தா என்னுமிருவரையும் சம்பரன் சம்பாதி என வழங்கலும் உண்டு.

முத்தியைவேண்டினர். யாம் உங்கட்கு இப்பொழுது எமது சாரூபமும் ஒருகற்பங்கழிந்தபின் சாயுச்சியமும் அளிப்போமென்று கருணையாலுரைக்கவும் அக்கட்டளையையும் மறுத்த குற்றத்தால் அவர் கழுகுருவடைந்து தமக்குக் கலியுகவிறுதியில் முத்திசித்திக்கும்படி இப்பொழுதும் பூசித்துக்கொண்டு வசித்தலால் கழுக்குன்றமெனவும் பெயர்பெற்றது.

### வில்வாரணியம். அருணாசலம். திருவெண்ணெய்நல்லூர்.

வில்வாரணியமென்றொருதலமுண்டு:—அதில் திருமால் பிரமன் இந்திரன் ஆதிசேடன் மன்மதனென்னும் இவர் காதலால் நம்மைச்சிந்தித்துப் பூசித்துக் கருதியநல்வரமனைத்தும் களிப்பொடுபெற்றனர். அருணாசலமென்றொருதலமுண்டு:— ஒருகற்பத்தில் பிரமதேவன் உலகனைத்தும்படைத்தலால் யானே கர்த்தனெனவும், திருமால் உன்னையுந்தோற்றுவிக்குமுதல்வனும் காத்தற்றொழிலுடையவனும் யானேயாதலால் யானே கடவுளென்ன; இருவரும் போர்தொடங்குங்கால் யாமே அவர் முரணழிய ஓரக்கினிமலையாகத் தோற்றியருளினோம். அது கண்ட இருவரும் அதனடிமுடிகண்டோரே பரமெனத்தீர்மானித்துக்கொண்டவழிப் பிரமன் அன்னமாய்முடியையும் திருமால் வராகமாய் அடியையும் நெடுநாள்தேடியும் காணாயினர். அங்ஙனம் அவர்சோர அருணாசலவடிவாய்விளங்கிய நம்பெயர் ஒருமுறைசிந்திப்பவர்களும் முத்தியையடைவார்கள். திருவெண்ணெய்நல்லூரென்றொருதலமுண்டு;— நம்மை உமாதேவி ஞானவுணர்ச்சியால் பசுவெண்ணெயிற்கோட்டை வகுத்து அதனிடையிலே பஞ்சாக்கினிமத்தியிலே தவம்புரிந்து நமதருள்பெற்றகாரணத்தால் அத்தலம் திருவெண்ணெய்நல்லூரென விளங்காநிற்கும்.

### திருவதிகை.

திருவதிகையென்றொருதலமுண்டு :—பூர்வத்தில் தாரகாக்கன் கமலாக்கன் வித்துன்மாலியென்னும் மூவசுரர்கள் கோடி

வருடமாக தவம்புரிந்து பிரமதேவனால் பொன் வெள்ளி இரும்புகளினாலாகிய மூவரண்கள் முறையே சுவர்க்கம் அந்தரம் பூமியென்னும் மூவிடங்களிலே நிலைபெற்றிருக்கவும், தாம் செல்லுமிடங்கட்கு அவையுடன்வரவும், ஆயிரம்யாண்டுக்கொருமுறை ஒருங்குசேரவும், அக்காலத்து வெல்லவல்லதொரு கணைவிடுத்து அழித்தாலன்றி வேறெவ்வகையானும் அழியாதிருக்கவும், திருமாலாதியரெதிர்க்கினுந் தோற்றோடவும் வரம்பெற்று, விபூதி ருத்திராக்கதாரணங்களும் பஞ்சாக்ஷரசெபமுமுடையராய் நம்மை விதிப்படி ஆராதித்தலமைந்தும் அசுரகுலத்துதித்தவராதலால் தேவராதியர்கட்கு இடுக்கண்புரிந்தொழுகினமையேயன்றிப் பின் சிவபூசையாதியவற்றையிழந்து அவமதித்தும் ஒழுகினமையின், யாம் சினந்து மேருவே வில்லாகவும் வாசுகியேநாணாகவும் திருமாலேவாளியாகவும் கொண்டுசென்று, அவரகந்தைகண்டு புன்முறுவலால் அவரையும் அவர்புரங்களையும் நீறுக்கினேம். இத்தன்மையால் அத்தலம் எத்தலங்கட்கும் அதிகமானதால்அதிகையென்று இலங்கும்.

## திருப்பாதிரிப்புலியூர்.

திருப்பாதிரிப்புலியூரென்றொருதலமுண்டு :— அது பாதிரி விருக்ஷத்தையுடையதாய் வியாக்கிரபாதமுனிவரால் வழிபடப்பட்டுவிளங்கலின் அப்பெயர்பெற்றது. ஈண்டு யாம் உலகுய்வான் ஒருவிளையாடலைமேற்கொண்டு ஒருதினம் உமாதேவியோடு சூதாடலைச்செய்யுங்கால் பலமுறைதோற்றும் நாமே வென்றனமென்றனம். தேவிமுனிந்து பெருமான்றிருமுகத்துள்ள முச்சுடரும் பொய்யிசையாவாகலின் யான்றோற்றிருக்கின் அவைமறைபடாமல் ஒளிவீசும், பெருமான்றோற்றிருக்கின் அவைமறைய உலகம் இருளின்மூழ்கும், இவையே தோல்வி வெற்றிகளையறிதற்குக் கருவிகளாமென்று எண்ணி நங்கண்களைப்பொத்துதலும், எங்கும் இருள் அடர உயிர்களெல்லாம்

இடர்க்கடலில் அழுந்தின. தேவிக்கு அது சிறிதுபொழுதாயினும் தேவர்முனிவராதியர்க்கு நெடுங்காலமாயினமையால் தம்முடைய நியமமாதியவிழந்து கவன்றனர். இவ்வண்ணம் கலக்கமுறுத்தியதோஷம் நிவிர்த்திப்பான் நமதருள்பெற்றுக் கன்னிகையாய் ஆங்கெய்தித் தேவிபூசித்தமையின் திருமாலாதியர் அதற்குக் கன்னிவனம் எனவும் பெயர்சூட்டினர்.

## திருமுதுகுன்றம்.

திருமுதுகுன்றமென்றொருதலமுண்டு:— பூர்வசிருட்டியில் புனலைப்படைத்து அயன் தனதுவீரியத்தைவிடுக்க; அது முட்டையாய்மிதத்தலும் அதனையுடைத்துழி அதினின்றும் முக்குணந்தோன்ற அவற்றில் ஐம்பூதங்களுந்தோன்றின. அப்போது, திருமால் தன்பாலுதித்தெதிர்த்த மது கைடவன் என்னும் அசுரர்களைக்கொல்ல; அவர் அப்புனலில் தம் * மேதையைத்தூர்த்தார். அதனால் அதன்செறிவாகிய உலகிற்கு மேதினியென்று ஒருபெயருண்டாக; அவ்வயன் பிரார்த்தனைப்படி அது இறுகுமாறு ஆதியில் யாம் அளவிலாக்கொடுமுடிகளையுடைய முதுகிரிவடிவாய்ப் பூமியிலழுந்திநின்றனமாகலின் முதுகிரியெனப்பட்டது. அதில் இறப்பனவாகிய உயிர்கள் எவையேனும் அவை தமதுடலின் வலதுசெவிமேலாகும்படி விழ எமது தேவி மடியிற்கிடத்தி முன்றானைகொண்டுவீசநாமெழுந்தருளி முத்தியடைவான் தப்பாதுபயன்படும் பஞ்சாக்ஷரோபதேசம் அவற்றிற்குக் கிரமப்படிபுரிவேம்.

## சிதம்பரம்.

சிதம்பரமென்றொருதலமுண்டு:—பிரமபுரமாகிய சரீரத்தினுள்ள தகரமாகியபுண்டரீகவீட்டினுள்ளே யாம் ஆகாசமாய் விளங்குவதுபோலப் புறத்தும் இப்பிரமாண்டமே பிரமபுரமாகவும் இதனுள்ளிருக்கும் தில்லைவனமே புண்டரீகவீடாகவும்

* மேதை - தசை.

இதில் பூதாகாசம்போலச்சடமாகாது சித்தேயாய்விளங்கலின் சிதம்பரமெனப் பெயர்பெற்ரேம். ஆகலின், யாம் நீக்கமின் றிநிலவுந்தானமாகிய தில்லைவனவெல்லையும் சிதம்பரமெனப் பெயர்பெற்றது. அத்தில்லைவனத் தகரபுண்டரீகமாகிய மன் றினுள்ளே எமதுதாள் பதஞ்சலிவியாக்கிரபாதமுனிவர்கள் க ண்டுகளிக்கும்வண்ணம் ஞானநடம்புரியாநிற்க ; எமது ஆயிரங் கலைகளுள் ஒன்று இக்கயிலையாதியதலங்களில் நாளும்விளங்கி அதுவும் அர்த்தயாமத்தில் ஆங்குப்போயொடுங்குதலின் சிதம் பரம் தரிசிக்கமுத்தியளிப்பதென வேதங்கள் புகலாநிற்கும்.

## சீகாழி. புள்ளிருக்குவேளூர். மாயூரம்.

சீகாழியென்ருெருதலமுண்டு: — அதற்குப் பிரமபுரம் வேணுபுரம் புகலி வெங்குரு தோணிபுரம் பூந்தராய் சிரபுரம் புறவம் சண்பை காழி கொச்சைவயம் கழுமலம் என்னும் பன் னிருநாமங்களுண்டு. உலகமுற்றுமழியச் சமுத்திரசலமூடும் மகாப்பிரளயத்திலும் தானழியாதுநிலவித் திருமாலாதியரு மழியாதபடி. அவரையுந்தாங்கிக்கொண்டு நமக்குரிய தானமா ய்த் தோணியென ஓங்காநிற்கும். புள்ளிருக்குவேளூரென் ருெருதலமுண்டு:— அது சடாயு வேதம் நமது குமரன் என் னும் மூவராலும் பூசிக்கப்பட்டமையால் அப்பெயருடையதாகி எம்மருந்துகளாலும் நீக்கமுடியாதுள்ள சரீரநோய்களையும் மல நோய்களையும் மண்மருந்தாலேயே தீர்க்கும். இத்தகைய அத ன்பெருமை சொல்லுதற்றகுதியதோ?. மாயூரமென்ருெருதல முண்டு: — நம்மைவழிபடுதலின்றித் தக்கனெருயாகமியற் றுழி, அதுகாணச்சென்ற உமாதேவி அவன் தன்னையும் மதி யாமையால்வருந்தி அவன்பால்வளர்ந்த தேகம் ஆகாதெனவிடு த்துச் சூக்குமவுருவங்கொண்டு ஈங்கணுகலும், யாம்நோக்கி "நீ நின்மேனிவிடுக்குங்கால் ஒருமயில் நின்பால் இனமென்றடைய அதன்பாதுகாப்பிற் கருத்தைச் செலுத்திளையாகலின் அவ்வு

ருக்கொண்டு வழிபட்டு மலையரையன்மகளாகுக" எனப்பணிக்க; அங்ஙனமே அத்தலமுற்றுப் பூசித்தலும் யாம் ஆண்மயிலுருக்கொண்டு அனுக்கிரகித்து வரம்பலபாலித்தனமாதலால் அது மாயூரமெனப் பெயர்பெற்றது.

## திருச்செங்காட்டங்குடி.

திருச்செங்காட்டங்குடியென்றொருதலமுண்டு:— மாகதமுனிவன் பெண்யானையுருக்கொண்ட விபுதையென்னும் அசுரகுலப்பெண்ணை ஆண்யானையுருக்கொண்டு கலந்தவழி யுதித்த கயமுகாசுரனென்பவன் தேவர்க்கிடுக்கண் புரிந்தொழுகினமையால் கணபதி அவனது மதங்கமாபுரியையடைந்து தனதுகோட்டினால் வதைத்தலும் அவனது உதிரம்பாய்ந்த வனமாதலால் அது செங்காடெனப்பெயர்பெற்றது. அதில் கணபதிபூசித்த நமதுசிவக்குறியையும் அடியவரையும் வழிபட்டொழுகிய சிறுத்தொண்டனென்னும் நமதன்பன் சீராளனென்னும் தனது அரியபுதல்வனை அரிந்துசமைத்தூட்ட உண்ணும் விருப்புடையோம்போல யாம் வைரவசங்கமவடிவிற்சென்று ஆங்குள்ள ஆத்திவிருக்ஷத்தடியில் * உத்தராபதியென்னுந் திருநாமத்தோடு வீற்றிருந்தனம்.

## திருக்கன்றப்பூர், திருமறைக்காடு.

திருக்கன்றாப்பூரென்றொருதலமுண்டு:— சுதாவல்லியென்னும் ஒருவித்தியாதரப்பெண் இக்கைலையில் நடனத்தால் நமக்குப் பிரீதியையுண்டாக்கியதுமன்றி உமாதேவியினுருக்கொண்டு காதலூட்டவும் தொடங்கினமையின், தேவியாற்சபிக்கப்பட்டு நாட்டியத்தான்குடியில் சூத்திரகுலத்தில் பூர்வசன்மவுணர்வோடு கமலவல்லியெனவுதித்தனள். அவள் கணவனாகிய வித்தியாதரனும் பனையூரில் சூத்திரகுலத்துதித்து அவளைம

* உத்தராபதி - வடதிசைக்கண்ணுள்ளவர்; உத்தராபதம் - வடக்கு.

ணந்துழி, அவள் தன்கொள்கைக்கிணங்கித் திருமாலைப்பூசியா து நம்மையேபூசிப்பதைக்கண்டு சினந்து சிவலிங்கத்தை எடுக் கக்கூடாத ஆழ்ந்தகிணற்றில் எறிந்துவிட்டுப் பூசையின்றிப் புசிக்கும்படியாகவும் வருத்த; அவளேங்கிக் கன்றுபிணிக்குந் தறியில் நம்மைப்பாவித்து நாளும் அருச்சித்துவந்தனள். அதை மூன்றாம்வருடத்தில் அறிந்து அத்தறியைக் கோடரிகொண்டு வெட்டலும், அதிலுதிரம்பாய அவனும்மடிய அவ்வாப்பினிற் றோன்றி, அவளுக்கு மானுடவுருவகற்றி அநுக்கிரகித்து நடுதறி நாயகரென வீற்றிருந்தனம். அதனால் அத்தலம் * கன்றாப்பூ ரென வழங்குவதாயிற்று. திருமறைக்காடென்றொருதலமு ண்டு:— அது மறைகள் நம்மைப் பூசித்தவனமாதலின் அப்பெ யர்வாய்ந்தது. பனிமலையில் பார்வதியைமணம்புரிய எழுந்த ருளியபொழுது அவ்வுழிக் கணங்களெல்லாந்திரண்டமையால் வடபூமிதாழ்ந்து தென்பூமியுயர்ந்ததாகலும் அதனைச்சமமாக் கும்பொருட்டு அகத்தியமுனிவனையேவுங்கால் அருளியபடியே அத்தலத்தே திருமணக்கோலம் காட்டியருளிக்களித்தோம்.

## திருவுத்தரகோசமங்கை.

திருவுத்தரகோசமங்கையென்றொருதலமுண்டு:— பிரமன் தனக்குரிய இராசதகுணமாசு தீர்த்துக்கோடற்கு ஆங்குப் பற்பல ஆயிரமாண்டு தவம்புரிய, இராதந்தர கற்பத்தில் சோ திலிங்கவடிவில் விளங்கிச் சிவஞானோபதேசமும் சாத்துவித குணமுந் தந்தன மாதலாற் பிரமபுரமெனவும், வியாசமுனி வன் நூறுதேவவருடம் தவம்புரிந்தமையால் வேதப்பொருள் விளங்கும் அறிவளிக்க ஆங்குள்ள இலந்தையடியில்வதிந்து வே தமுழுதுணர்ந்து சிவஞானம்பெற்றுச் சீவன்முத்தனாயினனாத லால், வதரிவனமெனவும், பதஞ்சலிவியாக்கிரபாதரென்னு முனிவர்கள் பஞ்சாக்ஷரசித்திவேண்டித் தவம்புரியப் பிரணவ

* கன்று ஆப்பு - கன்று பிணிக்குந்தறி.

த்தோடு அதனையுபதேசித்தவழி அவருள் வியாக்கிரபாதமுனி வன் வேண்டியபடி வியாக்கிரபாதபுரமெனவும், அடைந்தோர்க்கு அருணெறியுணர்த்திச் சித்துருவாய்வைகுதலால் ஆதிசிதம்பரமெனவும், அடைந்தவர்க்கு மங்கலந்தரலால் மங்கலபுரியெனவும், கௌதமனுதியர்முத்திபராயணராய்ச் சிவஞானம்பெற்ற அத்தலமான்மியத்தை அம்பிகைவினுவ அதற்கிையைந்த உத்தரத்தை இரகசியமாக யாம்விளக்கிய மங்கலபுரியாகலின் உத்தர * கோசமங்கையெனவும், அது பெயர்பெற்றது.

## மதுரை. இராமேச்சுரம்.

மதுரையென்றொருதலமுண்டு: — அது நமதுமுடியிலுள்ள சந்திரனது மதுரமிக்க அமிர்தத்தால் ஆதியில் சுத்தம்புரியப் பட்டதாகலின் அப்பெயர்பெற்றது. கிரேதயுகத்திலே தேவலோகத்தில் இந்திரன் தெய்வப்பெண்கள்புரியும் நடனத்தில் மிக்க ஆர்வம்வைத்தவனுயிருந்தமையின் தனதுசபைக்கெய்திய வியாழனென்னும் குரவனை வணங்காதொழிந்த குற்றத்தால் சகலசெல்வங்களையுமிழந்து, தன்னுசிரியனைத் தேடியவழிக் கிட்டாமையின் அசுரகுலத்தவனுகிய விச்சுவவுருவனைக் குரவனுகக் கொண்டனன். அவன் இயற்றும்யாகத்தை அசுரவிர்த்திநாடிச் செய்வதை இந்திரனுணர்ந்து அவனைக்கொன்று அதனுற் பிரமகத்திதொடரப்பட்டு அம்மதுரையையடைந்து நம்மையருச்சிக்க, அவனுக்கு அப்பழிதொலைத்தனம் இங்ஙனம் அதுமுதலிய அறுபத்துநான்கு திருவிளையாடல்கள் ஆங்குப்புரிந்து சோமசுந்தரக்கடவுளெனத் திருவுளமகிழ்ந்தமர்வோம். இராமேச்சுரமென்றொருதலமுண்டு:— அது இராமன் இராவணுதியரைக்கொன்று விபீஷணனுக்கு அரசீந்து மீண்டு அத்தலவெல்லையிலுள்ள கந்தமாதனமலையையடைந்துழி, அவ்விராவணன் விச்சிரவாவென்னும் முனிவனுக்குதித்தவனுதலால் பிரமகத்திதொடர மருண்டு, அத்தலமான்மியத்தை முனி

* கோசம் - இரகசியம்.

வராலுணர்ந்து ஆங்குச் சீதையாலமைத்த மணலிலிங்கத்தில் நம்மைப்பூசித்துத் தனதுபழி நீக்கிக் கொண்டனன். அவ்விராமன் பூசித்தமையால் அது இராமேச்சுரமெனப் பட்டது. இலங்கைக்குச் சேறற்கு அமைத்த கரையிலுள்ளதாகலின் சேது * எனவும்படும்.

## திருப்பெருந்துறை.

திருப்பெருந்துறையென்றொருதலமுண்டு:— அது பிறவிப் பெருங்கடனீந்தி முத்தியங்கரையை அடைபவர்க்குரிய பெருந்துறையாயமைந்தமையின் அப்பெயர்வாய்ந்தது. முற்காலத்திலே சாக்கியமாதிய பொய்ச்சமயங்கள் தழைத்தோங்கலின் வைதிகசைவநெறிகள் மங்குதலடைதலைக்கண்ட தேவருமுனிவருஞ் சிந்தைகலங்கி நம்மையடைந்து பிரார்த்தித்தனர். அக்காலை நம்பால் ஞானோபதேசம்பெறக்காதலித்த கணநாதராயினரவர்களை உத்தரகோசமங்கையையடைவித்து நாம் குருவடிவுற்றமர்ந்து சிவாகமப்பொருள்களைப் போதிக்குங்கால் இந்திரனடைய, அவன்விபவத்தில் கருத்தைச்செலுத்தி அவ்வாயிரவருளொருவன் நாமருளியபொருளை மறந்தனன். அக்கணநாதனைத் திருவாதவூரில் அந்தணகுலத்தில் சம்புபாதனுடைய மனைவி சிவஞானவதிபாலுதிப்பித்து அரிமர்த்தனபாண்டியன்பால் மந்திரித்தொழில் பூண்டொழுகுவித்துத் திருப்பெருந்துறையென்னும் அத்தலத்தே குருந்தநீழலிலே குருவடிவுற்றமர்ந்து ஞானோபதேசம்பாலித்து அவனுக்குத் தவாக்கினியால் நேர்ந்த பசிப்பிணிகண்டு முன்னூட்டிப் பின்னுண்போமாகி அருவத்திருமேனிகொண்டு அமர்கின்றோம். அத்தலம் பரமரகசியமாக விளங்காநிற்கின்றது.

## திருவாரூர்.

திருவாரூரென்றொருதலமுண்டு:— திருமால் புத்திரப்பேற்றைநாடி வழிபடுங்கால் தோன்றிய நம்மைமாத்திரம் இறை

* சேது - கரை.

ஞ்சி உடன்வந்த தேவியையிறைஞ்சாமையின் அத்தேவி சினந்து "நினக்குதிக்கும்புதல்வன் எம்பெருமான்முனிவால் முடிவாருக" எனச்சபிக்கத்; திருமாலயர்ந்து அக்குற்றமகற்றுவான் நம்மைத் தேவியோடு குமரனுமமையச் சோமாஸ்கந்தமூர்த்தியென அமைத்துப் பல்லாயிரகோடியாண்டு ஆராதித்து அப்புண்ணியமேலீட்டால் அம்மன்மதனென்னும் புதல்வன் நமது நெற்றிக்கண்ணால் தகிக்கப்படினும் அருவுருவாகியமர வரம் பெற்றனன். திருமாலின்மார்பகத்தில் அகலாதமர்ந்த யாம் அத்திருமாலின் நெட்டுயிர்ப்பினாலும் நாகணையினுயிர்ப்பினாலும் பாற்கடலினசைவினாலும் ஆடுந்தொழில்பூண்டமர்ந்தனம். அக்காலை வாற்கலியென்னுமசுரனால் இந்திரனுக்குநேர்ந்த பீடைநிவிர்த்திப்பொருட்டு அத்திருமால் நம்மையளித்ததுமன்றி அவ்வசுரனையுங்கொல்ல யாம் அவ்விந்திரனால் ஆராதிக்கப்பட் டமர்ந்தனம். அமருநாளில் வலாசுரனெதிர்க்க; அவன்சேனைகளைப் பூவுலகாளும் முசுகுந்தசக்கரவர்த்தியால் முடித்துத் தான் அவ்வலாசுரனை மாய்த்தபின் இந்திரன் அவ்வரசன் விருப்பப்படி நம்மையவனுக்களிக்க அவனால் தாபிக்கப்பட்டு யாம்வீற்றிருக்குந்திருவாரூர் பிறக்கமுத்திதருவதாகலின் அதன்பெருமை ஆதிசேடனும் மொழிய அறியான். அத்தலம் பராசத்திபீடமாகலின் ஸ்ரீநகரமெனவும் திருவாரூரெனவும் பெயர்பெற்றது.

## திருவீழிமிழலை. திருவாவடுதுறை.

திருவீழிமிழலையென்றொருதலமுண்டு:— திருமால் ஆதியில் சுதரிசனம்பெறக் காதலித்து ஆங்குப்பூசித்து ஆயிரந்தாமரை மலர்களைக்கொண்டு ஆயிரநாமங்களால் ஆராதிப்புழி அன்பைச்சோதிப்பான் ஒருதினம் ஒருமலரை மறைத்தருளலும், அத்திருமால் தன்னியமந்தவறுதபடி அத்தாமரைமலர்நிகரும் கண்களுள் ஒன்றையிடந்து நமக்குச்சாத்தத்; திருவுளமகிழ்ந்து

வெளிப்பட்டு அவன்வெஃகிய சக்கரத்தைத் தந்தளித்தோம். திருவாவடுதுறையென்றொருதலமுண்டு:— இக்கைலையில் முன்பொருஞான்று சூதாடியவழி அம்பிகையே வென்றமையின் சலந்தரபுரமென்றொருபதியைத் தற்சுதந்தரமாகத் தந்தனம். பின் ஐம்பதுமுறைதோற்று ஐம்பதுபதிநல்க; அதனால் அத்தேவி பஞ்சாசற்பீடியென நாமமுற்றனள். மேல் மூந்நூற்றைம்பதுமுறை தோற்று அவ்வளவுதலமீந்து நீவெற்றிகொண்டமைக்கு அறிகுறியாக "இத்தலங்களிலெல்லாம் வலப்பாகம் நீவதியுந்தானமாகக்கொண்டு அமர்க" என்றுபணித்தனம். இவ்வாறுறுங்கால், திருமாலைச்சான்றாகவைத்ததும் தேவியின் செருக்குமிகுதியுங்கண்டு அதுகாரணமாகப்பசுவுருவடையவும், அவ்வுருவுடன் பலதலங்களையும் வழிபட்டுச்செல்லுங்கால் யாங்குக் காலிடறுதல் இடக்கண் துடித்தல் நிகழுமோ ஆங்குச் சிவலிங்கத்தினின்றும் இடபவாகனரூடராய்த் தோன்றிப் பசுவுருவகற்றி முன்னையியல்பு அருள்வோமெனவும் கட்டளையிட்டு, அங்ஙனமே அத்தலமடையுங்கால் வழிபாடேற்று அப்பசுத்துவம் அகற்றினமாகலின் அது கோமுத்தி கோகழி ஆ அடுதுறை என்றிங்ஙனம் பெயரெய்தியது. அத்தலத்தே ஓரரசமரம் பல்லூழிகாலமாக அழியாது நிற்கின்றது.

## திருவிடைமருதூர்.

திருவிடைமருதூரென்றொருதலமுண்டு:— இலக்குமி தன்னைப்புகழ்ந்துபாடிய வாணிக்கு மிக்கவொளிபரப்பும் மணிகளிழைத்த பொன்னரிமாலையொன்று அளித்தவழி அவள் துருவாசமுனிவற்களித்தலும், அம்முனிவன் விண்ணுலகடைந்து இந்திரனுக்களிக்க; அவன் பவனிவருந்தருணமாகலின் அதையேற்று வெள்ளையானையின்மீது வைத்தனன். அது கீழ்வீழ்த்திக் காலாற்சிதைத்தல் கண்டமுனிவன் சினந்து அவ்விந்திரன் அங்ஙனம் அவமதித்தற்கேதுவாகிய செல்வங்கள் பாற்கடலில் விழவும் அந்தயானை காட்டானையாகவும் சாபமிட்டகல ; அச்

செல்வங்கள் பின் பாற்கடல்கடைந்து கொள்ளப்பட்டன. அந்த யானை கருகி உலகிலுழலுங்கால் ஒருஞான்று அத்தலம்புக்குக் காவிரிநதியில் விக்கினேசுரதீர்த்தத்தில் மூழ்குதலும் பழைய வடிவெய்தி மகிழ்ந்து ஆங்கு மருதவனத்தமர்ந்த நம்மையிறைஞ்சி மீண்டு குணதிசையில் ஓரிலிங்கந்தாபித்துப் பூசித்து நம்பால் வரம்பெற்றுச்சென்றது. அன்றுமுதல் அத்துறை ஐராவதத்துறையென்று பெயர்பெற்றதுமன்றியும் தைப்பூசத்தில் யாமெழுந்தருளித் தீர்த்தங்கொடுக்கும் பெருமையும் படைத்தது. மல்லிகார்ச்சுனம் மத்தியார்ச்சுனம் புடார்ச்சுனமென்னும் முத்தலங்களுள் இத்தலம் மத்தியதாகலின் மத்தியார்ச்சுனமெனவும் இடைமருதெனவும் பெயர்பெற்றது.

## கருவூர்.

கருவூரென்றொருதலமுண்டு:— அஃது உலகத்துள்ள எப்பதிகளும் தோன்றுமுன்னர்த் தோன்றினமையால் ஆதிபுரியென்றும், கற்பந்தோறும் டைப்புத்தொழில்புரிதற்கு அடையாளமாகச் சராசரங்களின் அடிச்சுவடுகள் அமைக்கப்பட்டுள்ள தானமாகலின் கர்ப்பபுரி கருவூரென்றும், நம்மால் ஆங்காங்குந் தோற்றுவிக்கப்பட்ட மூர்த்திதலந்தீர்த்தங்களனைத்தையும்மீட்டுங் கரக்கும்படி செய்துகொள்ளுந் தானமாகலின் கரபுரியென்றும் பெயர்பெற்றதாக; வஞ்சிவன மென்னும் ஆங்கு ஆதியில் பாதலத்தினின்றும் புற்றின்வழித்தோன்றிய நம்மை அசரீரிமொழிப்படி காமதேனுபூசிக்குங்கால் நமதுதிருமுடியின் வாமபாகத்தில் அக்காமதேனுவின் காற்குளம்புபட்டு உதிரஞ்சொரிய அதுகண்டுவருந்தும் அப்பசுவைநோக்கி “இது நினது தவறால் நேர்ந்ததன்று, எமதுவிளையாட்டால் நிகழ்ந்தது” என்று வேண்டும்வரமளித்துப் பசுபதீசரெனத் திருநாமங்கொண்டு திகழ்தலின் அவ்வாலயம் ஆனிலையென்றாயிற்று.:

## அவிநாசி.

அவிநாசியென்றொருதலமுண்டு:— முன்னொருகாலத்திலே நாம் பிரளயதாண்டவம்புரியத் திருவுளங்கொண்டு கடைக்கணித்தலும், அக்குறிப்புணர்ந்தவருணனால் ஏவப்பட்ட சத்தமேகங்களும் இடைவிடாதுமழைபொழிய. அதனால் உலகசராசரங்களெல்லாம் அழிந்தன. யாம் பிரளயதாண்டவஞ்செய்தருளியபின் பார்வதியைப் பிரணவசொரூபியாகிவரச்செய்து அக்கினிதாண்டவம்புரிந்து மறைந்துழி அப்பார்வதி பிரிவாற்றாளாக; அதுநோக்கி வாமபாகத்திலணைத்தலும் அதனால் சதாசிவனாதிபஞ்சமூர்த்திகளும் உதித்துப்பஞ்சகிருத்தியங்களையும் இயற்றினார்கள். இப்பால் தேவி சின்னாட்பிரிந்த தோஷநிவிர்த்திக்காகப் பூசித்தற்கு ஒருதலம்வேண்டலும் நாம் முன்னர் அக்கினிதாண்டவ மியற்றியவழி அரியயன் முதலோர் அஞ்சிப் புக்கொளித்தமையால் " புக்கொளியூரென்றும் ஊழிக்காலத்தும் விநாசமின்றியிருப்பதால் அவிநாசியென்றும் பெயர்பெற்ற அத்தலத்தையே பணித்தனம். பணித்தவாறே பூசித்தலும் யாம்காசியில் விசுவலிங்கத்தமர்ந்திருந்து பின்பு அம்மூலலிங்கத்தினின்றும் ஒருவேர்தென்பாலோடிச் சிவக்கொழுந்தாயமரத்தோற்றுவித்து அதில் அப்பூசையேற்றுக் காட்சிகொடுத்து வாமபாகமளித்தோம்.

## இரத்தினகிரி. திரிசிராப்பள்ளி.

இரத்தினகிரியென்றொருதலமுண்டு:— ஆரியதேசமன்னன் இரத்தினவிருப்பத்தால் தலங்கடோறும் பிரார்த்தித்துங் கிட்டாமையால் அத்தலமடைந்துழி ஓரிரத்தினத்தைத்தோற்றுவித்து, இதைவேண்டினையேல் காவிரிநதிநீர் ஆயிரங்குடங்கொணர்ந்து இத்தொட்டியைநிரப்பின் ஈவமென்றியம்பி, அங்ஙனங் கொணர்ந்த ஆயிரங்குடநீரைத் தொள்ளாயிரங்குடவளவின

தாக்கிப் * பொசிவாசிக்கணக்குப்புகன்று, மீட்டுங்சொணர்ந்த அந்நூற்றில்பத்தும் பத்திலொன்றும் ஒன்றிலுழக்கும் குறையப்பண்ணி அப்பொசிவாசிக்கணக்கறைந்து, அவ்வுழக்குநீரும் தருகவெனலும், அரசன்சினந்து வாள்கொண்டுவெட்ட; அத்தழும்புபூண்டமுடியோடு இடபவாகனத்திற்றோன்றி அவ்வாளைப்போக்கி அநுக்கிரகித்ததுமன்றி அவன்பணிகளேற்றுச் சிவகதியுமளித்தனம். அதனால், அது இரத்தினகிரியென்றும் வாட்போக்கியென்றும் பெயர்பெற்றது. சிவாயமலையென்பதும் இது. திரிசிராப்பள்ளி யென்றொருதலமுண்டு:— அது இக்கைலைமலையினின்றும் வாயுதேவனாற் களைந்தெறியப்பட்ட முச்சிகரங்களுள் ஓர்சிகரமாயுள்ளது. சோணாட்டெல்லையில் இராவணனுக்குக் காவலாக இருந்த திரிசிரா கரன் தூடணன் என்னுமூவருள் பிந்திய இருவரும் பகைவரைத்தொலைத்து இலங்கையையடைந்தவழித் திரிசிரா இராவணனனுமதிபெற்று ஆங்கு ஆலயம்வகுத்து நம்மையருச்சித்துப் பலதவமியற்றியும் காட்சியருளாமையின் தனதுதலைமூன்றனுள் இரண்டைத்தடிந்து அக்கினியிலாகுதிசெய்து மற்றதையும் அரியத்தொடங்க நாம் காட்சியளித்து வேண்டும் வரமளித்தனமாகலின் அது திரிசிராப்பள்ளியெனப் பெயர்பெற்றது.

## திருவையாறு.

திருவையாறென்றொருதலமுண்டு:— அது சூரியபுஷ்கரணி தீர்த்தம் கங்காதீர்த்தம் சந்திரகிரணத்திலுண்டான அமிர்தநதி கௌரியின்தனத்தினின்றுமுண்டான பாலாறு நந்திவாய் நுரைத்தீர்த்தம் ஆகிய ஐந்துதீர்த்தங்களுடைமையால் பஞ்சநதம் ஐயாறு எனப்பெயர்பெற்றதாக; அவ்வைந்துநதிகளும் பின்வந்த காவிரியின்மறைந்தன. ஆங்குக் கற்பகாலத்தும் நாச

* பொசிவாசி - நீர்கசிவுக்காகக் கழித்துக்கொண்டவட்டம்; பொசிவு - கசிவு. வாசி - வட்டம்.

மில்லாதநம்மால் அநேகங்கோடி கற்பசிருட்டிகர்த்தர்களாகிய பிரமர்களும் அவற்றைக் காப்பவராகிய திருமால்களும் தோற்றுவிக்கப்பட்டார்கள். எமது மாயாசத்திவிசேடத்தால் உண்டாக்கப்பட்ட தாபரசங்கமசொரூப சகத்துக்குக்காரணமாயயாம் பஞ்சநதீசரென விளங்காநின்றோம்.

## கும்பகோணம். சில இலிங்கோற்பவம்.

அயன் ஒருகற்பத்திலே யாவுமழியாதபடி ஈங்கணுகிப் பிரார்த்தித்து நங்கட்டளைப்படி அமுதங்கலந்துமண்பிசைந்து மாயாமயமெனுங் கடமொன்றாக்கி அதிலமுதம்பூரித்து நடுவே சராசர ஆன்மகோடிகளின் சிருட்டிபீசத்தையும் நாற்புறத்தும் வேதாகமம் அவற்றினங்கம் புராணம் இதிகாசங்களையும் வைத்து வாயின்கண் மாவிலையாதியசூட்டி மேருவுச்சியில் உறியில் வைத்து வில்வாதிகளாலருச்சித்து வருநாளில் ஏழுகடலும் பெரும்புறக்கடலொடுகலந்து பொங்கிப்பரத்தலால் மேருவும் முழுகியதாயிற்று. அதிலிருந்தகடம் உறியொடுமிதந்து காற்றால் தென்றிசைவருங்கால் கீழ்க்கடலின்மேற்பால் நெடுந்தூரத்தில் மாவிலைவீழ்ந்து வன்னிமரமாதலும் அதனிழலில் தருப்பைவீழ்ந்து தருப்பையிலிங்கமென்றாயது. அதற்குவாயுதிசையில் ஒருகுரோசத்தில் கடம் அந்தரத்தேநிற்க இதுவே தக்கதானமென்று அசரீரியுமெழுந்தது. வெள்ளமும்வற்றியது. உடனே தரையையடைந்த அக்கும்பத்தின் உறி கீழ்பால் ஒருசிவலிங்கமாயது. தெங்கின்பழம் அக்கினிதிசையில் செவ்விளநீர்த்தருவாக அதனடியில் அக்காயின் சிகைவடிவாக ஒருசிவலிங்கமுதித்து நாரிகேளலிங்கமென அமர்ந்தது. பலவில்வமும் பலமரங்களாக அங்கே பாதாளலிங்கந்தோன்றியது. உபவீதம் நாரிகேளவிருக்ஷமேல்பால் உபவீதநாதரென ஓரிலிங்கமாயது. இங்ஙனம் பலதலங்களுண்டாதற்குக் காரணமாயினமையின் அக்கும்பத்தை க்ஷேத்திரபீஜகும்பமென்றுரைப்பர்.

## கோணேசம். கும்பேசம்.

அத்தருணத்தே நாம் வேடவடிவங்கொண்டு கணங்களோடு திருவிடைமருதூர்க்குக் கீழ்பாற்புக்கு மேற்றிசையிலிருந்த அக் குடத்தின் * கோணத்தினை ஒருகணைவிடுத்துச் சிதைத்துவீழ்த்த அக்கோணம் அக்கினிதிசையில் ஒருயோசனைதூரஞ் சென்றுவீழ்ந்து ஓரிலிங்கமாகிக் கோணேசரெனப் பெயர்பெற அத்தானம் குடவாயிலென்றாயது. பாணந்தொடுத்த அவ்வெல்லையும் பாணபுரியெனப்பட்டது. குடத்திற்பெருகியவமுதம் நமதுதிருவுளப்படி கிழக்கினும் தென்கிழக்கினும்நிரம்பி அமுதவாவிகளிரண்டாக நாம் அமுதினனைந்த மணலினைத்தையும் அக்கும்பத்திட்டுப்பிடித்துச் சிவலிங்கமாக்கிப்பூசித்து அச்சிவலிங்கத்தின்மறைந்து ஒளிமயமாய்விளங்கினோம். ஆதிகாரணமாய்க் கும்பத்துதித்தமையின் ஆதிகும்பேசரெனவும் அமுதத்துதித்தமையின் அமுதேசரெனவும் பெயர்வழங்குவர். அவ்விலிங்கத்திற்பூசித்து அயன் சிருட்டிபெறத் திருமாலாதியர்பூசித்து அவரவர் தத்தம்பதம்பெற்றதுமன்றி அச்சிவலிங்கத்திலேயே அமர்ந்து கடைக்கண்பாலித்தருளவேண்டும் என்றும் பிரார்த்திக்க அவ்வாறேவரமீந்தோம். ஆகலின், நமதுசந்நிதிமுன்புள்ள அமிர்தபுட்கரணியில் மனவொருமையுற்று நியமத்தோடுமூழ்கித் திலதருப்பணஞ்செய்து இயன்றதானமீந்து நமைத்தரிசிக்கின் முத்தியடைவர். அத்தலம் குடமூக்கின் வழிந்த அமுதத்தில் ஐங்குரோசதூரம் நனைந்தகாரணத்தால் ஐங்குரோசத்தலமெனவும் கும்பகோணமெனவும் பெயர்வாய்ந்தது.

## மாந்தாதாபேறு.

சூரியன்மரபிலுதித்த மாந்தாதாவென்னும்மன்னன் தன்குலகுருவாகிய வசிட்டமுனிவன்பணித்தவாறே அத்தலஞ்சார்

* கோணம் - மூக்கு.

ந்து அமுதவாவியின்மூழ்கிக் கும்பலிங்கேசராகிய நம்மையும் மங்களாம்பிகையையும் விதியினருச்சித்து ஆலயம் தேர் திருவிழா சித்திராபௌர்ணிமைத் தீர்த்தமகோற்சவம் அடியவராராதனை ஆதியநடத்துவிக்க; நாம் இடபவாகனத்தெழுந்தருளிக் காட்சியளித்து அவனுத்தேசித்துவந்தவாறே இவ்வுலகமுழுமையும் ஆண்டுவாழ்ந்து இறுதியில்முத்திபெற அளித்தோம்.

## சத்தியகீர்த்திபேறு.

மாளவதேசத்திலே சந்திரபுரியிலே மதிகுலத்துதித்த சத்தியகீர்த்திவேந்தன் நியமமாக ஓர்வேள்விசெய்யுங்கால் முறையீடாகவெழுந்தவொரு மொழியைக்கேட்டு அபயமீந்து அதனைத் தன்புரோகிதனாகிய வேதசன்மனென்னுமறையவன்பால் விளம்பலும், அவன் நம்மைத்தியானித்து உண்மையுணர்ந்து "குரிசிலே! இவள் பூர்வத்தில் ஓரந்தணன்மனைவியரிருவருள் மூத்தவள். அவன் இளையாளைக்காதலியாது தன்னைக்காதலிக்கும்படி மருந்தைப் பாலிற்கலந்தூட்ட அதனாற் கயரோகமிக்கு அவன்மடிய; இளையாளும் அநுமரணஞ்செய்தனள். இவள் மஞ்சளணிதலாதியவும்நீக்காது பலபுருடரோடுவாழ்ந்து மூத்து நோயுழந்து இயமனுலகமெய்தியவழி அவன் இவள்கொலைப்பாவமாதியனகுறித்து அக்கினிநிரயத்தில்வீழ்த்தி அயுதவருஷம் இவளுடலூனை அரிந்திந்து பிரம்பிற்றுக்கி அருத்துவிக்கவென்னலும் ஏவலர் அங்ஙனமேபுரிய நொந்தருந்தி அவனியிற் பலபன்றி நாய் கழுதைச்சென்மங்களை முறையே எடுத்து நினதுதேயத்தில் ஓர் அந்தணன்மகளாயுதித்துப் பிரமராக்கதத்தாற் பிடித்தலைக்கப்பட்டு வருந்துகின்றாள். இத்துயரனுபவிக்க விதித்தவையுள் மூன்றாறாண்டுகழிந்தன. இன்னும் எழுநாறாண்டுள்ளன. அங்ஙனமாக இத்தவறு அகற்றுதற்கு இயலுவதோர் ஈதுணராது அபயமீந்தாய். அதனால் உரைப்பதொன்

றுளது. குடந்தையில் காவிரியில் * காசிபத்துறையில் மாசிமாதமுழுது மூழ்கி மூன்றுதினப்பலனையளிக்கில் அவள்பவந்தொலையும்" என்ன; அங்ஙனமே மூழ்கியளித்தனன். அவள் அத்துன்பினீங்கித் தேவபதவியிலிருந்த தன்கணவனையடைய; அரசனும் நமதுபதமடைந்தான்.

### சந்திரன் தூபேரன் பேறு.

வியாழன்மனைவியாகிய தாரையென்பவளைக் குருபத்தினியெனச் சிறிதுங்குறியாது அவள்பாற் சந்திரன்கலக்க; அஃதோர்ந்தவியாழன் முனிந்து "கயரோகங்கொண்டழிக" எனச் சாபமிட்டனன். அதனால் தனதொளிமழுங்கிக் கலைகுறைந்து அறிவுகுன்றி நாசமும்வருவதோர்ந்து பிழைபொறுத்தருளுமாறு பணிந்துவேண்டி அவ்வியாழனுரைத்தவாறே குடந்தைசார்ந்து பொற்றாமரைத்தீர்த்தத்தின்கீழ்பால் ஒருதீர்த்தமுண்

---

* காசிபமுனிவர் அதிதிபாலுற்றதினும் திதியின்பால் அதிக ஆர்வமுற்றொழுகலின் அதிதிக்கு முப்பத்துமுக்கோடிதேவரும் திதிக்கு அறுபத்தாறுகோடி அசுரருமுதிக்க அதுகண்ட அதிதி என்புதல்வர்மெலிய இத்திறம் அசுரரைத் தோற்றுவிப்பதொழிந்து என்பாற் காதல்கொண்டுறைவீராக என்றுவேண்டவும் அவளைக் கீழ்வீழ்த்துதைத்தமையால் அவள்சகியாதிட்ட சாபத்தால் அம்முனிவனுக்குநேர்ந்த அவியுருவையகற்றிய துறையாகலின் காசிபத்துறையெனப்பட்டது. இச்சத்தியகீர்த்திமூழ்கியது பகவதீர்த்தத்துறையென்பது திருக்குடந்தைப்புராணம். காவிரி நதியிலுள்ள ஓர்துறையின் மேல்பாகம் காசிபதீர்த்தமும் கீழ்பாகம் பகவதீர்த்தமும் இடைப்பாகம் சக்கரதீர்த்தமுமாக வழங்கும் ஒற்றுமைபற்றி இங்ஙனம் கூறப்பட்டதுபோலும். பகவனென்னும்மறையவன் தாயினது அத்தியையிட்டுமூழ்கி முத்திபெற்றமையின் பகவதீர்த்தமெனவும், சலந்தரனைக்கொன்றசக்கரம் அசுரபீடையாதியவற்றின் நிவிர்த்திக்காகத் தாபிக்கப்பட்டதானமாகலின் சக்கரதீர்த்தமெனவும்பெயர்போந்தன.

டாக்கி அத்தீர்த்தங்கொண்டு அமிர்தலிங்கவடிவமாயமரும்
எம்மைப்பூசிக்க; யாம் காட்சிதந்து குளிர்ச்சியும் உடல்செழிப்
பும் நல்கியதுமன்றி, மற்றொருகால்பூசிக்க ஓஷதிகளை வளர்க்
குந்தன்மையனுதற்சிறப்பும் பாலித்துச் சோமேசரென விளங்
காநின்றோம். குபேரனும் தக்ஷிண அமுதவாவியின் மூழ்கிப்
பாடலவனேசரெனவிளங்கும் நம்மை ஆராதித்துச் சங்கநிதி
பதுமநிதிகளுக்குத் தலைவனுயதுமன்றி நமக்குத் தோழனுமா
கப்பெற்றனன்.

## பிரகஸ்பதி நாகராசன் பேறு.

மாளவதேயத்துள்ள ஆங்கிரசென்னுமறையவன் புதல்வரா
கிய உசத்தியன் பிரகஸ்பதி சம்வர்த்தகனென்னுமூவருள் பிர
கஸ்பதி தேவகுருவாதலைவேட்டு ஆண்டுச் சோமேசரென்னு
நம்மை வழிபடலும், நாம்தோன்றியருளிக் குபேரனுல் கனக
மழைபெய்வித்து அப்பொருள்கொண்டு யாகமியற்றி அப்பே
றடையப்பணிக்க; அங்ஙனமேயியற்றி மாளவதேயப்பனவ
னுகிய தன்பெயரால் மாளவேசரென ஓரிலிங்கந்தாபித்துப்
பூசித்து அப்பதவியடைந்தனன். முன்பு குடத்தின்வழிப்பெ
ருகிய அமிர்தம் பிலத்தின்வழியிழிந்து நாகலோகமெய்தி ஆங்
குப் பசுக்கொட்டிற்றறியில் இலிங்கவடிவாயமைய; அதை நாக
ராசன்கண்டு அரகரசம்புவெனத்துதித்துக் கூர்மவடிவாகிய
அரியுணர்த்தியபடி கைக்கொண்டு குடந்தையுற்று அரசமரத்
தையுடையகனாயில் நாகநாயகனென வழங்கத் தாபித்து விதிப்
படியருச்சித்து விழைந்தவரம்பெற்றனன்.

## உமாபாகர் ஆடல்வல்லவராயினமை.

தேவரிடுக்கணகல முருகவேளைத் தோற்றுவித்துச் சூரனுதி
யரையழித்தபின் அத்தேவர் துயரொழிந்து ஆநந்தநடனங் கா
ட்டியருளவேண்டுமென்று இவனைய்திப்பிரார்த்தித்து நாம்
பணித்தவாறே குடந்தைசார்ந்து நம்மையிறைஞ்சி நாடேசம்

புக்கு அரவதீர்த்தத்தின்மூழ்கி ஆங்கு வில்வமூலத்தமரு நம்மை வழிபட்டிருந்தனர். அக்காலை ஓராலயமும் அதனுடனே ஓர்சபையும் தோற்றுவித்து அதில் அளவில்லாத சூரியர்தோற்றம்போலுந் திருமேனியொடுவிளங்கி அம்பிகைதாளமொத்த விநாயகன்மத்தளமுழக்கத் திருமால் வேய்ங்குழலூதத் தும்புருநாரதாதியர் இன்னிசையெழுப்ப ஏனையோர் காளமாதிய சின்னங்கண்முழக்கி அரகரகோஷஞ்செய்ய நடித்தருளினம். அந்நடனங்கண்டு இறைஞ்சிக்களித்த அத்தேவராதியர் ஆடல்வல்லவரெனத் துதித்து வாஞ்சித்தவரம்பெற்று வாழ்ந்தனர்.

## சூரியன்பேறு.

சூரியன்மனைவி சஞ்ஞையென்பவள் இயமன் காளிந்தி என்னும் இருமகாரையீன்று வாழுநாள் அவனதுகிரணமாற்றாமையால் தனதுசாயையைத் தன்னுருவாகச்சமைத்து இருத்திவிட்டுத் தன்பிதாவாகிய துவட்டாவையடைய, அவன் வந்தவாறு வினவி இது கற்புடைமகளிரியல்போவெனக்காய்தலும் ; கணவன்பாற்செல்வே னென்றியம்பி மந்தரகிரியணுகிக் குதிரைவடிவாய்நின்று தவமியற்றினள். அஃதுணராதசூரியன் சாயாதேவிபாற் கூடிவாழுங்கால், அவளீன்ற சனியும் சஞ்ஞையீன்ற இயமனும் பெருங்கலாம்விளைத்தல்கண்டு இவர் ஒருதாய்ப்புதல்வராயின் இங்ஙனம் பொருதாரென்றையுற்றுச் சாயாதேவியால் உண்மைதேர்ந்து ஆண்குதிரையுருக்கொண்டணுக ; சஞ்ஞை உருமாறித் தன்வீட்டையடைந்தனள். சூரியனும் தனதுசுயவடிவத்தோடு உடனெய்த, அதுகண்ட துவட்டா அவனைச் சாணையிலிட்டுக் கதிர்களெல்லாமுதிரத் தேய்த்தலும் ; வாடி அத்தலம்புகுந்து ஒருதீர்த்தமுண்டாக்கி வழிபட்டிருந்தனன். அக்காலை உமாபாகராகிய யாம்தோன்றிச் சிதைந்தகதிர்களையும் சஞ்ஞைக்கு அவற்றைப் பொறுக்குமாற்றலையும் அத்தலமுந் தீர்த்தமும் அவன்பெயரால் வழங்குதலையும் நல்கினம். பாஞ்

வளமைதனைத் தண்புனற்கங் கைக்கொடியே சாற்றக் கேண்மோ. (எரு)

பூருவத்தி னூழிவெள்ளப் புனல்பெருகப் பல்லுயிரும் பொன்று மென்ற, காரணத்தான் மாயைமயக் கடமொன்று செய்ததினுன் காய தோற்றத், தாருமெழு விதத்தெண்ப துடனூ ருயிரம்பே தத்த வாகிச், சாருமுயிர்த் துணைகளமிர் திட்டயனுன் மேருவுச்சி தனில்வைப் பித்தேம். (எசு)

மண்டுபுனற் கடலேழு மொன்ருக வெழுந்துமா மேரு வுச்சி, கொண்டதன்மேல் வைத்தகுடந் தன்னையுமேற் கொண்டண்டகோள மேகிப், பண்டுபெரும் புறக்கடலைக் கூடியே பலகற்பம் பரவி யொன்ருக், கண்டகட மேன்மிதந்தப் புனல்படியப் புவியினிடங் கலந்து தோன்ற. (எஎ)

தோன்றுமது தொடர்ந்துநான் முகனுமுயிர்த் தொகுதிகளைத் தோற்று விப்பான், மூன்றுவிழி யுடையநமைக் குறித்துநெடு நாட்டவங்கன் முயல முன்ன, ரேன்றகிரா தப்படிவத் தெய்திநீ வேண்டுவதியா தியம்பு கென்ன, வான்றவுயிர்த் தொகைபடைக்க வடிகணீ யருளுதியென் றறைய வாங்கே. (எஅ)

---

(எசு) ஈண்டு ஊழியென்றது பிரமதேவரது திறைந்தியத்திலுண்டாகும் நைமித்திகப் பிரளயமாம். அக்காலத்தும் உயிராதிய சிருட்டிபீசங்க ளழியாவாகவும் அழியுங்கொலோவென்னும் ஐயத்தால் நம்பாலெய்தி முறையிட்டமையின் இங்ஙனம் புரிவித்ததென்பார் பொன்று மென்றகாரணத்தால் கடத்தமுதிவிட்டுவைப்பித்தே மென்றருளினர் என்க. துணையென்றது சிருட்டிக்குக் காரணமாகிய சூக்குமவடிவங்களை. சிருட்டி பீசங்களைக் குடத்திற்பூரித்த அமுதினடுவினும் வேதாகமம் அங்கம் புராணம் இதிகாசமிவற்றை நாற்புறங்களினும்வைத்து மாவிலையாதிய வமைத்து இருவிப்பூசிக்கப் பிரமதேவருக்குப் பணித்தனரென இதனை விரித்தியம்பாநிற்கும் திருக்குடந்தைப்புராணம்.

(எஎ) ஒன்ரு ஈறுகெட்டவினையெச்சம்.

ருமால் கரணவொருமையோடு நாளும் நம்மைவணங்கிப் பத்திமேலீட்டால் பரவசப்பட்டு அத்தலத்தே ஆனந்தநித்திரை பண்ணுகின்றனன்.

**உமாபாகர் நடனமளித்தமை. அர்ச்சுனன்பேறு.**

முன்னொருகால் திருமாலும்பிரமனும் ஆங்கிறைஞ்சி "சிதம்பரத்தில் பதஞ்சலிவியாக்கிரபாதர்கள் கண்டுகளிக்கத் தேவரீர் திருநடனம்புரிந்துழி யாங்கள் மத்தளதாளமுழக்குவதில் இயைந்தோமாகலின் செவ்விதிற் றரிசிக்கப்பெற்றிலம். அவ்வானந்தநடனத்தை ஈங்குக்காட்டியருளவேண்டும்" என்ன; பிரார்த்தனைப்படியே நந்தி மத்தளமுழக்க அம்பிகை தாளமொத்த நியமித்து, அவர்கண்டுவக்கும்வண்ணம் உமாபாகராகியயாம் நடனமியற்றிமகிழ்ந்தோம். அருச்சுனன்செய்ததவங்கண்டு ஆங்குப் பாசுபதாத்திரம் அளித்தோம்.

*** பகவமுனிவர்பேறு.**

முன்பு தவமுனிவன் அருண்மங்கையென்னும் பிராமணமாதைச்சேர்ந்து ஒருபுத்திரியையீன்றவுடன் விராலிமலையிலே தவமியற்றுவான்செல்ல; அக்குழந்தை உறையூர்ப்பெரும்பறையனால் சின்னாள்வளர்க்கப்பட்டிருந்து பின்னர் அச்சேரி மண்மாரியால் அழிபட்டவழி அப்பெண்மாத்திரம் உயிர்பிழைத்து அதற்கடுத்த மேலூர் அகரத்திலுள்ள நீதியையனால் வளர்க்கப்பட்டு யௌவனமடைந்திருந்தனள். அக்காலைப் பெருஞ்சாகரமுனிவன்புதல்வனாகிய பகவமுனிவன் காசியாத்திரைமுடித்து மீண்டுவருங்கால் அப்பெண்ணைக்கண்டு காதலித்து மணமுடித்துக்கலக்க; உப்பை உறுவை ஔவை வள்ளியென்னும் பெண்பாலார்நால்வரும் திருவள்ளுவன் அதிகமான் கபிலனென்னும்

* இச்சரிதமன்றிப் பகவனென்னும் அந்தணன் தனதுதாயின் அத்தியைக் காவிரியினிட்டுப்படிந்து முத்திபெற்றதொருசரிதம் மொழியாநிற்கும் திருக்குடந்தைப்புராணம்.

ஆண்பாலார் மூவருமுதித்தனர். அந்நாள் பூர்வம் புலைச்சம்பந்தமடைந்த ஆதியென்னும்பெண்ணைக் கூடியதோஷநிவிர்த்திப்பான் அப்பகவமுனிவன் அக்குடந்தைசார்ந்து நம்மை நாளும் வழிபட்டொழுக; அவனரியவிரதநோக்கி அத்தோஷத்தை எளிதகற்றி எண்ணப்படிவாய்க்க முத்தியீந்தனம்.

### காமதேனுபேறு.

இந்திரனாதியர் பிரமதேவனதுசபையில் நெருங்கியவழிக் காமதேனுவின்காற்குளம்பு துருவாசமுனிவனது காலிலழுந்தலும் முனிந்து "பசுவே! விழைந்தவர்க்கு நனிநல்கும்பயனோடு பாலுமிழந்துநீ மயங்கித்திரிக" எனச்சபிக்க; அத்தேனுவருந்திப் பிரமதேவன்பால்முறையிட்டு அவனுரைத்தாங்கு அத்தலமுற்றுக் காசிபதீர்த்தத்திற்படிந்து அதன்கரையில் தியானத்திருந்தது. அந்நாள் மேன்மேல் விக்கினங்களடைதலால் அசரீரியுரைத்தபடி குரத்தால் ஒருதீர்த்தமுண்டாக்கி, அதன்கரையில் கணபதியைத்தாபித்துக் கும்பேசராகியநமதருளால் பாலூறுதலும் பயன்பெருகலும் உண்டானமையுணர்ந்து, அப்பாலின் நவநீதமே மலராகக்கொண்டு கணபதியின்மேனிமுழுதுமணிந்து நவநீதவிநாயகரெனத்திருநாமஞ்சாத்தி, நீரில் கும்பேசராகிய நம்மையும் மங்களாம்பிகையையும் பாவனையிற் பாலினாட்டிப்பூசிக்க; திருவருள்சுரந்து காமதேனுவாகென்று வரமளித்தோம்.

### இராமமூர்த்தி பிரமதேவர் பேறு.

இராமன் இராவணனைச்சங்கரித்தற்கு உருத்திராம்சம்வேண்டி அகத்தியமுனிவனுணர்த்தியபடி மாமகதீர்த்தத்திலாடி அதன்வடகரையிலமரும் விசுவநாதராகியநம்மை விபூதி உருத்திராக்கமுதலியசின்னங்கள் பூண்டுவழிபட்டுத் தனதிதயத்தில் நாம் ஆரோகணஞ்செய்ய வரம்பெற்றமையால் அத்தலம்*காயா

* காயாரோகணமென்பது காரோணமெனமரீஇயது.

ரோகணமெனப் பெயர்பெற நாம் காயாரோகணரெனப் பெயர்பெற்றனம். அப்படிப்பட்டநம்மை வாணிகேள்வன் பூசிக்க; வியந்து இடபவாகனத்திற்றோன்றி அவன்பாவித்தபடி அவன் காயத்தும் அமர்ந்து மறையையுணர்த்தியருளினம்.

## வியாதமுனிவர் கங்கையாதியநவகன்னியர் பேறு.

காசியில் வியாதமுனிவன் தவத்தைமெச்சி அவனுக்குப் பிரமனுயுவும் வேதவுணர்ச்சியுமீந்தனம். அன்றியும், கங்கை கோதாவரி நருமதை காவிரி யமுனை தாமிரபர்ணி சரசுவதி சிந்து வேகவதி என்னும் நீமுதலிய நவதீர்த்தக்கன்னியர்கள் நும்பால் ஆன்மாக்கண்மூழ்கி யொழித்தபாவங்களைப் போக்கிக்கொள்வான் பெண்ணுருக்கொண்டு இக்கயிலையெய்தி நம்மையிறைஞ்சிவேண்ட நாம் குடந்தையில் மகாமகதீர்த்தத்தில் மூழ்கிற் சகலபாவமுநீங்குமென்று விளக்கி நும்விருப்பப்படியே நாமும் ஆங்கெழுந்தருளி மூழ்குவித்து அதன்வடகரையில் அமர்ந்த காரோணராகுநம்மைப் பூசிக்கப்பணித்தலும்; நீவிர் அங்ஙனமே பூசித்து அப்பாவத்தினீங்கினமையையும் அவ்வியாதனுக்குணர்த்த; அவன் அவ்வாறேபூசித்துத்துதித்து அதற்குமுன் காசியில் நம்மைக்குறியாது கேசவனே பரம்பொருளென்று முனிவருக்குரைத்தமையால் நேர்ந்தபாவவலியைத் தொலைத்துக்கொண்டனன்.

## திருக்குடந்தைமகிமை.

திருமான்முதலிய தேவர்கள்போற்ற இக்கயிலைமுதலியபுண்ணியத்தலங்கள்சிறக்கினும் நமதிதயம் திருக்குடந்தைப்பதியிலேயே பதியும். ஆன்மாக்கள் தாம்வசிக்கும் மற்றைப்பதிகளிற்புரியப்பட்ட பாவங்களைப் புண்ணியத்தலங்கள்போக்கும். புண்ணியத்தலங்களிற்புரியப்பட்டபாவங்களைக் காசியகற்றும். அக்காசியிற்புரியப்பட்டபாவங்களைத் திருக்குடந்தைசிதைக்கும். திருக்குடந்தையிற் செய்யப்பட்டபாவங்களையும் அப்பதியே

ஒழிக்கும். அப்பதியில் காரோணத்தில் மிகவிருப்புற்றுவாழ் வோம். அவ்வாலயத்தென்பால் நமதருளுருவாய்த்திகழுந்தீர்த்தம் பதினொன்குலகங்களினுமுள்ள நதநதியாதிய தீர்த்தங்களின்மூழ்கும் பலனனைத்தையும் அளிக்கும். அதன்பெருமை கூறவல்லார் யாவர் !.

## நாரிகேளீசர் அபிமுகேசராயினமை.

அத்தன்மைய அத்தீர்த்தக் கீழ்க்கரையில் வசிட்டன்பணிந்த அபிமுகேசமென மொழிவதொருதலமுண்டு:— பூர்வத்தில் அமுதகும்பம் இறுத்தகாலை அதன்வாயினின்றுநழுவிய ஸ்ரீதங்காய் ஓர் தென்னைவிருக்ஷமாக அதனடியில் நாரிகேளீசரெனக் கிழக்குநோக்கியிருந்தநாம் நீமுதலிய நவகன்னியர் மகாமகதீர்த்தத்தில்மூழ்க அடைந்தவழி நும்மைமக்காண்பான் மேற்குமுகமாகத் திரும்பலும் அதுகண்டநீவிர் இறும்பூதுற்று "இத்தீர்த்தத்தின் அபிமுகமாய்விளங்கினமையால் அபிமுகேசரெனத் திருநாமங்கொண்டு இங்ஙனமே அமர்தல்வேண்டும்" என்ன; அங்ஙனமே அமர்ந்தனம்.

## உபவீதேசர் கௌதமேசராயினமை.

அதற்குத் தென்மேற்கில் கௌதமேசமென்றொருதலமுண்டு:— கௌதமமுனிவன் அகலிகையோடு இல்லறமேற்கொண்டு நாளும் அந்தணர்க்கமுதிட்டுவருங்கால் பலதலங்களையும்பணிந்து சீர்காழியடைந்தவழி வற்கடம்நேர்தலும்; மறையவர்வருந்துவதுகல ஆங்குப் பன்னீராண்டு அமுதிட்டுவந்தனன். அந்நாள் மழைபொழிதலின் நாடுசெழிக்க அவ்வந்தணர் தமதூரையடைவான் வெளிப்படையானுங் குறிப்பானுமறிவித்தும் விடையவனுப்புதலில் உடன்படாமையின் அம்முனிவன்மீது ஓர்குற்றமேற்றிச் செல்வதுத்தேசித்து மாயையால் ஒருபசுவைச் சிருட்டித்துவிடுக்க; அதனைமுனிவனோக்கி வற்கடத்தின் மெலிந்த இப்பசு இன்னுஞ் செழித்திலதென்றுன்னிப் பரிவால்

அதன்புறந் தைவருதலும் அது வீழ்ந்துமடிந்தது. உடனே கொலைப்பாவமேற்றிச் செல்லத்துணிய; முனிவன் இத்தீங்கு மறையவர்வஞ்சகத்தால் நேர்ந்ததென்பதறிந்து அவர்க்குச் சிவ பத்தியிழத்தலாதிய கடுஞ்சாபமிட்டு ஆங்ககன்று தருவாசமுனிவனுரைத்தவாறே குடந்தையில் காவிரியின்மூழ்கி மகாமக தீர்த்தமேல்பால் வயங்கும் உபவீதநாதேச்சுரராகிய நம்பால் தீர்த்தமொன்றாக்கி அந்நீர்கொண்டு நம்மையபிஷேகித்துப் பூசித்துத் தான் அத்தீமையினீங்கவும் வஞ்சித்தமறையவர் அத்தீமையின்மூழ்கவும் வரம்பெற்றனனாகலின் அத்தீர்த்தம் கௌதமதீர்த்தமெனவும் அத்தலம் கௌதமேசமெனவும் பெயர்பெற்றன.

## மகாமகதீர்த்தமகிமையும் ஸ்நாநவிதியும்.

பிரமன்தவஞ்செய்தமையால் பிரமதீர்த்தமெனவும் பாபங்களைப்போக்குதலால் பாபாபநோதமெனவும் முத்தியளித்தலால் முத்திதீர்த்தமெனவும் நவகன்னியர் பூசித்தமையால் கன்னிதீர்த்தமெனவும் முறையே நான்குயுகங்களிலும் பெயர் பெற்றது. அன்றியும், பன்னீராண்டுக்கொருமுறை மாசிமாத பூரணையிலே சிங்கராசியில் மகநக்ஷத்திரத்தில் வியாழன்பிரவேசிப்பதே மகாமகமெனப்படும்: அத்தினத்தில் மூழ்குதற்குரியதாகலின் அது இக்கலியில் மகாமகதீர்த்தமெனவும் பெயர்வாய்ந்தது. அத்தினத்தில் அதில்மூழ்கவிரும்புவோர் “ எனதுதுன்பமகல வேதாகமவிதிப்படி மகாமகதீர்த்தத்தில் மூழ்கக்கடவேன் ” என்று சங்கற்பஞ்செய்துகொண்டு நகரினீங்கி ஆங்கெய்தி க்ஷௌரகருமமுடித்து மூழ்கிப் பிதிரர்களுக்குத் திலதர்ப்பணஞ்செய்து மீட்டுமூழ்கி நித்தியகருமவிதிப்படியே பஞ்சப்பிரம சடாங்கமாதிய மந்திரங்களினால் அங்கநியாச கரநியாசங்கள்புரிந்து சிவபூசைமுடித்துத் துதித்து விரும்பிவலம்வந்து காரோணத்திலமரும் நமது திருவடிகளைத்

தரிசித்து உபவாசம்பண்ணி அன்றிரவு நித்திரையின்றியிருந்து மறுதினம் சூரியோதயத்தில் அத்தீர்த்தத்திற்படிந்து இயன்ற வரைதானங்கொடுத்து விருந்தினருக்கு அன்னமூட்டிப் பாரணஞ்செய்யக்கடவர்.

### ஸ்நாநபலன்.

இங்ஙனமூழ்குவோர் கொடிய பிறவித்துன்பத்தினீங்கிச் சகலபாவங்களையும் அக்கினிமுன்செத்தைபோல நீறுக்குவர். இவ்வுலகாள்வர். கலைமுற்றுமுணர்வர். மனைவி புதல்வர் செல்வ முதலிய சகலபேறுகளையும் பெறுவர். தருமத்தலைவராவர். சத்துருக்கள்துதிக்கச் சயம்பெறுவர். ஒருமைஞானமுடைய பெரியோர்க்கு உறவாவர். பாவிகள்பாற் பயிலார். நோயினீங்குவர். இம்மைமறுமைவீடென்னும் பலன்களையடைவர். இத்தகைய குடந்தைப்பதியிலெய்தி அமரராதியர்வதியும் மகாமக தீர்த்தத்திலேமூழ்கின் அது பன்னுதற்கரிய பாவமுற்றும் சூரியன்முன்னர்ப் பனியெனத்தொலைக்கும். நினைத்தற்கரிய பேறுந்தரும். ஆகையால், நீ அத்தீர்த்தத்தை அடைக என்று கட்டளையிட்டார்.

---

## வீரபத்திரச்சருக்கம்.

இவ்வாறுபோதித்தருளக்கேட்ட கங்கை இறைஞ்சி இவ்விறைவர்திருவருள் இப்படி எளிதிற்பெற்றவர் நாமன்றி மற்றியாவரென்று மகிழ்ந்து பரவசமுடையளாய்ப் பலவாறுதுதித்து "அடியேன்விண்ணப்ப மொன்றுளது. அதையேற்றருளி அதற்குத்தக்கவாறு வரமளித்தல்வேண்டும். இப்பொழுது குடந்தைக்குச் செல்க என்றருளினீர். பெண்பாலார் தனித்துப்போந்துவரல் எளியதோ? பெண்கள் தனிக்கின் மிகுதுயரம் நீடுமென்பது தொன்றுதொட்டவழக்கே. இவற்றை வே

தாகமமுறையிடுமென்று ஒருகாலம் போதித்துள்ளீராகலின் அதுநினைந்து தனித்துச்சேறற்கு மனமிசைகிலேன். உரிய வொருதுணையை உடனனுப்பவேண்டும்'' எனவேண்டலும் நின் கருத்திற்கியைந்தவரை அறிவிக்கின் அதற்கியைய அருள்வமென்று கட்டளையிட; அவள் விண்ணப்பஞ்செய்வாள்.

பூர்வம் தேவரீருடையதிருவருள்பெற்று எவ்வுலகங்களையும் ஆண்ட தக்கன்பாலுதித்த தாக்ஷாயணியென்னும் புதல்வியைத் தேவரீருக்குத் திருமணமுடித்தபின் தேவரீர்மறைந்தருளலும், தன்னைமாமனுரென மதியாது அவமதித்தகன்றதாகவுட்கொண்டு அவன்சினந்து தேவரீரை இகழ்ந்தொழுக; நீர் ஆங்கு அம்பிகையியற்றுந் தவத்திற்கிரங்கி உடன்கொண்டு இக்கயிலையெய்தினீர். அக்காலை அவன் அந்நிந்தைப்பாவத்தி னீங்கியுய்வான் பிரமதேவராதியர் பணித்தவாறே ஈங்கடைந்தவழி வாயிற்காவலர் "கடவுளனுமதியின்றிச் சேறலடாது. அன்றியும், மூவருக்கும்முதல்வியாகிய தேவியை நின்மகளென்பதும் தகாது" எனமுனிந்துமொழிதலும், அவன் மீண்டு உம்மையன்றி மற்றையாவரையும் அழைப்பித்து ஒருயாகம் இயற்றத்தொடங்கினன்.

அந்தயாகத்திற்கு அவன்புதல்வியரனைவரும் அணுகுதலைக் கண்ட உமாதேவியார் தேவரீரையிறைஞ்சி அத்தக்கன் நம்மை நீக்க நாம் அகன்றிருப்பது முறையன்று யான்சென்று நோக்கிவருவலென் றெய்தலும் தேவியை எத்தேவருமிறைஞ்சல் கண்டு அவனிகழ்ந்தனன். அஃதோர்ந்ததேவி மீண்டு அதனைத் தேவரீர்பால் விண்ணப்பித்துத் தக்கன்புதல்வியென்னுமொழி கெடப் பனிமலையின்புதல்வியாயுதிக்க; அத்தருணத்தே தேவரீர் நெற்றிக்கண்ணில் வீரபத்திரரை அக்கினிசொரூபராகவுதிப்பித்து அவரைநோக்கி நம்மையவமதித்தியற்றும் யாகத்தையுமழித்து தக்கனதியரையும்வருத்தி மீள்வாயென்றேவினீர்.

அவர்பணிந்து அங்ஙனமே பற்பல ஆயுதமேந்தியகரத்த ராய்ப் பூதகணநாதராதியசேனைகள் ஊழிவெள்ளம்நிகர்த்து உடன்வர வெற்றியைவேண்டிவெளிப்பட்டுப் பூமியே இரதமா வும் சந்திரனே குடையாகவும் சூரியனே ஆலவட்டமாகவும் தென்றலும்வாடையும் சாமரையாகவும் அமையவும் சிவலிங்க மணிந்த சடாமகுடந்திகழவும் திருமால்பிரமனாதிய தேவர் தலைமாலை தோளணியாகத்துலங்கவும் திருமாலினவதாரங்க ளுள் மச்சாவதாரவடிவாகிய மகரகுண்டலம் காதில சையவும் வராகாவதாரத்தினிருகொம்பை இடையமைத்தமுத்தணியல் மருமத்தசையவும் கூர்மாவதாரவோடணியல் இடையிலிலங்க வும் தலைமாலையிற்கோக்கப்பட்ட நரசிங்காவதாரத்தலை தொ டையளவுதொங்கவும், அவர்மருமவணியாகிய கௌத்துபம்பி ணித்த வீரகண்டாமணி கணைக்காலின்மிளிரவும் அவர்விழித் தாமரை சிலம்பணிந்த திருவடிகளிற்றிகழவும் முன்னரழிந்த திருமால்களின்பாற்கவர்ந்த சங்குகள் சத்திக்கவும் விக்கிரமாவ தார முதுகெலும்புக்காகளம் முரலவும் அழிந்த பிரமனிந்திர னாதியர் சிரமுங்கையுஞ்சேர்த்தவீணைகள் சிலம்பவும் ஒழிந்த இயமர்களின் ஊர்திகளாகிய மேதிகளின்கொம்புகள் மிக் கொலிக்கவும் பகைவர்களுடைய கவந்தங்களாடவும் அவருடல் கள் மலைபோலக்குவிய உதிரம் கடலிற்கலக்கவும் யாகசாலை யையடைந்தனர்.

அப்பொழுது கணநாதர்கள் யாகத்திற்புக்கு ஆங்குள்ள கச துரகபதாதிகளையும் தேவர்முனிவராதியரையும் யூபத்தம்பமு தலியயாககருவிகளையும் அழித்தலும், அதுகண்ட அட்டதிக்குப் பாலகராதியர் தத்தமூர்திகளுடனெதிர்த்துச் சிதைந்தனராக; வீரபத்திரர்புகுந்து அவ்வத்தேவராதியர்க்கு இயைந்ததண்ட னைகளைப் புரிந்ததுமன்றித் தக்கன் எச்சனாதியர்சிரங்களையுந் துணித்தனர். ஆங்குத் திருமால் சக்கரத்தைவிட அது வீரபத் திரர்திருவடியிற்பணிந்து நிலைபெறலும் பூதகணங்களால் யாக

சாலையழிப்புண்டு பாழ்பட்டது. அக்காலைத் தக்கன்மனைவியாகிய வேதவல்லியென்பவள் வீழ்ந்திறைஞ்சி மாங்கலியப்பிச்சை அளிக்கவேண்டலும், திருவருள்சுரந்து மறித்தலையமைத்துத் தக்கனையெழுப்பி அவன்வேண்டுகோளின்படி என்றும் தம்மருகே வழிபட்டிருக்கும்வரமுதவிக் கணத்தலைவர்புடைமொய்ப்பப்போந்து அவ்வீரபத்திரர்பணியத் தேவரீர் அவரைமார்பிலணைத்து உச்சிமோந்து மெச்சிமகிழ்ந்தீர்.

பின்னொருகாலைத் தூணிற்றோன்றி இரணியன் மார்பைப்பிளந்து உதிரம்பருகிய நரசிங்கமூர்த்தி வெறிமிக்கு உலகழித்தவழித் தேவர்முறையீட்டுக்கிரங்கித் தேவரீர் "அந்நரசிங்கனை அடக்குமீள்க" எனப்பணித்தலும், அவ்வீரபத்திரர் எண்காற்சரபவுருக்கொண்டணுகி அவனை அவ்வெட்டுக்கால்களாலும் அழுத்தித் தலையிற்றளைபடக் கொத்திக் குருதியைவெளிப்படுத்தி வெறியகற்றித் தேவர்மலர்மழைபொழிய நரசிங்கமூர்த்திபணிந்து தம்வெற்றியைப்புகழ அருள்பாலித்து இக்கைலையெய்தித் தேவரீரையிறைஞ்சினர். அன்றியும், சதாசிவமூர்த்தத்தின்பாற்றோன்றிய மகேசமூர்த்தத்தின் கூறாகிய சந்திரசேகராதிய இருபத்தைந்துமூர்த்தங்களுள் ஒன்றாகிய இவ்வடிவிற்கிணையில்லையென்று திருமாலாதியரும் வணங்குகின்றனர். முன்பொருநாள் தேவரீரோடுவாதிட்டு நடித்துத்தோற்ற பங்கத்தால் காளி தலைகுனிந்து என்கணவராவார் யாவரென்றிறைஞ்சிக்கேட்புழி எமது அம்சத்தால் யாமே மணப்பமென்றருளியபடியே உமதுகூறாயுதித்த அவர் மணமுடிப்பத் தேவரீர் திருவுளமகிழ்ந்து திருமுடிசூட்டிச் சகலதேவரும்பணியும் உயர்பதத்தில் வைத்தருளினீர்.

இத்தகையரைத்துணையனுப்பின் நனிநன்றெனவேண்டியவழிப் பெருமான்வியந்து, "கங்கையே; நீமுதலிய நவகன்னியர் கலிவலிதொலைக்கக் குடந்தைக்குச்சென்றகாலையில் விநாயக

னைத்துணையாகவிடுத்தோம்; அதனால் அவ்விநாயகனுக்குக் கங்கைவீரணன் என்று பெயர்சேர்ந்தது. அவ்வாறே இவ்வீரபத்திரனுக்கும் நின்பொருட்டால் கங்கைவீரனென்று ஆங்குப்பெயர்வழங்குக" என்றுபணித்து, வீரபத்திரக்கடவுளைநோக்கி நினதாண்மைகுறித்தே நின்னைத்துணைவேண்டலின் நீ உடன் செல்க என்றுகட்டளையிட்டனர்.

வீரபத்திரக்கடவுளிறைஞ்சி விளம்புவர். நிரஞ்சனம் சூனியம் நிட்களம் சிவசித்து என்னும் இவைகளாகியும், அச்சிவசித்து சின்னுதம் சிற்பிந்து சிற்கலையென்பவைகளைக் கூடிய ஒப்பில்லாத தேசோமய பிரணவாதிகளாகியும், அகராதிப்பிரணவங்களாகியும் அகக்கண்ணுற்காணப்பட்டுவிளங்கும் தேவரீர் அடியேனுடைய அஸ்தமாகிய ஆலயத்தில் அமர்ந்தருளினீர். இவ்வுண்மையால் வீரசைவவாக்கியப்பொருளை அருள்கவென்று முன்னொருகால் வேண்ட "அவ்வீரசைவமென்னும் வாக்கியங்களுள், வீ-ஞானம்; ர - அந்தஞானத்தை விரும்பிச்சேர்தல்; ஆகவே, இத்தகையவீரக்கலப்புடைய சைவமெனுமொழிக்கு இலிங்காங்கசையோகமே பொருளென்றுணர்க: விதித்த இவ்வகையால் வீரசைவர்க்கு எடுத்தசனனத்திலேயே முத்திசித்திக்கும் "என்றருளிச்செய்து மேலும்" சிவமென்கிற ஒருதலமே திருவிளையாட்டால் ஆதியில் பல இலிங்கங்களாயும் அங்கங்களாயும் தோன்றும். இச்சித்தாந்தத்தைக் கைக்கொண்ட வீரசைவநிலைமையர்க்குச் சிவாத்துவிதத்தையுண்டாக்கும் ஞானபோதனை புகலுங்கால் அது முப்பொருளையுடையது. அப்பொருள்கள் குரு லிங்க சங்கமங்களாம், அவை முறையே ஆன்மாக்களை ஆட்கொள்ளவெழுந்தருளும் மூர்த்தியும் வழிபாடுகளையேற்று ஆன்மாக்களெவற்றிற்கும் பொதுநிலையிலமரும் அறிகுறிவடிவமும் தியாகாங்கமுதலிய அடியவருருவமுமாம். இவை இஷ்டலிங்கமாதியவற்றிற்கலந்து காயார்ப்பிதமுதலியவற்றை

யேற்றருளிச் சத்தமுதலிய பிரசாதங்களைக்கொடுக்கும் என்றருளினீர்.

அன்றியும் சிவமெனுமொருபொருளே, இஷ்டம் பிராணம் பாவமென மூவிலிங்கமாயதன்றி ஒவ்வொன்றிவ்விரண்டாக ஆசாரலிங்கம் குருலிங்கம் சிவலிங்கம் சங்கமலிங்கம் பிரசாதலிங்கம் மகாலிங்கமென ஆறிலிங்கமாகியும், அங்ஙனமே தியாகாங்கம் போகாங்கம் யோகாங்கமென மூவங்கமாயதன்றி ஒவ்வொன்றிவ்விரண்டாகப் பத்தன் மகேசன் பிரசாதி பிராணலிங்கி சரணன் ஐக்கியனென்ன ஆறங்கமாகியும், நிவிர்த்திகலை பிரதிஷ்டாகலை வித்தியாகலை சாந்திகலை சாந்தியதீதகலை சாந்தியதீதோத்தரகலையென ஆறிலிங்கத்தோடுங்கூடி முறையே கிரியாசத்தி ஞானசத்தி இச்சாசத்தி ஆதிசத்தி பராசத்தி சிற்சத்தியென ஆறுசத்தியாகியும், அவ்வங்கங்களில் முறையே சற்பத்தி நைஷ்டாபத்தி அவதானபத்தி அநுபவபத்தி ஆனந்தபத்தி சமரசபத்தியென ஆறுபத்தியாகியும், சுசித்தம் சுபுத்தி நிராங்காரம் சுமனம் சுஞ்ஞானம் சற்பாவமென ஆறஸ்தமாகியும், சத்தியோசாதம் வாமதேவம் அகோரம் தற்புருஷம் ஈசானம் பாவனையென ஆறுமுகமாகியும், கந்தம் இரதம் உருவம் பரிசம் சத்தம் பரிணமமென ஆறர்ப்பிதப்பொருளாகியும், அர்ப்பிக்கப்பட்ட மேற்படி கந்தமாதிய ஆறுபிரசாதமாகியும் * அஷ்டசகிலமென்றுவழங்கும் இவ்வெண்பொருளாய் விளங்குமென்றும் உணர்த்தினீர்.

---

* அர்ப்பிதங்களையேற்குமிலிங்கமும் அதன்சத்தியும் ஏற்குமுகமும் அர்ப்பிக்குமான்மாவும் அதன்பத்தியும் அர்ப்பிக்குமஸ்தமும் அர்ப்பிக்கப்படும்பொருளும் அர்ப்பித்தசேஷமுமாகிய அஷ்டசகிலமாய் ஒருவத்துவே ஆர்ந்திடுமென்றது, சித்துமசித்துமாகிய பிரபஞ்சமனைத்துஞ் சிவசொரூபமென்னும் வேதாகமத்துணிபுபற்றியென்க.

இன்னும், உடற்குத் திருவெண்ணீறும் உருத்திராக்ஷமும் வாக்குக்குப் பஞ்சாக்ஷரமும் உளத்திற்குக் குருவும் கைகட்கு இலிங்கமும் அதுசிறத்தற்குச் சங்கமமும் அறிவாற்பருகற்குத் தீர்த்தமும் பிரசாதமும் ஆபரணமாயிலகலின் இவை அஷ்டாபரணமெனப்படுமென்றீர். மற்றும், ஏகலிங்கநிஷ்டையென்பது நாதம் விந்து கலையெனவும் அகரவுகரமகரமெனவும் பதிபசுபாசமெனவும் தற்பதம் துவம்பதம் அசிபதமெனவும் விளங்குமியல்பால் அஃது அதுநீயாகுயென்னும் தத்வமசிமகாவாக்கியார்த்தமென உள்ளிருத்தென்றீர். வேறும், இவ்வாறருளிச்செய்து உமாதேவிக்கும் நந்திக்கும் பிருங்கியாதியகணங்கட்கும் இங்ஙனமே ஏகலிங்கநிட்டை நவின்றீருமென்றும், நான்குவேதம் ஆறுசாத்திரம் இருபத்தெட்டாகமம் அறுபத்துநான்குகலை பதினெண்புராணம் ஆகியவிவற்றில் நேர்மைபெற்ற அதிபரமரகசியத்தைத் தொகுத்துநனிவிளக்கலால் * வீரசைவதத்துவப்பிரகாசமென்னும் மெய்ந்நூலின்றெளிவு இதுவென்றும் முன்பருள்செய்தீர். அவ்வாறு வீரசைவநெறி யொழுகப்பணித்ததேவரீர் இன்று இக்கங்கைமாதாவின்பின் அடியேனை உள்ளபடியனுப்பின் நிதமும் தீர்த்தமும் பிரசாதமும் வேண்டுகின்றயான் எவ்வாறகன்றுசெல்வேன்" என்றனராக; பெருமான் "யாம் பரமகுருவாய் ஆங்கெழுந்தருள்வோம் நீ கங்கையுடன் குடந்தைக்கு முற்செல்க" எனவிடையளித்தனர்.

---

* வீரசைவதத்துவப்பிரகாசமென்பது ஆதியில் சிவபெருமான் கடலின்மத்தியில் வடவையழன்மண்டபத்தில் பிரணவபீடத்திலமர்ந்து உமாதேவியாருக்கும், பின்சிவலோகத்தில் நந்திதேவருக்கும் பரமரகசியமென விளக்கி, அதன்பிற்காலத்தில் கயிலாயத்தில் சிவகணங்கட்கு ஐந்துமுகங்களாலும் ஆகமரூபத்தால் விளக்கப்பட்டது. ஈண்டுத்தொகுத்தியம்பியவிடயங்கள் ஆண்டுவிரித்தியம்பப்பட்டிருத்தலின் விரிவை அந்நூலிற்காண்க.

உடனே வீரபத்திரக்கடவுளும் கங்கையும் பலவாறுதுதித்து அருள்பெற்று இடையிலுள்ளபலதலங்களையுந்தரிசித்துக்கொண்டு பற்பல அற்புதவளமுடையதாய் எப்பேறுகளையும் எளித்ளித்துவிளக்குங் குடந்தையெய்தி மகாமகபுண்ணியகாலத்திலே, அதற்குரிய அத்தீர்த்தத்தின்மூழ்கி இறைவரருட்குறியாயிலகும் இலிங்கார்ச்சனைசெய்து முடித்துப் பின்பு கும்பேசுரர் மங்களாம்பிகையையும், சோமேசுரர் சோமகுலவல்லியையும், நாகலிங்கேசுரர் பெரியநாயகியையும், விசுவநாதர் விசாலாக்ஷியையும், அபிமுகேசுரர் அமுதவல்லியையும், கௌதமேசுரர் அபிராமவல்லியையும், வணங்கித்துதித்துப், புனிதமடைந்தபின் ஆதியிலே கங்கைமுதலிய நவகன்னியர்க்கருள்புரிந்த விசுவநாதர் சந்நிதியில் கங்கையமர்ந்தனள். வீரபத்திரக்கடவுள் அம்மகாமகதீர்த்தவடகரையிலமைந்த ஆலயத்தில் மகிழ்வொடும் அடியவர்வேண்டும் வரங்களைப்பாலித்தற்கும் தமது திருநாமத்தை முற்கொண்டதாகிய வீரசைவசமயம் செழித்தற்கும் வீற்றிருந்தனர்.

இவர் இவ்வாறிருக்க ; நித்தியம் நின்மலம் நிரவதிகஞானம் நிரவயவம் நிராதாரம் நிராலம்பம் நிட்காரணம் நிட்பிரேரகம் நிர்விகாரம் நிட்புண்ணியம் நிரதிகாதிகம் நிர்ச்சங்கம் நிர்க்குணம் நிட்காமம் நிட்குரோதம் நிரசூயை நிர்ச்சஞ்சலம் நிருபாதிகம் நிர்மோகம் நிராமயம் நிரேதுக்காருண்ணியம் சாந்தம் நிரந்தரம் ஏகம் நிட்கம்பம் பரஞ்சோதி நிரஞ்சனம் உருவாதீதம் வரவுருவாதீதம் அருவாதீதம் வருணாதீதம் மந்திராதீதம் இலிங்காதீதம் நாதவிந்துகளாதீதம் அத்துவாதீதம் பராதீதம் துவந்துவாதீதம் சந்தேகாதீதம் விகற்பாதீதம் சிதாகாயம் மகாமகத்து சம்பு சுத்தம் சத்தியம் சர்வப்பிராணன்மகம் சர்வகதான்மகம் சர்வவியாபகம் சர்வத்துவம் சர்வஞ்ஞத்துவம் சர்வைசுவரியம் சர்வானந்தம் சர்வசாமர்த்தியம் சர்வசுதந்தரம் சர்வாதிபத்தியம் சர்வதோமுகம் சர்வானந்த

பூரணதிருப்தி சர்வதத்துவாதீதம் அசலம் அதிசூக்குமம் அபரோக்ஷம் பரவியோமம் அகண்டிதம் அநந்தம் பிரமாணாதீதம் சமயாதீதம் வாசகவாச்சியாதீதம் அஸ்திநாஸ்தியதீதம் கிரியாதீதம் வசனாதீதம் வாயுவதீதம் மனாதீதம் ஆன்மஞானாதீதம் விஞ்ஞானசட்சுதரிசனம் நித்தபூரணசச்சிதானந்தம் மத்தியபூரணம் அதோபூரணம் சர்வபூரணம் ஊர்த்தபூரணம் மத்தியசூனியம் அதோசூனியம் சர்வசூனியம்ஊர்த்தசூனியம் சுவானுபவாதீதவியாபக சத்தியஞானானந்தம் என்னும் இத்தகைய சொரூபவிலக்கணங்களையுடைய பரம்பொருளாகிய சிவபெருமான் வீரபத்திரக்கடவுளுக்கு முன்பு அருளியபடியே தம்முடைய ஐந்துதிருமுகங்களுள் ஈசானமுகத்தில் ஞானகுரவராய்த்தோன்றியருளிக் குடந்தையெய்தி அவ்வீரபத்திரக் கடவுளுக்குச் சிவானுபவ லிங்காங்க சம்பந்தத்தால் தீர்த்தப் பிரசாதமளித்தனர்.

அங்ஙனமளிக்கப்பெற்ற அவ்வீரபத்திரக்கடவுளும் இனிதேற்றருந்தி அன்புமிக்க நெஞ்சினிலைபெற்ற ஞானநிலையை அப்பீடத்தில் ஞானகுருவாயமர்ந்து விளக்கியநிலைமையால் அப்பீடம் வீரசிங்காதனமெனப் பெயர்பெறுமாறு விளக்கத்திருவுளங்கொண்டு அங்குத் தம்பாற்சரண்புக்க தவத்தர்களுக்கநுக்கிரகித்துவதிந்து சற்குருவின்மான்மியத்தைச் சாற்றுவாராயினர். குருவுருவே தியானிக்கப்படுபொருளாம். குருபாதபூசையே சிவபூசையாம். குருவாக்கியமே அரும்பெருமந்திரமாம். குருவருளே முத்தியாம். குருவுருவே தாய்தந்தைசுற்றம் கடவுளுமாம். குருவுருவே குருலிங்கசங்கமங்களுமாம். குகரம் அஞ்ஞானமும் ருகரம் ஞானமுமாகலின் அஞ்ஞானத்தையோட்டிஞானத்தைக்கொடுத்தலின் குருவெனவும், லிகரம் உலகுற்பத்தியும் ககரம் உலகொடுக்கமுமாகலின் லிங்கமெனவும், சகரம் சனனமறுதலும் ககரம் நினைவறுதலும் மகரம் மலமறுத

லுமாகலின் சங்கமமெனவும் பெயராம். இம்மூன்றும் அறிவாலுற்றுணரின் ஒன்றேயாம்.

சிவபெருமானே சங்கமராயெழுந்தருளி வீரசைவர்களுக்குத் தீர்த்தப்பிரசாதமளித்தும், அவ்வீரசைவர்கள் அங்கத்தில் இஷ்டப் பிராண பாவலிங்கங்களாயமர்ந்து, நிவேதிக்கப்படும் அவ்வப்பொருட்கண்ணுமுள்ள உரு சுவை நிறைவென்னும் மூன்றுமேற்றும் இருப்பதன்றியும், அருட்குருவாயெழுந்தருளிக் காரணம் சூக்குமம் தூலமென்னும் மூன்றுசரீரத்தின்கண்ணும் வேததீக்ஷை மந்திரதீக்ஷை கிரியாதீக்ஷையென்னும் மூன்றையுமியற்றுதற்குன்னிச் சதாசிவதேசிகர்முதலிய குருமூர்த்திகளாகியுமெய்தி அநுக்கிரகித்து அமர்ந்திருந்தனரென்று வேதமுறையிடும். இவ்வாறமர்ந்திருந்தருளித் திருவிளையாட்டான் மறைந்த சதாசிவதேசிகர்சந்ததியில் ஏகாக்கரும் அவர்சந்ததியில் இரேணுகரும் அவர்சந்ததியில் இரேவணர்முதலாயினவரும் தோன்றிவாழ்வுற்று இலீலையினுன் மறைந்தனர். இவ்வாறு அச்சந்ததியோர்தோன்றி இலகுமுறைமைபுகலின் ஒளிமிக்கதொருதீபத்தில் மற்றொருதீபந்தோன்றி இலகுவதொக்கும்.

## இரேணுகாசாரியச்சருக்கம்.

பூர்வத்திலே வெண்கொற்றக்குடையின்கீழிருந்து இவ்வுலகமுழுமையும் ஆள்பவனும் திருமால்பத்தியிற்சிறந்த ஓர்சோழன் எவ்வகையினும் சிவதூஷணைகளே செய்துகெடுவதைநோக்கி, அச்சோழன் சைவசமயத்தைச்சார்ந்து உய்தற்பொருட்டு இரேணுகாசாரியர்சரிதமாய் நூற்றொருதன்மைகளால் சிவபரத்துவஞ்சாதித்தலின் சித்தாந்தசிகாமணியெனப் பெயர்பெற்றதொருநூலாகிய இச்சரிதம் வீரஞராத்திரியரென்னும் ஆசாரியரால் போதிக்கப்பட்டது. அத்தகைய இவ்விரேணுகாசாரியர்சரிதம் வருமாறு:—

சிறப்புற்றோங்கியகைலையங்கிரியில் சிவபெருமான் தேவியாரோடமருங்கால் திருமாலாதியர்பணிந்துநிற்புழி, அவருள் பிரமதேவனைநோக்கி "சிருட்டித்தொழிலை நீசெய்க" எனப்பணிக்க; அவர்மருண்டு "சுவாமீ! தேவரீர் சிருட்டித்துக்காட்டின் அவ்வாறு அடியேன்புரிவேன்" எனவிண்ணப்பித்தனர். பெருமானும் அழிவிலராய்த் தம்மைப்போலுந் தகுதியுடைய பிரமதகணங்களைப்படைத்து அவருள் இரேணுகர் தாருகரென்னும் இருவருக்கும் வாயில்காப்பளிக்க ; அவர் கட்டளைப்படி புரக்குநாளிலொருநாள் பெருமான் தமது தம்பலப்பிரசாதத்தை அளித்தற்பொருட்டு இரேணுகனையழைத்தலும், அவர் அதிவேகமாகவரும்வழி ஆங்கிருந்த தாருகனைநோக்காமையால் தாண்டிவர; அஃதுணர்ந்தபெருமான் தாருகனைக்கடந்து போந்தாயாகலின் "நீ, பூமியில் உதிப்பாயாக" என்றருளினர். உடனே இரேணுகரஞ்சியிறைஞ்சி "எந்தையே! அடியேன் அவனியிலுதிப்பில் அந்தகாரத்தால் தேவரீர்திருவடியை அடைவதரிதாகும் என்செய்கேன்" என்றுமுறையிட; இறைவர் "தெலுங்கதேயத்திலே கீழைக்கடலோரத்துள்ள கொல்லிபாகமென்னுந் தலத்தில் நமது திருவருட்குறியாகிய சோமலிங்கத்தில் அயோனிசனெனத்தோன்றி வீரசைவசமயத்தை அபிவிர்த்திசெய்து நம்பால்வருக" எனத் திருவாய்மலர்ந்தருளினர். இரேணுகர் உவந்து மலர்கொண்டுதிருவடிகளைவழிபட்டுச் சிரமுதலியவுறுப்புக்களில் பலமுறைசூடி அரிதுதுதித்துவிடைகொண்டு பலகணங்களையும்பணிந்து ஆங்ககன்று துவாபரயுகத்திலே இரேணுகாசாரியரென்னுந்திருநாமத்தோடும் மேற்படிசிவலிங்கத்திலே சிவசின்னங்களோடுதோன்றிப் பொதியமலையையடைந்தனர்.

அவர்வரவைக்கண்ட அகத்தியமுனிவர் அருக்கிய பாத்திய ஆசமனங்களாற்பூசித்து ஆசனத்தமர்வித்து உரியதிருவமுதுசெய்வித்துப் பிரசாதங்கொண்டுவணங்கித் "தேவரீர் ஈங்கெழுந்தருளியது அடியேன் அநேகசன்மங்களிலியற்றிய புண்ணி

யமாம்! எனதிறைவரே! வீரசைவகுரவரே! ஆன்மஞானத்தை அடைதற்கேதுவாகியதோர் நல்லுபதேசத்தை அருள்க" என்று வேண்டினர். அவ்விரேணுகர் "முனிவரே! நீர் முருகக்கடவுளருளால் சிவதருமோத்தரத்தை ஐயந்திரிபறவுணர்ந்துள்ளீர் அப்படிப்பட்டவுமக்கு எம்மாலறியவேண்டுவது யாதோ அதை யியம்புக" என்னலும், அவர் முதன்மைபெற்ற வேதாகமங்களை ஓதியுணர்ந்தும் உற்பவமொழித்தற்கேதுவாகிய அமலபரமசிவாத்துவிதவுண்மையை அறிந்திலேன் அதனை எங்கு உரைத்தருள்க" என்றுவேண்ட உரைப்பாராயினர்.

"பலவேறுவகைப்பட ஓதப்படும் வித்தைகளாற் பொருள்களும் ஒழுக்கங்களும் பற்பலவாம். யோகம் சாங்கியம் பாஞ்சராத்திரமாகிய இவைகள் பாசுபதத்தோடும் உறவாய்விளங்கும். வேதமோதியவை சத்தியமாகையால் அவ்வேதத்தாலோதப்பட்ட மேற்படி யோகாதிகள் வாதத்தினுல் விலக்கப்படா. அத்தகைய யோகாதிகளும் வேதத்தின் ஒருபுறத்திற்கூறப்படுவனவாயிருக்கச் சைவமென்பது அவ்வேதத்தில் எங்கும்விதக்கப்பட்டதாகி மேற்கூறிய சாங்கியாதிகளினும் சிறப்புற்றதாய்த் திகழ்ந்து முற்பட்டுநிற்கும். பிரமத்தைப்பிரதிபாதிக்கிற சித்தாந்தவடிவாயமைந்த வேதப்பொருளைத்தேர்ந்து சிவபெருமானருளிய சிவாகமங்களிலே சைவம் இலாகுளம் பாசுபதம் சோமமென்பன முக்கியமாகக் கூறப்படும். அவற்றுள், சைவமென்பது வாமம் தக்கிணம் மிசிரம் சித்தாந்தமென நால்வகைப்படும். இவற்றுள், வாமமே சத்திபரமாகும். தக்கிணம் வைரவரியல்பைக் கூறுகிற்பது. மிசிரம் சப்தமாதரியல்பைச் சாற்றுவது. சித்தார்த்தம் வேதவாக்கியவுண்மையைச் சாதிப்பதாய்ப் புறமதங்களைமறுப்பதாய் நிலைபெற வழங்கிவருவது.

சிவாகமங்களும் வேதங்களும் சமமாய் அத்துவிதஞ்சாதித்தலால் இரண்டுஞ்சமமென உணர்ந்தோருரைப்பர். சைவத்

திற்கு இங்ஙனம் சாதனங்களேற்பட்டிருத்தலால் ஏனைச்சமயங்களினும் சைவஞ்சிறந்ததாகும். அச்சைவம் சாமானியம் பூர்வம் மிசிரம் சுத்தம் சௌத்திரம் மார்க்கம் வீரமென எழுவகைப்படும். இவ்வேழனுள் எக்கொள்கையும் நிரம்பப்பெற்றதாகிய வீரசைவம் சாமானியம் விசேடம் நிராபாரமென மூவகைப்படும். இவற்றைப் பிரதிபாதிக்கும் சைவசித்தாந்ததந்திரம் காமிகாதி இருபத்தெட்டாகமங்களின் உத்தரபாகத்தனவாகும். இப்படிப்பட்ட சைவசித்தாந்த சிகாமணியாகிய நூலைச் சிவபெருமான் உமாதேவிக்கும் முருகக்கடவுளுக்கும் உணர்த்தியபடி நந்திதேவரும் சின்மயகணங்கட்கு உபதேசித்தனர். அவர் நமக்குணர்த்தினர்.

சிவஜீவ ஐக்கியத்தை விளக்குதற்குரிய வீயென்னும் அக்கரத்தின்பொருள் வித்தை; ரகரத்தின் பொருள் அவ்வித்தையிற் சேர்ந்து சுகித்தலாம். சைவமென்பதற்குப்பொருள் சிவனொடுகலத்தலாம். ஆகலின், இக்கலப்புடையவனதுநாமம் வீரசைவனென்று வேதம்புகலும்; இவன் அகப்பூசையுடையவனும். வித்தையொடுகலந்து மாயையையொழித்துக் கிரமப்படி யாவும்வெறுத்து நாயெனக்கண்டு விட்டகன்று முந்திய வீயென்னும் அக்கரவடிவாகிய சிவத்தில் பிரியமாகிய கலப்பையுடையவனே வீரமகேசன்; இவன் புறப்பூசையுடையவனும். அவ்வீரசைவனே பத்தத்தலம் மகேசுரத்தலம் பிரசாதித்தலம் பிராணலிங்கித்தலம் சரணத்தலம் ஐக்கியத்தலமென்னும் ஆறு தலங்களுக்குரியவன். அளவில்லாப் பிறவிகளிற்புரிந்த புண்ணியத்தால் அந்தக்கரணசுத்தியுடையவன். ஆதலால் பிண்டநாமியும்மாவன்.

பிண்டம் பிண்டஞானம் சமுசாரநீக்கம் குருகாருணியம் இலிங்கதாரணம் விபூதிதாரணம் உருத்திராக்கதாரணம் பஞ்சாக்கரம் பத்தன் உபயம் திரிவிதசம்பத்தி சதுர்விதாசாரம்

உபாதிதானம் நிருபாதிதானம் சகசதானமென்னும் பதினைந்து தலங்களையுமுடையவனே பத்தனும். மகேசுரம் இலிங்கநிட்டை பூருவாச்சிரமநிரசனம் அத்துவிதநிரசனம் ஆவாகனநிர்சனம் அஷ்டமூர்த்திநிரசனம் சர்வகதநிரசனம் சிவன்சகமயம் பத்ததேகிகதேவமென்னும் ஒன்பது தலங்களையுமுடையவனே மகேசனும். பிரசாதி குருமான்மியம் இலிங்கமான்மியம் சங்கமமான்மியம் பத்தமான்மியம் சரணமான்மியம் பிரசாதமான்மியமென்னும் ஏழுதலங்களையுமுடையவனே பிரசாதியாம். பிராணலிங்கி பிராணலிங்கார்ச்சனை சிவயோகசமாதி இலிங்கநிசம் அங்கலிங்கமென்னும் ஐந்துதலங்களையுமுடையவனே பிராணலிங்கியாம். சரணம் தாமசநிரசனம் ஞானநிர்த்தேசம் சீலசம்பாதனையென்னும் நான்குதலங்களையுமுடையவனே சரணனும். ஐக்கியம் சர்வசாரசம்பத்தி ஏகபாசனம் சகபோசனமென்னும் நான்குதலங்களையுமுடையவனே ஐக்கியனும். இந்நாற்பத்துநான்கும் அங்கத்தலமெனப்படும்.

தீக்ஷாகுரு சிக்ஷாகுரு ஞானகுரு கிரியாலிங்கம் பாவலிங்கம் ஞானலிங்கம் சுயம் சரம் பரமென்னும் ஒன்பதுதலங்களையுமுடையது ஆசாரலிங்கமாம். கிரியாகமம் பாவாகமம் ஞானகமம் சகாயம் அகாயம் பரகாயம் தருமாசாரம் பாவாசாரம் ஞானசாரமென்னும் ஒன்பதுதலங்களையுமுடையது குருலிங்கமாம். காயானுக்கிரகம் இந்திரியானுக்கிரகம் பிராணனுக்கிரகம் காயார்ப்பிதம் கரணார்ப்பிதம் பாவார்ப்பிதம் சீடம் சிசுருடை சேவியமென்னும் ஒன்பதுதலங்களையுமுடையது சிவலிங்கமாம். சீவான்மா அந்தரான்மா பரமான்மா நிர்த்தேகாகமம் நிர்ப்பாவாகமம் நட்டாகமம் ஆதிப்பிரசாதி அந்தியப்பிரசாதி சேவியப்பிரசாதியென்னும் ஒன்பதுதலங்களையுமுடையது சங்கமலிங்கமாம். தீக்ஷாபாதோதகம் சிக்ஷாபாதோதகம் ஞானபாதோதகம் கிரியாநிட்பத்தி பாவநிட்பத்தி ஞானநிட்பத்தி பிண்டாகாயம் விந்தாகாயம் மகதாகாயம் கிரியாப்

பிரகாசம் பாவப்பிரகாசம் ஞானப்பிரகாசமென்னும் இப்பன்னிரண்டுதலங்களையுமுடையது பிரசாதலிங்கமாம். சுவிகிருதப்பிரசாதி சிட்டோதனம் சராசரலயம் பாண்டம் பாசனம் அங்கரலேபம் சுபாரஞ்சம் பாவாபாவம் ஞானசூனியமென்னும் ஒன்பதுதலங்களையுமுடையது மகாலிங்கமாம். இவ்வைம்பத்தேழும் இலிங்கத்தலங்களாம். ஆக நூற்றொருதலங்களும் வீரசைவரகசியமாம். இவைக்குரியவரும் நீரே: ஆதலால், உமக்கு இவற்றையுபதேசித்தனம் என்றருளி, அம்முனிவர் விருப்பப்படி பூர்வாசாரியரியல்புகளையுந்தெரிவித்து அவர்வழிபாடு கொண்டருளித் திருவருள்பாலித்து இலங்கையையடைந்தனர்.

இரேணுகாசாரியரடைதலை விபீஷணனறிந்து இருக்கைவிட்டெழுந்து ஆசனத்திருத்திப்பணிந்து "அடியேன் விண்ணப்பமொன்று; இவ்விலங்கையையாண்ட எனதுதமையனார் சிவானுக்கிரகம்பெறும்பொருட்டு நவகோடிலிங்க ஸ்தாபனஞ்செய்தலைமேற்கொண்டனர். அவற்றுள், அறுகோடிலிங்கங்களே பிரதிஷ்டைசெய்யப்பட்டன. இடையே கைலைப்பெருமான் அவர் தவத்திற்கிரங்கி விடையின்மேற்றோன்றி வேண்டும்வரமளித்தலும் பெற்றுத் திரிபுவனங்களையும் ஆளுநாளில், தாமியற்றிய பழிச்செயல்காரணமாக இராமமூர்த்தியால் மாளுங்கால் சமீபித்த என்னைநோக்கி மற்றைமுக்கோடிலிங்கங்களையும் தாபித்து எனதெண்ணத்தை நிறைவேற்றுவாயெனக் கட்டளையிட்டுத் தேகவியோகமடைந்தனர். தேவரீரணைந்த இத்தருணமே அது பூர்த்தியாதற் குரியகாலமாம். ஆகையால், அதைமுடிக்க வேண்டும்" என்றுவேண்டி அவர்பணித்தவாறே இலிங்கங்களும் வேண்டுமுபகரணங்களும் சித்தப்படுத்த; ஆசாரியர் முக்கோடிசற்குரவராகி ஒருமுகூர்த்தநேரத்துள் தாபித்தருளி அவ்விபீடணனுக்கருள்புரிந்து குடந்தையெய்தி வீரசிங்காதனத்தமர்ந்து விபூதிமுதலிய அஷ்டாபரணமும் இலிங்கமுதலிய அஷ்டசகிலமும் எங்கும்பரவவும் வீரசைவர்களுக்கு முக்

யமாகவேண்டற்பாலன இவையென்பதுவிளங்கவும் விளக்கியருளிக் காஞ்சிமுதலியதலங்களையடைந்து, ஆங்காங்குவிரோதித்த புறமதத்தர்களைவென்று, இறைவர்கட்டளைப்படியே தாமுதித்த சோமலிங்கத்திலேயே ஐக்கியமாயினர்.

---

## மழையமல்லேசுரச்சருக்கம்.

முற்காலத்திலே கைலையங்கிரியில் உமாதேவியார் சிவபெருமானையிறைஞ்சிப் "பூவுலகிலமர்ந்த பூர்வாசாரியரியல்பைப் போதித்தருள்க" எனவேண்ட; இறைவர் "தேவியே கேட்பாயாக, நாமே கிரேதயுகத்தில் சதாசிவர் ஈசர் மகேசர் உருத்திரரெனவும், திரேதயுகத்தில் ஏகாக்கர் துவிதாக்கர் பஞ்சாக்கர் சடாக்கரெனவும், துவாபரயுகத்தில் இரேணுகர் தாருகர் கோகன்னர் சங்குகன்னரெனவும், கலியுகத்தில் இரேவணசித்தர் மருளசித்தர் ஏகோராமையர் பண்டிதாராத்திரியரெனவும், நமது சத்தியோசாதம் வாமம் அகோரம் தற்புருஷம் என்னும் நான்குமுகத்தினும் முறையேதோன்றி, ஆஞ்ஞை உவமை சுவஸ்திகாரோகணம் விபூதிப்பட்டம் கலசாபிடேகம் இலிங்காயதம் இலிங்கசுவாயதமென்னும் இஷ்டலிங்கதீக்ஷையேழும் தூலசரீரத்திலும், சமயம் நிர்ச்சமுசாரம் நிஷ்பிராணம் தத்துவம் ஆன்மிகம் அநுக்கிரகம் சத்தியசுத்தமென்னும் பிராணலிங்கதீக்ஷையேழும் சூக்குமசரீரத்திலும், ஏகாக்கிரசித்தம் திடவிரதம் இந்திரியார்ப்பிதம் அஹிம்சை இலிங்கநிசம் மனோலயம் சத்தியோன்முத்தியென்னும் பாவலிங்கதீக்ஷையேழும் காரணசரீரத்திலுமாக இருபத்தொருதீக்ஷைகளையும் பக்குவர்களுக்குச்செய்து வீரசைவநெறிவிளங்கச் செய்யச்சையாலமர்ந்தனம். சதாசிவாதியர்சந்ததியில்வந்த ஆசிரியரனைவரும் சூனியசிங்காதனத்தராய்த் திகழ்ந்தனர். , பிந்தியஇரேவணசித்தராதியரோடு நமதீசானமுகத்துதித்த அல்

லமதேவரையுஞ்சேர்த்து இக்கலியில் பஞ்சாசாரியரென வழங்குவர்." என்றுபோதித்தனர்.

அங்ஙனம் போதிக்கப்பட்டவருள்ளே பிந்திய ஆசிரியர்நால்வரும் பூமியில் தனித்தனி நான்குசிங்காதனமாதிய சாதனங்களை ஏற்படுத்தித்தங்கினர். அவருள், இரேவணசித்தரும் பற்பல அற்புதசித்துடையராகலின் சோழராசன் புத்திரிமுதலிய பலமங்கையர்களை மணமுடித்து வாழுநாள், ஒருதடாகமுண்டாக்கவுன்னி அத்தொழிலை உடனிருந்தியற்ற மேற்படிமங்கையர்களுக்கு உத்தரவுசெய்தனர். அம்மங்கையர் அச்சமுற்று உத்தரவுப்படியே தோண்டிய மண்ணைக் கூடையிற்கொண்டு கரையிற்சொரிதலும், அவருள் சேரன்புதல்வி கருக்கொண்டவளாயிருந்தமையால் தன்னால் முடியாதென்றனள். அது கேட்டசித்தர் "அரசகுமாரியே! நங்கட்டளையோராது மறுத்தாயாகலின் நின்றந்தைபாற்செல்க" எனப்பணித்து அவ்வாறேகுங்கால் "கருவைத்தந்துசெல்க" என்றனர். அவளஞ்சி எவ்வாறீவதென வினாயவழி, அவளுதரத்தை நகத்தாற்கீறிச் சிசுவையெடுத்துக்கொண்டு அப்புண்ணையாற்றி அவளையனுப்பிவிட்டு "நீ இச்சிசுவைப் போற்றுக" என்று பூதேவிபாலளித்தனர். அவள் பூமியைப்பிளந்துகொண்டு வெளிப்போந்து ஏற்று உட்சென்று வளர்ப்புழி, சித்தர் தாய்க்கருவினின்றும் உக்கிரகோபத்தாற்கவரப்பட்டுப் பூதேவியால் வளர்க்கப்பட்டமையின் * உருத்திரமன்னியுமுனிவனெனப் பெயர்தரித்து விபூதியுருத்திராக்கமுதலிய சின்னமும் ஞானோபதேசமும்பாலித்து இலீலையினான் மறைந்தனர்.

அவர்சந்ததியராகிய உருத்திரமன்னியுமுனிவர் சிறந்த வீரசைவசமயஞ் செழிக்கவும் பற்பலவற்புதவிலீலைகள் பரவவும் உலகிற்சஞ்சரிக்குங்காலை, படைவீடு பருப்பதம் பாளையள்ளி

* உருத்திரம் - உக்கிரம். மன்னியு - கோபம்.

குடந்தையென்னும் நான்குதலங்களிலும் ஏற்படுத்திய நான்கு சிங்காதனங்களில் வீற்றிருந்தவகை விரிப்பாம். முதற்கண் அரசநகரமாய் அந்தணர்அரசர் வணிகர் வேளாளராதிய குடிகள்மல்கிப் பலவளங்களுமிக்க படைவீடென்னுநகரில் ஞானோபதேசம்புரிந்து அமர்ந்தனர்.

முற்காலத்திலே, சமதக்கினிமுனிவர்பத்தினியாகிய இரேணுகையென்பவள் நாளும் தன்கணவர்சிவபூசைக்குச் சலந்திரட்டிக் கொணர்வதுபோலவே கொணர்தற்கு ஒருநாள் சென்றுழி, அவளைக்காதலித்த கார்த்தவீரியனென்னும் ஒருயௌவனகந்தருவன் தனதுருவச்சாயை நீரிற்றோன்ற அந்தரத்தேநிற்றலும், அச்சாயையைக்கண்டு இவ்வுருச் சிறந்ததென்று சிந்தித்தனள். சிந்தித்தமாத்திரத்தே கற்பழிந்தமையால் அச்சலந்திரட்டுதற்கு வாராததாகலும் அவள் அச்சமுற்று அயருங்காலை அதனைச் சமதக்கினிமுனிவர் ஞானத்தாலுணர்ந்து இவளுயிருடனிருப்பின் எப்படியும் கார்த்தவீரியனாற் கவரப்படுவாளென்பது துணிந்து தம்புதல்வராகிய பரசுராமரைநோக்கி "இவளை நீ இன்னேகொல்வாயாக" என்றனர். தந்தைசொன்மிக்க மந்திரமில்லையாகும் நிலைமையையெண்ணி அத்தந்தைசொல்லைச் சிரமேற்கொண்டு, "தமதுடலைக் கருவிலுதிப்பித்த தந்தையேகாரணன், பெற்றதாய் அத்தந்தைக்கு அடிமை, ஆதலால் தந்தைசொற்றவறாதவனே நிகரில்லாதசற்புத்திரன்" என்பது நூற்றுணிபெனவுட்கொண்டு தந்தை பணித்தவாறே துணிப்பனென வாளைவிதிர்த்துச்சென்று தாயின்சிரத்தைக் கொய்துமீண்டனர்.

கண்டபிதா களித்து நினக்குஎவ்வரம் வேண்டுமெனவினவ; "எந்தையே! தவசிகளுக்குக் கோபந்தணிவதே சால்பாம். அடியேன் தாயைக்கொன்ற தோஷத்தினீங்கவும் அத்தாய், உடனுயிர்பெற்றெழவும் சிவபெருமான்பால் யான் பாசுபதம்பெ

றவும் வரநல்குவீராக" என்ன; அவ்வரநல்கிக் "கமண்டலசலத்தால் தாயை எழுப்பிக்கொள்க" என்றனர். பரசுராமர் அங்ஙனமேபுரிதலும், உயிர்பெற்றெழுந்த இரேணுகை முனிவரை வணங்கி "இவ்வுலகிலுள்ள உயிர்க்கெல்லாம் அவற்றினது துர்ப்புத்தியால் புலைத்தன்மையுண்டாவதியல்பு. அதற்கு என்மனமே சாக்ஷியாம். எனதுதவறுகாரணமாக ஒழித்தற்கரிய புலைத்தோஷம் நாயேற்குநண்ணியது. இனிக்கதியாது?" என்னலும், "நிலைபெற இவ்வுலகுயிர்க்கு நீயொருதெய்வமாய் நீடுவாழ்க" என்றருளினர். அவவரம்பெற்றுப் படைவீடென்னும் நகரில் எல்லம்மையென்னுந்தெய்வமாய் வாழ்ந்திருந்தனள்.

ஆங்கிருந்த அத்தேவி உருத்திரமன்னியுமுனிவரெழுந்தருளியது காண்டலும் திருவடிகளிற்பணிந்து "எனதுபிறவியொழியத் திருவருள்புரிக" என்றிரக்க; தேசிகர்கருணைகூர்ந்து திருநோக்கதீக்ஷை அத்தமத்தகசையோகதீக்ஷை மந்திரதீக்ஷை ஆகியஇவற்றோடு இலிங்கதாரணமும்புரிந்து அடிமைகொண்டனர். அவள் அன்றுமுதல் தேசிகர்திருமடத்தில் திருவலகிடுதல் திருமெழுக்கிடுதலாதிய கைங்கரியங்களைமேற்கொண்டு திருமடத்தின்பாங்கர்வதிய; உருத்திரமன்னியுமுனிவர் அன்பர்க்கநுக்கிரகித்துக்கொண்டு சின்னாள்வதிந்தருளிப் பின்னாள் மல்லிகார்ச்சுனத்தையடைந்து பெருமானைப்பணிந்து அருந்தவவேடம்புனைந்து மல்லிகார்ச்சுனதேசிகரென்று யாவரும்பரவவுறைந்து ஆங்குவீற்றிருக்கும் தமதிறைவராகிய இரேவணசித்தேசர்பால் தொண்டுபூண்டமர்ந்தனர்.

அந்நாளில், இவரியல்பை ஏனைமாணுக்கர்களுக்குத் தேற்றுதற்பொருட்டு அவர் பொரித்தகடலையை இட்டலிங்கார்ப்பிதம்புரிந்து சீடர்க்கெல்லாம் பிரசாதமீந்தனர். வாங்கிய எல்லவரும் அப்பிரசாதத்தை மகிழ்வினருந்தினராக; மல்லிகார்ச்சுன தேசிகர்மாத்திரம் தமதுகுரவர் இதனைப்பிடியென்றளித்த திருவுள்ளக்கருத்தைச் சிந்தித்து அவர்திருவடிகளைப்பற்றிய

அன்புபோல அதனை இறுகப்பிடித்தார். சிலநாட்சென்றபின் ஆசிரியர் மாணாக்கர்களைநோக்கி "நம்பாலிந்த கடலை எங்கே? காட்டுக" என்னலும், அவர் உரைதடுமாறி உண்டனமென்று கூறினராக; மல்லிகார்ச்சுனதேசிகர் தாம் கரம்விரித்துக் கடலையைக்காட்டினர். இரேவணசித்தர் அக்கடலைகளின் முளைவளர்ச்சியைக்கண்டு மகிழ்ந்தணைத்துக்கொண்டு இவன் மூவுலகினும்நம்புகழ் பரவச்செய்வனென்றுசிந்தித்து "முளையமல்லேசரெனப் பெயர்வழங்கவாழ்த்திக் குடந்தையையடைவாயாக" என்று உத்தரவளித்தனர்.

முளையமல்லேசர்வணங்கி விடைபெற்று எண்ணிறந்த சிவானுக்கிரகச்செயல்கள் தம்பானிகழவும், அதிதிகளாறுயிரவர் விரத்தர்கள்மூவாயிரவர் பொன் வெள்ளி பச்சைகளாலியற்றிய கவசங்களையும் புலித்தோலாதியவற்றையும் புனைந்தவர்கள் பன்னீராயிரவர் ஆகிய இருபத்தோராயிரமகத்துக்களும் புடைசூழவும், குடந்தையெய்திச், சதாசிவதேசிகர்சந்ததியில் வீரசிங்காதனகர்த்தராய் அமர்ந்தனர். அமருநாளில், நான்குவேதமும் ஆறங்கமும் இருபத்தெட்டாகமமும் பதினெண்புராணமும் மற்றும்பலகலைகளும் அநவரதமுமுழங்கும் அவர்சபையைக்காணுதற்கு இந்திரன் தனதாயிரங்கண்களும், துதித்தற்கு ஆதிசேடன் தனதாயிரநாவும், தொழுதற்கு வாணாசுரன் தனதாயிரங்கைகளும், போதாவென்று புகல்வரேல், அத்திருச்சபைச்சிறப்பு என்னுவாற் செப்புந்தகையதோ.? இங்ஙனம் வீற்றிருக்குங்கால், அன்பர் நித்தியாநித்தியப் பொருள்களினிலைமையை வினவலும், தேசிகர்கருணைகூர்ந்து அப்பொருட்டிறம் புலப்பட வேதசிவாகமங்கள் விளம்பிய முடிவுப்பொருளீதென்று சத்தியவீரசைவத்தன்மையைப் போதிப்பாராயினர்.

கரண்வொருமையால் அறிவினுள்மதிப்பதாகும் வீரசைவத்திறம் ஆராயுங்கால் எங்கும்வியாபகமாயுள்ள சிவமொன்றே

இலிலையால் இலிங்கமென்றும் அங்கமென்றும் இருவகைப
படும். அவ்விலிங்கம் இஷ்ட பிராண பாவமென மூன்றாகி ஒவ்
வொருவிஷயங்களையும் உருவஞ் சுவை நிறைவெனப் பகுத்தேற்
றலின் அவற்றை அர்ப்பிக்கும் அங்கமும் தியாகாங்கம் போ
காங்கம் யோகாங்கமென மூவகைப்படும். அம்மூவிலிங்கமும்
ஒவ்வொன்றிவ்விரண்டாய் முறையே ஆசாரலிங்கம் குருலிங்
கம் சிவலிங்கம் சங்கமலிங்கம் பிரசாதலிங்கம் மகாலிங்கமென
ஆறாகிக் காயார்ப்பிதமாகவரும்விஷயங்களை விழுங்குதல் குடி
த்தல் கடித்தல் உறிஞ்சுதல் நக்குதல் இவ்வைந்தையுஞ் சாட்சி
யாய்நின்றுகாண்டலென்னும் அறுதொழிலாலேற்றலின் அம்
மூவங்கமும் ஒவ்வொன்றிவ்விரண்டாய் முறையே பத்தன்
மகேசன் பிரசாதி பிராணலிங்கி சரணன் ஐக்கியனென அறு
வகைப்படும்.

அவ்வாசாராதி ஆறிலிங்கமும் அங்கத்தின் நாசி நா கண் மெய்
செவி இருதயமென்னும் ஆறுதானங்களினும்வதிந்து கரணார்ப்
பிதமாகவரும் கந்தம் இரதம் உருவம் பரிசம் சத்தம் இவ்வைந்
தின்திருப்தி என்னுமிவைகளை முறையே ஏற்பதுமன்றிப் பஞ்
சீகரணபேதத்தால் ஒன்றிலொன்றுமிசிரமாகி மிசிரார்ப்பித
மாகவரும் வேர்கிழங்குகளின்கந்தம் மரம்பிசின்களின்கந்தம்
தளிர்இலைகளின்கந்தம் அரும்புபூக்களின்கந்தம் காய்பழங்களி
ன்கந்தம் இவ்வைவிதகந்ததிருப்தி என்னுமிவைகளை முறையே
ஆசாரலிங்கத்தில் ஆசாரலிங்கமாதிய ஆறிலிங்கமாகியும்; தித்
திப்பு துவர்ப்பு கார்ப்பு புளிப்பு கசப்பு இவ்வைவித இரததிரு
ப்தி என்னுமிவைகளை முறையே குருலிங்கத்தில் ஆசாரலிங்க
மாதிய ஆறிலிங்கமாகியும்; பொன்மை வெண்மை பசுமை செ
ம்மை நீலம் இவ்வைவித ரூபதிருப்தி என்னுமிவைகளை முறை
யே சிவலிங்கத்தில் ஆசாரலிங்கமாதிய ஆறிலிங்கமாகியும்; வன்
மை மென்மை வெம்மைதண்மை மிசிரம் இவ்வைவிதபரிசதிரு
ப்தி என்னுமிவைகளை முறையே சங்கமலிங்கத்தில் ஆசாரலிங்க

மாதிய ஆறிலிங்கமாகியும்; வெண்கலக்கருவிகளினொலி காப்புக்கருவிகளினொலி தோற்கருவிகளினொலி துளைக்கருவிகளினொலி வசனகீதமாதிய கண்டத்தினொலி இவ்வைவிதசப்ததிருப்தி என்னுமிவைகளை முறையே பிரசாதலிங்கத்தில் ஆசாரலிங்கமாதிய ஆறிலிங்கமாகியும்; கந்ததிருப்தி ரசதிருப்தி ரூபதிருப்தி பரிசதிருப்தி சப்ததிருப்தி இவ்வைவிததிருப்தி என்னுமிவைகளை முறையே மகாலிங்கத்தில் ஆசாரலிங்கமாதிய ஆறிலிங்கமாகியும் ஏற்றலின், அங்கமும் அவ்வண்ணமே பத்தனிற்பத்தன் பத்தனில்மகேசன் என்றிங்ஙனம் முப்பத்தாறுவகைப்படும்.

இனி அம்மிசிரத்தில் மிசிரமாய்ப் பாவார்ப்பிதமாகவரும் விஷயம் ஒவ்வொன்றினும் முந்தப்போய்த்தொடுவது ஆசாரலிங்கம், மிகப்பரிசித்து இதுவென்றறிவது குருலிங்கம், அறிந்ததைநிச்சயிப்பது சிவலிங்கம், அதிற்சுகிப்பது சங்கமலிங்கம், மகிழ்வது பிரசாதலிங்கம், இவ்வைவிததிருப்திகளையுங்கொள்வது மகாலிங்கம் ஆகலின், இவ்வகையால் அம்முப்பத்தாறினும் ஒவ்வொன்றில் ஆறாறாக இலிங்கம் இருநூற்றுப்பதினாறாகி யேற்றலின் அவ்விஷயபேதங்களையர்ப்பிக்கும் அங்கமும் இருநூற்றுப்பதினாறுவகைப்படும். இவ்வாறுவிரிந்தயாவும் பின்னர்த் தோன்றியமுறையேயொடுங்கும். அங்கமென்பதுவும் இலிங்கமென்பது யாமுமாயினும் முடிவில் ஏகமாம். அங்கமாகிய ஆன்மாக்களுக்கு முறையே நாகம் கோகம் சோகம் சிவோகம் என்னும் நிலைமைகள் பரிபாகத்தாலுளவாம்.

அவற்றுள், நாகமாவது தேகாதிகளேயன்றி இவற்றிற்கு வேறாக - நானென ஓரான்மா இல்லையென்பது. கோகமாவ்து— நானுண்டேல் நான்யார் ? என்று வினவுவது. சோகமாவது— கருத்தா ஒருவனுளனென்னத்தேர்ந்து அவன்சொரூபமே யானென்பது. சிவோகமாவது - அக்கருத்தா சிவனெனத்தெளி

க்து அச்சிவசொரூபமே யானென்றுகலப்பது. இதுவே இ
லிங்காங்க சையோகபோகமெனப்படும் ஏகத்துவமாமென்று
பொருணிச்சயமுணர்த்தி, மேல் பூர்வத்திலே இவ்வுலகமுழு
மையும் சமண்சமயமோங்கியகாலை நாரதமுனிவர்முறைப்பாட்
டுக்கிரங்கிச் சிவபெருமான் நந்திதேவனைவிடுக்க; அவர் வசவ
தேவராயெழுந்தருளி விச்சலவேந்தனுக்கு மந்திரித்தொழிலு
டையராயிருந்து சமணைக்களைந்து வீரசைவதாபிதஞ்செய்யுங்
கால், அல்லமதேவரெழுந்தருளி அளவிலாத்திருவிளையாடல்
புரிந்து அவ்வசவணராதியர்க்கு ஞானோபதேசம்பாலித்தனர்.
என்று இன்னோரன்ன ஏதுக்களால்விளக்கி இலிங்காங்கைக்
கிய அநுபோகசூத்திரமென்னும் சிவாத்துவித ஞானசாத்தி
ராநுபவத்தினை யுணர்த்திப் பலதலங்களையும் பணிதற்கெ
ழுந்தருளினர்.

எல்லையில்லாத அடியவர்க ளெங்கு நெருங்கவும், பேரிகை
நாகசுரம் எக்காளம் சின்னம் சங்கம் மத்தளம் சாலமுழங்க
வும், உபயசாமரை ஆலவட்டம் குடை இடபக்கொடி எப்பக்
கங்களிலுமிலகவும், அணுகிவாழ்பவராலும் அளவிடற்கரிய அற்
புதசரிதங்களை அமரரும் மனிதரும் பரவவுஞ்சென்று, திரு
வாலவாய் இராமேச்சரம் மலையாளம் கோகர்ணம் குடகு
கொல்லிபாகசோமேச்சரமுதலிய தலங்களைத்தரிசித்து மல்லி
கார்ச்சுன பருப்பதமடைந்துவணங்கி வதிந்தகன்று, மங்கள
புரி மோகாம்புரியாதிய தலங்களையிறைஞ்சி, பாளையள்ளியென்
னுநகரடைந்து அன்பர்க்கநுக்கிரகித்துக்கொண்டு சிங்காதன
கர்த்தராய் அமர்ந்திருந்தனர். அதன்பின்பு விபூதிபுரம் நஞ்
சன்கூடல் கோட்டூர் வசவேசரிங்குளாபுரி இரேகளிகை இ
ராச்சூட்டி அம்பைவிருபாக்ஷம் முதலியனவணங்கி, உசினியை
யடைந்து ஆங்குள்ள காளிவழிபட அவளுக்கருள்புரிந்துவதிந்து
காசியையடைந்து விசுவநாதரைத்தரிசித்து, அயோத்தி அத்தி

ஞுபுரிமுதலிய கடந்து கேதாரத்தையடைந்து கேதாரநாதனையிறைஞ்சி, சென்ற உயர்தலங்கடோறும் திருமடங்கள்வகுத்து சிவபூசைசெய்குரவோர் அருந்தவத்தர் மகத்தர்களை ஆங்காங்கிருத்தி, இத்திறம் ஐம்பத்தாறுதேயங்களிலும் யாத்திரைசெய்யுங்காலம் மக்கத்தையடைந்தருளினர்.

மனிதவுருவாய்த்தும் அதன்பயனிழந்தவராய்த் தருமநிந்தனை வேதாகமபுராணநிந்தனை சிவாலயாதிகளையழித்தல் ஆதிய தீங்குடைய இசிலாஞ்சாதியர்களுக்கிறைவனாகி நால்வகைச்சேனைகளோடு டில்லியிலிருந்த அம்மரபினனாகியவேந்தன் மக்கத்தையடைந்து தம்பெரியார்க்கு உண்டியாதியதந்து உபசரிப்பதுமன்றித் தம்மரபினர்க்குக் கர்த்தாவாகிய அல்லாவை ஆங்கு நியமமாகவழிபடுதலையும் மேற்கொண்டிருந்தனன். அம்மக்கமென்பது பூர்வத்தில் மக்கீச்சுரமென்னும் சிவஸ்தலமேயாம். அச்சந்நிதியில் பரியமணி தூக்கப்பட்டிருத்தலே அதற்குச்சாட்சியாம். அச்சிவாலயம் பூர்வசிவசின்னம் ஒன்றுமில்லாமல் பகீரிகளும் துருக்கர்களுமேநெருங்கப் பள்ளியாய் நிலவுகின்றதுகண்டு மல்லேசர் அங்கணுகினர்.

அணுகியவழி,ஆங்குத்தூக்கப்பட்டிருந்த நாவில்லாமணி தெய்வகதியால் இடிமுழக்கம்போன்று பெரிதொலித்தலும், அதுகேட்டயாவரும் ஏக்கமுற்றடைந்து இவ்வாறொலிப்பதற்குக் காரணமென்னோ என்றுமயங்க; அம்மணி ஓய்வின்றி ஓங்காரவொலியாகவே ஒலித்தது. உயர்ந்த அவ்வோங்காரவொலியை மதிக்கின் அவ்வோங்காரமே எவ்வெழுத்துக்களும் உதித்தற்கிடமாய் நாதாதிகளைத் தன்னுட்கொண்டிருப்பதால் அதுவே உண்மைப்பொருளென்பதையுணர்த்தும். மல்லேசதேவர் அம்மணி அவ்வாறொலிப்பதைக்கேட்டு, தாம் பன்னிருசமயிகட்கும் பரம சற்குருவெனப் புகழ்பெற்றிருத்தலால் ஆண்டுள்ளவரெல்லாம் முஸ்தகப்பெனப்படும் வணக்கத்தைச்செய்து ஆராமை

யால் அழுதிறைஞ்ச அவர்களையும் அடிமைகொண்டு அவர்மதப்படியே முன்னர்ச்செலுத்திப் பின்னர்ப் பக்குவமுறுவித்து நற்கதிபெறுவிக்கத் திருவுளத்திற்சிந்தித்து, அவர்கொள்கைப்படியே நன்கு நவிலத்தொடங்கினர்.

“ஏகமாயுள்ளது வஸ்து; அவ்வஸ்து உயர்வொப்பில்லாதது; அது, தேகம் உயிர் புசிப்பு சகம் ஆகிய இவற்றைச் சிறக்க அருளால் அநாதியே படைத்துக் காத்து அழிக்கும்; அந்நிலைமை அறிஞர்க்கல்லது ஏனையோர்க்கு மதிப்பரிதாகும்;பொன் ஒன்று, பணிகள்பல; மண் ஒன்று, உருவங்கள்பல; பால் ஒன்று, பசுக்கள்பல; உயிர் ஒன்று, உடல்கள்பல, இவைபோல வஸ்துவும் ஒன்று, சமயங்கள்பல.” என்று ஒருமைகாட்டி மேலும், ஈண்டுவழங்கப்படுவதாகிய “லா இலாஹா இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூல்லாஹி” என்னும் மந்திரவாக்கியம் மிக்கவுயிர்கட்கு உயிராய்ப் பரப்பிரமசொரூபமாம் என்று இயம்பியருளினர்.

இயம்பலும், பகீரிகளாதியர் “இவர்வடிவம் மக்கநாதர்வடிவமே. அக்கடவுளே உலகுய்தற்கு எவ்வுலகினும் இவ்வாறுபதேசம்புரிந்து விளங்குவர். அன்றியும், இவர் தம்பிரான்சொரூபமாக எழுந்தருளிக் கடவுளடியவர்பாற் கருணைகூர்ந்து கடவுளியல்பை நாமறியவிளக்கும் ஆன்மநாயகர்” என்றிங்ஙனம் சற்குருவைத்துதித்தனர். டில்லிமன்னனும் பலவிதமலர்கொண்டு திருவடிகளையருச்சித்துத் தூபதீபாதிகளால் ஆராதித்துப் பொற்பணி பீதாம்பரமுதலியன சமர்ப்பித்துப் பன்முறை பணிந்தனன். உடனே மல்லையதேசிகர் யாவருங்காணமறைதலும், அரசனுதியர் “கடவுளே! யாங்கள் அபசாரம் இன்னதென்பதறிந்திலேம். ஏதேனும் அபசாரம் செய்திருப்பினும் பொறுத்துக்காப்பது உமதுகடமை. உமதுதிருவடிகளையே நம்பினேம்” என்றுமுறையிட; அவர்க்கருள்பாலித்து அகன்

றனர். அகன்றதேசிகர் ஆன்மாக்களையாளுதற்பொருட்டுத்
திருவுருக் கொண்டெழுந்தருளிய சிவாவதாரமாயுள்ளவராக
லின் கருணைமேலீட்டால் வதரியென்னும் நகரையடைந்து
ஆங்குக்குடிகொண்டிருந்த மூதேவியகலச் சீதேவிகுடியேறி
னமை இனித்தெரிப்பாம்.

மழைக்கோளாகியசுக்கிரன் பிற்படச் செவ்வாய் முற்பட்டுச்
செல்லுதலின் பன்னீராண்டு மழையில்லாமையால் உயிர்க
ளெல்லாம்வாட; அதுகண்ட அரசனாதியரனைவரும் கலங்கித்
துயரின்மூழ்கினர். அது சொல்லவெளியதோ? ஆங்கே கட
வுட்பூசனை திருவிழா தீர்த்தம் பிதிர்தினம் திதி மதியாதிய
விசேடங்களை மறந்தும் அநுட்டித்தலில்லாத கொள்கையரா
யுள்ள இசிலாமதத்தரெல்லாம் ஈன்றபசுக்களிற் பால்சுரப்பில்
லாத இத்தகையவறண்டகாலம் யாம் இதுகாறுங்கண்டிலமென்
று ஏங்கினர். இக்காலை அந்நகரில் சத்தியம் சௌசமுதலிய
நியமங்களில்லாமற் கொலைகளவாதியவே மிக்கன. மழை
யில்வழியும் பயனைத்தரும் சிலமரங்களும் பயனற்றன. விலங்
கு பறவையாதியவும் அழிந்தன. இவ்வண்ணம் பன்னிரு
வருடமியைதலினால் உணவாதிகளின்றி உயிர்படுவதறிந்து
தேசிகர் ஓர் நன்மையை யுத்தேசித்துப் பகீரிகளிடத்தெய்
தினர்.

அவர் தேசிகரைக்கண்டலும் தமதுபாவக்கடல்வற்ற அன்
புளம்வாய்ப்பவணங்கி, "மழைவளமீந்து இப்பூமிசெழிக்க அரு
ள்க" என்றுவேண்டி மேலும், "ஈதென்னை இவரணுகலும் நம
க்கு முன்பில்லாததாகிய சரீரத்தழைவும் அடைவருமின்பமும்
உண்டாகின்றன; ஆகலின், இவ்வியப்பு அரசனுக்கறிவித்து
இவரைப்பிரார்த்திக்குமாறு புரிவம்" என்றறிவிக்க; அதுகேட்
ட அரசனுமிறைஞ்சி மழைவேண்டிப் பிரார்த்தித்தனன். தாய்
போலுயிர்க்கருளுந் தயாநிதியாகியதேசிகர் உடனே நெடிய–

தொருதம்படித்தினின்று சங்கமுழக்கி இழியுமுன்னரே மேகங்கள்கவிந்து பெருமழைசொரிய; நதிதடாகமாதியன நீர்நிரம்பலின் பலவளங்களும் செழித்தன. அரசனும் களிகூர்ந்துபணிந்து பற்பல அரியபொருள்களைப் பாதகாணிக்கையாகச் சமர்ப்பித்து நகர்வலம்புரிவித்து உயர்ந்தவாசனத்திருத்தி "மூஸ்தகப்பில் மொழியப்பட்டுள்ள நற்பொருள் தேவரீரேயாகலால் நங்கள்குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்" எனவிண்ணப்பித்து, "புனலே எவற்றினுக்கும் மூலமெனப்படுவது ; அத்தகுபுனலின்றி யாங்கள்படும்பாட்டைத் தேவரீர் அகற்றியருளினீர் ; உமக்குப்புரியும் கைம்மாறுமுண்டோ?" என்றுதுதித்து, மழையமல்லிகார்ச்சுனகுரு எனப்பெயர்சூட்டிவழிபட; ஆங்குள்ள அன்பர்களுக்கு அநுக்கிரகித்தமர்ந்தனர்.

அந்நாளில், வடபூமியிலிருந்து ஆங்கணுகியுறையும் காளாமுகமதத்தர் ஒருதினம் மல்லையதேசிகரடியவர்கள் இருப்புச்சங்கிலியணிந்தவராய் வீதியிலெய்தக்கண்டு சினந்து தேசிகரைச்சந்தித்து, எம்மவர்க்குரிய இருப்புச்சங்கிலியை நும்மவரணிவது என்னெனவினவ "இது நமக்குள்ளதென்பது உலகறிபிரசித்தம்: ஐயமுளதேல் அழலிலிட்டு எடுத்தணிபவர்க்கு உரியதாகுக" என நடுவுநிலைமையினவின்றனர். அவருமுடன்பட்டு நீரே அங்ஙனம் முன்னர்த்தரித்தல் வேண்டும் என்னலும், பிறரும் அவ்வாறேமொழிதலால் தேசிகர் அச்சங்கிலியை விரைய நன்குகாய்வித்து எடுத்துத் திருவடியிலணிந்தனர். சிவசொரூபமாய்விளங்கும் இவர்க்கு அப்புவும் தேயுவும் அடிமையாயின் அவை இவர்கட்டளைப்படி மழைசொரிதலும் வெம்மைதணிதலும் விளம்பவேண்டுமோ ? தாமரைமலர் மாலைபோல அச்சங்கிலியையணிதலைக் கண்ணுற்ற அக்காளாமுகர் கவன்று பணிந்து "யாங்கள் தேவரீருக்கடிமை" என்று விண்ணப்பித்து விடைபெற்றகன்றனர். அதுகண்டயாவரும் இறும்பூதெய்த அரசனுமெய்தி அரதனமாதிய பாதகாணிக்கை

சமர்ப்பித்துப்பணிந்து தனது சற்குருவெனத்துதித்து உத்தரவுபெற்றுச் சென்றனன்.

மல்லையதேசிகர் அங்ககன்று விஜயநகரத்தையடைந்தருள; அந்நகரரசனும் தனது தமையனைப்போலவே சேனையோடெதிர்கொண்டு திருவடிகளிலிறைஞ்சி நகர்வலஞ்செய்வித்து உயர்ந்தவாசனத்திருத்திச் சொர்ணாபிஷேகம் புரிந்து "எந்தையே! எங்கள் குருமூர்த்தியாகிய தேவரீர் ஈங்கெழுந்தருளியது எங்கள்கவலை ஒழித்தற்கேயாம். எம்முன்னோரிருந்து வாழ்ந்த மனையில் கொடியபேய்க்கணங் குடியேறி மிகுதுயர்விளைக்கின்றன; அதனால், ஈண்டுதித்தகன்னியர்கள் பருவமடைதலும் இருதுவாதலும் கருப்பந்தரித்தலும் மகப்பெறுதலுமிழந்து வருந்தியதன்றியும் சொப்பனத்தில் அளவிலாததுயரின்மூழ்கி இரவுபகல் நித்திரையுமின்றி நேர்ந்த பற்பல உணவுகளையும் நீரையும் உட்கொண்டவராயிருந்து பலர்மடிந்தனர். இப்பொழுதுள்ளவரும் இவ்வியல்பினரே. இவர்துயரகற்றின் அடியனாதலுமன்றி என்னாட்டிற் பாதியுமீகுவேன் இதுசத்தியம்" என்றிறைஞ்சினன்.

திருச்செவியேற்றதேசிகர் அவன்மனையிற்சேர்ந்திருந்த பேயனைத்தையும் உருக்கொண்டணுக அழைத்து அவற்றைநோக்கி "இவ்வீட்டையும் நகரையும்நீங்கிச் சேரிடமறிந்துசேர்க" என்றனர். அவை "தேவரீர் இங்கெழுந்தருளியது எங்களைத்துரத்துதற்கோ? இரக்கம் சிறிதும்வைத்திலீர்" என்று முறையிடுங்கால் அவற்றுள் தலைமைப்பேய் "எங்களைத்துரத்துவதினும் கொன்றொழிப்பதே நன்று" என்ன; அடுத்தமந்திரிப்பேய் "எம்முறைப்பாடு நுந்திருவுளத்திற்பதிந்திலதேல் தேவரீர் இறுதிக்காலத்தினடிக்குங்கால் எங்களைக்காத்தலையும் சிந்திக்கிலீரோ!" என்றது. அதுகேட்டசேனுபதிப்பேய் "எங்களிடரை என்னென்றிசைப்பேம். சங்கரரே! தேவரீர்புதல்வரா

ஙிய சாத்தாவும் வைரவரும் மற்றுங்காளியும் துர்க்கையும் சாமுண்டியும் வாவி நதி சோலையாதிகளிற் செறியினும் உதிர மொழுக எமதுடலந்துளைப்பர். மந்திரவாதிகள் வாய்பொத்திக் கைபிணித்துத் தலையாட உடலினைக்கப் பிரம்பாலடித்துத் தீப்பந்தத்தால் பழுவெலும்புகளைக்கொளுத்தித் தாருவிற்சேர்த்து ஆணியுறைவர். இதனாற் பசிதாகங்கொண்டு இருப்பிடமின்றி இங்கெய்தி உமதருளால் ஒருவாறு துயர்தணிந்திருந்தனம்; அங்ஙனமிருந்த எம்மை ஏகுமெனப்பணிக்கின் என்செய்வேம்" என்று கூக்குரலிட்டது.

தேசிகர் அபயாஸ்தமளித்துநோக்கி "நீங்கள் சேரிடமறிந்து சேராமையானும், கற்புடைமகளிர்க்குக் கலக்கமுறுத்தலானும் அரசன் பிரார்த்தித்தமையானும் நும்மை அகலப்பணித்தனம்:" என்றவழி, அவை "எவ்வுயிரினும் அவ்வவ்வுயிர்க்குயிராயிருத்தல்பற்றித் தேவரீரைச் சர்வஜீவதயாபரரென்று வேதமுறையிடுவது சத்தியமன்றோ? எங்குறைநோக்காது அருள் பாலிக்கின் உய்வேம்." என்றுவேண்டத்; தேசிகர் திருவுளமிரங்கித் திருநோக்கதீக்ஷைசெய்து பஞ்சாக்ஷரோபதேசமும் புரிந்தனர். உடனே அவை அலகையுருமாறத் தேவவுருவெய்தி விண்ணுலகடைந்து இன்புற்றிருந்தன. அவையொழிதலும், மங்கையரெல்லாம் சகலபிணிகளினுநீங்கி இலக்குமிபோலும்வடிவெய்தியணுகிச் சற்குருவின்பாங்கரில் மங்களமாதியனவோதி ஆலத்தியேந்திப் பணிந்துநின்றனர்.

அரசனிறைஞ்சி "ஐயரே! இச்செல்வங்களை இதுகாறும் என்னுடையவென்றிருந்தேன்; இவை தேவரீர்தந்தனவே; ஆகலின், உடல்பொருளாவிமூன்றையும் ஏற்றருள்க" என்று பரவினன். தேசிகர் ஞானதிருஷ்டியானோக்கி, ஆஞ்ஞைமுதலிய தீக்ஷைகளைப்புரிந்து இலிங்கதாரணமுடையனாக்கி நீ அரசுபுரிக என்றலும், அவன் "தேவரீரையடைந்தயான் இச்

செல்வம்வேண்டேன்" என்ன; திருவெண்ணீறணிந்து மகுடம்புனைந்து "அம்பைவிருபாக்ஷனென்ன அரசுசெலுத்துக" என்றருளினர். குரவராணையை மறுப்பதற்கஞ்சி அன்று முதல் அவன் அங்ஙனமே அரசுசெலுத்த; தேசிகர் இராசகுருவென்னும்பெயர் தமக்குவழங்கச் சின்னாளங்கிருந்து பின்னாள் திருக்காளத்தி காஞ்சி படைவீடு திருவருணை நல்லூர் விருத்தகாசி சிதம்பரம் சீகாழிமுதலிய தலங்களைத்தரிசித்துத் திருக்குடந்தையடைந்து வீரசிங்காதனத்தமர்ந்தனர்.

## மூர்க்கநாயனார்சருக்கம்.

முற்காலத்திலே, பிரமபுத்திரரென்னும் காசிபமுனிவர் புதல்வனாகிய சூரியனதுமரபிலுதித்த சோழபூபதியென்னும் வேந்தன் கங்கையின்மூழ்குங்கால் ஒருநாககன்னிகைகண்டு காதல்கொண்டு அவளையுடனழைத்துச்சென்று தன்பிதாவாகிய தனுசனென்னும் நாகராசன்பாலணுகி "எந்தையே! அரசரொருவர் ஈங்கெய்தியுள்ளர். அவரையே யான் கணவராகக்கொண்டுவழிபடப் பணிக்க" என்னலும், அங்ஙனமே மணமுடித்தனன். இருவருங்கூடிவாழுநாள் அவள்பால் ஒருகுமாரனுதித்தலும், அச்சோழபூபதி மனைவியால் நாகராசனுக்கறிவித்து அவனால் துணையனுப்பப்பட்டவனுடன் தன்னாட்டையடைந்தனன்.

அப்புதல்வன் தாயாற்பேணப்பட்டு வளருநாளில், தன்னுடன்கலைகற்பவர் தன்னைத் தந்தையில்லானெனத் தவறுரைத்தலும் நாணி அதனைத் தாய்க்கறிவிக்க; அவள் "குழந்தாய்! நின்பிதா பூவுலகையாள்கின்றனர். அவர் இங்கிருந்துசெல்லுங்கால் யான் உமக்குப்பிறந்த இவன் அவ்வரசசெல்வத்தைத் துறந்து இங்கிருக்கவிரும்புவனோ என்றுவினாயவழி அவர் என் மூத்தமனைவிக்குக் குமரனிருக்க இளையவிவன் அரசனாவனோ?

ஆகான்; ஆயினும், இத்தொண்டைக்கொடியைக் குறியாகச் சுற்றிக் கடலிலிட்டால் யாதுங்கவற்சியின்றிக் கரைசாருவனாயின் இவன் அரசுக்குரியனாவன்; என்றுரைத்தகன்றனர்." என்பதையுமறிவித்து மகனுடன்பாடுபெற்று அத்தொண்டைக் கொடியிற்பிணித்துக் கடலிலிட்டுக் கரைசார்ந்துநின்றனள். புதல்வனும் கடற்றிரைசெலுத்தக் கரையையடையுங்கால் சோழ்பூபதியணுகி மகிழ்ந்துகொண்டுசென்று தொண்டைசூட்டிய குறியால் தொண்டைமானெனப் பெயர்தரித்துப் பூவுலகரசளிக்க; அவன் அரசுபூண்டுவாழ்ந்தநாடு தொண்டைநாடெனப் பெயர்பெற்றது.

பூமிதேவிக்குத் திருமுகம்போல்விளங்கும் அத்தொண்டைநாட்டிலே திருக்காஞ்சி திருக்காளத்தி திருவாலங்காடு திருக்கழுக்குன்றம்முதலிய பலசிவஸ்தலங்களுண்டு; அவற்றுள் பாலிநதியின்வடக்கே திருவேற்காடென்னும்பதியிலே வேளாண்குலத்திலே யாவரும்நற்கதிபெறவுதித்தவர். உலகவாழ்வைவெறுத்தவர். ஒழுக்கமுடையவர். சிவபெருமான்பால் வழிவழித்தொண்டுள்ளவர். மூர்க்கரென்னுந்திருநாமமுடையவர். அடியவர்க்கு அநவரதமுந் திருவமுது நிரம்பப்படைப்பதில் ஆர்வமுடையவர். அவர் சிவஸ்தலயாத்திரையைவிரும்பிக் காஞ்சியாதிய தலங்களைப்பரவிச் சிதம்பரத்தையடைந்து சிற்சபாநாதரையிறைஞ்சி ஆர்வமேலீட்டால் சிலதினம்வசித்து, இடையிலுள்ள தலங்களைப்பரவிக் குடந்தையெய்திக் கும்பேசராதிய மூர்த்திகளைத்தரிசித்து, அந்நகர்வளநோக்கி அத்தலம் காசியாதியவற்றினுஞ்சிறப்பதும் அதிலிறந்த தாவரசங்கமங்களும் சிவகதிபெறுவதும் சிவபெருமான் அதிற்காதலித்தமர்வதும் தாம் சிந்தித்து, ஆங்கிருக்கும் வீரசைவர்மடங்களுட் சிறந்ததொருமடத்தில் அன்பேவடிவாயமர்ந்து, அடியவராராதனைகளை நடத்திக்கொண்டு வதிந்தனர்.

அவர்வதிந்ததிருமடம் மகாமகதீர்த்தத்தின் வடக்கிலுள்ளதென்பர். அதிலமர்ந்து அடியவர்க்கு வேண்டியதுபகரித்தலைப் புரிந்தனர். தீயசெயல்களால் ஈட்டுபொருளாயினும் அது சிவனடியாரையடையப்பெறின் சிறந்ததாகுமென வேதமோதுதலால் தாம் முற்பயின்ற சூதாடலே தமக்குரியதொழிலாகக் கொண்டனர். பந்தயம்வைத்தாடுபவர்களுக்குத் தாம் விளைய முன்னர்த்தோற்றுத் தாந்தோற்றமைகண்டு காதலித்து ஆடவந்தவர்பால் பின்னர்ப் பலமுறையும் வெற்றிகொண்டு ஆட்டத்தில் அவரிசைந்தபொருள்களைக்கொள்வர். அச்சூதில் முன்னர்வெற்றிகொண்டு பொருள்கவர்ந்தவராய்ப் பின்னர்த் தோற்றவழித் தாம் உடன்பட்டபொருளைக் கொடாதவரை அஞ்சாது அவருடலிற் காயம்படக் குத்துதலால் அவரை நல்லமூர்க்கரென்று உலகர்நவில்வர். அவர், மிக்கதவத்தரும் விபூதியுருத்திராக்கசின்னமுடையவரும் சைவசமயவுட்பிரிவினரும் சௌரமதத்தரும் பாசுபதர் மகாவிரதர் காபாலிகர் என்பவருமாகிய இத்திறத்தவர்களுக்கு அறுசுவைகளுமமைய அன்னம் கறி நெய் பால் தயிர் முக்கனி சருக்கரையாதியவற்றோடு இனிது திருவமுதுபடைத்துத் தாம்பூலமாதிய விழைபொருள்களுமுதவிப் பின் கடைப்பந்தியிலிருந்து அமுதுண்ணுங் கடப்பாடுடையவர். சிறிதும் சிவபத்தியிலராயினும் திருவெண்ணீறிட்டவர் சிவசொரூபரேயென்றிறைஞ்சி அவர்வேண்டுவ முடிப்பவர்.

அவர் இத்திறத்தொண்டில் இயையுநாளில் வீரமாகேசருடைய உயர்தவமுணர்ந்து அவ்வாப்பணிந்து எத்தகையபொருள்களையும் அவர்க்கீந்ததுமன்றி மழையமல்லேசர்பால் உடல் பொருளாவிமூன்றையுந் தத்தம்புரிந்துவணங்கித் தீக்ஷைபெற்று அவ்வாசிரியரால் அநுபோகசூத்திரமென்னும் நூலினுட்பங்களும் அதனனுபவநெறியுந்தேர்ந்து பத்தி ஞானம் வைராக்கியங்களில்வழாது சிவாத்துவிதஞானத்திற்சிறந்தனர். அன்றி

யும், அத்திருமடத்தமரும் கங்கைவீரேசருக்கு இனியதொண்டைமேற்கொண்டு அங்கலிங்கசம்பந்தியாகி ஆசிரியர்பாததீர்த்தப்பிரசாதம் உழுவலன்பால் திரிகாலங்களிலுமேற்றருந்தி இஷ்டலிங்க நிஷ்டையிற் றலைவுற்றவராய் எப்பொருள்களினுமமைந்துள்ள உருவஞ் சுவை நிறைவு என்பவற்றின் கூறுகளை அவ்வவற்றிற்குரிய இலிங்கங்கட்கு அர்ப்பித்து வீரமகேசர்விரும்பும் மெய்ப்பத்தியுடையராய் நெடுநாள்வாழ்ந்திருந்து சுற்றத்தாரோடு திருக்கைலைப்பதவியையடைந்தனர்.

ஆகையால், கொலைகளவாதிய செய்கையின் ஈட்டப்பட்ட பொருள்களும் சிவப்பிரீதியாகச் சிவனடியவர்களுக்களிக்கின் அளிப்பவர் மும்மலமொழிந்து முத்தியடைவர். அத்தலத்திலே மேற்படிநாயனார்க்கு அருளும்வண்ணம் சிவபிரான் மாசிமாதபூரணை மகநக்ஷத்திரத்திலே இடபவாகனாரூடராயெழுந்தருளித் திருக்கண்சாத்தும்பிரயோசனம் இவ்வுலகினர்க்கெய்தும் விசேடம் இப்பொழுதுங்காணலாம்.

## அகளங்கச்சோழச்சருக்கம்.

அகத்தியமுனிவர் தாம் கமண்டலத்திற்கொணர்ந்த காவிரிநதியை அருகிருத்திக்கொண்டு சையகிரியிற்றவம்புரியுங்கால், அதனை நாரதமுனிவராலறிந்த இந்திரன் சிவாராதனையின் பொருட்டுச் சீகாழியில் தன்னால்வைக்கப்பட்டு வாடியுள்ள நந்தனவனம் செழிக்குமாறு அந்நதியையளிக்கும்படி விநாயகக்கடவுளைப் பிரார்த்திக்க; அக்கடவுள் காக்கைவடிவங்கொண்டுசென்று கவிழ்த்தனர். அங்ஙனங் கவிழ்க்கப்பட்டடைந்து சகலவளங்களையுமளித்து இவ்வுலகைவிளக்கும் அக்காவிரிநதியைக்கொண்ட சோணாட்டையாளும் அரசர்தலைவன் வீரலட்சுமிக்கு மகுடம்போலும் புயமலையினன். கலைமகள்வாழும்

நாவினன். திருமகளிலங்கும் மார்பினன். சிவபெருமானமரும் மனத்தினன். நூலொழுக்கமுடையவர்க்கு மூலமொப்பவன். அருளிற் சமுத்திரமும் வெற்றியில் இராமமூர்த்தியும் விபரீதவுணர்வின்மையிற் சனகனும் பொருளிற் குபேரனும் அறிவில் வியாழனும் அழகிற் சூரியனும் தமிழுணர்ச்சியில் அகத்தியமுனிவரும் உலகங்காத்தலில் இந்திரனும் போல்பவன். இராசராசனென்னும்பெயரினன். களங்கத்தையொழித்த சற்குணமுடைமையால் அகளங்கனெனக் கீர்த்திபெற்றவன்.

இத்தகையவேந்தன் அரசுசெலுத்துநாளில், அவ்வரசனுக்குரியபுலவராகிக் கலைமகள் ஆணுருவெடுத்தாற்போன்றுதுலங்கி ஒட்டக்கூத்தரென்னும் கவிசிரேஷ்டரொருவரிருந்தார். அவர், பிள்ளைத்தமிழ் அலங்காரபஞ்சகம் கலம்பகம் பரணி வருக்கக்கோவை மும்மணிக்கோவை அகப்பொருட்கோவை ஊர்நேரிசை பேர்நேரிசை ஊரின்னிசை பேரின்னிசை ஊர்வெண்பா கடிகைவெண்பா கைக்கிளைவெண்பா அரசன்விருத்தம் விருத்தஇலக்கணம் குழமகன்பாடல் சின்னப்பூ ஒருபாவொருபது இருபாவிருபது தசாங்கப்பத்து தசாங்கப்பிராந்தம் எண்செய்யுள் ஐந்திணைச்செய்யுள் ஊசல் இரட்டைமணிமாலை மணிமாலை மும்மணிமாலை நான்மணிமாலை இணைமணிமாலை நவமணிமாலை பன்மணிமாலை பலசந்தமாலை அனுராகமாலை பெருமகிழ்ச்சிமாலை தானைமாலை காப்புமாலை வேனின்மாலை உற்பவமாலை வசந்தமாலை தண்டகமாலை புகழ்ச்சிமாலை வருக்கமாலை மெய்க்கீர்த்திமாலை தாரகைமாலை நாமமாலை வாகைமாலை தும்பைமாலை காஞ்சிமாலை வெட்சிமாலை கரந்தைமாலை நொச்சிமாலை உழிஞைமாலை வரலாற்றுவஞ்சி பலபொருள்வஞ்சி செருக்களவஞ்சி சதகம் தாண்டகம் பதிகம் தூது ஆற்றுப்படை அட்டமங்கலம் பதிற்றந்தாதி நூற்றந்தாதி ஒலியலந்தாதி மங்கலவள்ளை வாதோரணமஞ்சரி உலாமடல் வளமடல் உலா அங்கமாலை கேசாதிபாதம் பாதாதிகேசம் சாதகம்

நயனப்பத்து பயோதரப்பத்து பெருங்காப்பியம் சிறுகாப்பியம் பெருமங்கலம் தொகைநிலைச்செய்யுள் கண்படைநிலை துயிலெடைநிலை விளக்குநிலை புறநிலை கடைநிலை கையறுநிலை செவியறிவுறூஉ புறநிலைவாழ்த்து வாயுறைவாழ்த்து பவனிக்காதல் நாற்பது உழத்திப்பாட்டு குறத்திப்பாட்டு எழுகூற்றிருக்கை முதுகாஞ்சி இயன்மொழிவாழ்த்து என்னும் தொண்ணூற்றாறு பிரபந்தங்களையும் விதிவழாதுபாடுதலிலும், முன்னோராலருளிச்செய்யப்பட்டுள்ள இலக்கணவிலக்கியங்களி லமைந்துள்ள அகம்புறமென்னும் பொருணுணுக்கங்களும் காமம் நகை கருணை வீரம் உருத்திரம் அச்சம் இழிப்பு வியப்பு சாந்தமென்னும் நவரசங்களும் புலப்படப் போதித்தலினும் மிகச்சிறந்தவராகி, ஆசு மதுரம் சித்திரம் வித்தாரமென்னும் நால்வகைக் கவிகளிலும் இயலிசைநாடகமென்னும் முத்தமிழ்களிலும் எழுத்து சொல் பொருள் யாப்பு அணியென்னும் ஐவகை இலக்கணங்களிலும் சிந்தாமணியாதிய திவ்வியகாவியங்களிலும் திருக்குறள் கல்லாடமாதிய தெய்வச்செந்தமிழ்நூல்களிலும் விஞ்ஞானேச்சுரம் மற்றும்புராணமாதியவற்றிலும் தருக்கமாதிய பெருக்கநூல்களிலும் வல்ல மற்றெப்புலவரும் ஜயஜயவென்று புகழ வாழ்ந்திருந்தனர்.

அக்காலத்தில் குடந்தை வீரசிங்காதனமடத்தில்வாழ்ந்த தவத்தர்பலர். அவருளொருவர் முத்தமிழ்விரகராகிய ஆளுடையபிள்ளையார் தேவாரத்தையோதிப் பலியேற்பவர். அவர் திருவீழிமிழலையீசர் திருப்பதிகத்தையோதிக்கொண்டு பலியேற்குமொருதினம் அத்திருப்பதிகத்துள்ளதாகிய * "கல்லானிழற்

* "கல்லானிழற் கீழாயிடர் காவாயென வானோ, ரெல்லாமொரு தேராவயன் மறைபூட்டிநின் றுய்ப்ப, வல்வாயெரி காற்றீர்க்கரி கோல்வாசுகி நாண்கல், வில்லாவெயி லெரித்தானிடம் வீழிம்மிழலையே." திருவீழிமிழலை. சடையார்புனல் என்னும் தொடக்கமுடைய பதிகத்துள்ளது.

ழோயிடர் காவாய்" என்னுந் தேவாரத்தை ஓதிக்கொண்டு அவ்வொட்டக்கூத்தரது மனைவாயிலினிற்க ; அப்புலவர் பலவுமறிந்தவராயினும் அத்தேவாரத்தின்பொருளை ஆங்கறியாதவராய்ச் சிந்தித்தும் விளங்காமையின் மயங்கி அச்சிவயோகியாரை "இத்தேவாரத்தின்பொருள் கூறுக" என்று கேட்டனர். அவர் சினந்து "இதன்பொருள் யானறிந்திலேன். நீ அறிந்துளைப்பினும் ஆளுடையபிள்ளையார் தேவாரத்தில் ஒருமொழியேனும் நீ கூறுவதால் பொருள் நிரம்புந்தகைமையுளதோ" என்றனர். அதுகேட்டபுலவர் முனிந்து விருப்புமிகும் இன்னிசையோடுபாடுதலால் நிச்சயித்தற்கரிதாகின்றது; ஆகலின், இச்செய்யுட்குரியபொருள் யாது? எனக்கேட்டவழி அவர் அதன்பொருள்மொழியாது வசைமொழிந்ததனுல் புலவருங் கலங்கி வேகமிக்க * கசையாலடிக்க; அச்சிவயோகியாரும் மடிந்துவீழ்ந்தனர். மாறுபட்டமனத்தொடு சினத்தையுமுடைய அப்புலவர் அழிவற்றசிவனடியருக்கு இவ்வாறு அழிவியற்றித் தம்மனையடைய ; அச்சிவயோகியார் வசிக்கும் மடத்திலுள்ள சங்கமர்கள் இம்மொழிகேட்டலும் பெரிதொலித்தெழுந்து ஆசிரியரையிறைஞ்சி அநுமதிபெற்று வில் வாள் அம்புமுதலிய ஆயுதங்களை ஏந்தியவராய் அப்புலவர் மனையை அடைந்தனர்.

இவர்வருவதை முன்னரேயறிந்தபுலவர் அரசனையடைந்து நடந்ததனைத்துமறிவிக்க; ஒருபசுவின்கன்றின்பொருட்டுத் தன்புதல்வனைத் தேர்க்காலிலிடறிய மநுநீதிகண்டசோழரை நிகர்த்த அச்சோழன்கேட்டு மனமிகமயங்குவன். ஒருவாறு தெளிவன். பெருமூச்செறிவன். யானிறத்தலேதருமமென்பன். இது விதியானேர்ந்ததோவென்பன். வஞ்சகனாகிய இயமன் செய்த தீங்கிதுவென வருந்துவன். புகலிடம்நீரே அருள்புரிவீரென்று சங்கரரைத்துதிப்பன். இவ்வாறு வருந்தியிரு

* கசை - குதிரைச்சம்மட்டி.

க்க; அத்தருணத்தே ஆங்குப்புலவரிருப்பதையறிந்த சங்கமர்கள் அரசன்பாலெய்தி நடந்ததறிவித்தனர். கேட்ட உணர்வுமிக்கமன்னன் சிவபெருமானுக்குரியவடிவம் மூன்ருகும், அவை குரு இலிங்கம் சங்கமம் என்பன என்று வேதாகமங்களியம்பும். அதுநிற்க; இவ்வொட்டக்கூத்தர் நூல்பலகற்றும் தம்மனையிற் பலிக்கெய்தி யாதொருகுற்றமுமிலராய்நின்ற சிவயோகியாரைக்கொன்று நம்பாலடைந்தனர். இதற்கு யாதுபுரிவம் என்றுவருந்தி "அடிகளே! இச்சங்கமக்கொலைக்குச் சிவாகமங்களில் விதித்த பரிகாரம் யானேபுரிகின்றேன்" என்று பணிந்தனன்.

அம்மொழியேற்ற சங்கமர்கள் "குரிசிலே! யாதுகூறினீர். ஒருவரியற்றிய சங்கமக்கொலைக்குப்பரிகாரம் மற்ருருவரியற்றுவது யாங்கள் சிவாகமங்களிற்கண்டிலம்" என்றுசெப்ப; மன்னவன் வகுப்பான். "மனைவிசெய்யும்பாவம் கணவனுக்கும், புதல்வன்செய்யும்பாவம் தந்தைக்கும் சீடன்செய்யும் பாவம் குருவிற்கும் அனைவருஞ்செய்யும்பாவம் அரசனுக்கும் ஆகுமென்று ஆகமமொழிதலின் இப்பாவமும் அரசனையடையும் என்பதுட்கொண்டு யான் இவ்வாறிசைத்தேன். அங்கீகரித்து அக்கொலைக்காக என்னைச்சேதித்து அப்பாவம் அகற்றுக" எனவேண்டினன். சங்கமர்களும் "மனுநெறிபோற்றிடும் மன்னவர்க்கிறைவரே! உம்மைக்கோறற்கு எவரொப்புவார்? அன்றியும், வினைப்போகம் செய்தவர்க்கன்றி மற்றையர்க்கெய்துமோ? கொலைபுரிந்த புலவரைக் கோறலல்லது வேறுசெயலெமக்கில்லை" என்று விளம்பலும், வேந்தன் வேறென்றை உட்சிந்தித்தவனுகி நீவிர் நாளைவரின் புலவரைநல்குவோமென நவின்றனன்.

சங்கமர்கள் "புலவரைக்கொண்டன்றிப் போகோம்" எனலும், வேந்தன் புலவரை வேறிடத்திற்சேமித்து ஒருமந்திரி

யாற் புதல்வனையழைப்பித்து மனம்வெதும்பி மார்பிலணைத்து உச்சிமோந்து கண்ணீர்பொழிந்து நடந்ததறிவித்து "எனக்கு நேர்ந்தகுறையை மாற்றுவாயாக" என்று வேண்ட; மைந்தன் "பிதாமாதாக்கள் இயம்பியது யாதாயினும் அதுதவமென்று கொள்வதே மைந்தர்செய்கை" என்று மறைபுகலாநிற்கும். சூரியகுலத்துதித்தவருள் தந்தை குரவர் சொற்களைக் கடக்குங் கொடியவரை இப்பூமி தன்பாற்கொள்ளாது; நரகமே தன் பாற்கொள்ளும். மனைவி புத்திரர் செல்வமாதியன அரியவன்று; கீர்த்தியொன்றே அரியது. உடலம் நிலைபேறுடைய தன்றாதலறிந்தும் அதைப்பொருளாகவுன்னி உமதுரையைக் கடப்பேனல்லேன். "இதற்கு என்னை உமதிஷ்டப்படிசெய்க" என்றனன். மன்னவன்மகிழ்ந்து மகனை மூடுசிவிகையிலேற்றித் திரையிடுவித்து உடன்கொண்டு அவையையெய்திப் பெரியவரைநோக்கி "சங்கமக்கொலைபுரிந்த இவனை நீர்நோக்குவது மாண்பன்றாகலின் ஓர்மறைவிடத்திற் கொல்விக்க" என்றனன்.

வேந்தனியம்பியது விழுமியதென உட்கொண்டுபோந்து ஓரிடமணுகியவழி அவருட்சிலர் "இவன் அப்புலவன்றானோ என்று வதனநோக்கிப் பின்கொல்வோம்; செய்யும் எக்கருமமும் தெளிந்துசெய்யாது ஐயமாகச்செய்யின் அதனால் மனத்திற்குத் துக்கம்விளையும். இத்துக்கம் மகனுறங்குந்தொட்டிலிலேறிய கரும்பாம்பைக்கொன்று அவ்வுதிரம்படிந்த முகத்தோடெய்திய கீரியினுதவிநோக்காது தன்மகனைமடித்து மீண்டதாகவுன்னி அதைவதைத்துவருந்திய ஒருகாரிகைவருத்தம் போல்வதாம், சத்தியம் என்று சுட்டிக்கூறினார். யாவருமிசைந்து திரைநீக்கலும் அரசகுமாரன் காணப்படக் கவலைகூர்ந்து அப்புதல்வனை அணைத்துக்கொண்டு அழுதொலிக்க; "அவன் நீவிரெண்ணியதை எனக்கியற்றுக" என்றனன். அப்பெரியர் "குழந்தாய்! பாதகமெவற்றினுங்கொடிதாகிய சங்கமக்கொலைசெய்தவன் ஒட்டக்கூத்தனாக அவனைவிடுவித்து இளவர

சுக்குரிய நின்னைக்கொல்லுமாறு நின்பிதா வஞ்சகமியற்றினர்" என்னலும், புதல்வன் "யானும் எனது தந்தையும் உடன்பட்டு இவ்விதசெயல்புரிதலின் நீவிரும் எங்களுடன்பாட்டின்படி புரிவது நீதியாம். முன்னர் எங்குலத்துதித்தவர் தந்தையார்மொழிந்த கட்டளையைச் சிரமேற்றாங்கி முடிபுனைதலையுந்துறந்து சிவபெருமானைவழிபட்டுப் பெருங்கீர்த்தியினிலைபெற அடியேன்அக்கட்டளையினீங்குவது அமையுமோ"என்றனன். இம்மொழி செவியேறலும் மனம்வெதும்பிக் கண்ணீருகுத்து "நின்போல் இத்தகுசெயலிற்றுணிந்தவர் யாவர்? "மகன்றந்தைக்காற்று முதவி"என்னும் தமிழ்வேதவுறுதியை யாங்கள் நின்பாற் கண்டனம். அவ்வாக்கியத்தைநாட்டுதற்குச் சான்றுநீயே: நின்னையொப்பவரில்லை. உமாபதிதிருவருள் எங்கள்பாலுறுதலால் உன்னையுற்றுநோக்கினம்" என்று உடன்கொண்டுசென்று வேந்தன்பால்விடுத்து "அண்ணலே! இணையில்லாத நும்புதல்வனைக் கொன்று கொலைஞராகிய புலவரைக் காத்தல்குறிப்பது பொருந்துமோ? இவ்வாறு யாவரியற்றுவர்?" என்றிங்ஙனம் பலவியம்பி "எங்களுரை நீதியிலதேல் எங்களைத் தண்டிக்க நீதியுளதேல் புலவரைத்தருக" என்றனர்.

அச்சிவனடியர்மொழி செவிபுகாமுன்னரே கலங்கும் இப்புலவர்க்கீடாக என்குமாரனையீந்து அக்கொலைப்பாவத்திலகலும் பேறெய்திலேன் என்றிடர்ப்பட; அஃதறிந்தபுலவர் வேறொருசூழ்ச்சியை உள்ளத்திலுன்னி "என்னை இவ்வடியர்பால் ஈவீராக" என்றிசைத்து, அவ்வரசன்கவலைநோக்கி மீட்டுங்கூறுவர். "அடைக்கலம்புக்கயானே என்னை இவர்க்கீகவெனவேண்டியவழி நீர்தருதலால் உமக்கு வருங்குறை யாதுளது? தோஷமில்லை" என்னலும், வேந்தன் இதனால் வித்வாபிமானம் இலனாயினேன். இனிஉங்கள்சித்தம்" என்றுரைத்தனன். அவனுடன்பாட்டுமொழியைக்கேட்ட அரனடியவர் "மன்னரே! நீர் மனவொருமையோடு புலவரைத்தரிற் போவோம்" என்றிய

ம்ப; "கங்காதரராகிய கடவுளே நீரென்று கருதியுள்ளேன்; ஆகலின் வெற்றிமுரசோடுந் திருமடத்தையடையலாய்" எனச் செப்பினன். உடனே புலவரைக்கொண்டு செல்லுங்கால் சூரியன் மேற்றிசைக்கடலை அடைந்தனன்.

அவ்வமையத்தே புலவரும் தபோதனரைவணங்கி "யான் முக்காலமும் சிவபூசைசெய்யும் நியமமுள்ளேன்; இன்று அந்நியதிதவறிற்று; அது தவறுவண்ணம் விடைநல்க" என்னலும், அப்பெரியரனைவரும் "சிவாராதனம் கடக்கத்தக்கதோ? அன்போடு அதுபுரிக" என்ன, புலவர் அங்குள்ள அரிசொலார்நதியையடைந்து மூழ்கி வெண்ணீறுங் கண்மணியும்புனைந்து செபவடங்கொண்டு என்றும் உயிர்க்குறுதிப்பொருளாவது ஐந்தெழுத்துமே என்றுசிந்தித்துச் செபித்துப் பூஜோபகரணங்களால் சிவபெருமானைப்பூசித்து" என்மனக்கவலையகல அருள்புரிக" எனவேண்டிப்பின் அருகிலுள்ள முனைச்சாளம்மையென்னும் காளிகாதேவியையிறைஞ்சி யாவரும்விலகியிருக்குந் தருணத்தில் அக்காளிகோட்டத்துட் புகுந்து கதவடைத்துத் தாழிட்டுக்கொண்டனர். இவ்வண்ணமியற்றிய புலவரைக்கொல்ல எத்தனிக்குங்கால், அத்தபோதனருட்சிலர் ஆலயத்துட் புகுந்திருப்பதால் விடிந்தபின் வெளிப்படுத்திக்கோறலே விழுமிதென்றனர். அம்மொழி மார்க்கண்டேயமுனிவருயிர் கவரவரும் இயமனைத்தடுத்து இடையேதோன்றி அம்முனிவர்க்குதவிய சிவபெருமானைநிகர்த்து அப்புலவர்க்குதவியதாக; மற்றையரும் அதற்குடன்பட்டுக் காவல்பூண்டிருந்தனர்.

உள்புக்கபுலவரும் பிரார்த்தித்தவழி அத்தேவிதோன்றலும், இறைஞ்சி "இவ்வாபத்தையகற்றி ஆள்வாய்" எனவேண்ட; அத்தேவி "அருந்தவர்க்கு அநாதித்தெய்வமாய் விளங்கும் வீரபத்திரக்கடவுளே எமது கடவுளென்றெண்ணி நந்தலைவருக்கு ஓர்பிரபந்தமியற்றுக" என்றனள். கேட்டபுலவர் அக்கடவுள்

தக்கன்யாகத்தை அழித்தமையைச்சுட்டி ஓர்பிரபந்தமியற்ற வுன்னித் "தேவியே! எண்ணெயும் தீபமும் எழுத்தாணியும் ஓலையும் தருக" எனவேண்டி அவைபெற்றுக் கலைமகளைத் தியானித்துக்கொண்டு, "அம்மையே! யானியம்பும் இப்பிரபந்தத்தை நீஎழுதுவையேல் முடிவுறுமாகலின் நீயருள்க" என்றனர். அப்படியே ஆகுகவென்று ஒருகரம் அபயமளிக்க, மற்றொருகரம் தீபமேந்த, வேறொருகரம் ஏடுதாங்க, பிறிதொரு கரம் எழுதத்தொடங்கியது. இங்ஙனம் எழுதும்பொழுது கைத்தீபம் சலனமடைதலும் அத்தருணம் புலவர் வீரரசஞ் சொல்லும் நிலைமையராயிருந்தமையின் அக்குணமுடையராய்க் கைத்தீபமசைவதென்னென அத்தேவியின் கன்னத்திலே கரத்தாலடித்துப் பின் சாந்தமோதுங்கால் அதுதெளிந்து உடல்நடுங்க; தேவி "இச்செயல் நின்போதமன்றி நிகழ்ந்தது ஆகலின் அதுபற்றிக் கலங்கற்க" என்றனள்.

அவ்வேளையில் வீரபத்திரக்கடவுள் வெற்றியை நாற்சீரடிப் பாடல்களால் பரணியென்னும் பிரபந்தத்திற் பாடிமுடித்தலும், சூரியனும் இருளகலத் தோன்றினனாகச்; சிவசரணரும் புலவரையணுகி அழைத்தனர். புலவர் "யான்வரைந்ததொரு புத்தகம் ஈண்டுளது; இதை நீர்வாசித்துணர்வீராக" என்று ஓர்துவாரத்தின்வழிநீட்ட; வாங்கி வாசித்துணர்ந்து இவ்வாறு நங்கடவுள் சரித்திரத்தை நவின்றது வியப்பெனத் துணிந்து அதைப்பாராட்டித் தங்கோபந்தணிந்து குதூகலித்தவராய்த் தங்கைக்கத்தியைக் கதவின் துவாரத்தின்வழிநல்கி "நினதிஷ்டப்படி இனிச்செய்க" எனக்கூறினர். அதைக்கேட்டபுலவர் "யான்செய்த கொலைக்காரணமாக என்னைக்கொல்லத்துணிந்தநீர் இங்ஙனமிசைப்பது என்?" எனவினவலும், அவர் நங்கடவுள் தக்கன்யாகத்தை அழித்தசரிதத்தை நீர் இனிது பாடிமுடித்தமையால் உம்மால் இன்னும் பலபிரபந்தம் பாடிக்கொள்ளலா மென்பதுட்கொண்டு கைக்கத்தியீந்தனம்"

என்றமையின் புலவர் வெளிப்போந்துவணங்க ; அருந்தவர் முத்திராதனென்பவன் முன்கொணர்ந்ததொருபுத்தகம் மெய்ப்பொருளுணரிறுதிக்கு ஏதுவாயிற்று, நீர்வரைந்த இப்புத்தகம் நுங்கொலைதவிர்தற்கு ஏதுவாயிற்றெனவியந்து, "புலவரே! இப்பரணியையேற்று நங்கடவுள் உம்மைக்காத்தருளினர். இப்பிரபந்தத்திற்குப் பரிசாகத்தரினும் இவ்வுலகமும் விண்ணுலகமும் ஒக்குமோ? ஒவ்வா: இதனால் உமதுபுகழ் என்றும்நிலைபெறும்" எனப்புகழ்ந்து அப்புலவர்பிரார்த்தனைப்படி அத்தீவினைக்குப் பரிகாரம் இயம்புவாராயினர்.

"சிவபெருமான் அடியவரைக் காத்தருளவுன்னித் திருவருளினால் அவர் மும்மலநிவிர்த்திக்காகக் குரு இலிங்கம் சங்கமமென்னும் மூவுருவங்கொள்ளாகிற்பர். அவ்வுருவங்களில் ஒருதுளியிரத்தம் விழும்படியியற்றிடினும் அளவில்லாத பாலர் மறையவர் பசுக்களையும் இருகோடிகர்ப்பிணிகளையும் கொன்ற தோஷம் ஒருகோடிதிரளினும் உதிரஞ்சொரியவியற்றும் அப்பாவத்திற்கு இணையாகா: சொல்லப்பட்டமூவடிவினுள் சங்கமவடிவஞ்சார்ந்தவர் உயர்ந்தவர். அவர்களை உலகிற்றரிசித்தவர் சிவகதிபெறுவர். ஆதலால், நீர் சங்கமர்க்கு அடிமையாவீரேல் உம்மை இவ்வுயிர்க்கொலையணுகாது" என்றுகூறலும், புலவரும் அவ்வாறே அடிமைப்பட்டிறைஞ்ச; அப்பெரியரும் சிவகருணையைச்சிந்தித்து ஆசீர்வதித்துக் களித்தவராய் உடன்கொண்டுசென்று ஆசிரியரைப்பணிந்து நடந்ததைவிண்ணப்பித்து வீரேசர்சந்நிதியையடைந்து இறந்தசங்கமர் சிவகதிபெறுதற்கு உரியரேயாயினும் தீயமுன்னிலையில் தேகநீங்கினமையின் இது உலகிற்கிடராமென்பதுசிந்தித்து எழுப்பவுன்னிக் குரவர்பாததீர்த்தத்தால் அவ்வுடலினையாட்டி விபூதியை எங்கும்பூசி நெற்றியிற்கரம்வைத்து எழுகவென்று எவருமியம்ப ; அத்தவரும் உயிர்பெற்றெழுந்து மழையமல்லேசர் திருவடிகளைப்பணிந்து திருக்கூட்டத்திற் சேர்ந்திருந்தனர்.

அக்காலை, கங்கைவீரேசர்சந்நிதியில் யாககுண்டமாதியனவமைத்து யாககிரியையைநடாத்தப் புலவரும் குரவரைவணங்கி வாய்புதைத்தமர்ந்து தக்கயாகப்பரணியை அரங்கேற்றலும், குரவர்மகிழ்ந்து சிவிகை பட்டாடை ஆபரணம் பொன் குடை முதலிய பலவிருதுகளையும் அளவின்றியளித்தனர். அவற்றையேற்றுத் திருவடிகளிற்றொழுது விடைபெற்று அரசனவையையடைய; அவனெதிர்வந்து கொலைப்போர்வழக்கு எவ்வகையாயிற்று?" என வினவினன். புலவர் "ஆழாக்குளெண்ணெயோடொழிந்தது" எனவியப்பிற்கூறி, மேல் பரணிபாடினமையாதியன அறிவித்தலும், அரசனுவந்து அவையோர் மகிழ வியந்துவிளம்பி வரிசையளித்துவிடுக்க; புலவர் தம்மனையினெய்தி அந்தணர் வறியவராதியர்க்குத் தானதருமமும் பெரியோர்களுக்கு வேண்டும் ஆடைபொன்னாதியவும் நல்கிச் சுற்றத்தோடு களித்திருந்தனர். வீரமகேசர்கள் தக்கயாகப் பரணியையேற்றருளிச் சங்கமருயிரையும் பிரசாதித்த சங்கை வீரேசருக்கு ஆலயம்புதுக்கி அணிபலவகுத்து அபிஷேக நிவேதனாதிகள்செய்து குருசரணோதகங்கொண்டவராய் நாளும் சிவார்ச்சனை சங்கமாராதனை குருபணிகளைநடாத்திக்கொண்டு இஷ்டலிங்க நிஷ்டையுடையராய் வசித்தனர்.

இவர்மகிமைகளைக்கேட்ட புரவலனும் சேவிக்குங்காதலிற்சென்று திருமடாலயத்தின் கோபுரத்தைத் தரிசித்தமாத்திரத்திலேயே சேனைகளைநிறுவித் தன்வருகையையறிவித்து நடந்துநண்ணி மழையமல்லேசதேசிகர் மலரடிகளைச் சிரமாதியவுறுப்புக்களிற் சேர்த்தியிறைஞ்சி "தேவரீர்தரிசனத்தால் சிறியேனுய்ந்தனன். உமதுபுகழ் ஆதிசேடன் ஆயிரநாவினாலும் வியாழதேவன் அறிவினாலும் மதித்தற்கரியனவாயின் என்வாயால், துதித்தற்கு இயல்வனவோ?" என்றுபுகழ்ந்து அவரருள் வேண்டினன். தேசிகராசிர்வதித்து அவனுத்தமகுணங்களைவி

யத்தலும்; நிருபன் தேவரீர் இத்துணைப்புகழ்ச்சியியம்பத் தகுதியனல்லனென்றுகூறித் தன்பெயரால் ஒருநகரமும் மற்றும் பலசிறப்புந் தந்ததுமன்றிக் கங்கைவீரேசருக்கும் இரதோற்சவமாதியனவும் ஏற்படுத்தியிறைஞ்சிச் சென்றனன். அவன் குமாரனும் மற்றும் மந்திரிகள் புலவராதியரும்வணங்கி விடைபெற்றகல; அடியவரும் வீரபத்திரக்கடவுள்சரித்திரங்களை ஆராய்தலாதியசற்கருமங்களைமேற்கொண்டு சிறந்தமர்ந்தனர்.

---

## சோமசேகரச்சருக்கம்.

மழையமல்லேசதேசிகர் பன்னாள் அநுக்கிரகித்தமர்ந்து திருவிளையாட்டால் மறைந்தருளியபின் அவரது புகழ்பெற்ற சந்ததியில் வந்தோர்பலர். அவருள், சோமசேகரதேசிகரென்னும் ஒருபெரியவர் வீரசிங்காதனமடத்திலே ஏனையாதனங்களினும் அவ்வாதனம் விளங்கச்செய்தமையின் யாவரும் வீரசிங்காதன தாபனாசாரியரெனக் கொண்டாடும்படி அமர்ந்திருந்தனர். அவர் கருணைமழையைச்சொரிதலால் வீரசைவசாதனங்கள் அழகிய பயிரென வளருங்காலையில், குடந்தைச்சிங்காதனத்தைச் சோழராசன்சந்ததியோர் பாதுகாப்புடையராகிப் புகழ்பரப்பி வாழ்ந்திருக்க; விஜயமாநகரில் விளங்குஞ்சிங்காதனம் நிலைபெற்றோங்கும்படி அங்கே மழையமல்லேசதேசிகரருள்பெற்ற வீரசைவ விரூபாக்ஷனென்னும் அரசன்சந்ததியோர் பாதுகாத்துச் செழித்துவாழ்ந்தனர்.

இச்சந்ததியோர் சிலர்க்குப்பின்பு தெய்வவழிபாடு சிவார்ச்சனையாதியன நடாத்திக்கொண்டு நாவலர் வேதியர் நற்றவர் சூழ இவ்வுலகையாண்ட வீரநரசிங்கனென்னும் வேந்தன் உளனாயினான். இவன் கடல்போலும் நால்வகைச்சேனையினன்.

குடிகளியாவும் தமக்கோர் குறைவெனவாழ வளருமன்பினன். தனது ஆஞ்ஞாசக்கரத்தையேவித் திருமாலென உயிர்களைக் காப்பவன். பகைவர் தேவியர் மங்கலியந்தருகவென்றும் தம் முடிதருகவென்றும் நுமக்கு அடிமையாகின்றோம் அருள்கவென்றும் இங்ஙனம் சரண்புகவெல்லும் தகுதிபெற்ற வேற்படையினன். அடைக்கலம்புக்கார்க்கு அபயமளித்துப் புகுதார்நாட்டைக்கவர்ந்து மீட்டும் அவர்புதல்வர்க் குதவுவோன். சிவசின்னங்களோடுதிகழ்ந்து உலகாள்பவன். பூர்வம் மழைய மல்லேசதேசிகர் தன்முன்னோர்க்கருளியவாறு விருபாக்ஷனென்று கையெழுத்திடும் மேன்மையன். இத்தகைய இவன் அவ்விஜயமாநகரில் அரசுபுரியுநாளில், மேலே கரியசட்டையும், அரையிலே கந்தையென்னும் ஓர்வகையாடையும் மயிர்க்கயிறும், மார்பிலே பஞ்சவடியென்னும் மயிர்ப்பூணநூலும் சிருங்காதக்குழலும், காதிலே ஓர்வகை ஓட்டணியும், முடியிலே ஓர்வகைச்சட்டையும், உடலிலே எலும்புமணிமாலையும் மயான வெண்ணீறும் காவியாடையும், வலக்கையிலே படிகசெபமாலையும் உடையவராய், வைரவக்கடவுளையே பரமெனக்கொண்டு வழிபடுமதத்தர் பூமிப்பிரதக்ஷிணஞ் செய்யவிரும்பிப் பற்பல ஆயுதபாணிகளாய், அதியுக்கிரத்தோடு வடபூமியிலிருந்து குடந்தையெய்தி, மகாமகதீர்த்தநாற்றிசையிலும் தங்கூட்டத்தவரேசெறியத்தங்கி அத்தீர்த்தத்தின்மூழ்கி, விபூதியணிந்து நியமமுடித்துப் பாராயணஞ்செய்து, தங்கடவுள்மகிமையைத் தங்குரவர்சாற்றக் கேட்டுமகிழ்ந்து ஆங்குத்தங்கினர்.

தங்குங்காலை, காலைமாலைகளில் தங்கடவுளைவழிபடுங்கால் சிருங்கநாதமும் சங்கநாதமும் ஒருங்கெழுப்ப; அவ்வொலி கேட்ட வீரமகேசர் அவணெய்தி அறிந்துமீண்டு அதனைத் தேசிகர்பால் விண்ணப்பஞ்செய்தனர். தேசிகர் ஈது அச்சோகியர்க்கு அடாதெனக்கூறி அடியவரிருவரைநோக்கி "நீர்சென்

று உங்களுக்குச்சிருங்கமும் எங்களுக்குச்சங்கமும் உரியனவாயிருக்க சங்கமுமுடன்கொண்டேதுவது தகுதியன்றென்று நங்குரவர் நவின்றுவரும்படி கட்டளையிந்தனரெனவோதி மீள்வீராக" எனவிளம்பினர். சென்றவர் தாமறிவித்தும் அவருடன்படாமையை வந்துவிண்ணப்பிக்க; ஆசிரியர் "அவ்வைரவசமயிகள் மாறுபடினும் நாம்வெகுள்வது அறமன்று; இன்னமுமேகி இனிதுரைத்து வருவீராக" என்னலும்; அவர் மீட்டும் போந்துவிளம்பியும் மறுத்தமையால் ஆசிரியர்க்கறிவித்து அவர்கட்டளைப்படி அரசனுக்கிவை கூறித் தடுத்ததுமன்றி நீர்வேண்டியன தருவோம் சங்கத்தொனிசெய்வது தவிர்வீர் என்றுங் கூறினர். அச்சோகியர் "எமக்கில்லாததொன்று நும்பாலிருப்பின் யாம்பெறுவோம்; உமக்கில்லாததையிரக்கில் யாம் இப்பொழுதேதருவோம்; சங்கவிருது ஒழியோம்." என்றலும், அச்சங்கமர் ஆசிரியரனுமதிபெற்று ஆயுதங்களையேந்தியவராய் வீரப்த்திரக்கடவுளைப் பிரார்த்தித்துச்சென்று அச்சோகியரையெதிர்ந்தனர்.

அவ்விருவரும் எதிர்த்துபோர்புரியுங்கால் அதனை ஒற்றராலுணர்ந்தசோழராசன் அடியவருடலில் போர்முதலியகாரணங்களால் குருதிகாணப்படுமாயின் நமதுசெல்வம் அழியுமேயென்றேங்கி மந்திரியர் குரவர் அந்தணர் புலவர் மற்றுந்தகுதியர்களைநோக்கி "இச்செய்கை நீங்குமாறு யாம்புரிவது யாது? விலக்குவதெங்ஙனம்?" எனவினாவ; அவர் "குரிசிலே! அடியவர்க்குநேர்ந்ததீங்கை அகற்றல் வேண்டும்; அகற்றலரிதேல் அவர்பாற்சென்று தீங்குவிளையாவாறு தடுத்தல்வேண்டும்; அன்றியும், தன்னாலும் தன்பரிசனத்தாலும் பகைவராலும் கள்வராலும் ஏனையுயிர்களாலும் இடர்விளையாவாறு உயிர்களைக்காப்பவனே அரசனாவான் என்பது நூற்றுணிபு: அரசனீதிதவறின் மழை மகளிர்கற்பு மாதவர்தவம் மறையோரொழுக்கம்

தெய்வப்பிரசன்னம் தருமமாதிய இவைகள் நிலைபெறுவாம். கலி தீக்கருமம் பாவம் பசி வறுமை பழி ஆபத்து இவைபெருகும்" என்றுரைத்தனர்.

புரவலன் அவரையுடன்கொண்டு மகாமகதீர்த்தக்கரையடைந்து இருவரையும்வந்தித்து "சிவசொரூபம்போல விளங்கும் நீங்களிருவரும் உட்சமயிகள்; இத்தகையநீர் தீதுவிளையப் பொருதவது நீதியன்று;" எனக்கூறிவிலக்கிப் பொருதற் காரணத்தை விசாரித்தறிந்து இதுபற்றிச் செய்வது யாதென அந்தணராதியரைவினவ; அவர் "இவரிசைப்பதற்கு உறுதிப் பத்திரம் ஆட்சி சாட்சிகளைப்பற்றி எவரைவினவுவது; இவருலகரல்லர் தவசிரேட்டர்; இருதிறத்தரும் பெரியரேயாகலின் இவர்சினம் நம்போலியராற் றடுத்தற்கியலுவதோ? தராசின் முட்போல ஒருபாற்சாயாதுநின்று கூறுவதேசால்பு; ஒருபாற் சாயின் தீங்குவிளையுமாகையால் இதை இவர்தெய்வத்தன்மையால் நிச்சயிப்பதேதகுதி" என்றனர். மன்னவன்மகிழ்ந்து "நுங்கருணையால் யானுய்ந்தனன். சர்வசாட்சியாயுள்ள நம் பெருமான் இன்னோர்நிலையினை எளிதுணர்த்தும்" என்றியம்பி உபயவாதிகளையும்நோக்கி "வாதத்தால் இச்சங்கவுரிமையை மதிக்கவல்லனல்லேன்; இதனை இத்தீர்த்தத்தில்விடுத்து நுந் தெய்வத்திறத்தால் கரையடையுமாறுபுரிக" என்னலும், இருவருமிசைந்துழிச் சோழியர் சங்கமரைநோக்கி "நம்மிருவருக்கும் இயைந்ததானம் நவில்க" என்ன; மகேசர் எமக்குரியது வடபாலென்றவழி அவர் தமக்குரியது தென்பாலென்றனர்.

அவ்வேளையில், சோமசேகரதேசிகர் அத்தீர்த்தத்தின் வடபாலுள்ள மண்டபமத்தியில் அருந்தவராதியர்பரவ ஆதனத்தமர்ந்து சிவத்தியானத்திருத்தலும், வைரவசமயிகள் தங்குரவரைத் தென்பாலுள்ள மண்டபமத்தியில் ஆதனத்தமர்வித்துத் தங்கடவுளைத்தியானித்துச் சிருங்க சங்க வொலிகளெழுப்பிச்

செருக்கியிருக்க ; அரசனும் அந்தணராதியர்புடைசூழ மேல்பாலுள்ள மண்டபத்திலிருந்தனன். இருதிறத்தவரும் தத்தங்குரவரைத்தாழ்ந்து தனித்தனி சங்கத்தைக் கடவுளாகப்பாவித்து ஆராதித்து மங்கலவொலிமல்கக் கரங்கொண்டுசென்று புணையில் தவிசிட்டிருத்தித் தீர்த்தநடுவில் வைத்துமீள; அவற்றுள், மகேசர்வைத்தசங்கம் தேவருமனிதரும்வாழ்த்தச் சிவகிருபையாலுயிர்பெற்று மகேசர்க்குள்ளவிருதாகலின் சத்தியம் முன்னின்றுமொழிய எவற்றிற்கும் மூலமாவது ஓங்காரமேயென்பதுதோன்ற ஓங்காரவொலிசெய்துகொண்டுவந்து வீரசைவசமயஞ்செழிக்கச் சோமசேகரதேசிகர்கரத்தில் அமர்ந்தது. இவ்வாதத்தில் மகாமகதீர்த்தம் கைகைநதியையும், அத்தேசிகர்கரத்தின்சங்கம் ஆளுடையபிள்ளையார் திருக்கரத்தினேட்டையும், சோழன் பாண்டியனையும், அடியவர் குலச்சிறைநாயனாரையும், குடந்தை மதுரையையும், சோகியர் அமணரையும் நிகர்த்தலின், தேவர் மலர்மழைபொழிய மனிதர் இமையாதுநோக்குதலால் தேவரையொத்தனர்.

ஆங்கனைவரும் அரகரமுழக்கஞ்செய்து தேசிகரைப் பன்முறைபணிந்தனராக ; வேந்தனும் வியந்திறைஞ்சி நகரை அலங்கரிப்பித்து ஆலயங்கடோறும் அபிஷேகாராதனை நடாத்திப்பின் அச்சங்கத்தைப் பொன்னாலும் மணியாலுங்குயிற்றி ஆசிரியருடன் நகர்வலஞ் செய்விக்கவிரும்பிப் பிரார்த்தித்து ஆசிரியருடன்பாடுபெற்று அவரை அடியவரால் அலங்கரிப்பித்தனன். தேசிகர் குடை சாமரை ஆலவட்டம் சிவிறி இடபத்துவசம் மகரதோரணமுதலியவிருதுகள் மருங்கெய்தவும், வந்திகர் துதிக்கவும், வேதாகமங்களும் தேவார திருவாசகங்களும் திரண்டொலிக்கவும், பலவாத்தியங்களும் பாங்கின் முழங்கவும், மற்றும் ஆடல்பாடலாதியன ஆங்காங்குநிகழவும், புரவலனாதியர் புடைசூழ்ந்துவரவும், சிவிகையினெழுந்தருளி, அத்தீர்த்தமும் நகரமும் சிவாலயமும் உட்படவலம்வந்து திருமடத்தை

யடைந்து, கங்கைவீரேசனைவணங்கிச் சென்னவீரபத்திரரெனத்திருநாமஞ்சூட்டிக் குருபீடத்தைத்தொழுது,பின்சங்கத்திற்கும் விசுவநாதர் அம்பிகை வீரேசராதியமூர்த்திகளுக்கும் விசேஷபூசையும் மகேசுரபூசையும்நடாத்தி, அரசனாதியர்க்கும் அமுதுசெய்வித்தனர். அரசனருந்தி ஆசிரியரளித்த ஆடையணிகளைப்புனைந்து மகிழ்ந்தபின் அவ்வீரசிங்காதனமகிமையாதியவற்றை ஆசிரியராற்கேட்டுவந்து பற்பலவரிசைகளும் வீரமங்கலமும் ஓலைமங்கலமும்நல்கிச் சிலாசாதனங்களும்வரைந்து அடிபணிந்து பிரியாவிடைபெற்றுச் சேறலும், சோகியர்களும் "வாதிற்றோற்ற எம்மேல் குற்றமற அன்புபாலிக்க" எனப்பிரார்த்தித்திறைஞ்சிப் போந்தனராக; தேசிகர் தம்மாணாக்கர்களுக்கு ஞானோபதேசம்பாலித்துக்கொண்டு சிவானுபூதிச்செல்வராய் வாழ்ந்திருந்தனர்.

இத்தகைய இவர்சந்ததியில்வந்த ஒருசற்குரவர் சாரங்கபாணியாகிய திருமால்போல் உயிர்களைநனிபுரந்து அமர்ந்தமையால் சாரங்கதேவரெனப் பெயர்பெற்றனர். அன்றியும், மற்றொருகாலத்தில் தம்மாணாக்கனாகிய மல்லிகார்ச்சுனமன்னன் நோக்குதற்குவிரும்பியவாறு சிலமான்களையழைப்பித்து மீட்டுமவைகளைக் காட்டிற்செலுத்தினராகலின் அவ்வேதுவால் அப்பெயரடைந்ததுமாம். அவ்வரசன் மல்லிகார்ச்சுனத்தில் தொன்றுதொட்டுள்ள திருமடத்தைப்புதுக்கிச் சாரங்கதேவர்திருமடமென அன்றுமுதல்வழங்கும்படி குருபூசை சங்கமபூசையர்திகள்வகுத்து வழிபட்டொழுக; அவனதுபணியேற்று அத்தலத்திற் சின்னாள்வதிந்து திருக்குடந்தையெய்தினர். சற்சனரும் சுத்தசிவாசாரசம்பந்தரும் திருநீறு உருத்திராக்கமாதிய சின்னங்களோடு பஞ்சாக்ஷரஜபமுமுடையவரும் ஏகலிங்கநிஷ்டையே நிலைபெற்ற பரிபூரணநிஷ்டையாக உடையவரும் இயமமாதிய எண்வகையோகமுமியைந்த யோகமுடைய

வரும் வீரபத்திரக்கடவுளாலும் நந்திபிருங்கியாதிய கணத்தலைவர்களாலும் ஓங்கிய சகலவேதாகமபுராண சாத்திரங்களின் நிறைவுடையவரும் தெய்வப்பிருதுவிமகத்தரும் குடந்தை வீரசிங்காதனகருத்தருமாகிய அச்சாரங்கதேவாசிரியர் தம்மாணுக்கர்புடைசூழ வீற்றிருக்குங்காலை அன்பர்பணிந்து அத்துவித ஞானநிலையை அநுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க; தங்குரவரைத் தியானித்துக்கொண்டு ஞானபோதனை செய்வாராயினர்.

ஆன்மா அநாதியேயின்றென வேதாந்தமும், அநாதியேயுண்டெனச் சித்தாந்தமும் விகற்பித்துரையாநிற்கும். இங்ஙனம் விகற்பித்தது அவ்வான்மா சிவத்திற்கு அங்கமாய்நிலவும் ஒற்றுமைபற்றியேயாம். "பரசீவபந்தங்களென்பன முப்பொருளென்ன ஒருங்குவைத்தெண்ணப்படினும் மறத்தல் அறிதல் பந்தம் முத்தியென்னுமிவை பரத்துக்கு உண்டாகா; உயிர்க்கேயாகும்; என்னும் மேன்மையால் பரம் அநாதியென்றேற்படுதலால் சீவன் ஆதி; சகம் அநித்தம்; பிரமம் நித்தம்" என்னுநிற்கும் வேதங்கள். " பதிபசுபாசமெனப்படும் முப்பொருள்களும் அநாதி; அவற்றுள், பதி அருள்புரியும் அமலன்; பசு அஞ்ஞானவுணர்வினன்; அஞ்ஞானமென்னும்பாசம் பதியையடையாது பசுவையடையும் நிலையது." என்றிங்ஙனம் இயம்பாநிற்கும் ஆகமங்கள். அன்றியும், அவ்வாகமங்கள் "பதி கடல்; பசு கடல்நீர்; பாசம் நீரினுப்பு" எனவுங்கூறும். இங்ஙனம் கூறுவது இம்மூன்றும் ஒத்திருப்பதுபற்றியேயாம். கூறுங்கால், கடலுவமை சிவத்தோடு உயிர் உடன்படலால் உற்றதாம். இவ்வாறு உவமித்தமையால் சிவமென்னுங்கடலுக்கு உவரணுகாது; உயிராகியநீருக்கே உவரணுகும்; ஆதலால், ஆன்மா தன்னைப்பந்திக்கும் ஆணவமுதலிய மலங்களில் கட்டுண்டு இருவினையால் அறிவுகுன்றி காற்றின்முன் காற்றூடி

போலச் சுழ்லும். அச்சுழல்வையகற்றி அதற்குத் தீங்குருவண் விற்ணம் அருள்வன ஞானமயமாகிய குருலிங்கசங்கமங்களாம். அவ்

வேதாந்தத்தினும் சித்தாந்தத்திலும் பொருள்விரிவுகூறின் பரசிவபந்தங்களென்னும் இப்பதிபசுபாசங்களேயாம். ஆயினும், வியந்துகூறும் அவ்வீரசைவம் தற்போதவொழிவின் ஈற்றிலே சாராநிற்கும். நாதாந்தவாக்கியவழியால் நவிலப்பட்ட அவ்வீரசைவம் விதிமார்க்கம் பத்திமார்க்கமென இருதிறப்படும். அவ்விதிமார்க்கம் அபக்குவர்க்கும் பத்திமார்க்கம் பக்குவர்க்கும் உரியவாம். விதிமார்க்கத்தோர் புண்ணியம் பாவமென்னும் இரண்டையுமடைவர். பத்திமார்க்கத்தோர் புண்ணியமேசார்வர். புண்ணியமிகுதியாற் சிவாம்சமும் சிவாம்சமிகுதியாற் சிவபூசையும் சிவபூசைமிகுதியால் நல்லறிவும் நல்லறிவுமிகுதியாற் பத்தியும் பத்திமிகுதியாற் சரியையும் சரியைமிகுதியாற் கிரியையும் கிரியைமிகுதியால் யோகமும் யோகமிகுதியால் ஞானமுமுண்டாகும். ஞானபூசனை கோடிக்கு நிகரும் தோத்திரம்; ஞானதோத்திரம் கோடிக்குநிகரும் செபம்; ஞானசெபங்கோடிக்குநிகரும் தியானம்; ஞானதியானங்கோடிக்குநிகரும் மனோலயம். மங்கையர்பால்விளையும் அன்பு இருவகையாம். அவை, கொங்கையைக் குழந்தைதீண்டுங்கால் உதிரம்பாலாதலும் கணவன்றீண்டுங்கால் பால்முறிந்து உதிரமாலுமாம். இவை பக்குவர்களுக்கும் அபக்குவர்களுக்கும் உவமிக்கப்படுவனவாம்.

* சச்சிதானந்தசொரூபசிவன் உதயமாவதாகிய இலிங்காசையோகமென்னும் போகம் ஆன்மாக்களுக்கு ஓங்கவேண் பத்தியென்கின்றமழையினால் சிவமென்னும்பயிரோங்கி ஞானமென்னும்வீரசைவசமயம் மேன்மேல் உலகில்விளைந்தது. சைவசமயமென்பது எவ்வகைச்சமயங்களும் தன்பாலொடுங்குதாய் எழுவகையதாம். அச்சைவவகைகள் ஒன்றியென்று

டுங்க அவையாவும் தன்பாற்றமைந்த முடிவையுடையது வீரசைவசமயமாம். அது வீரசாமானியம் வீரவிசேடம் நிராபாரமென முத்திறப்படும். மந்ததரம் மந்தமென்னும் நிபாதமுடையவர்களால் தூலசரீரத்திலே கன்மமலநீக் தின்பொருட்டு இஷ்டலிங்கதீக்ஷைபெற்று அநுஷ்டிக்கப் பது வீரசாமானியமெனவும், தீவிரமென்னுஞ் சத்திநிபாத டையவர்களால் சூக்குமசரீரத்திலே மாயாமலநீக்கத்தின் ருட்டுப் பிராணலிங்கதீக்ஷைபெற்று அநுஷ்டிக்கப்படுவது விசேடமெனவும், தீவிரதரசத்திநிபாதமுடையவர்களால் ணசரீரத்திலே ஆணவமலநீக்கத்தின்பொருட்டுப் பாவலிங் க்ஷைபெற்று அநுஷ்டிக்கப்படுவது வீரநிராபாரமெனவும் பர்பெறும். இவற்றுள், முந்தியவிரண்டும் இல்லறவொழு றம் பிந்தியது துறவறவொழுக்கமுமாம். இத்தகைய வீர பசமயமே சிவசம்பந்தமாவதென்று சிவாகமமனைத்துஞ் பும். இதுபற்றியே சிவபெருமான் உமாதேவியாருக்கு வா ரகமோத்தரத்தில் தந்திரோக்தப்பிரதிஷ்டையில்மருவிய சித்தாந்ததந்திரத்திலும் அதர்வணவேதமத்தியிலும் இவ்வ வீரசைவத்தின் நிலையினைத் தொகுத்துப் பரமரகசியமாக த்தருளினர்.

ன்றிவ்வாறு ஞானநெறியினது திறமனைத்தையும் நன்கு த்தலும், நற்றவர்தெளிந்து நிலைபெற்ற அவ்வொழுக்கத்த து என்றும் பேரின்பமுடையராய் அருகிருந்தனர். அவ் ரியர் இச்சாஞானக்கிரியையமைந்த உண்மைத்திருமேனி சச்சிதானந்தமய சற்குரவராய்க் குடந்தையில்வதிந்து ம் வழிபடுவார்க்கு அருள்பாலித்து விளங்குவர். அவ வர் திறம்விரிக்கின் மிகுசினமொழித்தல் ஒழியாநெறிப் தல் ஐம்புலனடக்கி ஆற்றலைமேற்கொள்ளுதல் உயிர்கள் ரங்கள் பகைகலவாத இனியமொழிபகர்தல் விருப்புவெறு

ப்பின்றி உபேக்ஷையினிருத்தல் நாளும் ஞானபோதனைந நூலென்னும் இத்திறமுடையராம். ஆகலின், அத்தகைய வாசிரியரமரும் திருமடத்தைவழிபடுவோர் உலகையாண்டு புத்திராதிய செல்வங்களையடைவர். அன்றியும், தலை பெற்ற வீரசிங்காதனச் சிறப்பைச்சாற்றும் இப்புராணத் அன்பாற்போதிப்பவரும் இதன்பொருளைக்கேட்டுப் படி எழுதுவோரும் நெடிதுவாழ்வர். மழைபொழிக. மறுநெறி ஙுக. விபூதி உருத்திராக்கம் பஞ்சாக்கரம் குரு இலிங்கம் கமம் தீர்த்தம் பிரசாதமென்னும் எண்வகையாபரணமு ழ்க. சிவனடியவர்கள்செழிக்க. வீரசைவவிதி மிகவுமோங் திருக்குடந்தை வீரசிங்காதனம் வாழ்க.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

சாரங்கதேவதேசிகர் திருவடிவாழ்க.